கவனிக்க.- 2015.12.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1948 - 2016 ජනවාරි මස 01 වැනි සිකුරාදා - 2016.01.01
1948 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 2 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, சனவரி மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு துபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# துணை விதிகள்

## பதுளை மாநகர சபை

*துணைவிதிகள்*

*(252 ஆம் அதிகாரமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 (1) ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் மாநகரசபைகளுக்குகிடைக்கப்பெற்றுள்ளஅதிகாரங்களின் பிரகாரம் பதுளை மாநகர சபையினால் ஆக்கப்பட்ட கீழ்க்காணும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) சட்டத்தின் 268 ஆவது பிரிவின் 1 ஆம் உப பிரிவின் ஊடாக எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ளஅதிகாரங்களின் பிரகாரம் ஊவா மாகாண சபையின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் சாமர சம்பத் தசனாயக ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டதெனவும் இவ் அறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.*

*சாமர சம்பத் தசனாயக,*
*உள்ளூராட்சி விடயப்பொறுப்பான அமைச்சர்,*
*ஊவா மாகாணம்,*
*பதுளை.*

*2015, நவெம்பர் 18.*

### I - I ஆம் பிரிவு

### சகலவிதமான அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளுடனும் தொடர்புடைய பொருள்கோடல் பற்றிய துணைவிதிகள்

*1.* ஏதேனும் பதுளை மாநகர சபையினால், இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகள் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளில் II வது பாகத்தில் இருந்து LII வது பாகம் வரையான பகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதங்கள் தொடர்பில் பிற அர்த்தங்கள் அவசியப்பட்டாலேயொழிய-

"மாநகர ஆணையாளர்" என்பது, ஏற்புடைய பதுளை மாநகர சபையின் மாநகர ஆணையாளரை கருதும்.

"பதுளை மாநகர சபைப் பிரதேசம்" என்பது, ஏற்புடைய பதுளை மாநகர சபை அடங்கியுள்ள நியாயாதிக்க பிரதேசத்தையும்

"பதுளை மாநகர சபை" என்பது, ஏற்புடைய பதுளை மாநகர சபையையும்;

"பரிசோதனை செய்த முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரையான காலம் எனக் கருதப்படுவதோடு இத்துணைவிதிகளின் ஏதேனுமொரு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம்" என்பது, ஏதேனும் தின பகுதியில் அதற்கு முரனாக வேறு ஏதேனும் நியாயமான காலம் அப்பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டு பணிக்கப்பட்டிருப்பின். அப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புக்களைப் பரிசீலனை செய்ய அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என அங்கு விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள காலம் கருதப்படல் வேண்டும்.

"பொது நீர் வழி" என்பது, ஆறு, ஓடை, அருவி, நீர்வழி, கிணறு, குளம், தடாகம், வடிகான் மற்றும் கடல் எனக் கருதப்படுவதோடு அனுமதிப்பபத்திரம் பெற்ற இடத்தில் கழிவு நீர் பாய்ந்து செல்ல நிருமாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் வடிகான் உள்ளடக்கப்படல் ஆகாது.

"பொது இடம்" என்பது, ஏதேனும் வழி, பொது வழி, வீதி, ஒழுங்கை, ஒற்றையடிப்பாதை, நடைபாதை மேடை, பொதுக்காணி, வீதி ஒதுக்கம், விளையாட்டு மைதானம், பொதுக் கட்டிடம், பொது மயானம், பஸ்தரிப்பு நிலையம், புகையிரத நிலையம், ஆறு, ஓடை, அருவி, குளம், தடாகம், நீரூற்று, நீர்வழி, மழைநீர், வடிகான்,, பஸ்தரிப்பிடம், சபைக்குச் சொந்தமான காணி, மக்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான காணி அல்லது பொதுமக்களின் பாவனைக்கு இலக்காகின்ற வேறு ஏதேனும் பொது இடமும்;

"சுகாதார வைத்திய அதிகாரி" என்பதன் மூலம், பதுளை மாநகர சபைப் பிரதேசம் உள்ளடங்கக் கூடியதாக நியமிக்கப்பட்டிருக்கும் உதவி சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சேவைகள் பணிப்பாளர், குறித்த சுகாதார வைத்திய அதிகாரி அல்லது குறித்த உதவி சுகாதார வைத்திய அதிகாரியாக செயற்படுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள யாராயினும் ஒருவர் குறிப்பிடப்படுகின்றார்.

"அனுமதிப்பத்திரம் பெறுநர்" என்பது, இங்கு ஏதேனும் பகுதியின் துணை விதிகளிலான பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள எவரேனும் ஆள் எனக் கருதப்படுவதோடு மேற்படி அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பொறுப்பாளியோ முகாமையாளரோ அப்போதைக்கு அவ்விடத்தின் பணிகளை நிர்வகிக்க பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளையும்;

''அனுமதிப்பத்திரம் பெற்ற இடம்'' என்பது, இங்கு ஏதேனும் பகுதியின் துணைவிதிகளிலான பணிப்புக்களின் கீழ் எந்த இடத்தைப் பாவிக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ, அந்த இடத்தையும்;

''அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்'' என்பது, அக்கருமத்திற்காக நகர ஆணையாளரால் ஆவணமொன்றினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பதுளை மாநகர சபையின் எவரேனும் உத்தியோகத்தரையும்;

''செயலாளர்'' என்பது, ஏற்புடைய பதுளை மாநகர சபையின் செயலாளரையோ அல்லது மேற்படி செயலாளரது அதிகாரங்கள், கருமங்கள், பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் உத்தியோகத்தரையும் ;

2. முதலாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டிராத எனினும் இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளின் ஏதேனும் பகுதியில் குறிப்பிடப்படுகின்ற வேறு ஏதேனும் பதம் அல்லது பதங்கள் சம்பந்தமாக பொருள்கோடல் தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய பதம் அல்லது பதங்கள் தொடர்பான பொருள்கோடல் அப்பகுதிக்கு மாத்திரம் தொடர்புடையதாக வலுவில் இருத்தல் வேண்டும்.

## I - II **ஆம் பிரிவு**

### சகல விதமான அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளுடனும் தொடர்புடைய பொதுவான ஏற்பாடுகள் பற்றிய துணைவிதிகள்

1. இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளில் பாகம் XXXI இல் இருந்து பாகம் LII வரையான ஏதேனும் பகுதியின் கீழ் பதுளை மாநகர சபையினாலோ நகர ஆணையாளரால் ஏதேனும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராலோ எவரேனும் ஆளுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலொன்று-

(அ) அத்தகைய அறிவித்தல் கிடைக்க வேண்டியவருக்கு தபாலில் அனுப்பிவைக்கப்படுவதற்காக உறுதிசெய்யப்பட்டதென்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் தபாலுக்காக ஒப்படைக்கப்பட்டால் அல்லது

(ஆ) அவரிடம் அல்லது அவரது முகவரியில் அப்போதைக்கு குடியமர்ந்துள்ள எவரேனும் ஆளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின் அல்லது

(இ) அவர் குடியமர்ந்துள்ள இடத்தில் அல்லது அவரால் தனது பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடத்தில் எந்தவோர் இடத்திலும் ஒட்டப்பட்டிருப்பின்

அத்தகைய அறிவித்தல் முறையாக ஒப்படைக்கப்பட்டதாக கருதப்படல் வேண்டுமென்பதோடு அது எவ்விதத்திலேனும் ஒப்படைக்கப்படுவது சட்டமுறையானதாக அமைதல் வேண்டும்.

2. இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான ஏற்பாடுகளின் கீழ் நகர ஆணையாளரால் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் அல்லது பணி, அவரால் பதுளை மாநகர சபையின் உத்தியோகத்தர் எவருக்கேனும் கடிதமொன்றினால் பணிக்கப்படுகின்ற பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக ஒப்படைக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான அதிகாரம் பெற்ற ஆளொருவரினால் அத்தகைய சாட்டுதல் கடிதத்தில் பணிக்கப்பட்டுள்ள பணிப்புக்களுக்கு கட்டுப்பட்ட வகையில் ஈடேற்றப்படுதல் சட்டமுறையானதாக அமைவதோடு அத்தகைய கருமம் அல்லது பணி இந்த அங்கீகாரம் பெற்ற துணைவிதிகள் மூலமாக நகர ஆணையாளரால் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அவரால் புரியப்பட்ட கருமம் அல்லது பணியாகக் கருதப்படல் வேண்டும்.

3. இந்த அங்கீகாரம் பெற்ற தணைவிதிகளின் ஏதேனும் பகுதியொன்றிலான பணிப்பு அல்லது பணிப்புக்களின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற இடமொன்றைப் பரிசோதனை செய்ய மாநகர ஆணையாளரால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டுமென்பதோடு எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் பரிசோதனை செய்ய அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனுமதிப்பத்திரம் பெறுநரின் கருமமாக அமைதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் பரிசோதித்தலைத் தடுக்கவோ தடையேற்படுத்தவோ கூடாது.

## XXXI **ஆம் பிரிவு**

### விளம்பர அறிவித்தல்கள் பற்றிய துணைவிதிகள்

(252 ஆம் அத்தியாயமான) சபையான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க திருத்தத்தினது 272 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 27 ஆம் உப பிரிவின் மூலம் மாநகர சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம், பதுளை மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம், பதுளை மாநகர சபையின் யாதாயினும் ஒரு வீதியில், பாதையில் வாய்க்காலில் அல்லது வாவியிலிருந்து காணக்கூடியதாக அறிவித்தலை வைத்தல் அல்லது காட்சிப்படுத்தலை தடை செய்தல் அல்லது அதனை முறைப்படுத்துதல் அல்லது கட்டுப்படுத்துதல் மற்றும் அவ்வாறான காரியங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள துணை விதிக்கு இணங்க வைக்கப்படுகின்ற அறவிடுதல் சம்பந்தமான துணை விதி பதுளை மாநகர சபையினால் விதிக்கப்படுகின்றது.

1. இப்பகுதியின் துணைவிதிகள் பதுளை மாநகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. பதுளை மாநகர சபை பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல்களை காட்சிக்கு வைப்பதற்காக இடமளிக்கப்படும் பிரதேசங்கள் எவையென பதுளை மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும். விளம்பர அறிவித்தல்களை காட்சிக்கு வைக்கும் பொருட்டு இடமளிக்கப்படும் பிரதேசங்கள் பற்றி காலத்திற்குக் காலம் பதுளை மாநகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் பற்றிய அறிவித்தலை வர்த்தமானியில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது நகர ஆணையாளர் பணியாக அமைவதோடு அத்தகைய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகிய தினத்திலிருந்தோ அதில் திட்டவட்டமாக காட்டப்பட்டுள்ள ஏதேனும் எதிர்வரும் தினத்திலிருந்தோ நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

3. (அ) 2 வது துணைவிதியின் கீழ் பதுளை மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் பிரதேசத்தில் பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான காணியிலோ பதுளை மாநகர சபையினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கிணங்க பெறப்படுகின்ற வேறு எவரேனும் ஆளுக்குச் சொந்தமான காணியிலோ விளம்பர அறிவித்தல்களைக் காட்சிக்கு வைக்கத்தக்க காட்சிப் பலகைகளை அமைத்துப் பேணிவருவதற்கான அதிகாரம் பதுளை மாநகர சபை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழ் பதுளை மாநகர சபையினால் அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் காட்சிப் பலகையில் விளம்பர அறிவித்தலொன்றை காட்சிக்கு வைப்பதற்காக பதுளை மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான கட்டணத்தைக் காட்சிக்கு வைப்பவர்களிடமிருந்து அறவிடுவதற்கான அதிகாரத்தை பதுளை மாநகர சபை கொண்டிருத்தல் வேண்டும்.

5. எவராயினும் ஒரு நபரினால் யாதாயினும் ஒரு வீதி, பாதை கால்வாய் அல்லது வாவியிலிருந்து காணக்கூடியதாக அறிவிப்புகளை வைத்தல் அல்லது காட்சிப்படுத்துவதற்கு எற்பாடு செய்தலானது, அதற்காக ஆணையாளரினால் விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் இல்லாது செய்யப்படுதல் ஆகாது.

6. அவ்வாறாயினும், மேலே குறிப்பிடப்பட்ட விதி முறைகள் டிஜிடல் அறிவித்தல் அல்லது ஆகாய அறிவித்தல் பலகை ஒன்றாக அமையுமானால் அன்றி கீழே குறிப்பிடப்படும் அறிவித்தல்கள் இங்கே காணப்படும் விதி முறைகளுக்கு உட்பட்டனவாதல் ஆகாது:-

(i) கிடைக்கப்பெறும் மொத்த பணமும் புண்ணிய காரியங்களுக்காக ஈடுபடுத்தப்படும் யாதாயினும் ஒருநிகழ்ச்சிக்கான அறிவித்தல்;
(ii) யாதாயினும் ஒரு நிகழ்ச்சி நடாத்தப்படும் இடத்தில் அந்நிகழ்ச்சி தொடர்பில் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல்;
(iii) அரசாங்கம் அல்லது மாகாண சபையினால் காட்சிப்படுத்தப்படும் ஒரு விளம்பர அறிவித்தல்;
(iv) சமய, அரசியல் அல்லது பொதுக் கூட்டம் தொடர்பான காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல்;
(v) யாதாயினும் ஒரு கட்டிடத்தின் யன்னலில் உள்ள விளம்பர அறிவித்தல்;
(vi) 'வாடகைக்கு விடப்படும்' என்றுள்ள விளம்பர அறிவித்தல்;
(vii) 'விற்பனைக்கு உண்டு' என்றுள்ள விளம்பர அறிவித்தல்;
(viii) வீட்டின் பெயர்ப் பலகை;
(ix) தொழில் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக்கொள்ளும் 01 சதுர அடிக்கு மேற்படாத பரப்பளவினைக் கொண்ட பெயர்ப் பலகை;
(x) வர்த்தக நடவடிக்கை அல்லது தொழில் சம்பந்தமாக பயன்படுத்தும் வாகனத்தில் அந்த வாகனத்தின் உரிமையாளரது பெயர் மற்றும் விலாசம் குறிப்பிடப்படும் விளம்பர அறிவித்தல்;
(xi) விளம்பர அறிவித்தல் ஒன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் நடாத்திச் செல்லப்படும் கைத்தொழில் அல்லது தொழில் சம்பந்தமான விளம்பர அறிவித்தல்.

7. (அ) மாநகர ஆணையாளர் அக்கருமத்திற்காக இங்கு முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரித்த / விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இருந்தாலேயொழிய எவரேனும் ஆளினால் பதுளை மாநகர சபைப் பிரதேசத்தில் பகிரங்க இடங்களிலிருந்து பார்க்கும் போது புலப்படக்கூடியதாக எந்தவொரு விளம்பர அறிவித்தலையும் காட்சிப்படுத்துதலோ காட்சிக்கு வைக்கச் செய்வித்தலோ ஆகாது.

(ஆ) காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்த போதிலும் ஏதேனும் விளம்பர அறிவித்தல் பகிரங்க இடமொன்றில் இருந்து பார்க்கும்போது புலப்படக்கூடியவாறு ஏற்புடைய அனுமதிப்பத்திரத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள இடமொன்றில் அல்லது இடங்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் காட்சிக்கு வைக்கப்படுவதோ அவ்வாறு வைக்கச் செய்வித்தலோ ஆகாது.

8. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அவ்வனுமதிப்பத்திரத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் செல்லுபடியானதாதல் வேண்டும்.

9. 7 (அ) வின் கீழ் உள்ள விண்ணப்பப்படிவத்துடன் விண்ணப்பதாரி விளம்பரம் செய்ய உத்தேசிக்கும் விளம்பரத்தின் பிரதியொன்றும் இணைக்கப்படல் வேண்டும்.

10. ஏதேனும் விளம்பர அறிவித்தலொன்றை காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் தேவைப்படுகின்ற ஒவ்வோர் ஆளினாலும் குறைந்த பட்சம் அத்தகைய அறிவித்தலை காட்சிக்கு வைக்கக் கருதுகின்ற தினத்திற்கு 2 வேலை நாட்களுக்கு முன்னராக இங்கு காட்டப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாகத் தயாரித்த விண்ணப்பப்பத்திரமொன்று மாநகர ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

*11.* இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்ட பணிப்புக்களை அவ்வண்ணமே விண்ணப்பதாரி பூர்த்திசெய்திருந்தாலேயொழிய மாநகர ஆணையாளர் எவ்விதமான விளம்பர அறிவித்தலையும் காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றை விநியோகித்தல் ஆகாது.

(அ) 2 வது துணைவிதியில் குறிப்பிட்டவாறு பதுளை மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்ட வலயத்தைச் சேர்ந்த இடமொன்றில் காட்சிக்கு வைப்பதற்கான கோரிக்கையாக அமைதல் வேண்டும்.

(ஆ) அறிவித்தலை காட்சிக்கு வைக்க கோருகின்ற இடத்திற்காக பிறிதொருவருக்கு முன்னர் விநியோகித்த அனுமதிப்பத்திரமொன்றின் செல்லுபடியாகும் காலவரையறை நிறைவடைந்திருத்தல் வேண்டும் ஆயினும், முன்னர் விநியோகிக்கப்பட்ட அத்துடன் தொடர்ந்தும் செல்லுபடியாகின்ற அனுமதிப்பத்திரத்தின் கீழ் காட்சிக்கு வைக்கப்படுகின்ற ஏதேனும் அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட தடையேற்படாத வண்ணம் அதற்கு அருகில் அறிவித்தல் பலகையொன்றை காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்க அந்த ஏற்பாடு தடையாக அமைதல் ஆகாது.

(இ) காட்சிக்கு வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் கோரப்பட்டுள்ள அறிவித்தல் ஆபாசமான அல்லது அருவருக்கத்தக்க அல்லது பண்பற்ற அல்லது ஏதேனும் கலாசாரத்திற்குப் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற அல்லது சமயத்திற்கோ இனப்பிரிவுக்கோ அல்லது இனக்கூட்டத்திற்கோ பாதிப்பினை ஏற்படுத்துகின்ற அல்லது அத்தகைய நிலைமை ஏற்படக்கூடிய வகையிலான காட்சியோ பதங்களோ உள்ளடக்கப்படுகின்ற வகையிலான அறிவித்தலாக அமைதல் ஆகாது.

(ஈ) 3 வது துணைவிதியின் கீழ் பதுளை மாநகர சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள காட்சிப் பலகையொன்றில் காட்சிக்கு வைக்க அனுமதிப் பத்திரமொன்று கோரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய காட்சிப் பலகையில் அந்த விளம்பர அறிவித்தலைக் காட்சிக்கு வைக்கப் போதியளவு இடவசதி இருக்க வேண்டுமென்பதோடு, அத்தருணமாகும் வேளையிலும் முன்னர் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் அனுமதிப் பத்திரத்தின் கீழ் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பர அறிவித்தலுக்காக ஒதுக்கப்பட்ட காலப்பகுதி நிறைவடைத்திருத்தலும் வேண்டும்.

(உ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ள அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வகையிலான விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைத்தல் இடம்பெறல் ஆகாது.

(ஊ) அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமும் 210 மி.மீற்றர் × 297 மி.மீற்றர் அளவிலான கடதாசியில் 1:1000 அளவுத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட அறிவித்தல் மாதிரியுடனும் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தக் கருதியுள்ள இடத்தின் அல்லது இடங்களின் 210 மி.மீற்றர் × 297 மி.மீற்றர் அளவிலான கடதாசியில் 1:1000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட திட்டவரைபடமும்/ திட்டவரைபடங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, விளம்பர அறிவித்தலின் உண்மையான நீளமும் அகலமும் அதில் குறிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்

(எ) விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்படுகின்ற இடங்கள்,-

(i) பதுளை மாநகர சபையினால் 4 வது துணைவிதியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட காட்சிப் பலகையாக அமையுமிடத்து அக்காட்சிப் பலகையில் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காக அத்துணைவிதியின் (ஆ) பந்தியின் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணத்தை பதுளை மாநகர சபைக்கு செலுத்தியிருத்தல் வேண்டும் இன்றேல்,

(ii) விண்ணப்பதாரி அல்லாத வேறு ஆளுக்கோ ஏதேனும் அதிகாரசபைக்கோ சொந்தமான இடமாக அமையுமிடத்து அந்த ஆளினால் அல்லது அதிகாரசபையினால் அத்தகைய விளம்பர அறிவித்தலை அந்த இடத்தில் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துகின்ற எழுத்திலான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*12.* விளம்பர அறிவித்தலுக்கு அருகில் பயணம் செய்கின்ற எவரேனும் ஆளுக்கோ வாகனத்திற்கோ இடையூறு அல்லது விபத்து ஏற்படக்கூடிய வண்ணம் எவரேனும் ஆளினால் ஏதேனும் விளம்பர அறிவித்தல் பொருத்தப்படலாகாது. அத்துடன் வாகனத்தைச் செலுத்துகின்ற எவரேனும் சாரதியின் கவனத்தை திசைதிருப்புகின்ற வகையிலோ அவரது புலக்காட்சிக்கு தடையேற்படுத்துகின்ற வகையில் மின்சார ஒளிக்கீற்றுகளை பொருத்தவோ உறிஞ்சியொளிரச் செய்வித்தலோ ஆகாது.

*13.* சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விண்ணப்பப்பத்திரத்திற்காக இப்பகுதியிலான துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்க அவசியமான பணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளவிடத்து, அது பற்றி நகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரோ விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் கிடைத்த பின்னர் அவரால் 14 வது துணைவிதியில் குறிப்பிட்டுள்ளவாறு அனுமதிப்பத்திரக் கட்டணமும் 15 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பிணைப்பணமும் பதுளை மாநகர சபைக்கு செலுத்தப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை விநியோகிப்பது மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாக அமைதல் வேண்டும்.

*14.*(அ) இப்பிரிவின் துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திமொன்று முன்கூட்டியே செல்லுபடியற்றதாக்கப்பட்டாலொழிய அத்தகைய அனுமதிப் பத்திரம் எவ்வருடத்தில் விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் விளம்பர அறிவித்தலின் காட்சிக்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் காலம் நிறைவடைந்த பின்னர் தொடரும் வருடத்திலும் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்த அவசியமாகின்ற வேளையில் அத்தகைய தொடரும் வருடத்திலும் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்தவதற்காக புதிய அனுமதிப்பத்திரமொன்று பெறப்படல்

வேண்டும். ஆயினும், விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காக விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்திற்காக தொடரும் வருடத்தில் அறவிட பதுளை மாநகர சபை அங்கீகரித்துள்ள அனுமதிப் பத்திரக் கட்டணம் எதுவாயிருப்பினும் அத்தகைய விளம்பர அறிவித்தலின் காட்சிப்படுத்துதலுக்காக விநியோகிக்கப்படுகின்ற புதிய அனுமதிப்பத்திரத்திற்கு முன்னர் அங்கீகரித்த அனுமதிப் பத்திரக் கட்டணமே ஏற்புடையதாதல் வேண்டும்.

(இ) (அ) பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் பதுளை மாநகர சபையினால் விதிக்கப்படுகின்ற வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் பற்றிய அறிவித்தலை வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்க வேண்டியது நகர ஆணையாளர் பணியாதல் வேண்டும்.

(ஈ) இந்த துணை யாப்பின் கீழ் கட்டணம் விடுவிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல்களுக்காக இத் துணை யாப்பின் கீழ் உள்ள ஏனைய விதிமுறைகள் உள்ளவாறே செல்லுபடியாகும்.

15. விளம்பர அறிவித்தலொன்றை காட்சிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் விண்ணப்பப் பத்திரத்திற்காக அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ள வேளையில் பிணைத் தொகை விண்ணப்பதாரியால் பதுளை மாநகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் அளவு பிணைப்பணத்தை விண்ணப்பதாரியால் பதுளை மாநகர சபையில் வைப்புச் செய்யப்படும் வரை நகர ஆணையாளர் அத்தகைய விண்ணப்பப்பத்திரத்திற்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படலாகாது.

16. காட்சிப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு அறிவித்தலுக்காகவும் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தின் இலக்கம் அந்த அறிவித்தலில் அல்லது அறிவித்தலைக் காட்சிப்படுத்த முன்னர் ஒவ்வோர் அறிவித்தலிலும், வலது பக்க கீழ் மூலையில் குறிப்பிட வேண்டியது அனுமதிப் பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

17.(அ) ஏதேனும் விளம்பர அறிவித்தலைப் பொருத்துவதற்காக பாவிக்கப்படுகின்ற ஏதேனும் வகையைச் சேர்ந்த காட்சிப் பலகை, தாங்கி, நிர்மாணிப்பு அல்லது பொருத்தி, சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் அல்லது எவரேனும் ஆளுக்கோ அல்லது எவரேனும் ஆளின் ஆதனத்திற்கோ ஆபத்து விளைவிக்கக்கூடிய அல்லது சேதமேற்படுத்தக்கூடிய வகையில் நிலவுகின்ற வேளையில் அதனைத் திட்டவட்டமான காலப்பகுதிக்குள் இயல்பு நிலைக்கு கொண்டுவருமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற அறிவித்தல் மூலமாக பணிப்புரை விடுக்க மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற எவரேனும் ஆள் அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலப் பகுதிக்குள் அவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பணிப்புக்களுக்கு அமைவாக செயலாற்றுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில் நகர ஆணையாளர் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராலோ அத்தகைய விளம்பர அறிவித்தலுக்காக விநியோகித்த அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் அல்லது அவ்விளம்பர அறிவித்தலைக் கழற்றி அகற்றுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(இ) (ஆ) பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்துள்ள வேளையில் அத்தகைய விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக பதுளை மாநகர சபையில் வைப்புச் செய்துள்ள பிணைத் தொகை பதுளை மாநகர சபைக்குரியதாக அமைதல் வேண்டுமென்பதோடு அப்பிணைத் தொகையைக் கோரி நிற்க வேறு எந்த ஆளுக்கும் உரிமை இருத்தல் ஆகாது.

18. காட்சிக்காக செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்று காட்சிப்படுத்துகின்ற ஏதேனும் அறிவித்தலுக்கு இடம்பெறுகின்ற சேதம், விகாரப்படுத்துதல் அல்லது அகற்றுதல் சம்பந்தமாக பதுளை மாநகர சபை எவ்வகையிலான வகைப்பொறுப்பிற்கும் கட்டுப்படலாகாது.

19. இப்பகுதியின் துணைவிதிகளில் ஏதேனும் பணிப்பு மீறப்பட்டுள்ள வேளையில் அத்தகைய மீறல் தொடர்பாக கவனஞ் செலுத்துகின்ற அறிவித்தலுடன் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் அனுமதிப் பத்திரத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நகர ஆணையாளர், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கோ இருத்தல் வேண்டும்.

20. ஏதேனும் விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் அத்தகைய விளம்பர அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அர்த்தத்தை அல்லது வெளிப்பாட்டினைச் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட சட்டபூர்வமான அனுமதி அடங்கியுள்ளதாக கருதப்படலாகாதென்பதோடு அவ்வாறு பொருள் கொள்ளலும் ஆகாது.

21. ஏதேனும் விளம்பர அறிவித்தலை நிர்மாணிக்கும் பொருட்டு பாவிக்கப்பட்ட எவ்விதமான நிர்மாணத் தாங்கியோ, பொருத்தியோ, அதற்காகப் பாவிக்கப்பட்ட வேறு ஏதேனும் பொருள் காரணமாகவோ அத்தகைய விளம்பர அறிவித்தலில் வெளிப்படுத்தப்பட்ட அர்த்தம் அல்லது உணரப்படுகின்ற வேறு அர்த்தம் காரணமாகவோ ஏதேனும் தரப்பினருக்கு நேரிடுகின்ற அல்லது நேரிடக்கூடிய ஏதேனும் நட்டம் அல்லது சேதம் சம்பந்தமாக அனுமதிப் பத்திரம் பெறுநர் பொறுப்பு வகிக்க கட்டுப்படல் வேண்டும்.

22. இப்பகுதியிலான துணைவிதிகளின் கீழ் அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள சமர்ப்பித்த விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துகின்ற இறுதித் திகதிக்குப் பின்னர் நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னர் அத்தகைய விளம்பர அறிவித்தலையும் அதற்காக பாவிக்கப்பட்ட வேறு சகலவிதமான பொருட்களின் பாகங்களையும் அந்த இடத்திலிருந்தோ இடங்களிலிருந்தோ அகற்றச் செய்விக்க வேண்டியது அனுமதிப் பத்திரம் பெறுநரது பணியாதல் வேண்டும்.

23.(அ) 22 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயலாற்றியதன் பின்னர் மாநகர ஆணையாளர் எழுத்து மூலமாக விடுக்கப்படுகின்ற கோரிக்கையின் பேரில் சம்பந்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை விநியோகிக்க முன்னர் பதுளை மாநகர சபையில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புத் தொகையை அனுமதிப் பத்திரம் பெறுநரால் மீளப்பெற இயலும்.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிட்டவாறு எழுத்திலான கோரிக்கை கிடைத்த பின்னர் அத்தகைய வைப்புத் தொகையை அனுமதிப் பத்திரம் பெறுநருக்கு விடுவிக்க முன்னர்,-

(i) 22 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பணிப்புகள் அனுமதிப்பத்திரம் பெறுநரால் முறையாக ஈடேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்பட்டது பதுளை மாநகர சபையினால் நிர்மாணிக்கப்பட்ட காட்சிப் பலகையிலாக அமையுமிடத்து அவ்வறிவித்தலை அகற்றும் போது அல்லது அனுமதிப் பத்திரம் பெறுநரால் பொறுப்புக்கூற வேண்டிய ஏதாவது கருமம் காரணமாக அக்காட்சிப் பலகைக்கு ஏதேனும் சேதம் ஏற்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது நகர ஆணையாளர் பணியாதல் வேண்டும்.

(இ) அனுமதிப் பத்திரம் பெறுநரால் 22 ஆம் துணைவிதியில் குறிப்பிட்டவாறு செயலாற்றியுள்ளமையும் பதுளை மாநகர சபையின் காட்சிப் பலகைக்கு சேதம் ஏற்படவில்லையென்பதும் (அ) பந்தியில் குறிப்பிட்டவாறு உறுதிப்படுத்திக் கொள்ளப்படுகின்ற வேளையில் நகர ஆணையாளர் திருப்தியடைந்தாலேயன்றி அத்தகைய வைப்புத் தொகை அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு முழுமையாக விடுவிக்கப்படலாகாது. எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் 21 ஆம் துணைவிதியில் குறிப்பிட்டவாறு செயலாற்றுவதைத் தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது பதுளை மாநகர சபையின் காட்சிப் பலகைக்கு சேதம் ஏற்பட்டுள்ளவிடத்து, சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் அப்பணியைப் புரிதல் அல்லது காட்சிப் பலகையைத் திருத்தியமைத்தல் அல்லது அவ்விரு கருமங்களுக்காகவும் பதுளை மாநகர சபைக்கு ஏற்க நேரிடுகின்ற செலவினை வைப்புத் தொகையில் இருந்து கழித்துக்கொள்ள வேண்டுமென்பதோடு, எஞ்சிய ஏதேனும் பணத்தொகை இருப்பின் அத்தொகையை மாத்திரம் அனுமதிப் பத்திரதாரருக்கு மீளச் செலுத்துதல் வேண்டும்.

(ஈ) (இ) பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு செயலாற்றும் போது பதுளை மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தொகை வைப்புச் செய்யப்பட்ட பிணைத்தொகையைப் பார்க்கிலும் விஞ்சியதாக உள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு மேலதிகமாக அறவிடப்பட வேண்டிய பணத்தொகையை அனுமதிப் பத்திரம் பெறுநர் பதுளை மாநகர சபைக்குச் செலுத்த வேண்டும்.

24. பதுளை மாநகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் பேணிவரப்படுகின்ற ஏதேனும் தொழில் நிலையத்தின் அல்லது தொழிற்சாலையின் பெயர், முகவரி மற்றும் அத்தகைய தொழில் நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் முயற்சியின் தன்மை அல்லது தொழிற்சலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளின் தன்மையைக் காட்டுகின்ற அறிவித்தல் பலகை ஒன்றினை மாத்திரம் அத்தகைய தொழில் நிலையத்தின் அல்லது தொழிற்சாலையின் முன்புறத்தில் காட்சிப்படுத்தல், வீட்டுப் பெயர்ப்பலகைகள் மற்றும் ஏதேனும் ஆதனத்தைக் குத்தகைக்குவிட அல்லது வாடகைக்குக் கொடுக்க அத்தகைய ஆதனத்தின் மீது காட்சிப்படுத்தப்படுகின்ற ''குத்தகைக்காக'' அல்லது ''விற்பனைக்காக'' அல்லது ''வாடகைக்காக'' எனக் குறிப்பிடப்படுகின்ற ஒரு விளம்பர அறிவித்தல் தொடர்பில் மாத்திரம் இப்பகுதியின் துணைவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாது. ஆயினும், அத்தகைய ஒன்றுக்கு மேற்பட்ட அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தப்படுகின்ற ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு அதிகரிக்கின்ற ஒவ்வொரு பெயர்ப் பலகைக்கும் இப்பகுதியிலான துணைவிதிகளின் ஏற்பாடுகள் வலுவுள்ளனவாக அமைதல் வேண்டும்.

25. அரசாங்கம் அல்லது மாகாணசபை அல்லது பதுளை மாநகர சபையினால் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பர அறிவித்தல் சம்பந்தமாக இப்பகுதிக்கான துணைவிதிகள் ஏற்புடையதாதல் ஆகாது.

26. ஏதேனும் தொழில் நிலையத்தின் பெயர், இலக்கம் மற்றும் /அல்லது முகவரியுடன் வேறு ஏதேனும் வர்த்தகப் பண்டத்தின் அல்லது சேவையின் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும், ஏதேனும் வீட்டின், ஏதேனும் விதத்திலான வர்த்தகப் பண்டத்தின் அல்லது சேவையின் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும், அவ்விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தல்கள் இப்பகுதிக்கான துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு கட்டுப்படல் வேண்டும். இந்த துணைவிதியின் ஏற்பாடுகள் சம்பந்தமாக அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய ஆளாக அத்தகைய தொழில் நிலையத்தின் அல்லது வீட்டின் உரிமையாளர், முகாமையாளர் அல்லது அவ்வேளையில் அதன் நிருவாகத்திற்கும் பொறுப்பாக உள்ள எவரேனும் ஆள் கருதப்படுதல் வேண்டும்.

27. ஏதேனும் விதத்திலான விளம்பர அறிவித்தல் பொது இடத்தில் உள்ள அல்லது அத்தகைய இடத்தை அண்டியுள்ள மரமொன்றில், மரத்தண்டில், கிளையில் அல்லது வேறு ஏதேனும் பகுதியில் அல்லது பொதுக் கட்டிடமொன்றுடன் இணைக்கப்பட்டு பொருத்துதல், ஒட்டுதல், தொங்கவிடல், கட்டிவைத்தல் அல்லது விளம்பரக் காட்சிப்படுத்தல் எவராலும் மேற்கொள்ளப்படலாகாது.

28. இத் துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தை மீறும் அனுபதிபத்திரம் பெறுநர் ஏதாவது காரணத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டால், மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் 03 உப சரத்தின் மூலம் விதிக்கப்படும் தண்டனைகளில்-

(i) முதலாவதாக செய்யப்படும் தவறு என்றால், 1,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்
(ii) இரண்டாம் முறை அல்லது அதன் பின்பு செய்யப்படும் தவறுக்கு ஒரு தினத்திற்கு 2,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்
(iii) அதற்கு பிறகும் செய்யப்படும் தவறு தொடர்பாக, குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அதை மீறும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு கௌரவ மாநகரபிதா அவர்களிடம் எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் அல்லது தொடர்ந்து தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத மேதிக அபராதத்தின் கீழாகும்.

29. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள் கோடல் தேவைப்பட்டாலேயொழிய, இப்பகுதிக்கான துணைவிதிகள்-

"கட்அவுட்" என்பது, பலகை அல்லது வேறு ஏதேனும் மூலப் பொருளைப் பாவித்து தயாரிக்கப்பட்ட ஏதேனும் சட்டகத்தில் ஒட்டப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட விளம்பர அறிவித்தல்களையும்,

"காட்சிப் பலகை" என்பது, மக்கள் அறிந்துகொள்வதற்காகவோ கவனத்திற்காகவோ, காட்சிப்படுத்தப்படுகின்ற ஏதேனும் விளம்பர அறிவித்தல்களைப் பொருத்துவதற்காக அல்லது தாங்கி வைப்பதற்காக நிர்மாணிக்கப்படுகின்ற ஏதேனும் வகையிலான நிரந்தரமான பலகையையும்,

"விளம்பர அறிவித்தல்" என்பது, எவரேனும் ஆளினால் ஏதேனும் காணியிலோ, கட்டிடத்திலோ நிர்மாணிப்பிற்கு மேலாக அல்லது அதன் மீது முழுமையாகவோ பகுதியளவிலோ காட்சிப்படுத்தப்படுகின்றதும்,

மக்களது அறிந்துகொள்ளல் அல்லது கவனத்தின் பொருட்டு காட்சிப்படுத்துகின்ற, ஒட்டுகின்ற, பொருத்துகின்ற, நிர்மாணிக்கின்ற, தொங்கவிடப்படுகின்ற அல்லது வேறு விதமாக இடஅமைவு செய்யப்படுகின்ற பிரச்சாரக் கருமத்திற்காக பாவிக்கப்படுகின்ற ஏதேனும் எழுத்து, சொல் அல்லது உருவப்படக் குறிப்பினை உள்ளடக்குகின்ற விளம்பர அறிவித்தல், பெனர் அல்லது கட்அவுட் அல்லது வேறுவிதமான மாதிரியுரு, விளம்பரத்தாள் அறிவித்தல், வர்த்தக அறிவித்தலையும் கருதுகின்றது.

## முதலாவது அட்டவணை

### பதுளை மாநகர சபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப் பத்திரம்

| | |
|---|---|
| செலுத்திய அனுமதிப் பத்திர கட்டணம் : | ரூ. ............................... |
| அனுமதிப் பத்திரத்தின் தொடர் இலக்கம் : | .................................... |
| பிணைத் தொகை : | ரூ. ............................... |

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... இல் வசிக்கும் ... ... ... ... ... ... ... ... இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை உரிமையாளரான ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... என்பவருக்கு விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குறுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகளின் பணிப்புக்களுக்கு கட்டுப்பட்டதாக 20... ... ஆண்டு ... ... ... ... மாதம் ... ... திகதியில் இருந்து 20... ... ஆண்டு ... ... ... ... மாதம் ... ... திகதி வரையான காலப்பகுதிக்குள் ... ... ... ... ... ... ... ... ... ... [2] சபை எல்லைக்குள் கீழே குறிப்பிட்டுள்ள இடத்தில் /இடங்களில் விளம்பர அறிவித்தலை /அறிவித்தல்களை காட்சிப்படுத்த இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

**விளம்பர அறிவித்தல் /அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட அதிகாரமளிக்கப்பட்டுள்ள இடம் /இடங்கள்.**

01. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
02. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
03. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
04. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

திகதி:----.

-----,
மாநகர ஆணையாளர் /அதிகாரம் பெற்ற
உத்தியோகத்தர்
பதுளை மாநகர சபை.

**இரண்டாவது அட்டவணை**

**விளம்பர அறிவித்தலைக் காட்சிக்கு வைப்பதற்கான விண்ணப்பப்பத்திரம்**

1. விண்ணப்பதாரியின் பெயர்:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

2. முகவரி:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

3. தேசிய ஆள் அடையாள அட்டை இல.:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

4. தொலைபேசி இலக்கம்:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

5. விளம்பர அறிவித்தல் பற்றிய விபரங்கள்-

(i) அறிவித்தலின் அளவு: நீளம் .......செ.மீ. அகலம்: ...........செ.மீ

(ii) அறிவித்தல்களின் எண்ணிக்கை :----.

(iii) அறிவித்தலின் உள்ளடக்கம் :----.

(iv) இடஅமைவு செய்யும் விதம் :----.

(v) இடவமைவு செய்யும் இடங்கள் :----.

(7 வது துணைவிதியின் (ஊ) பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரியொன்றை இணைக்கவும்)

6. கோருகின்ற அனுமதிப்பத்திரம் செல்லுபடியாக வேண்டிய காலஎல்லை:

தொடக்கத் திகதி: 20... ... ... ... ... ... மாதம் ... ... ஆம் திகதி

இறுதித் திகதி : 20... ... ... ... ... ... மாதம் ... ... ஆம் திகதி

விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குறுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதியின் அனைத்துவிதமான பணிப்புக்களையும் கடைபிடிப்பேன் எனவும், அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் நிறைவடைந்து இரண்டு நாட்கள் கழிய முன்னர் அனுமதிப் பத்திரத்துடன் தொடர்புடைய விளம்பர அறிவித்தல் /அறிவித்தல்களையும் அதில் இடப்பட்டுள்ள பொருட்கள் அனைத்தையும் எனது செலவில் அவ்விடத்தில் இருந்து /இடங்களில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் எனவும் இத்தால் உறுதியளிக்கிறேன்.

திகதி:----.

----,

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**மூன்றாவது அட்டவணை**

***13 ஆம் துணை விதி***

**விளம்பர அறிவித்தலுக்கான கட்டணம் நிர்ணயிக்கப்படுதல்**

| தொடர் இல. | விபரம் | அனுமதிப்பத்திரக் கட்டணம் | |
|---|---|---|---|
| | | ஒரு மாதம் அல்லது அதன் ஒரு பகுதிக்கு | ஒரு வருடத்துக்கு |
| 1. | மேடை நாடகம் அல்லது சினிமா இலக்கிய நிகழ்ச்சி அல்லாத வேறு நிகழ்ச்சி சம்பந்தமாக, சுவரில் அல்லது பலகையில் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தலுக்காக (0.09 சதுர மீற்றர் அல்லது அதன் ஒரு பகுதிக்காக) | | |
| 2. | சினிமா இலக்கிய நிகழ்ச்சி சம்பந்தமாக, சுவரில் அல்லது பலகையில் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தலுக்காக (0.09 சதுர மீற்றர் அல்லது அதன் ஒரு பகுதிக்காக) | | |
| 3. | சினிமா இலக்கிய நிகழ்ச்சி சம்பந்தமாக சுவரில் அல்லது பலகையில் காட்சிப்படுத்தப்படும் டிஜிடல் விளம்பர அறிவித்தலுக்காக (0.09 சதுர மீற்றர் அல்லது அதன் ஒரு பகுதிக்காக) | | |
| 4. | சினிமா இலக்கிய நிகழ்ச்சி அல்லது வேறு ஏதாயினும் நிகழ்ச்சி சம்பந்தமாக விளம்பர அறிவித்தல் அல்லாததும், சுவரில் அல்லது பலகையில் காணப்படும் விளம்பர அறிவித்தலுக்காக (0.09 சதுர மீற்றர் அல்லது அதன் ஒரு பகுதிக்காக) | | |
| 5. | சினிமா இலக்கிய நிகழ்ச்சி சம்பந்தமான விளம்பர அறிவித்தல் அல்லாத டிஜிடல் விளம்பர அறிவித்தலுக்காக (0.09 சதுர மீற்றர் அல்லது அதன் ஒரு பகுதிக்காக) | | |
| 06 | யாதாயினும் ஒரு பலகையில் அல்லது கம்பத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள யாராயினும் ஒரு நபரினால் கொண்டு செல்லப்படுகின்ற அவ்வாறின்றி ஓடும் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள விளம்பர அறிவித்தலுக்காக<br>(அ) அவ் அறிவித்தலானது 0.675 சதுர மீற்றரை மிஞ்சாதவிடத்து ஒரு சதுர மீற்றர் அல்லது அதன் ஒரு பகுதிக்கு<br>(ஆ) அவ் அறிவித்தலானது 0.675 சதுர மீற்றரை மிஞ்சுகின்றவிடத்து ஒரு சதுரமீற்றர் அல்லது அதன் ஒரு பகுதிக்கு | | |

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் மாநகர சபையில் பிரேரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றதன் ஊடாக நிர்ணயிக்கப்படுவதுடன், அவ்வாறான ஒரு நடைமுறையின் ஊடாக காலத்துக்குக் காலம் மாற்றம். திருத்தம் செய்யப்படலாம். சபையின் அங்கீகாரத்துடன் வருடாந்தம் கட்டணத் திருத்தங்கள் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் அக் கட்டணங்கள் அறவிடுதல் செல்லுபடியாகும்

XXXII **ஆம் பிரிவு**

***நீச்சல் தடாகங்கள் பற்றிய துணை விதிகள்***

(255 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின்படி கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் பிரிவின் 28 (ஆ) ஆம் உப பிரிவின் கீழ் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற விளையாட்டு மைதானங்கள் பிறப்பிக்கப்படுகின்றது.

1. இப்பகுதியின் துணை விதிகள் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நீச்சல் தடாகங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2.(அ) மாநகர ஆணையாளர் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் பதுளை மாநகர சபை பிரதேசத்தினுள் நீச்சல் தடாகமொன்றைக் கொண்டுநடாத்துதல் ஆகாது.

(ஆ) (அ) பிரிவில் கூறப்பட்டது எது எப்படி இருப்பினும், அப்பிரிவின் துணைவிதிகள் நடைமுறைக்கு வரும் தினத்தில் பதுளை மாநகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள எந்தவொரு நீச்சல் தடாகத்தையும் நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பிரிவின் துணைவிதிகள் நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து 03 மாத கால அவகாசம் வழங்கப்படுவதோடு, அக்கால அவகாசம் முடிவுறுகையில் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாவிடின் அந்நீச்சல் தடாகத்தைக் நடாத்துதல் ஆகாது.

3. இத்துணைவிதியில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டு இருந்தாலன்றி, எந்தவொரு நீச்சல் தடாகத்திற்கும் நகர ஆணையாளர் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(அ) தடாகத்தில் நீந்துவதற்கு முன்னர் குளிப்பதற்காக துவளை நீர்க்குழாய் (Shower-bath) இருத்தல் வேண்டும்;
(ஆ) நீந்துவதற்கு முன்னர் குளிப்பதற்காகவும், நீச்சல் தடாகத்திற்காகவும் வழங்கப்படும் நீர், பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் சிபார்சு செய்யப்பட்ட நியமங்களுக்கமைய வழங்குவதற்குப் போதுமானளவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்;
(இ) (ஆ) பிரிவில் கூறப்பட்ட நீர் வழங்கலின் பொருட்டு போதியளவு கிருமிநாசினிகளைப் பயன்படுத்தவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்;
(ஈ) நீச்சல் தடாகத்திலுள்ள முழு நீரையும் 24 மணித்தியாலங்களில் இரண்டு தடவைகள் சுத்திகரிப்பு செய்வதற்கும் கிருமி நீக்கம் செய்வதற்குமான நீர்ச் சுற்றோட்டப் பம்பியைக் கொண்ட வடிகட்டல் தொகுதி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;
(உ) நீச்சல் தடாகத்தின் ஒவ்வோர் இடத்தினதும் ஆழம் எவ்வளவு என்பது தடாக மேடையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்;
(ஊ) நீச்சல் தடாகத்தைச் சுற்றி குறைந்த பட்சம் ஒவ்வொரு 08 மீற்றருக்கு ஒன்று வீதம் அமையக்கூடியவாறு, நீச்சல் தடாகத்தில் இறங்குவதற்கும் தடாகத்திலிருந்து வெளியே வருவதற்கும் துருப் பிடிக்காத உருக்கினால் தயாரிக்கப்பட்ட கை வேலியும் ஏணியும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;
(எ) நீச்சல் தடாகத்திற்கு நீரை நிரப்பிய பின்னர் அதன் அடிப்பாகமும் சுவர்களும் நன்றாகத் தெரியும் வகையில் வர்ண மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்;
(ஏ) பன்னிரண்டு வயதிற்குக் குறைந்த பிள்ளைகளுக்கு நீந்துவதற்கு இடமளிப்பதாயின் அதற்காக ஒரு மீற்றரை விஞ்சாத ஆழத்துடன்கூடிய தனிவேறான பிரிவு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;
(ஐ) நீச்சல் தடாகத்தில் நீரில் குதிப்பதற்கு பரண்கள் கட்டப்பட்டிருப்பின் அவை கொங்கிறீற்றினால் நிர்மாணிக்கப்பட வேண்டுமென்பதுடன், அதிலிருந்து வெளியேறுவதற்கு இரும்பு அல்லது உருக்கினால் ஆக்கப்பட்ட உறுதியான ஏணி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்;
(ஒ) போதியளவு உயிர்ப் பாதுகாப்பு மற்றும் முதலுதவி நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் ;
(ஓ) நீச்சல் தடாகத்தைப் பயன்படுத்துவோரின் பொருட்டு பெண்கள் மற்றும் ஆண்கள் என வேறு வேறாக உடை மாற்றும் இடங்களும் மலசலகூடங்களும் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;
(ஔ) பிற்பகல் 06.30 மணிக்குப் பின்னரும் நீந்துவதற்கு இடமளிக்கப்படுவதாயின், தடாகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் போதியளவு மின்னொளி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. நீச்சல் தடாகத்தில் நிரப்பப்பட்டுள்ள நீரின் நோய்க் கிருமிகள் சம்பந்தமாக சுகாதார வைத்திய அதிகாரி பணிப்புக்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவரது பணிப்புக்கமைய உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. (அ) அனுமதிப் பத்திரம் பெற்ற இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடிப் பொருட்கள்;
(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;
(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;
(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;
(vi) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்.

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ஆ) (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், பதுளை மாநகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி மாநகர ஆணையாளரால் கட்டளையிடப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

6. சகல நீச்சல் தடாகங்களும்–

(அ) ஒதுக்கப்பட்ட பகுதி நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் பேணப்படுதல் வேண்டும்;

(ஆ) மலசலகூடங்களிலிருந்தும் குளிக்கும் இடங்களிலிருந்தும் பாவிக்கப்பட்ட நீர் தடையின்றி பாய்ந்தோடக்கூடியவாறு வடிகான் முறைமை தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(இ) அடிப்பாகத்தில் சேரும் கழிவுப்பொருட்களைக் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவைகள் சுத்தப்படுத்தப்படல் வேண்டும்;

(ஈ) நீச்சல் தடாகத்தின் முழு நீர்க் கொள்ளளவு குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவைகள் வீதம் சுத்தப்படுத்தி நோய்க்கிருமி நீக்கஞ் செய்யப்படல் வேண்டும்;

(உ) நீச்சலுக்காக வருகைதரும் எந்தவோர் பாவனையாளரும், நீச்சலுக்கு முன்னர் குளிக்காமலும், நீச்சல் உடைகளை அணியாமலும் நீச்சல் தடாகத்தைப் பாவித்தல் ஆகாது.

7. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் நீச்சல் தடாகம் நடாத்தப்படும் இடம் 3 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை நகர ஆணையாளர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

8. ஏழாம் துணைவிதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் நகர ஆணையாளருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

9. நீச்சல் தடாகம் அமைந்துள்ள பிரதேசத்தில் அல்லது அதனை அண்மித்த பிரதேசத்தில் ஏதேனும் பெருவாரியாகப் பரவும் அல்லது நோய்த் தொற்று பரவியுள்ளதென சுகாதார வைத்திய அதிகாரி தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அத்தகைய நீச்சல் தடாகத்தை மூடிவிடக் கட்டளையிடுவதற்கு மாநகர ஆணையாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

10. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசோதிப்பதற்கு மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, நீச்சல் தடாகத்தைப் பாவிப்பதற்கு இடமளிக்கப்பட்ட எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

11. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

12. 8 ஆம் துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை மாநகர ஆணையாளரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

13. மலசலகூடங்கள் மற்றும் நீச்சலுக்கு முன் குளிப்பதற்காக துவளை நீர்க்குழாய் பொருத்தப்பட்டுள்ள இடத்தின் தரையும் சுவர்களும் மாபிள் ஓடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

14. இத் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தை மீறும் அனுபதிபத்திரம் பெறுநர் ஏதாவது காரணத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டால், மா நகர சபை கட்டளைச் சட்டத்தில் 267 ஆம் பிரிவின் 3 உப பிரிவின் மூலம் விதிக்கப்படும் தண்டனைகளில்–

(i) முதலாவதாக செய்யப்படும் தவறு என்றால், 1,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(ii) இரண்டாம் முறை அல்லது அதன் பின்பு செய்யப்படும் தவறுக்கு ஒரு தினத்திற்கு 2,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(iii) அதற்கு பிறகும் செய்யப்படும் தவறு தொடர்பாக, குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அதை மீறும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு கௌரவ நகரபிதா அவர்களிடம் எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் அல்லது தொடர்ந்து தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத மேலதிக அபராதத்தின் கீழாகும்.

15 பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

"நீச்சல் தடாகம்" என்பது, உடற்பயிற்சிக்காக அல்லது பொழுதுபோக்கிற்காக அல்லது கற்பதற்காக நீச்சலுக்காக வெளியிலிருந்து வருகைதரும் எந்தவோர் ஆளிடமிருந்தும் கட்டணம் அறவிடப்பட்டோ அல்லது கட்டணம் அறிவிடப்படாமலோ நீந்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட ஏதேனும் நீர்த் தடாகம் எனக் கருதப்படும்.

## XXIII ஆம் பிரிவு

### விளையாட்டு மைதானங்கள் பற்றிய துணைவிதிகள்

(252 ஆம் அத்தியாயமான) சபையாகிய மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின்படி கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் பிரிவின் 28 (ஆ) ஆம் உப பிரிவின் கீழ் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற விளையாட்டு மைதானங்கள் பிறப்பிக்கப்படுகின்றது.

1. இப்பகுதியின் துணை விதிகள் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பொது விளையாட்டு மைதானங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் விளையாட்டு மைதானத்தைப் பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளக் கருதியுள்ள எந்தவோர் ஆளும் இப்பகுதியின் துணைவிதிகளின் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரித்த விண்ணப்பப்பத்திரமொன்றைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

3. 2 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறான விண்ணப்பப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கின்ற எவரேனும் ஆளுக்கு பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் விளையாட்டு மைதானமொன்றைப் பாவிப்பதற்கான அனுமதிப் பத்திரமொன்றை விநியோகிக்கையில் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தாலேயொழிய நகர ஆணையாளர் அனுமதிப் பத்திரமொன்று விநியோகிக்கப் படலாகாது.

(அ) விளையாட்டு மைதானத்தைப் பாவனைக்கு எடுப்பதற்கான அனுமதிப் பத்திரமொன்றைக் கோருவதற்கான ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமும் பதுளை மாநகர சபை அலுவலகத்திற்கு கிடைத்த வரிசைக் கிரமத்திற்கிணங்க பரிசீலனை செய்யப்படல் வேண்டும் இருந்த போதிலும் விளையாட்டு மைதானத்தைப் பாவனைக்கு எடுப்பதற்காக கிடைக்கின்ற விண்ணப்பப் பத்திரங்கள் மத்தியில் ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டுடன் தொடர்புடைய ஏதேனும் விடயம் சம்பந்தமானதாக அமைகின்ற விண்ணப்பப் பத்திரத்திற்கு ஆகக்கூடிய முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்;

(ஆ) இதில் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரிக் கட்டண வாய்ப்பாட்டுக்கிணங்க பதுளை மாநகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான விதத்தில் விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான கட்டணத்தையும் வைப்புப் பணத்தொகையையும் செலுத்திய பின்னர் மாத்திரம் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும்.

4. எவரேனும் ஆளொருவரால் விளையாட்டு மைதானமொன்றை ஒதுக்கிக் கொள்ளும் பொருட்டு விடுக்கப்படுகின்ற கோரிக்கைக்கு இடமளிக்காத சந்தர்ப்பத்தில், அவ்வாறு இடமளிக்காமைக்கு ஏதுவான காரணங்களைக் குறிப்பிட்டு அது பற்றி விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பித்த தினத்திலேயே அத்தகைய விண்ணப்பதாரிக்கு அறிவிக்க வேண்டியது நகர ஆணையாளர் பணியாகும்.

5. ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானத்தின் அவ்வாறு ஒதுக்கிக் கொண்ட திகதிகளை மாற்றிக்கொள்ளத் தேவையாயின், விண்ணப்பதாரியால் அது பற்றிய எழுத்து மூலமான கோரிக்கையொன்றை நகர ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய கோரிக்கைக்கிணங்க ஒதுக்கப்பட்ட திகதியை திருத்திக் கொள்ளலானது 3 மற்றும் 8 வது துணைவிதிகளின் பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக அமைதல் வேண்டும்.

6. இப்பகுதியின் துணைவிதிகளிலான ஏற்பாடுகளின் கீழ் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட ஏதேனும் விளையாட்டு மைதானத்தில், அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்வித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏதேனும் விண்ணப்பதாரிக்கு தோன்றிய சந்தர்ப்பத்தில் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டதாக நகர ஆணையாளர் இடமளிக்க முடியும்.

(அ) ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்படுவது, விளையாட்டு மைதானம் ஒதுக்கப்பட்ட திகதிக்கு-
- (i) மூன்று மாதங்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு ஐந்து;
- (ii) இரண்டு மாதங்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு பத்து;
- (iii) ஒரு மாதத்திற்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு பதினைந்து;
- (iv) பதினைந்து நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து;
- (v) ஏழு நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு ஐம்பது;
- (vi) மூன்று நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து;

வீதத்தையும் பதுளை மாநகர சபை நிதியத்தில் பிடித்து வைக்கக் கட்டுப்படல் வேண்டும்.

(ஆ) ஒதுக்கிக் கொள்ளலை இரத்துச் செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்படுவது, விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட திகதிக்கு மூன்று நாட்களை விடக் குறைவான காலப்பகுதியாயின் செலுத்திய கட்டணம் மீளச் செலுத்தப்படலாகாது.

(இ) ஏதேனும் ஒதுக்கிக் கொள்ளல் இரத்துச் செய்துகொள்ளப்பட்டவிடத்து அத்தகைய ஒதுக்கிக் கொள்ளலுக்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை முழுமையாகப் பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரிக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(ஈ) எவரேனும் ஆளொருவரால் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட கருமத்துக்காகவன்றி வேறு ஏதேனும் கருமத்திற்காக பாவிக்கப்படலாகாது.

(உ) விளையாட்டு மைதானமொன்றை ஒதுக்கிக் கொள்வதற்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை எக்காரணத்தின் நிமித்தமும் பிறிதோர் ஆளுக்கு சாட்டுதல் செய்தலாகாது.

7. ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கப்பட்ட விளையாட்டு மைதானமொன்று ஏற்புடைய கருமத்திற்காக பாவிக்கப்பட்ட பின்னர் பதுளை மாநகர சபையில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புத் தொகையிலிருந்து-

(அ) விளையாட்டு மைதானம் அல்லது அதில் ஏதேனும் பகுதிக்கு ஏற்பட்டுள்ள ஏதேனும் நட்டம் இருப்பின் அத்தகைய நட்டத்தின் பெறுமதியும்

(ஆ) விளையாட்டு மைதானம் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட கால எல்லையை விட மேலதிகமாக ஈடுபடுத்தப்பட்ட காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணமும்;

கழிக்கப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள ஏதேனும் பணத்தொகையை மாத்திரம் விண்ணப்பாதாரிக்கு மீளச் செலுத்தப்படலாம்.

8. பாவனைக்காக விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்ள விண்ணப்பப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்தலை, அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை எதிர்பார்த்துள்ள திகதிக்கு குறைந்த பட்சம் மூன்று நாட்களுக்கு முன்னராக செய்துகொள்ளல் வேண்டும். எவரேனும் ஆளினால் விடுக்கப்படுகின்ற வேண்டுகோள், விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்ளத் தேவையான தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வேண்டுகோளுக்கிணங்க செய்யப்படுகின்ற ஒதுக்கிக்கொள்ளலானது 6 வது துணை விதியின் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டதாக அமைதல் வேண்டும்.

9. இப்பகுதியின் துணைவிதிகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க விளையாட்டு மைதானம் ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கப்பட்டிராத ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய விளையாட்டு மைதானத்தை விளையாடுவதற்காகவோ விளையாட்டுப் பயிற்சிப் பணிகளுக்காகவோ ஈடுபடுத்த இடமளிப்பது நகர ஆணையாளர் பணியாக அமைதல் வேண்டும்.

10. எவரேனும் ஆளினால் பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் விளையாட்டு மைதானத்திற்கு சேதம் விளைவித்தலோ அவ்வாறு சேதமடைய இடமளித்தலோ ஆகாது. அத்துடன் விளையாட்டு மைதானத்தில் மாடுகள், ஆடுகள், பன்றிகள், குதிரைகள், மட்டக்குதிரைகள், கோவேறு கழுதைகள் அல்லது நாய்கள் அனுமதிக்கப்படலாகாது. அத்துடன் தொடர்ந்தும், நகர ஆணையாளர் பெறப்பட்ட அனுமதியின்றி எந்தவொரு வாகனமும் எந்தவொரு மைதானத்திற்குள்ளேயும் அனுமதிக்கப்படலாகாது.

11. இப்பகுதியின் துணைவிதியின் கீழ் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட ஏதேனும் விளையாட்டு மைதானம் அவ்வாறு ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்தில் பதுளை மாநகர சபையின் ஏதேனும் அத்தியாவசியக் கருமத்திற்காக அவசியமாகுமிடத்து அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்ய நகர ஆணையாளர் அதிகாரமுடையவராக இருத்தல் வேண்டும். ஆயினும், அத்தகைய இரத்துச் செய்தல் மேற்கொள்ளப்படின் அத்தகைய இரத்துச் செய்தலானது விளையாட்டு மைதானம் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படல் வேண்டுமென்பதோடு. அவரால் செலுத்தப்பட்ட கட்டணமும் வைப்புத் தொகையும் முழுமையாகவே அவருக்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும். மேலும், அத்தகைய இரத்துச் செய்தலை ஒதுக்கிக்கொள்ளப்பட்ட திகதிக்கு முன்னர் மூன்று நாட்களை விடக் குறைவான காலப்பகுதிக்குள் செய்தலாகாது.

12. இத் துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தை மீறப்படும் அனுபதிபத்திரம் பெறுநர் ஏதாவது காரணத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டால், மா நகர சபை கட்டளைச் சட்டத்தில் 267 ஆம் பிரிவின் 3 உப பிரிவின் மூலம் விதிக்கப்படும் தண்டனைகளில்,

(i) முதலாவதாக செய்யப்படும் தவறு என்றால், 1,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(ii) இரண்டாம் முறை அல்லது அதன் பின்பு செய்யப்படும் தவறுக்கு ஒரு தினத்திற்கு 2,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(iii) அதற்கு பிறகும் செய்யப்படும் தவறு தொடர்பாக, குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அதை மீறும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு கௌரவ மாநகரபிதா அவர்களிடம் எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் அல்லது தொடர்ந்து தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத மேலதிக அபராதத்தின் கீழாகும்.

13 பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயன்றி இப்பகுதியின் துணைவிதிகளில்,-

''விளையாட்டு மைதானம்'' என்பது, விளையாடுவதற்காக பதுளை மாநகர சபையினால், ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட ஏதேனும் விளையாட்டு மைதானம் எனக் கருதப்படுவதோடு விளையாட்டு மைதானத்தைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள மதில் அல்லது வேலி அல்லது அதற்குள்ளே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டிடம் அல்லது அத்தகைய ஏதேனும் நிர்மாணிப்பின் பகுதி அல்லது ஏதேனும் பொருத்தி அல்லது உபகரணமும் அதில் உள்ளடங்குதல் வேண்டும்.

''விளையாட்டு'' என்பது, 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுத்துறை சட்டத்தில் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள அர்த்தமாகவே கருதப்படல் வேண்டும்.

### முதலாவது அட்டவணை

### 2 வது துணைவிதி

பதுளை மாநகர சபையின் விளையாட்டு மைதானத்தைப் பாவிக்க அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரம்

1. விண்ணப்பதாரியின் பெயர்:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
முகவரி:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
தேசிய ஆள் அடையாள அட்டை இல.:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
2. விளையாட்டு மைதானத்தைக் கோருவதற்கான காரணம்:- ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
3. தேவைப்படுகின்ற திகதியும் நேரமும்:

திகதியில் இருந்து ... ... ... ... ... ... திகதி வரை ... ... ... ... ... ... நேரம் ... ... ... ... ... ...

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இக்கோரிக்கைக்கிணங்க சம்பந்தப்பட்ட விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டால் அந்த விளையாட்டு மைதானத்தின் கட்டிடத்திற்கு, நிர்மாணிப்புகளுக்கு, உபகரணங்களுக்கு மற்றும் பொருத்திகளுக்கு ஏதேனும் சேதமேற்பட்டால் அந்த நட்டத்தை வைப்புத் தொகையிலிருந்து பதுளை மாநகர சபை கழித்துக்கொள்ள உடன்படுவதோடு அத்தகைய வைப்புத் தொகை மேற்படி அறவிடலுக்குப் போதுமானதாக அமையாவிட்டால் மேலும் தேவையான பணத்தொகையை பதுளை மாநகர சபைக்குச் செலுத்தவும் உடன்படுகின்றேன். அத்துடன் விளையாட்டு மைதானங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை செய்தல் பற்றிய துணைவிதிகளின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கவும் உடன்படுகிறேன்.

................................,
திகதி:- ................ விண்ணப்பதாரியின் கையொப்பம்

### இரண்டாவது அட்டவணை

### 3 வது துணைவிதியின் (ஆ) பந்தி

### விளையாட்டு மைதானமொன்றைப் பாவிப்பதற்கு இடமளிக்க அறவிடப்படுகின்ற கட்டண வாய்ப்பாடு

| | விளையாட்டு மைதானத்தின் பெயர் | கட்டணம் ரூபா ச. | வைப்புத் தொகை ரூபா ச. | மேலதிக மணித்தியாலம் ஒன்றுக்கான கட்டணம் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 1. | | ........ | ........ | ........ |
| 2. | | ........ | ........ | ........ |
| 3. | | ........ | ........ | ........ |
| 4. | | ........ | ........ | ........ |

### XXIV ஆம் பிரிவு

### சனசமூக நிலையங்கள் பற்றிய துணைவிதிகள்

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின்படி கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் பிரிவின் 28(இ) ஆம் உப பிரிவின் கீழ் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற சனசமூக நிலையங்கள் பிறப்பிக்கப்படுகின்றது.

1. இப்பகுதியின் துணை விதிகள் பதுளை மாநகர சபையினால் பேணிவரப்படுகின்ற சனசமூக நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. பதுளை மாநகர சபையினால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் சனசமூக நிலையங்களைப் பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளக் கருதியுள்ள எந்தவோர் ஆளும் இப்பகுதியின் துணைவிதிகளின் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரித்த விண்ணப்பப் பத்திரமொன்றைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

3. இரண்டாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறான விண்ணப்பப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கின்ற எவரேனும் ஆளுக்கு பதுளை மாநகர சபையினால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் சனசமூக நிலையமொன்றைப் பாவிப்பதற்கான அனுமதிப் பத்திரமொன்றை விநியோகிக்கையில் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தாலேயொழிய மாநகர ஆணையாளரால் அனுமதிப் பத்திரமொன்று விநியோகிக்கப்படலாகாது.

(அ) சனசமூக நிலையமொன்றைப் பாவனைக்கு எடுப்பதற்கான அனுமதிப் பத்திரமொன்றைக் கோருவதற்கான ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமும் பதுளை மாநகர சபை அலுவலகத்திற்கு கிடைத்த வரிசைக் கிரமத்திற்கிணங்க பரிசீலனை செய்யப்படல் வேண்டும். இருந்த போதிலும் சனசமூக நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் ஏதாவது சிவில் அமைப்பொன்றின் கூட்டத்திற்கோ அல்லது அத்தகைய அமைப்பினால் நடத்தப்படுகின்ற பொதுக் கருமதிற்கோ முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

(ஆ) இதில் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரிக் கட்டண வாய்ப்பாட்டுக்கிணங்க பதுளை மாநகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான விதத்திலான சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான கட்டணத்தையும் வைப்புப் பணத்தொகையையும் செலுத்திய பின்னர் மாத்திரம் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும்.

(இ) (ஆ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், சனசமூக நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் ஏதாவது சிவில் அமைப்பின் கூட்டத்திற்காகவோ அத்தகைய அமைப்பினால் நடத்தப்படுகின்ற பொதுக் கருமத்திற்காகவோ எவ்விதமான கட்டணமும் அறவிடப்படலாகாது.

4. ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கப்பட்ட சனசமூக நிலையமொன்று ஏற்புடைய கருமத்திற்காக பாவிக்கப்பட்ட பின்னர் பதுளை மாநகர சபையில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புத் தொகையிலிருந்து–

(அ) சனசமூக நிலையம் அல்லது அதில் ஏதேனும் பகுதிக்கு ஏற்பட்டுள்ள ஏதேனும் நட்டம் இருப்பின் அத்தகைய நட்டத்தின் பொறுமதியும்;
(ஆ) சனசமூக நிலையம் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட கால எல்லையை விட மேலதிகமாக ஈடுபடுத்தப்பட்ட காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணமும்;

கழிக்கப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள ஏதேனும் பணத்தொகையை மாத்திரம் விண்ணப்பாதாரிக்கு மீளச் செலுத்தப்படலாம்.

5. எவரேனும் ஆளொருவரால் சனசமூக நிலையமொன்றை ஒதுக்கிக் கொள்ளும் பொருட்டு விடுக்கப்படுகின்ற கோரிக்கைக்கு இடமளிக்காத சந்தர்ப்பத்தில், அவ்வாறு இடமளிக்காமைக்கு ஏதுவான காரணங்களைக் குறிப்பிட்டு அது பற்றி விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பித்த தினத்திலேயே அத்தகைய விண்ணப்பதாரிக்கு அறிவிக்க வேண்டியது நகர ஆணையாளரது பணியாகும்.

6. பாவனைக்காக சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொள்ள விண்ணப்பப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்தலை, அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை எதிர்பார்த்துள்ள திகதிக்கு குறைந்த பட்சம் மூன்று நாட்களுக்கு முன்னராக செய்துகொள்ளல் வேண்டும். ஆயினும், பதுளை மாநகர சபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் வசித்துக்கொண்டிருந்த எவரேனும் ஆளினதோ அத்தகைய ஆளினது உறவினரதோ பூதவுடல் வைக்கப்படுவதற்காக சனசமூக நிலையத்தை ஒதுக்கிக்கொள்ள விடுக்கப்படுகின்ற கோரிக்கைக்கு இந்த வரையறை ஏற்புடையதாகாது. எவரேனும் ஆளினால் விடுக்கப்படுகின்ற வேண்டுகோள், சனசமூக நிலையத்தை ஒதுக்கிக் கொள்ளத் தேவையான தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வேண்டுகோளுக்கிணங்க செய்யப்படுகின்ற ஒதுக்கிக்கொள்ளலானது 7 வது துணை விதியின் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டதாக அமைதல் வேண்டும்.

7. இப்பகுதியின் துணைவிதிகளிலான ஏற்பாடுகளின் கீழ் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட ஏதேனும் சனசமூக நிலையத்தில், அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்வித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏதேனும் விண்ணப்பதாரிக்கு தோன்றிய சந்தர்ப்பத்தில் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டதாக மாநகர ஆணையாளரால் இடமளிக்க முடியும்.

(அ) ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்படுவது, சனசமூக நிலையம் ஒதுக்கப்பட்ட திகதிக்கு,–

(i) மூன்று மாதங்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு ஐந்து ;

(ii) இரண்டு மாதங்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு பத்து ;

(iii) ஒரு மாதத்திற்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு பதினைந்து ;

(iv) பதினைந்து நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து ;

(v) ஏழுநாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு ஐம்பது ;

(iv) மூன்று நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து.

வீதத்தையும் பதுளை மாநகர சபை நிதியத்தில் பிடித்து வைக்கக் கட்டுப்படல் வேண்டும்.

(ஆ) ஒதுக்கிக் கொள்ளலை இரத்துச் செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்படுவது, சனசமூக நிலையம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட திகதிக்கு மூன்று நாட்களை விடக் குறைவான காலப்பகுதியாயின் செலுத்திய கட்டணம் மீளச் செலுத்தப்படலாகாது.

(இ) ஏதேனும் ஒதுக்கிக் கொள்ளல் இரத்துச் செய்துகொள்ளப்பட்டவிடத்து அத்தகைய ஒதுக்கிக் கொள்ளலுக்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை முழுமையாகப் பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரிக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

(ஈ) எவரேனும் ஆளொருவரால் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட சனசமூக நிலையம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட கருமத்துக்காகவன்றி வேறு ஏதேனும் கருமத்திற்காக பாவிக்கப்படலாகாது.

(உ) சனசமூக நிலையமொன்றை ஒதுக்கிக் கொள்வதற்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை எக்காரணத்தின் நிமித்தமும் பிறிதோர் ஆளுக்கு சாட்டுதல் செய்தலாகாது.

8. ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட சனசமூக நிலையத்தின் அவ்வாறு ஒதுக்கிக் கொண்ட திகதிகளை மாற்றிக்கொள்ளத் தேவையாயின், விண்ணப்பதாரி அது பற்றிய எழுத்து மூலமான கோரிக்கையொன்றை மாநகர ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய கோரிக்கைக்கிணங்க ஒதுக்கப்பட்ட திகதியை திருத்திக் கொள்ளலானது 3 மற்றும் 8 ஆம் துணைவிதிகளின் பணிப்புகளுக்கு கட்டுப்பட்டதாக அமைதல் வேண்டும்.

9. இப்பகுதியின் துணைவிதியின் கீழ் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட ஏதேனும் சனசமூக நிலையம் அவ்வாறு ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்தில் பதுளை மாநகர சபையின் ஏதேனும் அத்தியாவசியக் கருமத்திற்காக அவசியமாகுமிடத்து அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்ய நகர ஆணையாளர் அதிகாரமுடையவராக இருத்தல் வேண்டும். ஆயினும், அத்தகைய இரத்துச் செய்தல் மேற்கொள்ளப்படின் அத்தகைய இரத்துச் செய்தலானது சனசமூக நிலையம் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படல் வேண்டுமென்பதோடு. அவரால் செலுத்தப்பட்ட கட்டணமும் வைப்புத் தொகையும் முழுமையாகவே அவருக்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும். மேலும், அத்தகைய இரத்துச் செய்தலை ஒதுக்கிக்கொள்ளப்பட்ட திகதிக்கு முன்னர் மூன்று நாட்களை விடக் குறைவான காலப்பகுதிக்குள் செய்தலாகாது.

10. எவரேனும் ஆளினால் பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் சனசமூக நிலையத்திற்கு சேதம் விளைவித்தலோ அவ்வாறு சேதமடைய இடமளித்தலோ ஆகாது. சனசமூக நிலையத்தில் புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல், சூதாட்டத்தில் ஈடுபடல் அல்லது ஏதேனும் துர்நடத்தையில் ஈடுபடலாகாகது.

11. இத் துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தை மீறப்படும் அனுபதிபத்திரம் பெறுநர் ஏதாவது காரணத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டால், மா நகர சபை கட்டளைச் சட்டத்தில் 267 ஆம் பிரிவின் 3 உப பிரிவின் மூலம் விதிக்கப்படும் தண்டனைகளில்,

(i) முதலாவதாக செய்யப்படும் தவறு என்றால் 1,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்
(ii) இரண்டாம் முறை அல்லது அதன் பின்பு செய்யப்படும் தவறுக்கு ஒரு தினத்திற்கு 2000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்
(iii) அதற்கு பிறகும் செய்யப்படும் தவறு தொடர்பாக, குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அதை மீறும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு கௌரவ நகரபிதா அவர்களிடம் எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் அல்லது தொடர்ந்து தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத மேலதிகஅபராதத்தின் கீழாகும்.

12. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயன்றி இப்பகுதியின் துணைவிதிகளில்,-

"பொதுக் கருமம்" என்பது, பதுளை மாநகர சபைப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொது நன்மைக்காக அல்லது தேவையின் நிமித்தம் ஏதேனும் சிவில் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற ஏதேனும் கூட்டம், கலந்துரையாடல், மருந்துவப் பிணியாய்வு (கிளினிக்), உதவி வழங்கும் பணி, அத்தகைய தன்மை கொண்ட ஏதேனும் கருமம் அல்லது சமூக அல்லது சமயப் பணியாகக் கருதப்படுவதோடு ஏதேனும் வணிகத் தகைமையுடைய கருமம் அதில் உள்ளடக்கப்படலாகாது.

"சனசமூக நிலையம்" என்பது, பதுளை மாநகர சபையினால் பேணிவரப்படுகின்ற பதுளை மாநகர சபைப் பிரதேசத்திற்குள் வசிக்கின்ற மக்களின் பொதுப் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் காணி அல்லது வளவு கருதப்படுவதோடு, அவற்றைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள மதில், வேலி அல்லது அதற்குள்ளே காணப்படுகின்ற ஏதேனும் கட்டிடம் அல்லது ஏதேனும் நிர்மாணிப்பின் பகுதி அல்லது பொருத்தி அல்லது உபகரணங்களும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

"சிவில் அமைப்பு" என்பது, பதுளை மாநகர சபைப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களின் பங்கேற்புடன் தாபிக்கப் பெற்றுள்ள ஏதேனும் தொண்டர் அமைப்பு கருதப்படுவதோடு, பதுளை மாநகர சபைப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களின் நன்மை அல்லது மேம்பாட்டுக்காக பதுளை மாநகர சபைப் பிரதேசத்திற்கு வெளியில் நிறுவப்பட்டுள்ள வேறேதேனும் தொண்டர் அமைப்பும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**முதலாவது அட்டவணை**

**2 வது துணைவிதி**

**பதுளை மாநகர சபையின் .................... சனசமூக நிலையத்தைப் பாவிக்க அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரம்**

1. விண்ணப்பதாரியின் பெயர்:- … … … … … … … … … … … … … …
முகவரி:- … … … … … … … … … … … … … … … … … … … … …
தேசிய ஆள் அடையாள அட்டை இல.:- … … … … … … … … … … …
2. சனசமூக நிலையத்தைக் கோருவதற்கான காரணம்:- … … … … …
… … … … … … … … … … … … … … … … … … … … … … … …
3. தேவைப்படுகின்ற திகதியும் நேரமும்:

திகதியில் இருந்து … … … … … … திகதி வரை … … … … … … நேரம் … … … … … …

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இக்கோரிக்கைக்கிணங்க சம்பந்தப்பட்ட சனசமூக நிலையம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டால் அந்த சனசமூக நிலையத்தின் கட்டிடத்திற்கு, நிர்மாணிப்புகளுக்கு, உபகரணங்களுக்கு மற்றும் பொருத்திகளுக்கு ஏதேனும் சேதமேற்பட்டால் அந்த நட்டத்தை வைப்புத் தொகையிலிருந்து பதுளை மாநகர சபை கழித்துக்கொள்ள உடன்படுவதோடு அத்தகைய வைப்புத் தொகை மேற்படி அறவிடலுக்குப் போதுமானதாக அமையாவிட்டால் மேலும் தேவையான பணத்தொகையை பதுளை மாநகர சபைக்குச் செலுத்தவும் உடன்படுகின்றேன். அத்துடன் சனசமூக நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை செய்தல் பற்றிய துணைவிதிகளின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கவும் உடன்படுகிறேன்.

.................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:----.

**இரண்டாவது அட்டவணை**

**3 வது துணைவிதிகள் (ஆ) பந்தி**

**சனசமூக நிலையமொன்றைப் பாவிப்பதற்கு இடமளிக்க அறவிடப்படுகின்ற கட்டண வாய்ப்பாடு**

| | சனசமூக நிலையத்தின் பெயர் | கட்டணம் ரூ. சதம் | வைப்புத் தொகை ரூ. சதம் | மேலதிக மணித்தியாலம் ஒன்றுக்கான கட்டணம் ரூ. சதம் |
|---|---|---|---|---|
| 1. | | ........ | ........ | ........ |
| 2. | | ........ | ........ | ........ |
| 3. | | ........ | ........ | ........ |
| 4. | | ........ | ........ | ........ |

XXXV **ஆம் பிரிவு**

**நூலகங்கள்**

(252 ஆவது அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின்படி கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம பிரிவின் 28 (இ) ஆம் பிரிவின் கீழ் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற நூலகங்களது.

1. இது பதுளை மாநகர சபைக்குரிய நூலக சேவைகளை முறைப்படுத்துதல், நிர்வகித்தல் மற்றும் அவற்றுக்காக கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான துணைச் சட்டமாகும்.

2. பதுளை மாநகர சபையினால் அமைக்கப்பட்டு, நடாத்திச் செல்லப்படுகின்ற பொது நூலகம் கீழ்க்காணும் பிரிவுகளைக் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும்.

(அ) நூல்களை வெளியில் கொண்டு செல்ல வழங்கும் நூலகம்
(ஆ) வாசிகசாலை
(இ) சிறுவர் நூலகம்
(ஈ) சஞ்சிகைப் பிரிவு
(உ) இடம்பெயர் பிரிவு
(ஊ) ஆய்வுப் பிரிவு
(எ) கேட்பேர் கூடம் உட்பட கேட்பதற்கும் பார்ப்பதற்குமான அலகு.
(ஏ) 'நென்சர'தகவல் தொழில்நுட்ப நிலையம்

3.1. பொது நூலகத்தின் ஆலோசனைக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டியதுடன், அது கீழ்வரும் நபர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) சபையின் தற்கால நகரபிதா. (பதவி வழியாக)
(ஆ) சபையினால் நியமிக்கப்படக்கூடிய நகர சபை உறுப்பினர்கள் ஐவருக்கு மேற்படாத எண்ணிக்கையில் ஒருவர் குழு உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
(இ) சபையினால் நியமிக்கப்படுகின்ற நகரசபை எல்லைக்குள் வசிக்கும் பிரகர்கள் நால்வர்.
(ஈ) நூலக வாசகர் கழகத்தின் தலைவர் மற்றும் நூலகம் பொறுப்பாளரின் சிபாரிசின் படி சபையினால் பெயர் குறிப்பிடப்படும் நூலகத்தில் அனுசரணையாளர்களில் ஒருவர்.
(உ) உள்ளூராட்சி ஆணையாளர் பதவி வழி உறுப்பினராதல் வேண்டும்.
(ஊ) மாநகரசபை ஆணையாளர்

2. நூலகத்தின் ஒழுக்காற்றைப் பேணுவது தொடர்பாக நூலகத்துக்குப் பொறுப்பாக உள்ள நூலகப் பொறுப்பாளர் வகை கூற வேண்டியதுடன், அவர் பதவி வழியாக ஆலோசனைக் குழுவின் செயலாளராகக் கடமை புரிதல் வேண்டும்.

3. (1) துணைவிதியின் (ஆ),(இ) (ஈ) ஆகிய பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்படுபவர்கள் நியமனத் திகதியிலிருந்து ஓராண்டு காலம் பதவியில் இருப்பர். தேவைப்படின் அவர்கள் மீண்டும் நியமிக்கப்படலாம்.

4. (1) மாநகரபிதா பதவி வழியாக ஆலோசனைக் குழுவின் தலைவராவதுடன், ஒவ்வொரு செயற்குழுக் கூட்டத்திற்கும் அவர் தலைமை வகிக்க வேண்டும். மாநகரபிதா வருகை தராத சந்தர்ப்பத்தில் வருகை தந்துள்ள அங்கத்தினர்களினால் தெரிவு செய்யப்படுகின்ற சபையின் உறுப்பினர் (நகரசபை உறுப்பினர்) ஒருவர் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார்.

(2) ஏதாயினும் ஒரு விடயத்துக்காக வாக்கெடுப்பு நடாத்தப்படும்போது இரு பக்கத்திற்கும் சமமான வாக்குகள் கிடைத்தால் தலைமை வகிப்பவருக்கு தீர்மான வாக்களிப்பிற்கான உரித்து உடையதாகும்.

5. (i) ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கான பெரும்பான்மை 5 பேராகும்.
(ii) ஐந்து பேரைக் கொண்ட பெரும்பான்மை இல்லாதவிடத்து அன்றைய செயற்குழுக் கூட்டம் நடாத்தப்படல் ஆகாது.

6. தேவையெனக் கருதப்படும் ஏதாவது நிபந்தனைகள் பொது நூலகத்திற்குரிய யாதாயினும் ஒரு பகுதியினை கல்வி மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்காக யாராயினும் ஒருவருக்கு அனுமதி வழங்குவதற்கு அல்லது இந்த துணைச் சட்டங்களில் ஏதாவது ஒன்றை மீறியுள்ள ஒருவருக்கு நூலகத்தின் ஏதாயினும் ஒரு பிரிவினை பயன்படுத்துவதைத் தடை விதிப்பதற் கான அதிகாரம் குழுவிற்கு இருக்க வேண்டும்.

**நூல்களை வெளியில் கொண்டு செல்ல வழங்கும் நூலகம்**

7.1. நூல்களை வெளியில் கொண்டு செல்ல வழங்கும் நூலகத்தின் ஓர் அங்கத்தவராவதற்கு விரும்புகின்ற யாரும் நூலகப் பொறுப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப் படிவத்தைப பூர்த்தி செய்ய வேண்டியதுடன், அங்கத்தவர் கீழக்காணும் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்:-

(அ) 14 வயதுக்குக் குறையாதவராக இருத்தல்;
(ஆ) வாசிப்பதற்கு இயலுமாயிருத்தல்;
(இ) மாநகர சபை எல்லைக்குள் ரூபா 15,000 வருடாந்தப் பெறுமதி கொண்ட வீடொன்றின் உரிமையாளர் பிணை நிற்பவராக இருத்தல்;
(ஈ) மாநகர சபையின் நிர்வாக எலலைக்குள் வசிப்பவராக இருத்தல்;
(உ) விண்ணப்பதாரரின் வதிவிடம் உரிய கிராம அலுவலரினால் உறுதி செய்யப்பட்டு இருத்தல்;
(ஊ) பிணையாளரின் வதிவிடத்தை உறுதி செய்து கொள்வதற்கு வரியிறுப்பாளர் அட்டவணை பரிசீலிக்கப்பட்டிருத்தல்;
(எ) அவ்வாறு பூர்த்தியான விண்ணப்பப்படிவம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் விலாசத்தை உறுதி செய்து கொள்வதற்காக அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்;
(ஏ) பாடசாலை மாணவராயின் 50 ரூபா, பாடசாலை செல்லாதவராயின் 100 ரூபா நகர எல்லைக்கு வெளியிலிருப்பவராயின் ரூபா 200 நூலகப் பொறுப்பாளரிடம் வைப்பு செய்கின்ற ஒருவரல்லாத வேறு யாரும் நூல்களை வெளியில் எடுத்துச் செல்லும் நூலகத்தின் அங்கத்தவராக சேர்த்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

7.2. அவ் விண்ணப்பப்படிவமானது கீழக் காணும் ஒருவரைக் கொண்டு உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(அ) மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்,

(ஆ) ஊவா மாகாண சபை உறுப்பினர் ஒருவர்.

(இ) மாநகரபிதா/உப மாநகரபிதா.

(ஈ) மாநகர சபை உறுப்பினர் ஒருவர்.

(உ) மாநகர சபை எல்லைக்குள் அமைந்த ஒரு பாடசாலை அதிபர்,

(ஊ) 60,000 ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாகப் பெறும் அரச உத்தியோகத்தர் ஒருவர்.

7.3. அங்கத்தினர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் பற்றியும், அங்கத்தினரினால் தொலைக்கப்பட்ட அல்லது பழுதுபடுத்தப்பட்ட நூலகத்திற்கு உரிய புத்தகங்கள் அல்லது வேறு எவ்வகையான பொருட்கள் பற்றியும் பிணையாளர் வகை கூறுதல் வேண்டும்.

7.4. மேலே குறிப்பிடப்பட 07.2 சரத்தின் பிரகாரம் விண்ணப்பப் படிவத்தினை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரம் கொண்ட ஒருவர் தனது விண்ணப்பப்படிவத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது.

எனினும் அவர் 07.1 (ஈ) பிரிவுக்கு இணங்க விண்ணப்பப் படிவத்தினை பிணையாளர் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

8. நூல்களை வெளியில் கொண்டு செல்ல வழங்கும் நூலகத்தின் ஓர் அங்கத்தினர் தனக்கு வழங்கப்பட்டுள்ள அங்கத்துவ பத்திரத்தின் பேரில் கொண்டு செல்லுகின்ற புத்தகம் தொடர்பாக வகை கூறல் வேண்டும்.

9. நூல்களை வெளியில் கொண்டு செல்ல வழங்கும் நூலகத்தின் ஓர் அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொருவருக்கும் நூலகப் பொறுப்பாளரினால் இரண்டு அங்கத்துவ அட்டைகள் வழங்கப்படல் வேண்டும். ஒரு தடவையில் ஓர் அங்கத்தினர் ஒரு நூல் வீதம் கொண்டு செல்ல இயலுமாவதுடன், நூல்களை வெளியில் கொண்டு செல்லும்போது அங்கத்துவ அட்டைகளை நூலகத்தில் ஒப்படைத்துச் செல்லல் வேண்டும்.

10. நூல்களை வெளியில்கொண்டு செல்ல வழங்கும் நூலகத்தின் ஓர் அங்கத்தினரால் 8 ஆம் பிரிவுக்கு இணங்க தன்னிடம் விநியோகிக்கப்படும் அங்கத்துவ அட்டை தொலைந்துவிடின் அது பற்றி நூலகப் பொறுப்பாளருக்கு .உடனடியாக அறிவித்தல் வேண்டும். அவ்வாறு தொலைந்து போன அங்கத்துவ அட்டையின் பேரில் எந்தவொரு நூலும், நூல்களை வெளியில் கொண்டு செல்ல வழங்கும் நூலகத்திலிருந்து வெளியில் கொண்டு செல்லப்பட்டிருக்கவில்லை என நூலகப் பொறுப்பாளர் திருப்தியுற்றால் காணாமல் போன அங்கத்துவ அட்டைக்குப் பதிலாக, 10 ரூபா அறவிடப்பட்டதாயின் பின்னர் இரண்டாவது பிரதியொன்றை நூலகம் வழங்க வேண்டும். அங்கத்துவ அட்டை காணாமற் போனது பற்றி தனக்கு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து குறைந்த பட்சம் 30 தினங்கள் கழியும் வரை நூலகப் பொறுப்பாளர் அதன் இரண்டாம் பிரதியை வழங்குதல் ஆகாது. அவ்வாறு அங்கத்துவ அட்டையின் இரண்டாம் பிரதி வழங்கப்படுதலானது, முன்பு வழங்கப்பட்ட அங்கத்துவ அட்டை மீது ஏதோ சந்தர்ப்பத்தில் கொண்டு செல்லப்பட்ட புத்தகங்கள் சார்பில் அங்கத்தினர் அல்லது நூலகப் பொறுப்பாளரினால் வகை கூறலிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு எதுவாதல் ஆகாது.

11. நூலகப் பொறுப்பாளரது கருத்தின்படி வைப்புப் பணம் மற்றும் அங்கத்துவ அட்டை மீண்டும் வநியோகிக்கப்பட மாட்டாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு ஓர் அங்கத்தினரின் வதிவிட (அல்லது தொழில்) முகவரியில் மாற்றம் ஏற்பாட்டால் அது பற்றி அவ்வாறு மாற்ற்முற்று ஒரு வாரத்திற்குள் நூலக கடிதமூலம் அறிவித்தல் வேண்டும். அங்கத்துவ அட்டையினை மீண்டும் விநியோகிப்பது நூலகப் பொறுப்பாளரின் கருத்துப்படி நடைபெறல் வேண்டும்.

12. மாநகர சபை எல்லைக்கு வெளியில் தனது முகவரியை மாற்றுகின்ற அல்லது நூலகத்திலிருந்து பயன்பெறுதலை நிறுத்துகின்ற அங்கத்தினர்கள் தமது அங்கத்துவ அட்டைகளை இரத்து செய்வதற்காக நூலகப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு செய்யாதுவிடின் அவர்களது அங்கத்துவ அட்டைகளின் ஊடாக வெளியில் கொண்டு செல்லப்படுகின்ற நூல்கள் தொடர்பில் அவர்கள் வகை கூறல் வேண்டும்.

13. அங்கத்துவம் ஈராண்டுகளுக்கொரு தடவை புதுப்பிக்கப்படல் வேண்டும். அதற்காக 7.1 (இ) பிரிவின் பிரகாரம் பிணையாளர் ஒருவரினால் உறுதி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் ஒன்றினை முறையாகப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு புதிப்பிக்கப்படும்போது மீண்டும் 25 ரூபா செலுத்தப்படல் வேண்டும்.

14. (அ) நூல்களை வெளியில் கொண்டு செல்ல வழங்கும் நூலகத்திலிருந்து ஓர் அங்கத்தினரால் வெளியில் கொண்டு செல்லப்பட்ட ஏதாயினும் ஒரு நூல் அது விநியோகிக்கப்பட்ட தினத்திலிருந்து 14 தினங்களுக்குள் மீண்டும் நூலகப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) வேறோர் அங்கத்தினரால் கேட்கப்படாத யாதாயினும் ஒரு நூல் மீண்டும் 14 தினங்களுக்கு அதே நபருக்கு விநியோகிக்கப்படலாம். நூல்களை தனிப்பட்ட ரீதியில் நூலகத்திற்குக் கொண்டு வந்து அல்லது நூலகப் பொறுப்பாளருக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம் மூலம் அவ்வாறு காலத்தை நீடித்துக்கொள்ள இயலும்.

15. 14 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட 14 நாட்களுக்குள்ளும் நூல்களை வெளியில் கொண்டு செல்ல வழங்கும் நூலகத்திலிருந்து கொண்டு சென்ற ஒரு நூலை மீண்டும் ஒப்படைப்பதற்கு யாராயினும் ஓர் அங்கத்தினர் தவறுவாராயிருந்தால் நூலை ஒப்படைக்க வேண்டிய திகதியின் பின்னர் ஒப்படைக்கத் தவறும் ஒவ்வொரு தினத்திற்கும் குறித்த நூலுக்காக 5.00 ரூபா வீதம் அங்கத்தினர் தண்டப்பணம் செலுத்துதல் வேண்டும். நூலகம் மூடப்படும் தினங்கள் இதில் கணக்கிடப்படுதல் ஆகாது.

16.(அ) நூல்களை வெளியில் கொண்டு செல்ல வழங்கும் நூலகத்தின் அங்கத்தினராகவிருக்கும் ஒருவர் பெற்றுக்கொண்ட நூல் ஒன்றினை முப்பது தினங்களுக்குள் மீண்டும் ஒப்படைக்கத் தவறினால் மாநகர சபை ஆணையாளரின் தீர்மானப்படி நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

(ஆ) ஓர் அங்கத்தினர் அவ்வாறு முப்பது தினங்களுக்குள் நூலை மீண்டும் ஒப்படைக்கத் தவறினால் நூலின் பெறுமதியின் இரு மடங்கு பணம் பிந்திய கட்டணமாயும் பெறுமதியின் 25% மேலதிகக் கட்டணமாயும் அறவிடுவதற்கு மாநகர ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு செலுத்தாதவிடத்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

17. நூல்களை வெளியில் கொண்டு செல்ல வழங்கும் நூலகத்திலிருந்து கொண்டு செல்லப்படும் ஒரு நூலுக்கு எந்த வகையிலாயினும் பாதிப்பு அல்லது பழுதினை எந்தவொரு அங்கத்தினரும் ஏற்படுத்தக்கூடாது. அங்கத்தினர்கள் புத்தகங்களை மிகவும் துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டியதுடன், புத்தகங்களின் தாள்களை மடித்தல், பென்சில்களினால் அடையாளம் இடுதல், வேறு வகையான குறியீடுகளை இடுதல் போன்றவற்றை செய்தலாகாது.

18. புத்தகங்களை வெளியில் கொண்டு செல்லத் தருகின்ற நூலகத்திலிருந்து கொண்டு செல்லக் கருதுகின்ற புத்தகத்திற்கு யாதாயினும் தீங்கு அலலது பழுது ஏற்படுமானால் அது பற்றி நூலக பொறுப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வருதல் ஒவ்வொரு அங்கத்தினரதும் கடப்பாடாகும். அவ்வாறான தீங்கு அல்லது பழுது பற்றி நூலகப் பொறுப்பாளருக்கு அறிவிக்கத் தவறினால் புத்தகம் வழங்கப்பட்ட தருணத்தில் எவ்வித பழுதும் இல்லாத நிலையில் விநியோகிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

19. யாராயினும் ஓர் அங்கத்தினரால் மீள ஒப்படைக்கப்பட்ட நூலானது (சாதாரண பாவனையின் போது ஏற்படக்கூடிய வித்தியாசங்கள் தவிர) பல்வேறு விடயங்கள் எழுதப்பட்டு, அடையாளம் இடப்பட்டு அல்லது வேறு வகையிலான பாதிப்புக்கு உட்பட்டிருப்பதாக நூலகப்பொறுப்பாளர் தெரிய வந்தால் அவர், அங்கத்தினரிடமிருந்து புத்தகத்தின் பெறுமதியினை அறிவிடுவதற்கு அதிகாரம் உண்டு. அப் பணத்தைச் செலுத்த அங்கத்தினர் தவறுமிடத்து, அப் பணத்தை கட்டணத்துடன் அறவிட்டுக்கொள்வதற்கு மாநகர சபை ஆணையாளர் சட்ட நடவடிக்கை எடுக்கலாம். அங்கத்தினரால் பழுதாக்கப்பட புத்தகத்தினை 'பொது நூலகத்தில் பழுதடைந்தபடியால் விற்கப்பட்டது' என்ற முத்திரை பதிக்கப்பட்டு நூலகப் பொறுப்பாளரின் கையொப்பம் இடப்பட்டதன் பின்னர் குறிபிட்ட பழுதடைந்த புத்தகத்தினை பெற்றுக்கொள்வதற்கு குறித்த அங்கத்தினருக்கு இயலுமாதல் வேண்டும்.

20. (அ) எவராயினும் ஓர் அங்கத்தினரால் நூல்களை வெளியில் கொண்டு செல்லத் தருகின்ற நூலகத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட புத்தகம் தொடர்பாக அவ்வங்கத்தினர் வகை கூறல் வேண்டும்.

21. (அ) யாதாயினும் ஒரு தொற்று நோயினால், ஸ்பரிசத்தினால் தொற்றக்கூடிய நோயினால் அல்லது சரும வியாதியினால் பீடிக்கப்பட்ட ஒருவரினால் பாவிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு புத்தகத்தை எந்தவொரு அங்கத்தினராலும் நூலகத்திற்கு மீள ஒப்படைத்தல் ஆகாது.

22. ஏதாவதொரு நூலை எந்த அங்கத்தினர் கொண்டு செல்வது என்பது தொடர்பாக புத்தகங்களை வெளியில் கொண்டு செல்லத் தருகின்ற நூலகத்தின் இரு அங்கத்தினருக்கிடையில் அல்லது அதைவிட அதிக எண்ணிக்கையினருக்கிடையில் பிணக்கு ஏற்படின் அப் பிணக்கு தொடர்பில் நூலகப் பொறுப்பாளரின் தீர்மானமே செல்லுபடியாதல் வேண்டும்.

23. நூலகத்தின் அங்கத்துவத்திலிருந்து விலகும்போது 7.1 (உ) சரத்தின்படி செலுத்தப்பட்ட பிணைப் பணத்திலிருந்து நூலகத்துக்கு அறவிடப்பட வேண்டிய ஏதாவது தொகை இருப்பின் அதனை அறவிட்டதன் பின்னர் எஞ்சியிருக்கும் பணம் அங்கத்தினருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

24. நூலகம் மூடப்பட்டிருக்கும் தினங்கள் மற்றும் மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்ட வேறொரு தினம் அல்லது தினங்கள் தவிர நூல்களை வெளியில் கொண்டு செல்லத் தருகின்ற நூலகமானது ஒவ்வொரு நாளும் காலை 8.00 மணியிலிருந்து பிற்பகல் 1800 வரை திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

**ஆய்வுப் பிரிவு**

25. வருடமொன்றுக்கு 50 ரூபா செலுத்தி ஆராய்ச்சிப் பிரிவின் அங்கத்துவம் பெற்ற எந்வொரு அங்கத்தினரும் அங்குள்ள புத்தகங்களைப் பயன்படுத்த இயலும்.

26. ஆராய்ச்சிக்காக மாத்திரம் வழங்கப்பட்ட ஒரு நூல் அல்லது நூலகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள உடைமைகளின் ஒரு பகுதியான வேறு எந்த நூல் பத்திரிகை, சஞ்சிகை, சித்திரம், படம், செதுக்கல், கடிதம், அச்சுப் பிரசுரங்கள் குறிப்புகள், வரைபடங்கள், கையெழுத்துப் பிரதிகள், செய்தித் தாள்கள் அல்லது ஆராய்ச்சிப் பிரிவுக்குரிய எந்தவொரு பிரசாரமும். மாநகரபிதா அல்லது மாநகர சபை ஆணையாளரின் முன் அனுமதியின்றி ஆராய்ச்சிப் பிரிவிலிருந்து வெளியில் கொண்டு செல்லுதல் ஆகாது.

27. நூலகம் மூடப்பட்டிருக்கும் தினங்களில் அல்லது மாநகர சபை தீர்மானிக்கும் வேறொரு தினத்தில் அல்லது தினங்களில் தவிர சஞ்சிகைப் பிரிவானது தினந்தோறும் காலை 0800 மணிமுதல் பி.ப.1830 மணிவரை திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

**சஞ்சிகைப் பிரிவு**

28. நூலகத்தின் வாசிப்பு மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள அல்லது அதற்கு உரித்தான புத்தகம், பத்திரிகை, சஞ்சிகை, மலர், இதழ், சித்திரம், படம் வரைபு, குறிப்பு, வரைபடம், கடிதம், அச்சுப் பிரசுரம் அல்லது சஞ்சிகைப் பிரிவுக்குரிய வேறு எந்த ஒன்றையும் சஞ்சிகைப் பிரிவின் அனுமதி இல்லாமல் வெளியில் கொண்டு செல்லுதல் ஆகாது.

29. நூலகம் மூடப்பட்டிருக்கும் தினங்களில் அல்லது மாநகர சபை தீர்மானிக்கும் வேறொரு தினத்தில் அல்லது தினங்களில் தவிர சஞ்சிகைப் பிரிவானது தினந்தோறும் காலை 0800 மணி முதல் பி.ப 1830 மணிவரை திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

**சிறுவர் நூலகம்**

30. மாநகர சபை நிர்வாக எல்லைக்குள் வசிக்கும் அல்லது மாநகர சபை நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் சிறுவர்கள், சிறுவர் நூலகத்தின் அங்கத்தினர்களாக உள்வாங்கப்பட இயலும். எந்தவொரு சிறுவராயினும்-

(அ) 5 வயதுக்குக் குறையாதவரும் 14 வயதுக்கு மேற்படாதவரும்

(ஆ) வாசிப்பதற்கு இயலுமானவரும் அல்லாத எவரும் சிறுவர் நூலகத்தின் அங்கத்தவராக உள்வாங்கப்படல் ஆகாது.

32. சிறுவர் நூலகத்தின் அங்கத்தினராக சேர்வதற்கு விருப்பமுள்ள ஒவ்வொரு சிறுவரும் கீழ்க்காணும் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்:-

(அ) அங்கத்தினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் உரிய கிராம அலுவலரினால் வதிவிடம் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஆ) பிணையாளியின் வதிவிடத்தை உறுதி செய்துகொள்வதற்காக வரியிறுப்பாளர் பட்டியல் பரிசீலிக்கப்படுதல் வேண்டும்;

(இ) அவ்வாறு பூர்த்தியான விண்ணப்பப் படிவம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் விலாசத்தை உறுதி செய்துகொள்வதற்காக அஞ்சல் மூலம் அங்கத்தினருக்கு அனுப்பப்படல் வேண்டும்;

(ஈ) நூலகப் பொறுப்பாளரிடம் மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் ஒருவர் 25 ரூபாவும், மாநகர சபை எல்லைக்கு வெளியில் வசிக்கும் ஒருவர் 50 ரூபாவும் வைப்பு செய்யப்படுதல் வேண்டும்;

(உ) பிணையாளராக தாய்/தந்தை அல்லது பாதுகாவலர் விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஊ) பாடசாலை செல்லும் மாணவர்கள், தங்களது விண்ணப்பப் படிவங்களை தாம் கல்வி பயிலும் பாடசாலையின் அதிபரைக் கொண்டு உறுதி செய்துகொள்ள வேண்டும். சட்டதிட்டங்களுக்கமைய மேலதிக உறுதியுரையும் பெறப்படுதல் வேண்டும்.

33. சிறுவர் நூலகத்தின் அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒருவருக்கு இரண்டு அங்கத்துவப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டியதுடன், அவர் அந்த அங்கத்துவப் பத்திரங்களின் மீது ஒரே தடவையில் இரு புத்தகங்கள் வீதம் கொண்டு செல்வதற்கு உரித்துடையவர் ஆவார். புத்தகங்களை வெளியில் கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் அங்கத்துவப் பத்திரங்களை நூலகத்தில் ஒப்படைத்துச் செல்லல் வேண்டும்.

34. அங்கத்துவப் பத்திரங்களின் மீது வெளியில் கொண்டு செல்லப்படும் அனைத்து நூல்களுக்கும் அங்கத்துவப் பத்திர உரிமையாளர் வகை கூற வேண்டும் என்பதால், அங்கத்துவப் பத்திரங்களை தொலைத்துவிடாது வைத்துக்கொள்ளுமாறு சிறுவர் நூலகத்தின் அங்கத்தினர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகினறது.

35. அங்கத்தினரிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய அனைத்து தண்டப்பணம் குறித்தும், அவரினால் தொலைக்கப்படும் அல்லது பழுதுபடுத்தப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை அல்லது வேறு எல்லா விதமான பொருட்கள் குறித்தும் பிணையாளர் வகை கூறல் வேண்டும்.

36. சிறுவர் நூலகத்தின் ஓர் அங்கத்தினரால், 33 ஆவது பிரிவின் கீழ் தனக்காக விநியோகிக்கப்படுகின்ற அங்கத்துவப் பத்திரமொன்று காணாமற்போயின் உடனடியாக நூலகப் பொறுப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். காணாமற்போன அங்கத்துவப் பத்திரத்தின் மீது எவ்வித நூலும் கொண்டு செல்லப்படவில்லை என நூலகப் பொறுப்பாளர் திருப்தியுற்றால், 5.00 ரூபா பணம் அறவிட்டதன் பின்னர் இரண்டாவது அங்கத்துவப் பத்திரமொன்றினை குறித்த அங்கத்தினருக்கு வழங்க இயலும். அங்கத்துவப் பத்திரம் காணாமற் போனதாக தனக்கு அறிவிக்கப்பட்ட

தினத்திலிருந்து குறைந்தபட்சம் 30 நாட்களாயினும் கழியும் அங்கத்துவ பத்திரத்தின் இரண்டாம் பிரதியை விநியோகிப்பது முன்பு விநியோகிக்கப்பட்ட அங்கத்துவப் பத்திரத்தின் மீது கொண்டு செல்லப்பட்ட நூல்களுக்கான வகை கூறலில் இருந்து அங்கத்தினர் விடுபடுவதற்கு காரணமாக அமையமாட்டாது.

37. சிறுவர் நூலகத்திலிருந்து வெளியில் கொண்டு செல்லப்பட்டால் 14 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்ட 14 தினங்களுக்குள் மீண்டும் ஒப்படைப்பதற்கு அங்கத்தினர் தவறும் பட்சத்தில் அவ்வாறு குறித்த தினத்தைவிட பிந்துகின்ற ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா 5.00 வீதமான தண்டப் பணம் அங்கத்தினரால் செலுத்தப்படுதல் வேண்டும். நூலகம் மூடப்படுகின்ற தினங்கள் இவ் விடயத்தில் கணக்கிடப்படமாட்டாது.

38. அங்கத்தினர் ஒருவர் சிறுவர் நூலகத்திலிருந்து வெளியில் கொண்டு சென்ற புத்தகத்தை 30 நாட்களுக்குள் மீள ஒப்படைக்கத் தவறினால் புத்தகத்தை அல்லது மாநகர ஆணையாளரின் மாற்றுத் தீர்மானத்தின் பிரகாரம் புத்தகத்தின் பெறுமதி போன்ற இரு மடங்கு பணம் மற்றும் கட்டுப்பணம், 37 ஆவது பிரிவின்படி அவ்வாறு தாமதமாகிய புத்தகத்துக்கான தண்டப் பணம் அங்கத்தினரிடமிருந்து, அவரது பெற்றாரிடமிருந்து அல்லது பிணையாளரிடமிருந்து (பாதுகாவலர்) சட்ட நடவடிக்கை மூலம் அறவிடும் அதிகாரம் மாநகர சபைக்கு இருத்தல் வேண்டும்.

39. நூலகம் மூடப்பட்டிருக்கும் திங்கள் மற்றும் மாநகர சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற வேறொரு தினம் அல்லது தினங்கள் தவிர தினந்தோறும் காலை 0800 மணியிலிருந்து மாலை 1730 மணிவரை திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

40. இத் துணைவிதியின் 13,16,17,18,20,21 ஆவது சரத்துக்கள் சிறுவர் நூலகத்துக்கும் பொருத்தமானதாக அமைதல் வேண்டும்.

**இடம்பெயர் நூலகப் பிரிவு**

41. மாநகர சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு வலயத்திற்காக இடம்பெயர் சேவைகள் ஆரம்பித்து நடாத்திச் செல்லப்படல் வேண்டும். வலயத்தினுள் பொது வைத்திய பரிசோதகர்களின் (P.H.I.) அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தின் ஆலோசனை பிரகாரம் சிறுவர் கழகங்கள் அமைக்கப்பட வேண்டியதுடன். அச் சிறுவர் கழகங்களின் அங்கத்தினர்களிலிருந்து இடம்பெயர் நூலக சேவைக்கு அங்கத்தினர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

42. எந்தவொரு சிறுவனும்/சிறுமியும்-

(அ) 5 வயதுக்கு குறையாதவர்களாயும் 14 வயதுக்கு மேற்படாதவர்களாயும் இருந்தால்,
(ஆ) வாசிக்க இயலுமானவராக இருந்தாலன்றி இடம்பெயர் நூலகத்தின் அங்கத்தினராக சேரத்துக்கொள்ளப்படல் ஆகாது.

43. இடம்பெயர் நூலகத்தின் அங்கத்தினராக சேர்வதற்கு விருப்பமுள்ள ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும் கீழே காணப்படுகின்ற தேவைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்:-

(அ) நூலகபொறுப்பாளரிடம் 25 ரூபா பிணைப்பணமாக வைப்பு செய்தல் வேண்டும்;
(ஆ) பிணையாளராக பெற்றார் உடன்படுதல் வேண்டும்.
(இ) ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் பொது வைத்திய பரிசோதகரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் சிபாரிசினை பெற்றிருத்தல் வேண்டும்.

44. இத் துணைவிதியில் சிறுவர் பிரிவுக்கு உரிய கீழ்கண்ட இல.33, 34, 35, 36, 37 மற்றும் 38 கொண்ட பிரிவுகள் இடம்பெயர் நூலக சேவைகள் பிரிவுக்கு இயைபுடையதாகும்.

45. நூலகங்கள் மூடப்பட்டிருக்கும் தினங்கள் மற்றும் மாநகர சபையினால் தீர்மானிக்கப்படும் வேறொரு தினம் அல்லது தினங்கள் தவிர ஏனைய எல்லா தினங்களிலும் இடம்பெயர் நூலக சேவை நடைமுறையிலிருக்கும்.

**பொது விடயங்கள்**

46. ஏதாயினும் தொற்று நோயினால், ஸ்பரிசத்தினால் தொற்றும் நோயினால் அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும். அல்லது அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த அல்லது அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருவருக்கு பணிவிடை செய்வதில் ஈடுபட்டுள்ள ஒருவர் நோய் பரவக்கூடிய காலப் பகுதியில் அல்லது நோய் தொற்றும் காலம் முடிவடையும் வரை எக் காரணம் கொண்டும் நூலகத்தினுள் நுழைதல் ஆகாது.

47. எவராயினும் ஒருவர்

1. நூலகக் கட்டிடத்தினுள் அல்லது சுற்றுப்புறத்தில் முறைகேடான அல்லது ஒழுக்கக்கேடான விதத்தில் நடந்துகொள்ளுதல் ஆகாது;
2. நூலகத்தினுள் அல்லது சுற்றுப் புறத்தில் உள்ள மாநகர சபைக்கு உரித்தான எந்த ஒரு பொருளுக்காவது, கட்டிடத்திற்காவது அல்லது உடைமைகளுக்காகவது தீங்கு விளைவித்தல் ஆகாது;
3. திருப்தியடையக் கூடியதும், நியாயமானதுமான மறுமொழி கூற இயலுமானால் அன்றி, நூலகத்துக்கு உரிய ஒரு கட்டிடத்தினுள், நூலகத்தினுள் அல்லது அதன் சூழலில் நூலகம் மூடப்பட்டதன் பின்னர் நடமாடுதல் அல்லது அங்கு தங்கியிருத்தல் ஆகாது;

4. நூலகத்தினுள் எச்சில் துப்புதல் அல்லது புகை பிடித்தல் ஆகாது;
5. நூலகத்தினுள் சீட்டுக் கட்டின் மூலம் சூது விளையாடுதல் அலலது வேறு விளையாட்டுக்களை விளையாடுதல் ஆகாது;
6. நூலகத்தினுள் அல்லது அதன் சூழலில் சத்தமெழுப்பி கோசமிடுதல், பாட்டுப் பாடுதல் அல்லது வேறு வகையில் வாசகர்களுக்கு இடையூறு ஏற்படுத்துதல் ஆகாது;
7. அநாகரிகமான ஆடை அணிந்துகொண்டு நூலகத்தினுள் நுழைதல் ஆகாது;
8. நூலகத்திற்குள் நாய் அல்லது வேறு பிராணிகளை கொண்டு வருதல் ஆகாது;
9. நூலகக் கட்டிடத்திற்குள் அல்லது அதன் சுற்று வட்டாரத்தில் உணவருந்துதல், மது அருந்திவிட்டு வருதல் அல்லது அவ்விடத்தில் அருந்துதல் அல்லது தூங்குதல் ஆகாது;
10. குடைகள், தொப்பிகள், பைகள், பொதிகள் அல்லது வேறு பொருட்கள் சம்பந்தமான பாதுகாப்பினை சபையின் அதிகாரியிடம் ஒப்படைத்தல் ஆகாது. அத்தகைய அனைத்துப் பொருட்களையும் உரிமையாளரின் பாதுகாப்புக்கு உட்பட்டதாக வைத்தல் வேண்டும்;
11. நூலகத்தின் பொது மக்களது பயன்பாட்டுக்காக ஒதுக்கப்படாத எந்தவொரு இடத்துக்கும் அல்லது பிரிவிற்கும் உள்ளிடுதல் அல்லது தங்கி நிற்றல் ஆகாது;
12. நூலகத்திற்கு உரிய பொருளாகக் கருதப்படுகின்ற புத்தகத்தை யாதாயினும் பொருளை அல்லது ஆவணத்தை பழுதடையச் செய்தல் அவற்றின் மீது எழுதுதல், அவற்றை வெட்டுதல், கிழித்தல் அல்லது பங்கப்படுத்துதல் தீங்கு ஏற்படுத்துதல், நூலகப் பாவனைக்குரிய மரத் தளபாடங்களுக்கு, வேறு விதமான பொருட்களுக்கு அல்லது பொருந்துகைகளுக்கு எவ்விதமான சேதத்தையும் ஏற்படுத்துதல் ஆகாது;
13. இத் துணைவிதியின் கீழ் தமது அதிகாரங்களை சட்ட ரீதியாகப் பயன்படுத்துகின்ற வேளையில் நூலகப் பொறுப்பாளர் அல்லது அவரது உத்தரவின் பேரில் சேவையில் ஈடுபடுகின்ற வேறொரு நபருக்கு இடையூறு விளைவித்தல் ஆகாது.

48. நூலகக் கட்டிடத்தினுள் அல்லது அதன் சுற்றாடலில் எவராயினும் ஒருவர்;
(அ) முறைகேடாக அல்லது ஒழுக்கக்கேடாக நடந்துகொள்வாராக இருந்தால்;
(ஆ) ஆவேசத்துடன் ஏளனமான அல்லது தூசனவார்த்தைகளைப் பாவிப்பாராயின், பந்தயம் கட்டுதலில் அல்லது சூதாட்டத்தில் ஈடுபடுவாராயின் அல்லது நூலகம் பொது மக்களுக்காக திறந்து வைக்கப்படுகின்ற நேரத்தின் பின்னர் நூலகத்தினுள் தங்கி நிற்பதற்கு முயல்கின்ற ஒருவர் நூலகத்தினைப் பயன்படுத்துவதற்கு உரிமை கொண்ட நபராயின் அத்தகையவரை நூலகத்திற்கு வெளியில் அனுப்புவதனை அல்லது அப்புறப்படுத்துவதனை நூலகபொறுப்பாளர் அல்லது சபையின் அலுவலர் ஒருவரால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

49. இத்துணைவிதியின் 26, 29, 46, 47, 48 ஆகிய பிரிவுகள், யாராவது ஒருவரினால் மீறப்பட்டால், மாநகர ஆணையாளரால் தீர்மானிக்கப்பட்ட ஒரு தொகை கட்டணத்தை நூலக நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும்.

50. 16, 17, 18, 19, 20, 26, 29, 46, 47, 48 போன்ற பிரிவுகளில் ஒன்றினை அல்லது கூடுதலானவற்றை மீறுகின்ற ஒருவரது அங்கத்துவமானது மாநகரபிதா அல்லது மாநகர ஆணையாளரினால் ரத்து செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு ஒரு தடவை அங்கத்துவம் ரத்து செய்யப்பட்ட அங்கத்தினர் ஒருவருக்கு மீண்டும் எந்த வகையிலும் அங்கத்துவம் வழங்கப்படுதல் ஆகாது.

51. இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி நூலக நிதியம் ஒன்று மாநகர சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**நூலக நிதியம்**

51.1 ***நோக்கம்:-***
இந்த நிதியம் ‘பொது நூலக நிதியம்’ என அழைக்கப்படும். இந்த நிதியத்தின் நோக்கமாவது, நூலகத்துக்கு தேவையான அனைத்து விதமான புத்தங்கள், சஞ்சிகைகள், மரத் தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் வாசகர்களுக்கு தேவையான புதிய அறிவு மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்ளத் தேவையான புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கு வேண்டிய பணத்தைச் சேகரித்தல் ஆகும்.

51.2 ***நிதியத்துக்கு நன்கொடைகளைப் பெறுதல் :***
மாநகர சபையினால் ஒதுக்கப்படுகின்ற பணம் வேறு அரசாங்கத் திணைக்களங்கள் மூலம் கிடைக்கும் நன்கொடைகள், கொடையாளிகளிடமிருந்து கிடைக்கும் பணம், சுயேட்சையான சமூக சேவை நிறுவனங்களிடமிருந்தும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கும் பணம், வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நன்கொடைகள் இந் நிதியத்தில் சேர்த்துக்கொள்ளப்படும். பொது நூலகத்துக்கு நாளாந்தம் கிடைக்கும் வருமானமும் இந்நிதியத்தில் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். நிதியத்தினை அதிகரிப்பதற்காக நடாத்தப்படும் பல்வேறு செயற்திட்டங்கள் மூலம் சேகரிக்கப்படும் பணமும் இந் நிதியத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

51.3 ***நிதிக்குழு :***
நிதியம் கீழக் காணும் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு குழுவினால் நிர்வகிக்கப்படும்.
1. கௌரவ மாநகரபிதா அல்லது பிரதி மாநகரபிதா
2. மாநகர ஆணையாளர்.
3. மாநகர சபைச் செயலாளர்.
4. மாநகர சபையின் கணக்காளர்
5. ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் மூவர் (ஒருவர் மாநகர சபை உறுப்பினராதல் வேண்டும்)

6. பிரதம நூலகர்
7. ஆயுர்வேத குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவர்.

**நிதியம்**

குழுவானது அங்கத்தினர்களைக் கொண்டு அமைவதுடன், கூட்டத்திற்கான பெரும்பான்மை 4 ஆக இருத்தல் வேண்டும். நிதிக் குழுவின் தலைமைப் பதவியானது அதிகார தோரணையில் கௌரவ நகரபிதாவிற்கு, பிரதி நகர பிதாவிற்கு உரித்தாகும். செயலாளர் பதவி நூலகப் பொறுப்பாளருக்கு உரித்தாகும். குறைந்த பட்சம் மாதத்தில் ஒரு தடவையாவது நிதிக் குழு கூட வேண்டும். யாப்பில் ஏதாவது திருததம் செய்யப்படுவதாயின், நூலக ஆலோசனைக் குழுவின் சிபாரிசு பெற்றதன் பின்னர் சபையின் அங்கீகாரமும் பெறப்படல் வேண்டும்.

51.4 ***நிதியத்தின் பணத்தைக் கையாள்தல்:-***
நிதியத்திலிருந்து பணம் செலுத்தும் போது அரவணைத்து கொடுப்பனவுகளுக்காகவும் நிதிக் குழுவின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். பணம் நடைமுறைக் கணக்கொன்றில் அல்லது சேமிப்புக் கணக்கொன்றில் வைப்பு செய்யப்படல் வேண்டும். மாநகர சபையின் கணக்காளரினால் ஒவ்வோர் ஆண்டிற்காகவும் கணக்கு அறிக்கையொன்று அடுத்து வரும் ஆண்டின் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நிதியத்தின் கணக்கு வழக்கு நடவடிக்கைகள் கணக்குப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். நிதியத்தின் பணம் கையாளப்படுவதற்காக கீழக்காணும் நபர்களின் கையொப்பங்கள் செல்லுபடியாகும்.மாநகர சபை ஆணையாளர் அல்லது மாநகர சபைச் செயலாளர் அல்லது பிரதம நூலகப் பொறுப்பாளர் அத்துடன் கணக்காளர் (கட்டாயம்)

51.5 ***பொது விடயங்கள்:-*** நிதியம் தொடர்பாக சட்டத் திட்டத்திற்குப் புறம்பாக மேற்கொள்ளப்படும் ஒவவொரு தீர்மானமும் நிதிக் குழுவின் தீர்மானமாதல் வேண்டும்.

**'நெனசர'**

52. (i) பதுளை மாநகர சபை நிர்வாக எல்லைக்குள் குடியிருக்கும் அல்லது மாநகர சபை நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகள் 'நெனசர' தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் அங்கத்தினர்களாக சேர்த்துக்கொள்ளப்படலாம். எந்தவொரு பிள்ளையும்–
(அ) 5 வயதுக்குக் குறையாதவரும் 14 வயதுக்கு மேற்படாதவருமாக இருந்தால்
(ஆ) வாசிப்பதற்கும், கணனியை இயக்குவதற்கும் இயலுமாயின் அன்றி 'நெனசர' தகவல் தொழிநுட்ப நிலையத்தின் அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளப்படல் ஆகாது.

(ii) 'நெனசர' தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் அங்கத்தினராக சேர்வதற்கு விருப்பமான ஒவ்வொரு பிள்ளையும் கீழ்க்காணும் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்:
(அ) விண்ணப்பப் படிவத்தினை, உரிய கிராம அலுவலரைக் கொண்டு வதிவிடத்தை உறுதிப் படுத்துதல் வேண்டும்;
(ஆ) பிணையாளரின் வதிவிடத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வரி செலுத்தும் பட்டியலைப் பரிசீலனை செய்து பார்ததல் வேண்டும்;
(இ) அவ்வாறு பூர்த்தி செய்யப்படட விண்ணப்பப் படிவம் அங்கீகரிக்கப்பட்டதன் பினனர் முகவரியை உறுதி செய்து கொள்வதற்காக தபால் மூலம் விண்ணப்பத்தாரிக்கு அனுப்பபடல்வேண்டும்;
(ஈ) மாநகர எல்லைக்குள் வசிப்பவர் 25 ரூபாவும், நகரசபை எல்லைக்கு வெளியில் வசிப்பவர் ரூபா 50,00 உம் நகர பிதாவிடம் வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும்;
(உ) பிணையாளராக தாய்/தந்தை/பாதுகாவலர் விண்ணப்பப் படிவத்தினை சான்றுப்படுத்துதல் வேண்டும்;
(ஊ) பாடசாலை செல்லும் மாணவர்களாயின் தாம் கல்வி பயிலும் பாடசாலையின் அதிபரைக் கொண்டு விண்ணப்பப் படிவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். சட்டத் திட்டத்துக்கமைய இரண்டாவது கையொப்பம் பெறப்படல் வேண்டும்.

(iii) 'நெனசர' தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒருவருக்கு அங்கத்துவப் பத்திரம் ஒன்று வழங்கப்படல் வேண்டும் என்பதுடன், அந் நபர் குறித்த அங்கத்துவப் பத்திரத்தை சமர்ப்பிப்பதன் மூலம் 'நெனசர' தகவல் தொழிநுட்ப நிலையத்தில் கணணி பயன்படுத்த இயலும்.

(iv) 'நெனசர' தொழிநுட்ப நிலையத்தின் அங்கத்தினர் ஒருவரால் 33 ஆவது சரத்தின் கீழ் தனக்கு வழங்கப்படும் அங்கத்துவப் பத்திரம் தொலைந்துவிட்டால் அது பற்றி தாமதமின்றி நூலகப் பொறுப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். தொலைந்துவிட்ட அங்கத்துவப் பத்திரம் தொடர்பில் அல்லது ஓர் அங்கத்தினரால் கணனிக்கு ஏதாவது பழுது ஏற்பட்டால் குறித்த அங்கத்தினர் வகை கூறல் வேண்டும்.

(v) நெனசர தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் ஒருவரினால் கணனியைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அல்லது பின்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி நெனசர தகவல் தொழிநுட்ப நிலையத்திலிருந்து வெளியேறல் வேண்டும்.

53. இத் துணை விதிகளில் ஏதாவது ஒரு துணைவிதியை மீறிய ஒரு நபர் அல்லது நபர்கள் குற்றவாளிகளாக்கப்பட்டால் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 (3) ஆவது பிரிவில் குறிப்பிட்பட்டுள்ள தண்டணை கிடைக்கக் கூடிய குற்றம் ஒன்றினை செய்தவராவதுடன் அந் நபர் அல்லது நபர்களுக்கு எதிராக பதுளை மாநகர சபை எல்லைக்குள் எதிகாரம் கொண்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு குற்றவாளி எனத் தீர்க்கப்பட்டால்

(i) முதலாவதாக செய்யப்படும் தவறு என்றால், 1000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(ii) இரண்டாம் முறை அல்லது அதன் பின்பு செய்யப்படும் தவறுக்கு ஒரு தினத்திற்கு 2000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்
(iii) அதற்கு பிறகும் செய்யப்படும் தவறு தொடர்பாக, குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அதை மீறும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு கௌரவ நகரபிதா அவர்களிடம் எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் அல்லது தொடர்ந்து தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத மேலதிக அபராதத்தின் கீழாகும்.

54. இத் துணைவிதியின் பதங்கள் சம்பந்தமாக வேறு கருத்து தேவைப்பட்டாலன்றி நூலக பொறுப்பாளர் என்பது நூலகத்தை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்படும் நபராவார். நூலக உதவியாளர் என்ற பதத்தினால் நூலகப் பொறுப்பாளரின் உதவியாளர் கருதப்படுவார்.

## XXXVI ஆம் பிரிவு

### கழிவகற்றும் வாகனங்கள் விநியோகித்தல் சேவைகளை வழங்குதல் கட்டணம் விதித்தல், அறவிடுதல் மற்றும் பிறப்பித்தல் தொடர்பான துணை விதிகள்

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் (272 ஆம் பிரிவின் (5) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பதுளை மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்கள் விநியோகித்தல், சேவைகளை வழங்குதல், கட்டணம் விதித்தல் அறவிடுதல் மற்றும் பிறப்பித்தல் தொடர்பான துணை விதிகள் இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.

1. இத் துணை விதியானது பதுளை மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்கள் விநியோகித்தல், சேவைகளை வழங்குதல், கட்டணம் விதித்தல், அறவிடுதல் மற்றும் பிறப்பித்தல் தொடர்பான துணை விதிகள் என்ற பெயரால் அழைக்கப்படும்.

2. (அ) பதுளை மாநகர சபை எல்லைக்குள் கழிவு நீரை வெளியேற்றல்/கழிவுப் பொருட்களை வெளியேற்றல்/பூரணப்படுத்தப்பட்ட தொட்டில்களை சுத்திகரித்தல்/மலசலகூடக் கழிவுகளை சுத்திகரித்தல்/நீர் உறிஞ்சும் குழிகளை சுத்திகரித்தல்/வடிகால்கள் மற்றும் தடைகள் காணப்படும் இடங்களில் தேங்கி நிற்கும் கழிவு நீர்/கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தல் மற்றும் மீளக் கொணர்தல் மற்றும் உசிதமான இடங்களில் அப்புறப்படுத்தல் ஆகியவற்றை முறைப்படுத்துவதனை நிர்வகிப்பதற்காக இத் துணை விதி பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள்/அரச நிறுவனங்கள்/அரச சார்பற்ற நிறுவனங்கள்/வழிபாடுத் தளங்கள்/பாடசாலைகள் /கைத்தொழில் நிலையங்கள் /பகிரங்க சந்தைகள்/மார்க்கட்/மத்திய சந்தை/பொருளதார மத்திய நிலையங்கள்/புகையிரத நிலையங்கள்/வாராந்த சந்தை/ஞாயிறு சந்தைகள்/நாளாந்த சந்தை/ பொது மலசல கூடங்கள்/தனியார் மலசல கூடங்கள்/நாளாந்த சந்தை/பொது மலசல கூடங்கள்/தனியார் மலசலகூடங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் குழி/பூரணப்படுத்தப்பட்ட தொட்டிகள்/மனிதக் கழிவுத்தொட்டிகள்/சீமெந்து பப்லோ தொட்டிகள்/பிளாஸ்டிக் தொட்டிகள்/செயற்கைத் தொட்டிகள் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் கழிவுப் பொருட்களை முறையாக வெளியெற்றுவதற்காக மற்றும் பொது மக்களின் சுகாதாரத்தை முறையாக நடாத்திச் செல்வதற்காக உள்ளூராட்சி சட்ட திட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டதாக இவற்றுக்காக மாநகர சபையின் மனிதக் கழிவகற்றும் வாகனச் சேவையினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(இ) மாநகர சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள வீடுகள்/வர்த்தக நிலையங்கள்/அரச நிறுவனங்கள்/ அரசசார்பற்ற நிறுவனங்கள்/வணக்கஸ்தலங்கள்/பாடசாலைகள்/தொழிற்சாலைகள் /பகிரங்க வர்த்தக நிலையங்கள்/மத்திய வர்த்தக நிலையம்/பொருளாதார நிலையம்/புகையிரத நிலையங்கள்/வாரச் சந்தைகள்/ஞாயிறு சந்தைகள்/நாளாந்த சந்தைகள்/பொது மலசல கூடங்கள்/தனிப்பட்ட மலசல கூடங்களுக்கான குழிகள்/கழிவுத் தொட்டிகள்/சீமெந்து குப்பைத் தொட்டிகள்/பிலாஸ்டிக் தொட்டிகள்/ மற்றும் செயற்கைத் தொட்டிகளிலிருந்து வெளியாகும் கழிவுகளையும். கழிவு நீரையும் முறையாக வெளியேற்றுவதற்காக மற்றும் பொது மக்களின் சுகாதாரத்தை சரியான முறையில் பாராமரிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவன சட்ட திட்டங்களுக்கும் நியதிகளுக்கும் அமைவாக உறிஞ்சக்கூடிய குழி அல்லது பூரணப்படுத்தி தொட்டிகள் பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் உள்ளூராட்சி சட்டத்திட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டதாக. உறிஞ்சக்கூடிய குழியொன்று பூரணப்படுத்தப்பட்ட தொட்டிகள் அமைத்து பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

3. (அ) மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் விநியோகிக்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரம் இல்லாமல் பதுளை மாநகர சபைக்குச் சொந்தான அதிகாரப் பிரதேசம் மற்றும் இச் சேவை வழங்கப்படுகின்ற மாற்றுச் சேவைகளின் தேவைக்கேற்ப ஏனைய உள்ளூராட்சி அதிகார பிரதேசங்களிற்கு சேவை வழங்கப்படலாகாது.

(ஆ) சேவையைப் பெறுவதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரி இதன் கீழ் காணப்படுகின்ற விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து பதுளை மாநகர ஆணையாளரிடம் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(இ) உரிய விண்ணப்ப படிவமானது இந்த மாநகர சபை மற்றும் விண்ணப்பதாரிக்கு இடையிலான உடன்படிக்கையாகக் கருதப்படல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரியின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த மாநகர சபையின் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் உரிய கட்டணத்தைச் செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். (இரண்டாவது பட்டியல் உரிய கட்டணம் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட பின்னரே (Vat) உட்பட்ட தாகும்.) உரிய கட்டணம் செலுத்தப்பட்ட பின்னரே சேவைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

(உ) விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் மாநகர சபையின் சார்புப் பட்டியலுக்கு அமைவாக உரிய சேவைகள் வழங்கப்படும்.

(ஊ) விண்ணப்பதாரியின் முகவரியில் குறிப்பிடப்பட்ட இடத்திலுள்ள மலசலகூடக் குழி/கழிவு நீர் தேங்கும் குழியில் நிறைந்துள்ள கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு (பொதுமக்களது சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படாத வகையில்) உரிய மாநகர சபையின் ஊழியர்களும் இடத்தின் உரிமையாளரும், ஏனைய ஊழியர்களும் ஒத்துழைப்புடன் இச் சேவைகளை நிறைவேற்றிக்கொள்ளல் வேண்டும்.

4. (அ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொண்டதன் பின்னர் எதாவது ஒரு தடங்களைக் காரணமாகக் கொண்டு அல்லது தவிர்க்க முடியாத காரணத்தின் மீது இச் சேவைகளை வழங்க இயலாத சந்தர்ப்பங்களில் அது சம்பந்தமாக விண்ணப்பதாரர்கள் மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு மற்றும் ஆலோசனைகளுக்கு உடன்படுத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரியின் வேண்டுகோளுக்கு இணங்க விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்ட இடத்தைத் தவிர வேறு இடத்தில் கழிவகற்றும் வாகன சேவை வழங்கப்படமாட்டாது.

5. (அ) கழிவகற்றும் வாகனம் வழங்கப்படுதல், சேவைகள் வழங்கப்படுதல், கட்டணம் அறவிடப்படுதல் போன்ற விடயங்கள் பதுளை மாநகர சபையினால் பிரேரித்து அங்கீகரிக்கப்படுவதன் மூலம் தீர்மானிக்கப்பட இயலும் என்பதுடன், அவ்வாறான பிரேரணை மூலம் காலத்துக்கு காலம் சட்ட விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளவும் இயலும்.

(ஆ) பதுளை மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்களை வழங்குதல் சேவைகளை வழங்கும் போது அங்குள்ள கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீரை மீண்டும் கழிவுகளை இடும் நிலையத்துக்குக் கொண்டுவருதல் போன்றவற்றுக்காக கட்டணம் அறிவிடல் வேண்டும்.

6 (அ) கழிவகற்றும் வாகனம் மற்றும் சேவைகளை வழங்குதல் சம்பந்தமாக மேலே 05 (அ) சரத்தின் கீழ் விதிக்கப்படும் அல்லது காலத்துக்குக் காலம் திருத்தப்படும் கட்டணங்கள் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படல் வேண்டும்.

(ஆ) அவ்வகையான அறிவித்தல் இந்த மாநகர சபையில், மாநகர சபை சுகாதாரப் பிரிவில் மற்றும் விண்ணப்ப படிவம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இடத்தில் தெளிவாகக் காணக்கூடியவாறு காட்சிப் படுத்தப்படுதலும் வேண்டும்.

(இ) அறவிடப்படும் கட்டணங்கள் கீழக்காணும் முதலாவது பட்டியலில் வகைப்படுத்தப்பட்டவாறாக விதிக்கப்படலாம்.

7. (அ) குறித்த சேவையானது தேவைப்படும் இடம் தொடர்பில் விண்ணப்பதாரியினால்/குறித்த இடத்தின் உரிமையாளர்/குடியிருப்பாளர்/பொறுப்பாளர் வகைகூறும் நபரினால் விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(ஆ) மேலும் அது சம்பந்தமாக குறித்த நபர் வகைகூறலும் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் அல்லது குடியிருப்பாளர், உரிமையாளர், பொறுப்பாளர் அல்லது வகைகூறும் நபர் குறித்த இடம் தொடர்பில் ஏதாவது சிக்கல் ஏற்படின் உரிமையினையும், பொறுப்பினையும் அந்நபர் ஏற்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர் அல்லது குடியிருப்பாளர், உரிமையாளர், பொறுப்பாளர் அல்லது வகைகூறும் நபர் குறித்த இடம் அல்லது அதை அண்டி இச் சேவையைப் பெறுவது தொடர்பாக ஏதாயினும் பிரச்சனை ஏற்பட்டால் குறித்த நபரினால் பொறுப்பை உறுதிப்படுத்தல் வேண்டும்.

8. (அ) உரிய சேவைகள் நிறைவேற்றுகின்ற போது இந் நடவடிக்கைகள் முடிவடையும் வரையும் ஏதாயினும் ஒரு வீதியின் அல்லது தெருவின் ஓட்டப் பாதைக்கு உள்ளிட முடியாது போகும் தருணத்தில் அல்லது தரையின் அமைப்பிற்கேற்ப இவ் வாகனத்தை அவ் விடத்துக்குக் கொண்டு செல்ல முடியாது போகும் தருணத்தில் ஏற்படும் நட்டம் விண்ணப்பதாரியினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) யாதாயினும் ஒரு வீதியின் அல்லது தெருவின் ஓட்டப் பாதைக்கு உள்ளிட முடியாது போகும்போது அல்லது தரையின் அமைப்புக்கேற்ப இவ் வாகனத்தை அவ்விடத்துக்குக் கொண்டு செல்ல முடியாதுபோகும் தருணத்தில் வாகனத்திற்கு எற்படும் தேசங்களுக்கும் பாதிப்புகளுக்குமான செலவுகள் விண்ணப்பதாரியினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

(இ) கழிவகற்றும் சேவையை வழங்குவதற்காக அவ்விடம் பொருத்தமான நிலைமையில் இருக்க வேண்டியதுடன், முறையான பராமரிப்புடன் கூடியதாக அவ்விடம் பேணப்படல் வேண்டும்.

(ஈ) இச் சேவையினை வழங்கும்போது உரிய வாகனங்கள் மற்றும் ஊழியர்கள் அவ்விடத்துக்கு வரும்போது விண்ணப்பதாரி அல்லது உரிய நபர்கள் அவ்விடத்தில் இல்லாதிருத்தல் மற்றும் அவ்விடம் மூடப்பட்டிருத்தல் காரணமாக வருகை தர முடியாது போகும் சந்தர்ப்பங்களில் சேவையினை வழங்க முடியாமை சம்பந்தமாக அதன் பொறுப்புகள் விண்ணப்பதாரியினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

(உ) குறித்த போக்குவரத்துக் கட்டணங்கள் உட்பட மாநகர சபையினால் தீர்மானிக்கப்படும் கட்டணங்களை வைப்புப் பணத்திலிருந்து அறிவிடுவதற்கு மாநகர சபைக்கு அதிகாரம் உண்டு.

(ஊ) இச் சேவையினை விண்ணப்பதாரிக்கு வழங்கிட யாதாயினும் ஒரு தடை இடையூறு அல்லது வேறு எவ்விதக் காரணங்கள் மீது விண்ணப்பதாரி வைப்பிலிட்ட பணத்திலிருந்து போக்குவரத்துக் கட்டணம், பரிசீலனைகளுக்கான செலவுகளை அறவிடுவதற்கு மாநகர சபைக்கு அதிகாரம் உண்டு.

9. (அ) மேலும் இச் சேவை அவரினால் வழங்கப்படுமானால் (விண்ணப்பதாரியினால் உரிய கழிவுப் பொருள்களையும் கழிவு நீரையும் புறம்பாக இட்டு வைப்பதற்கு வசதிகள் செய்துகொள்ளப்படுமானால்) உரியகட்டணங்கள் அறவிடப்படும்.

(ஆ) மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் ஒருவரின் கோரிக்கையின் பேரில் சேவையினை வழங்க முடியாதவிடத்து விண்ணப்பதாரி வைப்பு செய்த பணத்தை வேறு ஏதாவது நிர்வாகச் செலவுகள் செய்திருந்தால் அத் தொகையை மாநகர சபை அறிவிட்டுக்கொள்வதுடன் பின்னர் விண்ணப்ப கட்டணம் அறிவிடப்பட இருப்பின் அதனையும் கழித்துகொள்வதற்கு மாநகர சபை அதிகாரம் கொண்டதாகும்.

(இ) இவ்வாறு அகற்றப்படும் கழிவுப் பொருட்களை பொது மக்களின் சுகாதாரத்திற்கு தீங்கு ஏற்படாத வகையில் மற்றும் உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

10. (அ) விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட பாத்திரங்களைக் கழுவும் நீரை ஒரு வாய்க்காலுக்கு ஓடைக்கு, நீரோடைக்கு அல்லது பொதுவான பகிரங்கக் காணிக்கு சென்றடைய வழியமைத்தல் கூடாது. அதேவேளை குறித்த கழிவு நீரைத் தேக்கி வைத்திருந்த பின்னர் கழிவகற்றும் சேவையினூடாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனுமதிப்பத்திரம் பெற்ற நிலையத்திற்குள் உருவாகின்ற அனைத்து கழிவுகளையும் மீண்டும் உபயோகத்திற்கு எடுப்பதாயின் தவிர குறித்த கழிவுகள்.

(i) உயிரியல் கழிவுகள்
(ii) கண்ணாடி
(iii) காகிதங்கள் அல்லது காகிதம் சார்ந்த பொருட்கள்
(iv) பொலித்தீன் மற்றும் பிலாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்
(v) இரும்பு மற்றும் வேறு உலோகப்பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் வேறு உலோகப் பகுதிகள்.
(vi) உற்பத்திக்காக உபயோகிக்கின்ற வேறு மூலப்பொருட்களின் மீதப்படுகின்ற பகுதிகள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற மற்றும் மீதப்படுகின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பகுதிகள்.
(vii) தீங்கிழைக்கும் கழிவுப் பொருட்கள்
(viii) (ஆ) போன்ற வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு வகை செய்ய வேண்டியதுடன் அவ் ஒவ்வொரு வகையினதும் கழிவுகளையும் போடுவதற்கென .தயார்படுத்தப்பட்டுள்ள தனித் தனியான பாத்திரங்களுக்கு அல்லது தாங்கிகளில் இடுவதற்கு வகை செய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரது கடமையாக இருத்தல் வேண்டும்.

11. மாநகர ஆணையாளர் அல்லது அவரினால் எழுத்து மூலம் அல்லது பொதுவாக அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி நீதியான நியாமான நேரத்தினுள் முறையாக கழிவு நீரை அப்புறப்படுத்தாத வீடுகளில் அல்லது வர்த்தக நிலையங்களில் நுழைந்து தேவையான ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் சட்ட நடவடிக்கைளை மேற்கொள்ள முடியும்.

12. இத் துணைவிதியின் கீழ் விநியோகிக்கப்பட்ட எவ்வித அனுமதிப்பத்திரமும் இல்லாது முதலாவது துணை விதியில் கூறப்பட்டுள்ள தொழிலில் ஈடுபடும் எந்தவொரு நபர் அல்லது நபர்களும் தண்டனை பெறக்கூடிய குற்றத்தைப் புரிவதுடன், அந் நபர் அல்லது நபர்களுக்கு எதிராக பதுளை மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள அதிகாரம் பெற்ற ஒரு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து குற்றவாளியாக்கப்பட்டால் கீழக்காணும் தண்டனைகளுக்கு உட்படுவார்கள்.

(i) முதல் தடவையாக இழைக்கப்படும் குற்றமாயின், ஆயிரம் (1000 ரூபா) ரூபாவுக்கு மேற்படாத தண்டம் செலுத்துவதற்கு உட்படுவர்.
(ii) இரண்டாம் தடவையாக அல்லது தொடர்ந்து இழைக்கப்படும் குற்றத்துக்காக நாளொன்றுக்கு இரண்டாயிரம் (2000) ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் செலுத்துவதற்கு உட்படுவார்.
(iii) தொடர்ச்சியாக இழைக்கப்படும் குற்றத்துக்காக குற்றவாளியாக்கப்பட்டால் அல்லது சட்ட மீறல் சம்பந்தமாக கவனம் செலுத்தி கௌரவ நகரபிதாவினால் எழுத்து வடிவிலான அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னரும் அவ்வாறான குற்றம் தொடர்ந்தும் இழைக்கப்படுமேயானல் ஒவ்வொரு தினத்துக்கும் இருநூற்றைம்பது (250.00) ரூபாவுக்கு மேற்படாத மேலதிக தண்டப்பணம் செலுத்துவதற்கு உட்படுவர்.

13 பொருள் கோடல் :

சொற்கள் தொடர்பில் மாற்றுக் கருத்து அவசியம் அல்லாவிடத்து இப் பகுதியில் 'கழிவகற்றும் வாகனம்' என்பதன் மூலம் கழிவகற்றும் வாகனத்தில் சேவையாற்றுதல், சேவை வழங்குதல். வாகனங்களை பெற்றுக்கொடுத்தல், கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீரை அப்புறப்படுத்துதல்.

'உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றம்' என்பதன் மூலம், பதுளை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள முறையான அதிகாரம் கொண்ட ஒரு நீதிமன்றம் கருத்தில்கொள்ளப்படும்.

**முதலாவது பட்டியல்**

**பதுளை மாநகர சபை - மாநகர சுகாதார திணைக்களம்**

**மலசலகூடம் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் பெயர்/நிறுவனம் :.......................................................
2. விலாசம்:..............................................................
3. மாநகர சபையிலிருந்து உள்ள குறைந்த தூரம்..................கி.மீ
4. கழிவகற்றும் வாகனப் பயணிப்பதற்கு உகந்த வீதியா?......................................................................................................................................................
5. மலசலகூட குழியிலிருந்து கழிவகற்றும் வாகனத்தை நிறுத்தி வாகனத்தின் குழாயைப் பொருத்துவதற்குள்ள தூரம்:-............... .........................மீற்றர்

6. அகற்றப்படும் கழிவுகளைப் போடுவதற்கு உகந்த இடம் உண்டா? :-----.
7. அகற்றப்படும் கழிவுகளை போடுவதற்கு உகந்த இடம் இல்லையாயின் மாநகர சபையின் கழிவகற்றப்படும் இடத்துக்கு கொண்டுவர வேண்டி ஏற்படுமா? :-----.
8. சேவை தேவைப்படும் திகதி :-----.
9. பயணப் பாதை (விளக்கம் தருக):-----.
10. வீட்டின்/நிறுவனத்தின் தொலைபேசி இலக்கம் :-----.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:----.

11. மேற்கூறிய இடத்திற்காக கழிவகற்றும் வாகன சேவை வழங்குவதற்காக அனுமதி கோருகின்றேன்.

------,
பொதுச் சுகாதார பரிசோதகர்.

திகதி:----.

12. கழிவகற்றும் வாகன சேவை வழங்க அனுமதிக்கின்றேன்/அனுமதிக்கவில்லை.

------,
மாநகர ஆணையாளர்.

**(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)**
**குடிமனை சேவைகளுக்கான கட்டணம்**

| | நகர எல்லைக்குள் ரூபா ச. | நகர எல்லைக்கு வெளியில் ரூபா ச. |
|---|---|---|
| சேவைக்கட்டணம் | 2250.00 | 4500 0 |
| போக்குவரத்துக் கட்டணம் | 0.0 | 1k.m.- 300 0 |
| சாரதி /ஊழியர் சாப்பாட்டுச் செலவு | 0.0 | 1200.00 |
| மேலதிக பொருட்கள் மீள கொண்டுவருவதற்கான கட்டணம் | 2025.00 | 4500.00 |
| உரிய வெட் (Vat) தொகை செலுத்த வேண்டிய மொததம் | 2%-12% | 2%-12% |

வர்த்தக சேவைகளுக்கான கட்டணம் (ஒரு பவுசர் லோட்)

| | நகர எல்லைக்குள் ரூபா ச. | நகர எல்லைக்கு வெளியில் ரூபா ச. |
|---|---|---|
| சேவைக்கட்டணம் | 5000.00 | |
| போக்குவரத்துக் கட்டணம் | 0.00 | 1k.m.-300.00 |
| சாரதி /ஊழியர் சாப்பாட்டுச் செலவு | 0.00 | 1200.00 |
| மேலதிக பொருட்கள் மீள கொண்டுவருவதற்கான கட்டணம் | 5000.00 | 3000.00 |
| உரிய வெட் (Vat) தொகை செலுத்த வேண்டிய மொத்தம் | 2%-12% | 2%-12% |

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் மாநகர சபையில் பிரேரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றதன் ஊடாக நிர்ணயிக்கப்படுவதுடன், அவ்வாறான ஒரு நடைமுறையின் ஊடாக காலத்துக்குக் காலம் மாற்றம். திருத்தம் செய்யப்படலாம். சபையின் அங்கீகாரத்துடன் வருடாந்தம் கட்டணத் திருத்தங்கள் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் அக் கட்டணங்கள் அறவிடுதல் செல்லுபடியாகும்
மாநகர கணக்காளர்
மேற்குறித்தவாறு ....................ரூபா அறவிடுவதற்காக சமர்ப்பிக்கின்றேன்.

--------,
பொதுச் சுகாதார பரிசோதகர்

--------,
பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர்

திகதி:----.

சுகாதார நிர்வாக,
மேற்படி கோரிக்கைக்கு இணங்க அலுவல் மேற்கொண்டதன் பின்னர் அறிக்கை சமர்ப்பிக்குக

------,
பொதுச் சுகாதார பரிசோதகர்.

திகதி:----.

**கழிவகற்றும் வாகனத்தை ஈடுபடுத்துதல்**

1. விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் :----.

2. பயணப் பாதை :----.

3. பயண ஆரம்பத்தில் வாகனம் காட்டும் கி.மீ. ------------- பயண முடிவில் காட்டும் கி.மீ. ---------------

4. ஈடுபடுத்தப்படும் திகதி :----.

5. ஆரம்பிக்கப்பட்ட நேரம் :----.

பூர்த்தி செய்யப்பட்ட நேரம் :----.

மேற் கூறிய விதத்தில் முறையாக அலுவல் நிறைவேற்றப்பட்டது என உறுதிப்படுத்துகின்றேன்.

------,
சாரதியின் கையொப்பம்.

திகதி :----.

6. வீடு/தொழில் உரிமையாளரின் பெயர்:----.

என்னால் கோரப்பட்ட வகையில் கழிவகற்றும் வாகன சேவை..........................................ஆம் திகதி மு.ப./பி.ப. ..................................................தொடக்கம் மு.ப/பி.ப. ...................................................................வரை வழங்கப்பட்டதெனவும், அன்று....................................வாகனச் சுமை (load) அகற்றப்பட்டு அலுவல் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
விணணப்பதாரியின் கையொப்பம்.

மேற்படி சேவை ஒழுங்காக நிறைவேற்றப்பட்டதென அறிக்கைப்படுத்துகின்றேன்.

திகதி :----.

-------,
சுகாதார நிர்வாக

அலுவலக உபயோகத்துக்காக
1. ----------------
2. ----------------
3. ----------------

-----,
பொதுச் சுகாதார பரிசோதகர்.

திகதி :-----.

## XXXVII ஆம் பிரிவு

### தகன நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணமறவிடல் பற்றிய துணை விதிகள்

(252 ஆம் அத்தியாயமான) சபையாகிய மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின்படி கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் பிரிவின் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற தகன நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணமறவிடல் பற்றிய துணை விதிகள் இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.

1. இப்பகுதியின் துணை விதிகள் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் தகன நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணமறவிடல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தரால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரம் இன்றி பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் தகன நிலையத்தில் எந்தவோர் பூதவுடலையும் தகனம் செய்தல் ஆகாது.

3. (i) இறந்துபோன எவரினதும் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் நீதிவான் அல்லது திடீர் மரண அதிகாரியால் விசாரணை நடாத்தப்பட்டு, அத்தகைய விசாரணையின் முடிவில் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அத்தகைய நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகர் அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலேயொழிய, அத்தகைய பூதவுடலை தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கோ மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஆகாது.

(ii) இறந்துபோன எவரினதும் மரண சான்றிதழின் 7 வது நிரலில் ''மரணத்திற்கான காரணம் அடக்கம் செய்யப்பட்ட அல்லது தகனம் செய்யப்பட்ட இடம்'' என்பதில், பதுளை மாநகர சபையின் ஏற்புடைய தகனநிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய, அத்தகைய பூதவுடலை தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கோ மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஆகாது.

4. (i) 3 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் (இதனகத்துப் பின்னர் ''விண்ணப்பதாரி'' என அறியப்படும்) எவரேனும் ஆள், இங்கு கீழே காட்டப்பட்டுள்ள பதிவேட்டுடன் இங்கு இரண்டாவது அட்டவணைக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) மரணமடைந்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையிலான தொடர்பினை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு,-

(அ) தேசிய அடையாள அட்டை அல்லது
(ஆ) விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ் அல்லது
(இ) மரணமடைந்தவரின் பிறப்புச் சான்றிதழ் அல்லது
(ஈ) விண்ணப்பதாரியின் விவாகச் சான்றிதழ் அல்லது
(உ) மரணமடைந்தவர் வசித்த பிரிவின் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ்

(iii) மரணமடைந்தவரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் விசாரணை நடாத்தப்பட்டிருந்தால், அத்தகைய விசாரணையை நடாத்திய நீதிவான் அல்லது திடீர் மரண அதிகாரியால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கட்டளைச்சட்டத்தின் 41 (உ) பந்தியின் கீழ் பூதவுடலைத் தகனம் செய்ய அனுமதியளித்து வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது இறந்து பிறந்த சடலமாயின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 43 (ஆ) பந்தியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிழ் அத்துடன்

(iv) மரணமடைந்தவரின் மரணச் சான்றிதழ்.

5. (i) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணம் பதுளை மாநகர சபையின் பிரேரணை வழிமொழிதல் மூலமாக விதிக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான பிரேரணை வழிமொழிதல் மூலமாக காலத்திற்குக் காலம் திருத்தம் செய்ய முடியும்.

(ii) மேலே (அ) பந்தியின் கீழ் விதிக்கப்படுகின்ற அல்லது காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும் கட்டணங்கள், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு தகன நிலையத்தை ஒதுக்கிக்கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இடத்திலும் தகன நிலையத்திலும் தெளிவாகத் புலப்படக்கூடிய இடத்தில் காட்சிக்கு வைக்கப்படுதலும் வேண்டும்.

(iii) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணங்கள் இங்கு முதலாவது அட்டவணையில் காட்டப்பட்ட வகைப்படுத்தலின் கீழ் விதிக்கப்பட முடியும்.

6. (i) தேசிய அடையாள அட்டை அல்லது (06(1) வாரத்தின் எல்லா நாட்களிலும் மு.ப.10.00 மணி முதல் பி.ப 2.00 மணிவரை மற்றும் பி.ப.5.00 மணி முதல் பி.ப.7.00 மணி வரையான காலப் பகுதியில் மாத்திரம் பிரேதமொன்றை எரிப்பதற்காக பொறுப்பேற்பதற்கு அல்லது எரிப்பதற்கான அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் காரியம் மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்படும்.

(ii) யாராயினும் ஒரு நபர் இரவு 7.00 மணிக்கு அனுமதி பெற வேண்டுமாயின் கௌரவ மாநகர பிதா அவர்களின் அங்கீகாரத்தைப் பெறவும் வேண்டும்.

7. (i) ஏதாயினும் ஒரு பிரேதத்தை எரிப்பதற்காக விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் மூலம் கிடைக்கப் பெற்றுள்ள நேரத்துக்கு அல்லது அதற்கு முன்னர் சுடலையில் ஒப்படைக்க வேண்டியது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

(ii) ஏதாயினும் ஒரு பிரேதத்தை சுடலையில் ஒப்படைக்க தாமதமாதலால் விண்ணப்பதாரிக்கு அல்லது இறந்து போனவருக்கு உரிமையுள்ள யாராயினும் ஒரு நபருக்கு ஏற்படும் ஏதாயினும் அசௌகரியம் அல்லது நட்டம் அல்லது பாதிப்பு சம்பந்தமாக பதுளை மாநகர சபை, மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் எவ்விதமான பொறுப்பும் ஏற்கப்படமாட்டாது.

8. (i) ஒவ்வொரு பூதவுடலும் தகனம் செய்யப்பட்டு எழுபத்திரண்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னர் விண்ணப்பதாரியால் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியால் அத்தகைய பூதவுடலின் அஸ்தி பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

(ii) எனினும் விண்ணப்பதாரியின் எழுத்திலான வேண்டுகோளின் பேரில் நகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தகைய அஸ்தியை தகன நிலையத்தின் பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்துக்கொள்ளும் கால எல்லையை நீடித்துக்கொள்ள முடியும்.

(iii) (11) பந்தியின் கீழ் அஸ்தி தகன நிலைய பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்திருப்பதற்கு நீடிக்கப்பட்ட காலம், தகனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

(iv) அவ்வாறு அஸ்தி அப்புறப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலம் முடிவுற்ற பின்னரும் எடுத்துச் செல்லப்படாத அஸ்தியை அகற்றுவதற்கு நகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது தகன நிலைய பொறுப்பாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(v) எவரேனும் விண்ணப்பதாரியால் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதியால் பொறுப்பேற்கப்படாத அஸ்தியை தகன நிலைய வளவினுள் அல்லது ஏதேனும் மயானத்தில் புதைப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாதல் வேண்டும்.

9. (i) ஏதேனும் தகன நிலையத்தின், தகன கூடத்தில் சடலம் வைக்கப்பட்டு அதன் பாதுகாப்பு கதவுகள் மூடப்பட்ட பின்னர் கூடத்தின் மூடப்பட்ட பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகத்தினுள் தகன நிலைய பொறுப்பாளர் அல்லது அவரின் உதவியாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளும் உட்பிரவேசித்தல் ஆகாது.

(ii) மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அல்லது தகன நிலைய பொறுப்பாளரின் அனுமதியின்றி ஏதேனும் தகன நிலைய வளவினுள் பிரவேசித்தல் ஆகாது.

(iii) (11) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும்,-

(அ) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு எவரேனும் ஆள் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளவிடத்து, பூதவுடலைத் தகனம் செய்வதற்காக கையளிப்பதற்கு அவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற ஆளுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் பங்குகொள்ளும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் அத்துடன்

(ஆ) தகனம் செய்யப்பட்ட ஏதேனும் பூதவுடலின் அஸ்தியைப் பொறுப்பேற்க உரிய தினம் அல்லது அத்தினத்திற்கு முன்னர், அனுமதிப்பத்திரம் பெறுநரின் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடன் வருகைதரும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் தகன நிலைய வளவினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்களும் எனக் கருதப்படல் வேண்டும்.

10. ஏதேனும் தகன நிலைய வளவினுள்-

(அ) அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்ளல்

(ஆ) தகன நிலைய வளவினுள் உள்ள பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஆதனங்களுக்கு சேதமேற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முற்படுதல்

(இ) தகன நிலையத்தின் பொறுப்பாளரின் அல்லது அவருடைய எவரேனும் உதவியாளரின் கடமைகளுக்குத் தடை ஏற்படுத்தல்

(ஈ) தகன நிலைய வளவிற்குள் ஏதேனும் அலங்கரிப்புகளைச் செய்தல் அல்லது அறிவித்தல்களை ஒட்டுதல்

(உ) தகன நிலைய வளவிற்குள் புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துதல் அல்லது கொண்டுவருதல் ஆகாது.

11 (அ) பூதவுடலை அடக்கம் செய்வதற்கு உகந்த நிலையில் தகன நிலையத்தைப் பராமரித்துக் கொண்டுநடாத்துதலும் மாநகர ஆணையாளர் பணியாதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் தகன நிலையத்தின் புனரமைப்பு அல்லது பராமரிப்பு கருமத்திற்காக அத்தகைய தகன நிலையத்தை மூடிவைப்பதாயின், அது பற்றிய அறிவித்தலொன்றை மூன்று மொழிகளிலும், பூதவுடல்கள் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவலகத்திலும் தகன நிலைய வளவினுள் பிரவேசிக்கும் இடத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய விதத்தில் காட்சிக்கு வைத்தல் நகர ஆணையாளர் பணியாதல் வேண்டும்.

(இ) சுடலைக்குப் பொறுப்பான நபரினால் சுடலையில் தயாரிக்கப்படும் ஆவணத்தை இற்றைப்படுத்துதல் (நான்காம் அட்டவணை)

(ஈ) ஒரு சடலத்தை எரிப்பதற்காக விண்ணப்பப் படிவம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படுமாயின், அத்தகைய விண்ணப்ப படிவங்கள் கிடைக்கப்பெறும் தொடர் ஒழுங்குக்கு ஏற்ப ஆவணம் ஒன்றை பேணி வருதல் (மூன்றாம் அட்டவணை)

(உ) (i) பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் கோரி சமர்ப்பிக்கும் விண்ணப்பத்திரத்தின் பேரில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்படின், அவ்வாறான விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெறும் வரிசைக் கிரமத்திற்கமைய இங்கு மூன்றாவது அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்தல் நகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாதல் வேண்டும்.

(ii) இப்பதிவேடு விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் பதுளை மாநகர சபை அலுவலகத்தால் பேணப்படுதல் வேண்டும்.

(ஊ) ஏதேனும் காரணத்தின் பேரில் தகனம் செவதற்காக பூதவுடலைப் பொறுப்பேற்காவிடின், மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அதற்கேதுவாக அமைந்த காரணங்களுடன் அதுபற்றி உடனடியாக விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

12. சுடலையைச் சுற்றி நிர்மாணிக்கப்படும் பாதுகாப்புச் சுவருடன் ஒரு துண்டு காணி ஒரு குடும்ப அலகுக்காக சடலத்தின் சாம்பலை அடக்கம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அந்தக் காணித்துண்டை விலை கொடுத்து வாங்குவதற்கான கட்டணங்களை நிர்ணயித்தல் மற்றும் மாற்றம் செய்தல் பதுளை மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்டு வருடாந்தம் அரசாங்க வர்த்தமாணிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் அது செல்லுபடியாகும்.

13. இத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தை மீறும் அனுபதிபத்திரம் பெறுநர் ஏதாவது காரணத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டால், மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் 3 உப பிரிவின் மூலம் விதிக்கப்படும் தண்டனைகளில்,

(i) முதலாவதாக செய்யப்படும் தவறு என்றால், 1,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(ii) இரண்டாம் முறை அல்லது அதன் பின்பு செய்யப்படும் தவறுக்கு ஒரு தினத்திற்கு 2000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(iii) அதற்கு பிறகும் செய்யப்படும் தவறு தொடர்பாக, குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அதை மீறும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு கௌரவ நகரபிதா அவர்களிடம் எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் அல்லது தொடர்ந்து தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத மேலதிக அபராதத்தின் கீழாகும்.

14. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

''தகனநிலைய கூடம்'' என்பது, தகனம் செய்வதற்காக பூதவுடல் வைக்கப்படுகின்ற கூடமும் அத்தகைய கூடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள வெளிக் கூடமும்

''தகனநிலைய வளவு'' என்பது, முழு தகன நிலையமும் அதற்குச் சொந்தமான பூமியும்

''தகன நிலையத்தின் பொறுப்பாளி'' என்பது, அப்போதைக்கு பதுளை மாநகர சபையின் தகன நிலையத்திற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஏவரேனும் ஊழியர்

''அஸ்தி'' என்பது, ஏதேனும் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட பின்னர், பூதவுடலினதும் அது வைக்கப்பட்ட பெட்டியில் ஏதேனும் எரியாது எஞ்சிய பொருட்களும்

''பூதவுடல்'' என்பது, மரணமடைந்த எவரேனும் ஆளுடைய முழுப் பூதவுடல் அல்லது உயிரற்றுப் பிறந்த குழந்தையின் பூதவுடலும் அல்லது பூதவுடலின் ஏதேனும் பாகமும் கருதப்படல் வேண்டும்.

**இரண்டாவது அட்டவணை**

**4 வது துணைவிதி**

(முன்பக்கம்)

(இரண்டு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்)

பதுளை மாநகர சபையின் தகன நிலையத்தில் பூதவுடலொன்று தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தல்

01. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :----.

முகவரி :----.

தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் :----.

2. மரணமடைந்தவரின் முழுப் பெயர் :----.
பெண்ணா /ஆணா? :----.
வசித்த இடத்தின் முகவரி :----.
கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் :----.
தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
3. மரணமடைந்தவருக்கும் விண்ணப்பதாரருக்கும் உள்ள தொடர்பு :----.
(உறுதிப்படுத்துவதற்கு 5 வது துணைவிதியின் (அ) பந்தியில் குறிப்பிட்ட சான்றிதழ்களை இணைக்கவும்)
4. மரணச் சான்றிதழின் பதிவு இலக்கமும் திகதியும் :----.
(மரணச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
5. மரணத்தைப் பதிவுசெய்த செயலாளரின் பெயரும் பிரிவும் :----.
6. மரணத்திற்கான காரணம் :----.
7. மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடத்தப்பட்டிருப்பின்,
(5 வது துணைவிதியின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்ட சான்றிதழை இணைக்கவும்)
விசாரணை உத்தியோகத்தரின் பெயரும் அந்தஸ்தும் :----.
விசாரணை நடத்தப்பட்ட தினம் :----.
விசாரணை உத்தியோகத்தரின் முடிவு :----.
பூதவுடலைத் தகனம் செய்வதற்கு மரண பரிசோதகர் அனுமதி வழங்கியுள்ளாரா?

8. தகனம் செய்வதற்குக் கோரும் தினமும் நேரமும் (விருப்பத்தின் அடிப்படையில்)

| தினம் | நேரம் | தினம் | நேரம் |
|---|---|---|---|
| (i) 20 ...... | ...... மணி | (ii) 20....... | ........ மணி |
| (iii) 20 ...... | ...... மணி | (iv) 20....... | ........ மணி |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். மேலும் இங்கு காட்டப்பட்டுள்ள தகவல்களின் முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்புடைய சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளன.

-----,
திகதி: 20....... விண்ணப்பதாரின் கையொப்பம்.

(பின் பக்கம்)

**இரண்டாவது அட்டவணை**

திரு. /திருமதி/செல்வி :............................................
.................................................................................

ஐயா /அம்மணி,

**பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரித்தல்**

உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மறு பக்கத்தில் விண்ணப்பப்பத்திரத்தின் பிரகாரம், அனுமதிப்பத்திரம் கீழே காட்டப்பட்டுள்ள காரணங்களின் பேரில் நிராகரிக்கப்படுவதாக கவலையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(i) ...........................
(ii) ...........................
(iii) ...........................
(iv) ...........................
(v) ...........................

-----,
மாநகர ஆணையாளர் /அதிகாரம் பெற்ற
உத்தியோகத்தரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ இலச்சினை பதிக்கவும்).

திகதி: 20.........

தகன நிலைய பொறுப்பாளி,

....................................தகன நிலையம்.

**சடலத்தை தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப் பத்திரம்**

(அ) .................................... என்பவரின் பூதவுடலை 20 ... ஆம் ஆண்டு .............. மாதம் ................. ஆம் திகதி முற்பகல்/பிற்பகல் ............ மணிக்கு ...................... தகன நிலையத்தில் தகனம் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்குகிறேன்

(ஆ) மறுபக்க விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் 6 வது துணைவிதியின் பிரகாரம் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

(இ) 20........ திகதிய ................ இலக்கத்தைக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் ......... ரூபா அறவிடப்பட்டுள்ளது.

(ஈ) இவ்வனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்களைச் சார்ந்ததாக 11 வது துணைவிதியின் பிரகாரம் ஏற்புடைய பதிவேட்டில் பதிந்த பின்னர் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

அனுமதிப்பத்திர பதிவேட்டின் தொடர் இலக்கம் .............. ஆகும்.

-------,

மாநகர ஆணையாளர் /அதிகாரம் பெற்ற

உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி: 20............ (உத்தியோகபூர்வ இலச்சினை பதிக்கவும்)

**மூன்றாவது அட்டவணை**

பதுளை மாநகர சபையின் தகன நிலையத்தில் பூதவுடல் தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களின் பதிவேடு.

| தொடர் இல. | மரணமடைந்தவரின் பெயர் | தே.அ.இல. | ஆண் /பெண் பால்நிலை | மரணமடைந்த தினம் | மரணச் சான்றிதழ் பதிவு செய்த | | விண்ணப்பதாரியின் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இல. | திகதி | பெயர் | இறந்தவருக்குள்ள தொடர்பு |
| 1. | | | | | | | | |
| 2. | | | | | | | | |
| 3. | | | | | | | | |
| 4. | | | | | | | | |

(**கவனிக்கவும்**: பதிவேட்டின் இடது பக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவு செய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்)

### மூன்றாவது அட்டவணை

### பதுளை மாநகர சபையின் தகன நிலையத்தில் பூதவுடல் தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களின் பதிவேடு

| விண்ணப்பதாரியின் | | நீதிவான்/திடீர் மரண விசாரணையின் கட்டளையின் | | | பற்றுச்சீட்டு | | தகனம் செய்ய ஒதுக்கப்பட்ட | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முகவரி | தே.அ.அ.இல. | தொடர்பு இல. | திகதி | அனுமதிப்பத்திர இல. | இலக்கம் | தொகை ரூ.சதம் | திகதி | நேரம் |
| | | | | | | | | |
| | | | | | | | | |

(**கவனிக்கவும்:** பதிவேட்டின் இடது பக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவு செய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்)

### நான்காவது அட்டவணை

### பதுளை மாநகர சபை தகன நிலையத்தில் தகனம் செய்யப்பட்ட பூதவுடல்கள் பற்றிய பதிவேடு

| தொடர் இல. | மரணமடைந்தவரின் பெயர் | தே.அ.அ.இல. | ஆண்/பெண் பால்நிலை | அனுமதிப்பத்திரங்கள் பதிவேட்டின் தொடர் இல. | மரணமடைந்த திகதி | மரணச் சான்றிதழ் பதிவு செய்த | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இல. | திகதி |
| 1. | | | | | | | |
| 2. | | | | | | | |
| 3. | | | | | | | |

(**கவனிக்கவும்:** பதிவேட்டின் இடது பக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவு செய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்)

**நான்காவது அட்டவணை**

**பதுளை மாநகர சபை தகன நிலையத்தில் தகனம் செய்யப்பட்ட பூதவுடல்கள் பற்றிய பதிவேடு**

| விண்ணப்பதாரியின் | | அனுமதிப்பத்திர இல. | பற்றுச்சீட்டு | | தகனம் செய்யப்பட்ட | | அஸ்தி எடுத்துச்சென்ற திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| பெயர் | தே.அ.இல. | | இலக்கம் | தொகை | திகதி | நேரம் | |
| | | | | ரூ.சதம் | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

(**கவனிக்கவும்**: பதிவேட்டின் இடது பக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவு செய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்)

## XXXVIII **ஆம் பிரிவு**

**ஒலிபெருக்கி இயந்திரம் மற்றும் ஒலி மீளுற்பத்தியாகும் உபகரணங்கள்**

*(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின்படி கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் பிரிவின் 30 ஆம் உப பிரிவின் கீழ் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற ஒலிபெருக்கி இயந்திரம் மற்றும் ஒலி மீளுற்பத்தியாகும் உபகரணங்கள் இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.*

*1. பதுளை மா நகர சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற தட்டு(CD) இசைக் கருவிகள், ஒலிபெருக்கி இயந்திரங்கள் மற்றும் ஒலி மீளுற்பத்தியாகும் இயந்திரங்கள் என்பவற்றை இயங்க விடுவது சம்பந்தமான நிர்வாகத்தை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான துணைச் சட்டமாகும்.*

*2. பதுளை மாநகர சபை எல்லைக்குள் எந்தவொரு நபரினாலும் ஒலியின் அளவு அல்லது அதன் தொடர்ச்சியான தன்மை காரணமாக அல்லது சுற்றிலுமுள்ள இடங்களில் குடியிருப்பாளர்களுக்கு அல்லது யாதாயினும் ஒரு வீதியில் பயணிக்கும் பயணிகளுக்கு இடையூறு ஏற்படுகின்ற சத்தத்தை, யாதாயினும் ஒரு தட்டு இசைக்கருவி, ஒலிபெருக்கி இயந்திரம், ஒலிக்கட்டுப்பாட்டு இயந்திரம் (Amprlifier) அல்லது சுயமாகவோ இயந்திர மூலமாகவோ ஒலியுற்பத்தி செய்யும் அல்லது மீளுற்பத்தி செய்யும் வேறு ஏதாயினும் ஒரு இயந்திரத்தை இயக்குவதற்கு வேறொருவருக்கு அனுமதி வழங்குவது மூலமாக ஒலி உற்பத்தி செய்வதற்கு அல்லது மீளுற்பத்தி செய்வதற்கு இடமளித்தல் கூடாது.*

*3. ஒரு வீதி, பகிரங்க இடம், பொது மக்கள் உட்பிரவேசிப்பதற்கு பயன்படுத்தும் யாதாயினும் ஒரு பாதை அல்லது பகிரங்க இடத்துடன் தொடர்புடைய ஓரிடம் தவிர்ந்த வேறு எவ்விடத்திலும் மேற்காட்டியவாறு ஏதாவது ஒரு இயந்திரத்தினை இயங்க விடுவதற்காக வேறொரு நபருக்கு இடமளித்தல் அல்லது உதவி செய்தல் சம்பந்தமாக அவ்வகையான சட்டமீறல் மேற்கொள்ளுகின்ற எந்தவொரு நபருக்கும் எதிராக வழக்குத் தொடருவதற்கு–*

*(அ) வேதனையை உருவாக்கும் வதிவிடத்தார்கள் மூவருக்கு குறையாதவர்களினால் மாநகர ஆணையாளரிடம் எழுத்துமூலமான கடிதமொன்றின்மூலம் அவ் வேதனை தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டால் மற்றும்*

*(ஆ) அவ் அறிவித்தல் கிடைத்த பின்னர் தாமதிக்காமல் அதில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் மாநகர ஆணையாளர் அவர்களினால் அந் நபருக்கு எழுத்துமூலமான அறிவித்தலை ஒப்படைக்கப்பட்டிருந்தால்,*

*(இ) அவ் அறிவித்தல் கிடைத்த பின்னர் தாமதிக்காமல் அதில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள கால வரையரைக்குள் அவ் அறிவித்தலுக்கு இணங்க செயற்படுதலை மீறப்பட்டிருந்தால்,*

4 (i) யாதாயினும் ஒரு தட்டு இசைக்கருவி, ஒலிபெருக்கி இயந்திரம், ஒலிக்கட்டுப்பாட்டு இயந்திரம் (Amplifire) அல்லது சுயமாகவோ இயந்திர மூலமாகவோ ஒலியுற்பத்தி செய்யும் அல்லது மீளுற்பத்தி செய்யும் வேறு ஏதாயினும் ஒரு இயந்திரம் தொடர்பாக வியாபாரம் ஒன்றை உருவாக்குதல் அல்லது நடாத்திச் செல்வதற்கான ஒரே பணிகளுக்காக வேறு வேறான அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் அல்லது அனுமதிப்பத்திரம் இருந்தாலும், அதனை கவனத்தில் கொள்ளாது நகர ஆணையாளரினால் அனுமதிபத்திரமொன்று வழங்க வேண்டும். இவ் அனுமதிபத்திரம் வழங்கள் அல்லது வழங்காமல் இருத்தல் நகர ஆணையாளரினால் கால நேரம், காலவரையரை மற்றும் ஏனைய இடங்கள் தொடர்பாக கவனிக்க வேண்டியதுடன் அனுமதிப்பத்திரம் வழங்குதல் அவரின் என்னத்தின் படி வழங்க முடியும்.

(ii) இத் துணைச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து அனுமதிபத்திரங்களும் சபையினால் நிர்ணயிக்கப்பட்டு வருடாந்தம் அரச வர்த்தமானப் பத்திரிகையில் பிரகடனப்படுத்தப்படும் கட்டணத்தின் கீழாவதோடு, இத் துணைச் சட்டத்தின் கீழ் இவ் அனுமதிபத்திரம் முன்னதாகவே முடிவடையுமானால், அதனை வழங்குவதற்கு அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் முப்பத்தியோராம் (31) திகதி முடிவடைய வேண்டும்.

5. மாநகர ஆணையாளரினால் அல்லது அப் பணிகளுக்காக மாநகர ஆணையாளரினால் பொதுவான அல்லது விஷேடமான கடிதங்கள் மூலம் அதிகாரம் வழங்கப்படும் சபையில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தரினால் சூரிய உதயத்தின்போது அல்லது மறையும்போது ஏதேனுமொரு நேரத்தில் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்ற இடத்திற்கு உட்பிரவேசித்தல் அவ் இடத்தினை பரிசோதனை செய்வதற்கு சட்டரீதியானதோடு அதற்கான அனைத்து அனுமதிப்பத்திரம் பெறுநர்களுக்கும் அனுமதியை வழங்க வேண்டும்.

6. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில், அனுமதிப்பத்திரம் பெறுநர்கள் அல்லது ஏதேனும் துணைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க நடைபெறுவது நிறைவுபெற்றால், அனுமதிப்பத்திரம் பெறுநர்களுக்கு பாதிக்கக்கூடிய வகையிலான அறிவித்தல் ஒன்றின் மூலம் அவ் இடத்தை இந் நிபந்தனைகளுக்கு இணங்கக்கூடிய வகையில் கொண்டுவருவதற்காக அவ் அறிவித்தல்களில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள படிமுறைகளை எடுக்குமாறு மாநகர ஆணையாளர் அவர்களினால் அனுமதிப்பத்திரம் பெறுநர்களுக்கு கட்டளையிட முடியும்.

7. யாதாயினும் ஒரு காரணத்தினால் 5 ஆம் பிரிவின் கீழ் உள்ள அறிவித்தலொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரமொன்றை அனுமதிப்பத்திரம் பெறுநர்களுக்கு ஒப்படைக்க முடியாவிட்டால் அவ் விளம்பரம் அல்லது அறிவித்தல் அவர்கள் இறுதியாக வசித்தவொரு இடத்தில் அவருக்கு தெரியும் வகையில் வைத்து அல்லது அனுமதிபத்திரம் பெறப்பட்ட இடத்தில் தெரியக்கூடிய வகையில்இல்லாவிட்டால் ஏதேனும் தெரியக்கூடிய இடத்தில் ஒட்டுதல் அல்லது அவருக்கு விதிக்கப்பட்ட வகையில் ஒப்படைக்கப்பட்டதாக கருத வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் ஒப்படைக்கப்பட்ட ஒரு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அல்லது காலம் குறிப்பிடாவிடின், அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட 07 தினங்களுக்குள் அவ் அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளதன் படி செயற்படுவதை அனுமதிப்பத்திரம் பெறுநரினால் மீறப்படும் சந்தர்ப்பத்தில் மாநகர ஆணையாளரினால் அனுமதிப்பத்திரத்தை தடைசெய்ய அல்லது இரத்துச்செய்ய முடியும்.

9. இத் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் முறையான அனுமதிப்பத்திரம் இல்லாமல் முதலாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எவரேனுமொருவர் அல்லது நபரொருவர் தண்டனை பெறக்கூடிய பிழையொன்றினை செய்திருத்தலோடு அந் நபர் அல்லது அந்நபருக்கு எதிராக பதுளை மா நகர சபை எல்லைக்குள் நீதிமன்ற அதிகாரமுடைய நீதிமன்றத்தின் முன்னிலையில் வழக்கு தொடரப்பட்டு குற்றவாளியாக்கப்பட்டால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி-

(i) முதலாவதாக செய்யப்படும் பிழை என்றால், 1,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்
(ii) இரண்டாம் முறை செய்யப்படும் தவறுக்கு ஒரு தினத்திற்கு 2,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்
(iii) அதன் பிறகும் செய்யப்படும் தவறு தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அதை மறுக்கும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு கௌரவ மாநகரபிதா அவர்களிடம் எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் அல்லது தொடர்ந்து தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத மேலதிக அபராதத்தின் கீழ்படிய வேண்டும்.

## XXXIX ஆம் பகுதி

### கோழி இறைச்சி விற்பனைப் பற்றிய துணைவிதி

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க திருத்தத்தில் 272 ஆம் பிரிவின் 8 (ஆ) ஆம் உப பிரிவின் கீழ் மாநகர சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின்படி பதுளை மாநகர சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற கோழி இறைச்சிக்கடையொன்றை நடாத்தி செல்லல் பற்றிய ஒழுங்கு விதி-

1. இறைச்சி விற்பனையினை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டணம் அறவிடல் தொடர்பான துணை விதி பதுளை மாநகர சபையினால் விதிக்கப்படுகின்றது.

2. எவரேனும் ஒரு நபரினால் வியாபார நிலையமல்லாத வேறு ஏதேனுமொரு இடத்தில் மாநகர ஆணையாளர் அவர்களினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்று இன்றி கோழி இறைச்சி விற்பனைக்காக இடமொன்றினை உபயோகப்படுத்துதல் கூடாது.

3. அனுமதிப் பத்திரமொன்றினை பெற்றுக்கொள்வதற்கு கோருகின்ற வியாபார நிலையம் இங்கு கீழ் காட்டப்படுகின்ற நிபந்தனைகளுக்கு ஏற்புடையதாகுமாயின் தவிர மாநகர ஆணையாளரினால் எவரேனும் ஒருவருக்கு கோழி இறைச்சி விற்பனை நிலையமொன்றினை நடாத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குதல் கூடாது.

(அ) விற்பனைக்காக கோழி இறைச்சிகளை காட்சிப்படுத்த வேண்டியது, காட்சிப்படுத்தக் கூடிய அதி குளிரூட்டியினுள் வைத்து மாத்திரமே;

(ஆ) கோழி இறைச்சி விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படும் இடத்தின் தரை மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தின் தரை சீமெந்துக் கலவையினால் பூசப்பட்டு அல்லது கண்ணாடி கல் பிடிக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(இ) விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படும் கோழி இறைச்சி நேரடியாக சூரிய ஒளி படாதவாறு காட்சிப்படுத்துதல் வேண்டும்;

(ஈ) கழிவு நீர் வழிந்தோடுவதை இலகுபடுத்துவதற்கு தேவையான சரிவுடன் கூடிய சீமெந்தினால் மெழுகுபடுத்தப்பட்ட அல்லது கண்ணாடி செங்கல் பதிக்கப்பட்டவடிகால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(உ) (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்ட வடிகால் வழியாக வழிந்தோடும் கழிவு நீரினை ஏதேனுமொரு பொதுவான நீர்க் குழிக்கு வழிந்தோடுவதை தவிர்ப்பதற்கு போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியதுடன் குறிப்பிட்ட கழிவு நீரினை உறிஞ்சிக்கொள்ளக்கூடிய குழியினுள் வழிந்தோடுவதற்கு வழி செய்தல் வேண்டும்;

(ஊ) கழிவு நீர் வழிந்தோடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நீர் உறிஞ்சப்படும் குழிக்கான காற்றோட்டம் தடை செய்யப்படுதல் ஆகாது;

(எ) கோழியிறைச்சி வியாபார நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற உயிரியல் கழிவுகளை இட்டு வைப்பதற்கும் போதியளவு பாத்திரங்களை வைத்திருக்க வேண்டியதுடன் நாளாந்த விற்பனை நடவடிக்கைகள் நிறைவு பெற்ற பின்னர் குறித்த கழிவுகளை தரை மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 0.5 மீற்றர் ஆழத்தில் குழியிலிடுதலோ அல்லது பதுளை மாநகர சபையினால் முன்னராகவே தீர்மானிக்கப்பட்டு நியமிக்கப்படுகின்ற நியமங்களுக்கு எற்ப பதுளை மாநகர சபையின் கழிவுகளை சேகரிக்கும் வாகனமொன்றிற்கு ஒப்படைத்தல் வேண்டும்;

(ஏ) நிலையத்தில் பணியாற்றும் நபர்களினது பிரயோசனத்திற்காக போதியளவு நீர்அடைப்பு (water seal) மலசலகூட வசதிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டியதுடன், மலசலகூட உபயோகிப்பின் பின்னர் உபயோகத்திற்கு தகுதி வாய்ந்த சுகாதார முறைகள் மற்றும் பொருட்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஐ) கோழி இறைச்சி விற்பனை செய்யப்படும் நிலையம் குறைந்த பட்சம் 150 சதுர அடியினைக் கொண்ட அறையொன்றாக இருத்தல் வேண்டும்.

4. ஏதேனுமொரு இடத்தில் நகர ஆணையாளர் அவர்களினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் கொண்ட இடத்தினில் உயிரிழக்கச் செய்த கோழியொன்றின் இறைச்சியாக இருக்குமாயின் தவிர ஏதேனுமொரு கோழி இறைச்சி விற்பனை நிலையமொன்றில் விற்பனை செய்வதற்காகவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படுதலோ எந்தவொரு நபரினாலும் மேற்கொள்ளல் கூடாது.

5. அனுமதிப்பத்திரமுடைய ஏதேனுமொரு கோழி இறைச்சி விற்பனை நிலையமொன்றில் நாளாந்த நடவடிக்கைகளின் இறுதியில் குறித்த நிலையத்தின் தரையினையும் சுவர்களில் கண்ணாடி செங்கல் பதிக்கப்பட்ட அல்லது சீமெந்து பூசப்பட்ட பகுதிகளும், கோழி இறைச்சியினை வெட்டுவதற்காக பயன்படுத்தப்படும் கட்டையினையும், உபகரணங்களையும், கோழி இறைச்சி விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படுவதற்கு வைக்கப்படும் இடங்களையும், கிருமிநாசினி திரவமிட்டு சுத்திகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. இலையான்கள் அல்லது பூச்சி இனங்கள் அல்லது வேறு ஏதேனும் ஒரு உயிரினம் உட்புக இயலாத முறையில் நன்றாக மூடிவைக்கக் கூடிய வாகனமொன்றில் அல்லது பெட்டியொன்றில் அல்லது வேறு ஏதேனுமொரு பாத்திரமொன்றிலோ மூடப்பட்ட நிலையில் எடுத்துச் செல்வதாயின் தவிர எவரேனுமொரு நபரினால் கோழி இறைச்சி கொண்டு செல்லத் தேவையிராவிடின் தவிர குறிப்பிட்ட கோழி இறைச்சி கொண்டு சென்றதன் பின்னர் அக் கோழி இறைச்சி கொண்டு செல்வதற்காக உபயோகித்த வாகனத்தை அல்லது பெட்டியினை அல்லது ஏனைய உபகரணங்களை கிருமி நாசினி இட்டு நன்றாக கழுவிவிடுதல் வேண்டும்.

7. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு கோழி இறைச்சி விற்பனை நிலையம், மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள வடிகாண்கள் கோழி இறைச்சி களஞ்சியப்படுத்துதல், ஒழுங்குருத்துதல் அல்லது விற்பனை சார்ந்தவற்றுக்காக உபயோகிக்கின்ற அனைத்துப் பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் முறையாக பழுதுபார்த்தல் மற்றும் துர்நாற்றமின்றியும் வைத்துக்கொள்வதற்கு வழி செய்தல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெற்ற நிலையத்தின் நாளாந்த விற்பனை நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் விற்பனை செய்துகொள்ள முடியாமையினால் மீதப்படுகின்ற கோழியிறைச்சியினை அதி குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின் அத்துடன் அவ்வாறு களஞ்சியப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தினிலிருந்து மறு தினம் கோழி இறைச்சி விற்பனை நிலையம் திறக்கப்படும் சந்தர்ப்பம் வரை குறித்த அதி குளிரூட்டி சரியான முறையில் செயற்பட்டுக்கொண்டிருக்குமாயின் தவிர மிஞ்சிய கோழி இறைச்சி மறுதினம் விற்பனை செய்தலோ விற்பனைக்காக காட்சிப்படுத்துதலோ அல்லது அதி குளிரூட்டியிலோ அல்லது அனுமதிப்பத்திரம் பெற்ற நிலையத்திலோ விற்பனை செய்தல் கூடாது.

9. அனுமதிப்பத்திரம் பெற்ற நிலையத்தில் கோழி இறைச்சி போட்டு வைப்பதற்கு அல்லது ஒழுங்குறுத்துவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு உபயோகிக்கின்ற உபகரணங்கள் அல்லது பாத்திரங்கள் தவிர வேறெந்த பொருட்களோ அல்லது உடை அல்லது நித்திரைகொள்ளும் பாயொன்று அல்லது வேறு ஏதேனுமொன்றை வைத்துக்கொள்வது கூடாது.

10. அனுமதிப்பத்திரம் பெற்ற கோழி இறைச்சி விற்பனை நிலையமொன்றில் நாய்கள், பூனைகள், எலிகள் அல்லது பூச்சி இனங்கள் இன்றி வைத்துக்கொள்ளல் வேண்டும்.

11. (அ) ஏதேனுமொரு தொடுகை மற்றும் சரும நோயினால் பீடிக்கப்பட்ட மற்றும் அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருந்த எவரேனும் ஒருவர் அல்லது அவ்வாறான ஏதேனுமொரு நோயினால் பீடிக்கப்பட்ட எவரேனுமொருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனுமொரு குறித்த நோய் பீடையினால் மற்றும் முட்டை விருத்திக்கால எல்லை கடந்திருக்குமாயின் தவிர ஏதெனுமொரு கோழி இறைச்சி விற்பனை நிலையத்தில் ஏதேனுமொரு முறையில் விற்பனையிலோ அவ்வாறு விற்பனையில் ஈடுபட்டுள்ள எவரேனுமொருவருக்கு உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்துதல் அல்லது ஏதேனுமொரு செயலில் ஈடுபடுவதற்கு இடமளிக்கக் கூடாது.

(ஆ) நன்றாக கழுவி சுத்தம் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருப்பின் தவிர எவரேனுமொருநபரினால் கோழி இறைச்சி விற்பனை நிலையமொன்றில் எவ்விதமானதொரு செயற்பாட்டிலும் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுவதற்கு இடமளிக்க செய்தல் கூடாது.

(இ) கோழி இறைச்சி விற்பனை நிலையத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்துப் பணியாளர்களையும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவது அனுமதிப்பத்திரம் பெற்றவரது கடமையாக இருத்தல் வேண்டும்.

(ஈ) கோழி இறைச்சி விற்பனை நிலையத்தில் பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களுக்கும் பாதுகாப்பு வாயுறை, கையுறைகள் மற்றும் தேவைப்படுகின்ற ஏனைய பாதுகாப்பு அணிகளை வழங்கியிருத்தலும், குறித்த பணியாளர்கள் கோழி இறைச்சி விற்பனை நிலையத்தில் பணியில் ஈடுபடும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் குறித்த பாதுகாப்பு அணிகளை அணிந்திருப்பாளர்கள் என உறுதியளிப்பதும் அனுமதிப்பத்திரம் பெற்றவரது கடமையாகும்.

12. அனுமதிப்பத்திம் பெற்ற நிலையத்தின் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து நபர்களின் உபயோகத்திற்காகவும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத்திரவம் வைத்திருப்பது அனுமதி பத்திரம் பெற்றவரது கடமையாக இருத்தல் வேண்டும்.

13. இப் பகுதியின் துணை விதிகளினது நியமங்களை பரிசீலனை செய்வதற்கு மாநகர ஆணையாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவருக்கு பரிசீலனைசெய்வதற்கு அதிகாரம் வழங்கப்படுவதற்கு உகந்த காலம் என்பது கோழி இறைச்சி விற்பனை நிலையத்தில் கோழி இறைச்சி விற்பனை மேற்கொள்ளும் எந்தவொரு சந்தரப்பமும் கருதப்படும்.

14. (அ) அனுமதிப்பத்திரம் பெற்ற நிலையத்திற்குள் உருவாகின்ற அனைத்து கழிவுகளையும் மீண்டும் உபயோகத்திற்கு எடுப்பதாயின் தவிர குறித்த கழிவுகள்–

(i) உயிரியல் கழிவுகள்
(ii) கண்ணாடி
(iii) காகிதங்கள் அல்லது காகிதம் சார்ந்த பொருட்கள்
(iv) பொலித்தீன் மற்றும் பிலாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்
(v) இரும்பு மற்றும் வேறு உலோகப்பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் வேறு உலோகப் பகுதிகள்.
(vi) உற்பத்திக்காக உபயோகிக்கின்ற வேறு மூலப்பொருட்களின் மீதப்படுகின்ற பகுதிகள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற மற்றும் மீதப்படுகின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பகுதிகள்.
(vii) தீங்கிழைக்கும் கழிவுப் பொருட்கள்
(viii) (அ) போன்ற வகைகளின் கீழ் வகைப்படுத்துவதற்கு வகை செய்ய வேண்டியதுடன் அவ் ஒவ்வொரு வகையினதும் கழிவுகளையும் போடுவதற்கென தயார்படுத்தப்பட்டுள்ள தனித் தனியான பாத்திரங்களுக்கு அல்லது தாங்கிகளில் இடுவதற்கு வகை செய்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவரது கடமையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட (அ) பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு வகைப்படுத்தி பாத்திரங்களில் அல்லது தாங்கிகளில் இடப்பட்டிருக்கும் பதுளை மாநகர சபையின் கழிவுகள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் நீக்கி விடுதல் தவிர நகர ஆணையாளரினால் நியமிக்கின்ற முறையில் இறுதிக் கழிவு வெளியேற்றத்தினை மேற்கொள்ளல் வேண்டும்.

15. மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவரால் கோழி இறைச்சி விற்பனை நிலையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் அல்லது விற்பனைக்காக காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் கோழி இறைச்சியை அதற்குரிய விலையினை செலுத்தி பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக இருப்பின் தவிர எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெற்ற ஒருவரினாலும் குறித்த கொள்வனவினை நிராகரிப்பதோ அல்லது அதற்கு இடையூறு செய்தலோ மேற்கொள்ளல் கூடாது.

16. இப் பகுதியின் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருக்கும் ஏதேனுமொரு கோழி இறைச்சி விற்பனை நிலையத்தினை நடாத்திச் செல்லும் இடமானது 3 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு நியதிக்கு ஏற்ப நடாத்திச் செல்லும் காலம் நிறைவடையுமாயின் அல்லது இப் பகுதியின் துணை யாப்புகளில் வேறு ஏதேனுமொரு துணை யாப்பினது நியதிகளுக்கு ஏற்புடையதாகாத சந்தர்ப்பமொன்றில், உறுதியாக குறிப்பிடக் கூடிய திகதிக்கு முன்னர் குறித்த நிலையத்தினை அந் நியதிக்கு சாதகமான நிலைமக்கு கொண்டு வருவதற்கு தேவையான சகல விடயங்களையும் நிறைவேற்றுமாறு அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு நியமிக்கப்படுகின்ற அறிவித்தலொன்று நகர ஆணையாளர் குறித்த அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு ஒப்படைப்பதற்கு வகை செய்தல் வேண்டும்.

17. 16 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தலொன்றினைப் பெற்ற எவரேனுமொரு அனுமதிப்பத்திரம் பெற்ற ஒருவரினால் குறித்த அறிவித்தலில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ் அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான விடயங்களை எழுத்து மூலம் முன் வைத்திருக்கும் சில சந்தர்ப்பங்களில் குறித்த அறிவித்தலில்

உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள திகதியினை நீடிப்பதற்கு மாநகர ஆணையாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அவ்வாறிருப்பினும் அவ்விதத்தில் நீடிக்கப்படுகின்ற காலமானது பதினான்கு நாட்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

18. 17 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தலொன்றினை பெற்ற எவரேனுமொரு அனுமதிப்பதிரம் பெற்ற ஒருவரால் குறித்த அறிவித்தல் உறுதியாக விதிக்கப்பட்டுள்ள திகதி அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அவ் அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை மீறப்பட்டுள்ள சந்தர்ப்பத்தினில், அந் நிலையத்திற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினை நகர ஆணையாளர் இரத்துச் செய்தல் சட்டரீதியானதாக இருத்தல் வேண்டும்.

19. இத் துணை விதியின் நியமங்களை மீறுபவர்களை அனுமதிப்பத்திரம் பெற்றவரொருவர் ஏதேனுமொரு வகையில் குற்றவாளியாக்கப்படுவாராயின், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் 3 ஆம் உபபிரிவின் ஊடாக விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளில்-

(i) முதற்தடைவையாக மேற்கொண்ட ஒரு தவறெனில் 1,000 ரூபா இற்கும் மேற்படாத தண்டப்பணம் செலுத்துவதற்கு உள்ளாவர்.
(ii) இரண்டாம் தடைவையாகவோ அல்லது தொடர்ச்சியான தவறொன்றுக்காக நாளொன்றுக்கு 2000 ரூபா மேற்படாத தண்டப்பணம் செலுத்துவதற்கு உள்ளாவார்
(iii) இடையறாது மேற்கொள்கின்ற தவறொன்று தொடர்பிலான போது குற்றவாளியாக்கப் பெற்ற பின்னர் அல்லது அம் மீறல் தொடர்பில் கவனம் செலுத்தி கௌரவ நகரபிதாவினால் எழுத்துருவிலான அறிவித்தலொன்று ஒப்படைத்ததன் பின்னர் அல்லது தவறினை தொடர்ந்து செய்கின்ற ஒவ்வொரு தினத்திற்காகவும் ரூபா இருநூற்று ஐம்பதிற்கு மேற்படாத மேலதிக தண்டப்பணம் செலுத்துவதற்கு உள்ளாக்கப்படுவார்.

## XL ஆம் பகுதி

### நடாத்திச் செல்லப்படும் மாடறுக்கும் நிலையம்

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தை 1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 267 மற்றும் 272 ஆம் பிரிவோடு சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 9 ஆவது துணைவிதிக்கிணங்க மாநகர சபைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம், பதுளை மாநகர சபையினால் நடாத்திச் செல்லப்படுகின்ற மாடறுக்கும் நிலையங்களைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்களை விதித்து அறிவிடுதல் உட்பட, மாடறுக்கும் நிலையங்களின் முகாமைத்துவத்தை முறைப்படுத்துதல் நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மட்டுமின்றி அவ்விடங்களில் மிருகங்களை இம்சித்தலை தவிர்த்தல் சம்பந்தமான துணை விதிகள் பதுளை மாநகர சபையினால் பிறப்பிக்கப்படுகின்றன.

1. (அ) பதுளை மாநகர சபையினால் நடாத்திச் செல்லப்படும் மாடறுக்கும் நிலையங்களின் முகாமைத்துவத்தை முறைப்படுத்துதல், நிர்வகித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அவ்விடங்களில் மிருகங்களை இம்சித்தலை தவிர்த்தல் தொடர்பான துணை விதியாகும்.
(ஆ) ஒவ்வொரு பகிரங்க மாடறுக்கும் நிலையமும் ,குறித்த காரியத்திற்காக உரிய அதிகாரியினால் நியமிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்கவேண்டியதுடன், அவர் மாநகர மிருக வைத்தியர் என அழைக்கப்பட வேண்டிய அல்லது அவருக்கு பதிலாக கடமை புரியும் அதிகாரி கருதப்படுவார்.

2. உரிய அதிகாரியினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய நேரத்துக்குள் மாத்திரமேயின்றி எவ்வித அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் நபரினாலும் மிருகங்கள் கொல்லப்படல் ஆகாது.

3. மாநகர மிருக வைத்தியர் அல்லது அதற்காக மாநகர ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட பொது சுகாதார பரிசோதகர் ஒருவரினால் அனுமதிப்பத்திரம் பெற்ற மாடறுப்பவருக்கு கொல்லப்படும் நிலையத்தினுள் ஒதுக்கித் தரப்பட்டுள்ள இடத்தில் மாத்திரமே அவரினால் மிருகங்களைக் கொல்வதற்கு இயலும்.

4. மாநகர ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிக்கிசைவான, சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட அச்சிட்ட அனுமதிப் படிவமொன்று மாநகர மிருக வைத்தியர் அலலது அதற்காக மாநகர ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட பொது சுகாதார பரிசோதகர் ஒருவரினால் விநியோகப்பட்டிருந்தலான்றி, எந்தவொரு அனுமதி பெற்ற நபரினாலும் எந்தவொரு மிருகத்தையும் கொல்லப்படல் ஆகாது. அச்சிட்ட அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமுன், அது மாநகர மிருக வைத்தியரினால் சரியான முறையில் நிரப்பப்பட்டு, அவரினாலும், அது விநியோகிக்கப்படும் மிருகக் கொலை செய்யும் நபரினாலும் கையொப்பம் இடப்பட வேண்டுமென்பதுடன் அது விநியோகிக்கப்பட்ட திகதி அதில் குறிப்பிடப்படிருக்க வேண்டும்.

5. (473 ஆம் அத்தியாயமான) மாடுகளுக்குக் குறிசுடுதல், மாடுகளை விற்றல் மற்றும் பொறுப்புக் கொடுத்தல் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட உரிய படிவத்திற்கமைய தனக்கு சார்பாக ஒரு சான்றிதழ் அனுமதிப்பத்திரம் பெற்ற மிருகக் கொலையாளியினால் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி, அல்லது அந்த மிருகத்தை மிருகக் கொலையாளிக்கு விற்பதற்கான விருப்புடனிருக்கும் நபர், மிருகக் கொலையாளியுடன் மாநகர மிருக வைத்தியர் அல்லது அதற்காக மாநகர ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகரின் முன் சமுகமளித்து அந்த நபருக்குச் சாதகமான ஒரு சான்றிதழை சமர்ப்பித்து தான் அந்த மிருகத்தை மிருகக் கொலையாளிக்கு விற்பதற்கு ஆயத்தமென வாக்குமூலம் ஒன்றில் கையெழுத்திட்டாலன்றி, மாடுகளைக் கொல்வதற்காக அனுமதி வழங்கப்படலாகாது. இதில் குறிப்பிடப்பட்ட சான்றிதழ் மாடறுக்கும் இடத்திற்குள் குறித்த மிருகம் பொறுப்பேற்கப்படுமுன் மாநகர மிருக வைத்தியரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

6. கொல்லப்படுவதற்காக சமர்ப்பிக்கப்படும் மிருகம் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட சான்றிதழொன்று இல்லாத அல்லது யாதாயினும் விபரம் தொடர்பாக உண்மையில்லாத அல்லது அச் சான்றிதழ் எந்த மிருகம் சார்பாக விநியோகிக்கப்படுகிறதோ அம் மிருகத்தின் விபரங்களுக்கும் தன்மைகளுக்கும் முற்று முழுதான ஒப்புமை இல்லாத குறிப்புகள் உள்ளடக்கப்பட்ட சான்றிதழொன்றை அல்லது அனுமதிப்பத்திரத்தை கொல்லுவரினாலோ அல்லது வேறு ஒரு நபரினாலேயே கொல்லுவதற்கான அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான சான்றிதழாக சமர்ப்பிக்கப்படுவது சட்டரீதியற்றதாகும். அவ்வாறான மிருகத்தினைக் கொண்டு வந்த நபரினால் உடனடியாக அங்கிருந்து கொண்டு செல்லப்பட வேண்டியதுடன் மாடறுக்கும் இடத்துக்குள் உட்கொணர்தல் ஆகாது.

7. கொல்லப்படுவதற்கு முன்பதாக மாடறுக்கும் இடத்துக்குக் காட்சிப் படுத்துகின்ற போது யாராயினும் ஒரு நபரினால் யாதாயினுமொரு மிருகம் உரிமை கோரப்படுமானால் அம் மிருகம் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ஏதாயினும் கட்டணங்கள் இருப்பின் அக் கட்டணத்தை உடனடியாக செலுத்தி, அம் மிருகம் சம்பந்தமாக 17 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள இடமுண்டு. மேலும் அது பற்றி உரிய பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்க இயலும்.

8. மாடறுக்கும் இடத்த்துக்கு கொண்டு வரப்படும் அல்லது அங்கு நிறுத்தி வைக்கப்படும் அனைத்து மிருகங்களும் ஓடிவிடாதபடி கயிற்றினால் நன்றாகப் பிணைத்து வைக்கப்பட வேண்டும்.

9. மாடறுப்பவர் என்ற வகையில் தனது தொழிலுடன் சம்பந்தப்பட்ட கொலை கூடத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கும் ஊழியர்களின் பெயர்களும் எல்லா அனுமதி பெற்ற மாடறுப்பவரினாலும் மாநகர சபை அலுவலகத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன், ஏதாயினும் ஒரு பெயரைப் பதிவு செய்தல் அல்லது நிராகரித்தல் அல்லது அற்றைவரை பதிவு செய்யப்பட்டிருந்த நபர்களில் யாராயினும் ஒருவரது பெயரை ரத்து செய்தல் என்பன மாநகர ஆணையாளரினால் மேற்கொள்ள இயலும். அவ்வாறு பதிவு செய்யப்படாத அல்லது பெயர் இரத்து செய்யப்பட்ட எவரொருவரும் அனுமதி பெற்ற மாடறுப்பவரினால் சேவையில் ஈடுபடுத்துதல் அல்லது சேவையில் வைத்துக்கொள்வது செய்யப்படல் ஆகாது.

10. ஒவ்வொரு அனுமதிபெற்ற மாடறுப்பவரினாலும் அவரது அனுமதிப்பத்திரத்தின் சான்றுப்படுத்திய பிரதி ஒன்றும் அவரினால் கொலை கூடத்தில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஊழியரினதும் பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதி ஒன்று வீதமும் அவை கிடைத்த உடனேயே மாநகர மிருக வைத்தியரிடம் அல்லது அதற்காக மாநகர ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பொதுச் சுகாதார பரிசோதகரிடம் கையளித்தல் வேண்டும்.

11. கொல்லப்பட்ட மாடுகளின் தோல், குடல், மற்றும் அகற்றப்படும் உறுப்புக்கள் மாடறுப்பவரினால் அல்லது அவரது ஊழியர்களினால் அப்புறப்படுத்துவதற்கு முன்னர் கழுவி சுத்திகரிப்பதற்காக அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் சேகரிக்கப்படல் வேண்டும்.

12. அனுமதிப்பத்திரம் பெற்ற மாடறுப்பவரினால் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட ஊழியர்களினால் கொலை கூடத்தை பயன்படுத்துகின்ற போது அவரது செயற்பாடுகள் அல்லது அவரது ஊழியர்களின் செயற்பாடுகள் காரணமாக கொலைக் கூடத்திற்கு ஏற்படும் யாதாயினும் நட்டம் அல்லது பாதிப்பு சம்பந்தமாக அனுமதிப்பத்திரம் பெற்ற மாடறுப்பவர் வகை கூறல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு ஏற்பட்ட நட்டம் கோரப்படுகின்றபோது செலுத்துவதற்கு மாடறுப்பவர் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு பணம் செலுத்துவது கைவிடப்பட்டால் மாநகர ஆணையாளரினால் அனுமதிப்பத்திரத்தை ரத்து செய்தல் அல்லது மாற்றீடாக குறித்த நட்ட ஈட்டை அனுமதிப்பத்திரம் பெற்ற மாடறுப்பவரிடமிருந்தோ அவரது பிணையாளர்களிடமிருந்தோ அறிவிடுதல் அல்லது அவ் இரண்டையுமே நடைமுறைப்படுத்தல் இயலும்.

13. யாதாயினும் ஒரு தோல் நோயினால், தொழு நோயினால் அல்லது தொற்று நோயினால் பீடிக்கப்பபடிருக்கும் எந்த ஒரு நபரையும் கொலை கூடத்திற்குள் நுழையவோ அல்லது கொலை கூடத்தினுள் சேவையாற்றுவதற்கோ அனுமதிக்கப் கூடாது.

14. மாநகர சபைக்குரிய கொலை கூடத்தில் கொல்லப்பட்ட பிராணிகளின் இறைச்சி மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள இறைச்சிக் கடைகளுகீ கு மாநகர சபையினால் வழங்கப்பட்டுள்ள வாகனங்களில் மாத்திரமே கொண்டு செல்லப்படலாம். இதற்காக பொதுச் சபையில் வருடாந்தம் திருத்தம் செய்யப்பட்ட கட்டணங்கள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதனைத் தொடர்நது அக் கட்டணங்கள் மாடறுப்பவரினால் செலுத்தப்படல் வேண்டும்.

15. மாடு போன்ற பிராணிகள் தொடர்பில் ஒரு பிராணியின் நிமித்தம் இதன் கீழ் குறிப்பிடப்படும் காரியங்களுக்காக அறவிடப்பட வேணடிய கட்டணங்கள் காலத்துக்குக் காலம் பிரேரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் தீர்மானிக்கப்படும்.

(1) (அ) மாடுகள் (எருதுகள்)
(ஆ) பன்றிகள்
(இ) செம்மறிகள் மற்றும் ஆடுகளுக்காக
கொலைக் கூடத்தைப் பயன்படுத்துதல்.
(2) (அ) மாடுகளுக்கு
(ஆ) பன்றிகளுக்கு உணவு கொடுத்தல் (24 மணித்தியாலயங்களைக் கொண்டு காலத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு)
(3) கூடத்தைப் பயன்படுத்துதல்
(அ) மாடுகளுக்காக
(4) மாடுகள் விற்குமிடத்தைப் பயன்படுத்துதல்.
(அ) மாடுகளுக்கு

*16.* கொலைக் கூடத்திற்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களும் செலவுகளும் செலுத்தப்படும் வரையும், கொல்லுவதற்காக வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு பிராணியையும் கொல்லுவதை யாராலும் செய்யக் கூடாது. அக் கட்டணங்களையும், செலவுகளையும் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் அந்த மிருகம் தொடர்பில் 17 ஆவது பிரிவுக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

*17.* செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்தாது விடுவதன் காரணமாக கொலைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்ட ஒரு பிராணியை விளம்பரப்படுத்துவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பதாக அறிவித்த பின்னர், மாநகர ஆணையாளரினால் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இயலும். அவ்வாறு விற்பதன் மூலம் கிடைக்கப் பெறும் பணத்திலிருந்து குறித்த பிராணி தொடர்பாக அறவிடப்பட வேண்டிய யாதாயினும் கட்டணம் மற்றும் ஏற்பட்ட செலவு போன்றவற்றை தன்னிடம் வைத்துக்கொண்டு மிகுதியாக ஏதாயினும் பணம் இருப்பின் அப் பிராணியை கொல்வதற்காக கொலைக் கூடத்துக்குக் கொண்டு வந்தவருக்கு அவரினால் கோரப்பட்ட தருணத்தில் மாநகர ஆணையாளரினால் செலுத்தப்படல் வேண்டும். ஓராண்டு கழியுமுன் அப் பணம் கோரப்படாவிடின் ஆண்டு முடிவுற்ற பின்பு அப்பணம் மாநகர நிதியத்தில் வைப்பு செய்யப்படல் வேண்டும்.

*18.* நோய்வாய்ப்பட்ட அல்லது கொல்லப்படுவதற்கு பொருத்தப்பாடு அற்றதாக மாநகர மிருக வைத்தியர் அல்லது அதற்காக மாநகர ஆணையாளரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட பொதுச் சுகாதார பரீட்சோதகரினால் தீர்மானிக்கப்படுகின்ற எந்தவொரு பிராணியையும் கொல்வதற்கு, ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் வழங்கபடாதிருந்தாலும் அப் பிராணியை மாநகர ஆணையாளரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட பொதுச் சுகாதார பரீட்சோதகரினால் தடை விதிக்கப்படுதல் சட்டரீதியானதாகும். மேலும் அவ்வாறான ஒரு பிராணி எந்தவொரு நபரினாலும் கொல்லப்படுதல் ஆகாது.

*19.* இறப்பதற்கு அண்மித்துள்ள அல்லது இறந்துபோன பிராணிகளை அல்லது ஏதாயினும் நோயினால் பீடிக்கப்பட்டுள்ள பிராணிகளை கொலை கூடத்தினுள் கொண்டு வருவதற்கு இடமளித்தல் கூடாது. கொலை கூடத்தினுள் கொண்டு வரப்பட்ட அவ்வாறான பிராணியையும் தடுத்து வைத்து, தொற்று நோய் அல்லது பரவும் நோயினால் பீடிக்கப்பட்ட பிராணிகள் தெடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது போலவே இப் பிராணிகள் தொடர்பிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*20.* தொற்றக் கூடிய அல்லது பரவக்கூடிய நோயினால் பீடிக்கப்பட்ட பிராணிகள் கொலை கூடத்துக்குக் கொண்டு வரப்பட்ட சந்தர்ப்பத்தில் அவற்றை தடுத்து வைத்து, பொருத்தமானதென மாநகர ஆணையாளர் கருதுகின்ற விதத்தில் அழித்துவிடல் அல்லது அப்புறப்படுத்துதலுக்காக அப் பிராணிகளை அக் காரியங்களுக்காக மாநகர ஆணையாளரினால் காலத்துக்கு காலம் நிர்ணயிக்கப்படுகின்ற இடத்துக்கு அல்லது இடங்களுக்கு கொண்டு செல்லப்படுதல் வேண்டும்.

*21.* கொல்லப்படுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது மறுக்கப்பட்ட அல்லது கொலை செய்யப்படுவது தடை விதிக்கப்பட்ட ஒரு பிராணியை கொலைக் கூடத்துக்குக் கொண்டு வந்த நபர், அவ்வாறு அனுமதிப்பத்திரம் வழங்குவது மறுக்கப்பட்டு அல்லது கொல்லப்படுவது தடை விதிக்கப்பட்டு பன்னிரண்டு மணித்தியாலங்களுக்குள் குறித்த பிராணியை கொலை கூடத்திலிருந்து அப்புறப்படுத்துவதனை மேற்கொளளாதுவிட்டால், விளம்பரப்படுத்துவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பதாக அறிவித்த பின்னர், மாநகர ஆணையாளரினால் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இயலும். அவ்வாறு விற்பதன் மூலம் கிடைக்கப் பெறும் பணத்திலிருந்து குறித்த பிராணி தொடர்பாக அறவிடப்பட வேண்டிய யாதாயினும் கட்டம் மற்றும் ஏற்பட்ட செலவு போன்றவற்றை தன்னிடம் வைத்துக்கொண்டு மிகுதியாக ஏதாயினும் பணம் இருப்பின் அப் பிராணியை கொல்வதற்காக கொலை கூடத்துக்குக் கொண்டு வந்தவருக்கு- அவரினால் கோரப்பட்ட தருணத்தில் மாநகர ஆணையாளரினால் செலுத்தப்படல் வேண்டும். ஓராண்டு கழியுமுன் அப் பணம் கோரப்படாவிடின் ஆண்டு முடிவுற்ற பின்பு அப்பணம் மாநகர நிதியத்தில் வைப்பு செய்யப்படல் வேண்டும்.

*22.* (1) மாநகர ஆணையாளரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், மாநகர மிருக வைத்தியர் அல்லது அதற்காக மாநகர ஆணையாளரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட வேறோர் அதிகாரியினால், கையொப்பம் இடப்பட்டிருப்பினும் அனுமதிப்பத்திரம் இன்றி, பொதுக் கொலைக் கூடத்தில் கொல்லப்பட்ட எந்தவொரு பிராணியினதும் இறைச்சி தோல், குடல், அல்லது கழிவிறைச்சி போன்றன யாரொருவராலும் அங்கிருந்து கொண்டு செல்லப்படுதல் ஆகாது. அத்தகைய இறைச்சி, குடல், தோல் அல்லது கழிவிறைச்சி போன்றவற்றை கொண்டு செல்லும் யாராயினும் நபர் மாநகர சபையின் ஓர் அதிகாரியினால் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரினால் கேட்கப்படும் போது அந்த அனுமதிப்பத்திரத்தை பரிசீலனைக்காக சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அந்த நபர் சமர்பிக்காது விட்டால் இறைச்சி, தோல், குடல் அல்லது கழிவிறைச்சி என்பனவற்றுக்கு தடை விதித்து மாநகர சபையின் மாநகர ஆணையாளரினால் ஆணையிடப்படும் விதத்தில் அல்லது நீதிபதியினால் விதிக்கப்படுகின்ற விதத்தில் நட்டஈடு எதுவுமின்றி அப்புறப்படுத்துவதற்காக மாநகர சபை அலுவலகத்துக்கு அல்லது பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு இணங்குதல் வேண்டும்.

(2) யாதாயினும் ஒரு பிராணி கொல்லப்படுவதற்கு முன்பதாக கொலைக் கூடத்தின் வளவில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் தருணத்தில் ஏதாயினும் ஒரு காரணத்தினால் இறந்துவிட்டால், அவ்வாறு இறந்துவிட்ட பிராணியை கொலைக் கூட வளவிலிருந்து வெளியில் கொண்டு செல்ல அதனைக் கொண்டு வந்த நபருக்கு அனுமதி வழங்கக் கூடாது என்பதுடன், அப் பிராணியை புதைப்பதற்கு மாநகர மிருக வைத்தியரின் அல்லது அதற்காக மாநகர ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் மேற்பார்வையின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*23.* எந்தவிதமான ஒரு நாயையும் கொலை கூடத்தினுள் கொண்டுவர இடமளித்தல் ஆகாது என்பதுடன் நாயின் உரிமையாளரினால் கொலைக் கூடத்தினுள் கொண்டு வரப்படுவதற்கு அல்லது நாய் கொலை கூடத்தினுள் நுழைவதற்கு இடமளித்தல் கூடாது. கொலைக் கூடத்தில் காணப்படும் அனைத்து நாய்களும் கட்டாக்காலி நாய்கள் எனக் கருதி செயற்படுதல் வேண்டும்.

*24.* எந்தவொரு அனுமதிபெற்ற மாடறுப்பவரோ அல்லது மாடறுப்பவரின் பதிவு செய்யப்பட்ட ஊழியரோ அல்லது கொலை கூடத்தினுள் வருவதற்கு இடமளிக்கப்பட்ட வேறு யாரொரு நபரோ கொலை கூடத்தினுள் எவ்வித ஒலி எழுப்புதல், கலகம் விளைவித்தல் சண்டையிடுதல் இழிவான அகௌரவமான அல்லது நாகரிகமற்ற வார்த்தையைப் பிரயோகம் செய்தலாகாது. இத் துணை விதியினை மீறும் ஒரு நபரை மாநகர மிருக வைத்தியர் அல்லது அவரது உதவியாளர்களினால் அங்கிருந்து வெளியேற்றப்பட இயலும்.

*25.* உரிய அதிகாரியிடமிருந்து விசேட அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தால் அன்றி அனுமதி பெற்ற மாடறுப்பவர் அல்லாத எந்தவொரு நபிரனாலும் மாநகர சபை எல்லைக்குள் எந்தவொரு மாட்டையும் கொல்வது சட்ட ரீதியற்றது என்பதுடன் அவ்வாறான விசேட அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளும் எந்தவொரு நபரினாலும் அவ் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திலோ அல்லது அதில் காணப்படும் நிபந்தனைகளின் கீழோ தவிர அக் கொலை செய்யப்படல் ஆகாது. அவ் வகையான விசேட அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பம் மாடுகளுக்கு குறிசுடுதல் விற்றல் மற்றும் ஒப்படைத்தல் சம்பந்தமான கட்டளைச் சட்டத்தின் பட்டியலில் 'அ' மாதிரிக்கு மற்றும் ஒப்பான விபரங்கள் அடங்கியதாக இருக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரிக்கு அப் பிராணி உரியதென விண்ணப்பதாரியின் பிரதேசத்தினது பொலிஸ் உத்தியோகத்தரின் அல்லது மாநகர சபை அதிகாரி ஒருவரின் அல்லது கிராம அலுவலரின் அறிக்கை ஒன்று அத்துடன் அனுப்பப்படல் வேண்டும். இந்த விசேட அனுமதிப்பத்திரத்திற்காக சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் ஒரு தொகைப் பணம் அறவிடப்படல் வேண்டும்.

*26.* ஒவ்வொரு கொலைக் கூடமும் மாநகர ஆணையாளரின் நிர்ணயிக்கப்படக்கூடிய நேரங்களில் குறைந்த பட்சம் ஒரு நாளில் இரு தடவையாவது நன்றாகக் கழுவி பெருக்கப்படல் வேண்டும்.

*27.* ஒவ்வொரு கொலைக் கூடமும் மாநகர ஆணையாளரினால் நிர்ணயிக்கப்படும் நேரங்களில் குறைந்த பட்சம் மூன்று மாங்களுக்கு ஒரு தடவை சுண்ணாம்பு பூசப்பட வேண்டும்.

*28.* ஒவ்வொரு கொலைக் கூடத்தினதும் தரை கருங்கல் அல்லது தட்டையான தரை செங்கள் அல்லாவிடின் ஓடுகள் அல்லது கொங்கிரீட் அல்லது தார் இடப்பட்டு அவை இணையும் இடைவெளிகள் குறைந்த பட்சம் வருடம் ஒரு தடவையாவது சாந்து பூசி புதுப்பிக்க வேண்டும்.

*29.* கொல்லப்படுவதற்காக மேற்கூறியபடி அனுமதிக்கப்படும் யாதாயினும் ஒரு மிருகம் கொல்லப்பட்ட பின்னர், அப் பிராணியின் இறந்த உடல் நோயினால் பீடிக்கப்பட்டிருந்ததாக அல்லது மனிதர்களின் உணவுக்கு உகந்ததல்ல என காணப்பட்டால், குறித்த மாநகர மிருக வைத்தியர் அல்லது மநாகர ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறொரு நபரினால் அவ்வுடலை உடனடியாக அவ்விடத்திலேயே அழித்துவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அல்லாதுவிடின் அவ்வுடலை விற்பதற்காக வைக்கப்படுவதனை அல்லது மனிதர்களின் உணவாக பயன்படுத்துவதனை தவிர்ப்பதற்காக வேறு வகையில் அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக மாநகர மிருக வைத்தியரின் தீர்மானம் இறுதியானதாக அமைதல் வேண்டும்.

*30.* மிருகங்களை கொல்லுகின்ற தோலுரிக்கின்ற அல்லது இறைச்சியாக்குகின்ற சம்பந்தமான முறைகளுக்கிடையில் மாடறுப்பவர்கள் அவர்களது உதவியாளர்கள் கொலை கூடத்துக்கு இணைக்கப்பட்டுள்ள மாநகர சபை அதிகாரிகள் மற்றும் அதிகாரம் பெற்ற நபர்களைத் தவிர வேறெந்த நபரொருவரும் கொலை கூடத்தினுள் நுழைய விடப்படல் ஆகாது.

*31.* மாடறுப்பவர்கள் அல்லது அவர்களின் உதவியாளர்களினால் கொலை கூடத்தில் விட்டுச் செல்லும் சகல மாட்டிறைச்சி, குடல் அல்லது வேறு குப்பை கூளங்கள் அனைத்தும் சாதாரணமாக இறைச்சி அப்புறப்படுத்துவதைப் போன்றே அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

*32.* மாநகர மிருக வைத்தியரினால் நிர்ணயிக்கப்பட்ட நேரங்களின் பின்னர் அந்த அதிகாரியின் அனுமதி இல்லாமல் கொலைக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ள தோல், இரைப்பை, குடல் அல்லது வேறு குப்பை கூளங்கள் கைவிடப்பட்ட பொருட்களாக கருதப்பட வேண்டியதுடன், அவற்றை மாநகர சபை உதிசமானதாக கருதும் விதத்தில் அப்புறப்படுத்தக் கூடிய மாநகர சபையின் உடைமைகளாகும்.

*33.* (i) மாநகர சபை எல்லைக்கு வெளியில் கொல்லப்பட்ட எந்தவொரு செம்மறியாடு, வெள்ளாடு, மாடு, பன்றி போன்ற மிருகங்களின் இறைச்சி உரிய அதிகாரியினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழின்றி எந்தவொரு நபரினாலும் மாநகர சபை எல்லைக்குள் கொண்டு வரப்படல் ஆகாது. அவ்வாறாயினும் காற்றுபுகாத வகையில் முழுமையாக அடைக்கப்பட்ட தகர டப்பாக்களில் அடைக்கப்பட மீனுக்கு இப் பந்தியில் இதற்கு முன்னருள்ள விதிமுறைகள் செல்லுபடியாகாது.

(ii) (i) ஆம் பந்நியில் குறிப்பிடப்பட்ட எந்த இறைச்சிக்காகவும் அப் பந்தியின் கீழ் யாருக்காவது எவ்வித அனுமதிப் பத்திரமும் விநியோகிக்கப்படுதல் அவ் விறைச்சி எந்த மிருகத்திலிருந்து பெறப்பட்டதோ அம் மிருகம் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் நோயின்றி இருந்ததாக மற்றும் கொலை செய்யப்படும் போதும் அதன் பின்னரும் அவ்விறைச்சி பழுதடைவதை தவிர்ப்பதற்காக தேவையான சகல முன் பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக எழுத்து மூலமான சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பிரதம மாநகர மிருக வைத்தியர் அல்லது மாநகர ஆணையாளரினால் குறித்த காரியத்துக்காக அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியினால் திருப்திப்படுத்தப்பட்டாலன்றி அது செய்யப்படலாகாது.

(iii) யாராயினும் ஒரு நபருக்கு (1) ஆம் பந்தியின் பிரகாரம் உரிய அதிகாரியினால் அவரது கருத்துப்படி அனுமதிப்பத்திரம் வழங்குவதனை நிராகரிக்க முடியும். ஓர் அனுமதிப்பத்திரத்தை ரத்து செய்வதற்கும் உரிய அதிகாரிக்கு அதிகாரம் உண்டு என்பதுடன், அது தொடர்பாக எவ்வித நட்டஈடும் பெறுவதற்கு விண்ணப்பதாரிக்கு எவ்வித உரிமையும் இருக்கவியலாது.

34. (i) எந்த ஒரு நபரினாலும் மாநகர சபை எல்லைக்குள் கீழே குறிப்பிடப்படுகின்ற எவ்வித இறைச்சியையும் விற்பனைக்காக காட்சிப் படுத்துதல் ஆகாது.-

(அ) மாநகர சபை எல்லைக்கு வெளியில் கொல்லப்பட்ட செம்மறியாடு, வெள்ளாடு, மாடு, பன்றி போன்ற மிருகங்களின் இறைச்சி.

(ஆ) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட (குளிரூட்டிய, உறையவிட்ட, உப்பிடப்பட்ட, புகையூட்டிய அல்லது வேறு ஏதேனும் வகையில் பாதுகாக்கப்பட்ட) எவ்வகை இறைச்சியும் அது பிரதம மாநகர மிருக வைத்தியரினால் அல்லது மாநகர ஆணையாளரினால் அக் காரியத்துக்காக அதிகாரம் வழங்கப்பட்ட ஓர் அதிகாரியினால் பரிசீலிக்கப்பட்டு அது மனிதர்களின் நுகர்வுக்கு உகந்தது என அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அன்றி, அவ்வாறாயினும் இத்துணைச் சட்டத்தில் இதற்கு முன்னரான விதிமுறைகளுக்கு இணங்க அனுமதிக்கப்பட்ட தகர டப்பாக்களில் அடைக்கப்பட்ட இறைச்சி வகைகளுக்கு இது செல்லுபடியற்றதால் வேண்டும்.

(ii) மாநகர சபை எல்லைக்கு வெளியில் கொல்லப்பட்ட எவ்வித செம்மறியாட்டினது, வெள்ளாட்டினது, மாட்டினது இறைச்சி (1) ஆம் பிரிவின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்ட ஓர் அதிகாரியைக் கொண்டு பரிசீலனை செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கும் ஒவ்வொருவரும் அவ் இறைச்சியைப் பரிசீலனை செய்வதற்காக அவற்றை மாநகர சபை கொலை கூடத்துக்கு கொண்டு வருவதற்கு ஆவன செய்தல் வேண்டும். தான் மாநகர சபை கொலை கூடத்துக்கு இறைச்சியைக் கொண்டு வருவதற்கு எண்ணுவதாக மாநகர மிருக வைத்தியருக்கு அல்லது குறித்த அலுவலுக்காக மாநகர ஆணையாளரினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகரிக்க குறைந்தபட்சம் பன்னிரண்டு மணித்தியாலயங்களுக்கு முன்னர் அறிவித்தல் கொடுத்திருந்தால் அன்றி, எந்த ஒரு நபரினாலும் கொலைக் கூடத்திற்குள் எவ்வகையான இறைச்சியையும் கொண்டு வருதல் ஆகாது.

(iii) யாரொருவரினாலும், மாநகர சபையின் மாடறுக்கும் கொலை கூடத்திற்கு (2) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட எவ்வகையான இறைச்சியும் கொண்டு வருவதற்காக தனது பிரதிநிதி அல்லது ஊழியராக வேறொரு நபரை அனுப்புவதாயின் அந்த நபரின் பெயர் மற்றும் முகவரி மாநகர சபையில் பதிவு செய்யப்பட்டிருந்தால் தவிர சேவையில் ஈடுபடுத்துதல் ஆகாது.

(iv) 2ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட எவ்வகை இறைச்சியையும் மாநகர மிருக வைத்தியர் அல்லது குறித்த காரியத்துக்காக மாநகர ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியைக் கொண்டு பரிசீலனை செய்துகொள்வதற்காக மாநகர கொலை கூடத்துக்கு கொண்டு வரும் ஒவ்வொருவரும் அக்காரியத்துக்காக கொலை கூடத்துக்குக் கொண்டு வரும் ஒவ்வொரு கிலோகிராம் இறைச்சிக்கும் செலுத்தப்படல் வேண்டும் என சபையினால் தீர்மானிக்கப்படும் கட்டணங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தொகையை மாநகர கொலை கூடத்தினை பயன்படுத்துவதற்காக செலுத்த வேண்டும்.

(v) எந்தவொரு நபரினாலும் ஏதாவது ஓரிடத்திலிருந்து மாநகர சபையின் கொலைக் கூடத்திற்கு அல்லது மாநகர சபையின் கொலை கூடத்திலிருந்து இறைச்சி விற்பனை செய்யும் ஏதாயினும் ஓரிடத்துக்கு இதன் கீழ் காணப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவின்றி (2) ஆவது பந்நியில் குறிப்பிடப்பட்ட எவ்வகை இறைச்சியும் கொண்டு வரவோ அல்லது கொண்டு செல்லவோ கூடாது.

(அ) அந்த இறைச்சி முழுமையாக மூடப்பட்ட ஒரு மோட்டார் வாகனத்தில் கொண்டு செல்லப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்விறைச்சியானது குறித்த காரியத்துக்காக வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள கொழுக்கிகளில் தொங்க விடப்பட்டு அல்லது தட்டுகளில் அடுக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

(இ) 35 ஆவது பிரிவில் மற்றும் இந்த துணை விதியில் குறித்த காரணத்துக்காக இறைச்சி என்ற பதத்தினால் மாட்டிறைச்சி குறிப்பிடப்படும்.

35. எந்த ஒரு நபரினாலும் ஏதாயினும் ஒரு மிருகத்தின் இறைச்சியையும் அது சூரிய ஒளியினால், தூசியினால் மற்றும் மழையினால் பாதிக்கப்படாமல் முழுமையாக பாதுகாக்கப்படும் விதத்தில் மற்றும் பொது மக்கள் காணாத வகையில் மூடப்பட்ட வாகனத்தில் கொண்டு செல்லப்படுமானால் அன்றி மாநகர சபையின் கொலை கூடத்திலிருந்து அல்லது வேறொரு கொலை கூடத்திலிருந்து விற்பனை நிலையத்துக்கு அல்லது மாநகர சபை எல்லையினுள் வேறொர் இடத்துக்கு கொண்டு செல்லவோ அல்லது கொண்டு செல்ல இடமளிக்கவோ கூடாது. புதிய தோல் அல்லது தோல்கள் ஓரிடத்திலிருந்து மற்றுமோர் இடத்துக்கு கொண்டு செல்லும் போது யாரொருவரினாலும் பொது மக்கள் காணும் வகையில் அதனை திறப்பதோ அல்லது இடமளித்தலோ ஆகாது.

36. மாநகர மிருக வைத்தியர் அல்லது மேலே கூறப்பட்டவாறு அதிகாரம் வழங்கப்பட வேறொரு நபரினால் பரிசீலனை செய்யப்பட்ட அனைத்து மாடுகள் மற்றும் மிருகங்கள் தொடர்பான விபரங்களை மாகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப் படிவத்துக்கமைய சகல விபரங்களையும் உள்ளடக்கிய அட்டவணை ஒன்று அவரினால் பேணப்படல் வேண்டும். அவ் அட்டவணை ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை தினங்களைத் தவிர ஏனைய நாட்களில் கொலைக் கூடத்தின் அலுவலகத்தில் பிற்பகல் ஒரு (1) மணி முதல் நான்கு (4) மணி வரையான காலப் பகுதியில் பொது மகக்ள் பார்வைக்காக வைக்கப்படுதல் வேண்டும்.

37. அனுமதிப்பத்திரம் பெற்ற மாடறுப்பவரல்லாத எந்த ஒரு நபரினாலும், உரிய அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட விஷேட அனுமதிப்பத்திரம் அல்லது அவ் அனுமதிப்பத்திரத்தின் பொதுவான கருத்துக்கு மாறாக ஏதாவதொரு மாடு, செம்மறி, வெள்ளாடு அல்லது பன்றி கொல்லப்படுதல் சட்டரீதியற்றதாகும். மேலும் அவ் வகையான ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்துக்கும் சபையினால் பிரேரணை அங்கீகாரத்தின் மூலமாக தீர்மானிக்கப்பட்ட வகையிலான ஒரு கட்டணம் அறவிடப்படல் வேண்டும். அவ்வாறாயினும் அவசரத் தேவை காரணமாகவும்,

விற்பனைக்காக அல்லாத சந்தர்ப்பத்திலும் உரிய அதிகாரியினால் சரியான முறையில் அதிகாரம் அளிக்கப்பட்ட யாரேனும் ஓர் அதிகாரியினால் அவ்வகையான அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படலாம் என்பதுடன், அவரினால் சபையின் சார்பில் உரிய கட்டணம் அறவிடப்பட்டு மாநகர கணக்காளருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

38. யாராயினும் ஒரு நபர் இத்துணை பிரிவின் ஏதாயினும் ஒரு பிரிவை மீறுதலானது தண்டணைக்குரிய குற்றமாவதுடன் பதுளை மாநகர சபை எல்லைக்குள் அதிகாரம் கொண்ட நீதிமன்றம் ஒன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் குற்றவாளியாக்கப்பட்டால் கீழே காணும் தண்டனைகளுக்கு உட்படுதல் வேண்டும்:-

(அ) முதல் தடவையாக இழைக்கப்படும் குற்றமாயின், ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டம் செலுத்துவதற்கு உட்படுவர்;

(ஆ) இரண்டாம் தடவையாக அல்லது தொடர்ந்து இழைக்கப்படும் குற்றத்துக்காக நாளொன்றுக்கு இரண்டாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் செலுத்துவதற்கு உட்படுவார்;

(இ) தொடர்ச்சியாக இழைக்கப்படும் குற்றத்துக்காக குற்றவாளியாக்கப்பட்டால் அல்லது சட்ட மீறல் சம்பந்தமாக கவனம் செலுத்தி கௌரவ நகரபிதாவினால் எழுத்து வடிவிலான அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னரும் அவ்வாறான குற்றம் தொடர்ந்தும் இழைக்கப்படுமேயானால் ஒவ்வொரு தினத்துக்கும் இருநூற்றைம்பது ரூபாவுக்கு மேற்படாத மேலதிக தண்டப்பணம் செலுத்துவதற்கு உட்படுவர்.

## XLI ஆம் பகுதி

### நிதிக் கட்டளைகள்

1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டறான (252 ஆம் அத்தியாயமான) 272 ஆம் பிரிவினால் மாநகர சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின்படி பதுளை மாநகர சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற நிதிக் கட்டளைகள்

### பொருள் விளக்கம்

1. 'பிரதம அதிகாரி' என்ற சொல்லுக்கு மாநகர சபை ஆணையாளர் என்று பொருள்படும்.

2. 'ப.நி.அ' என்ற எழுத்துக்களின் மூலம் பிரதம நிதி அதிகாரி குறிப்பிடப்படுவார். இந்த துணைவிதியில் மாநகர ஆணையாளர் குறிப்பிடப்படுவார். இதன் பின்னர் இது மாநகர சபை ஆணையாளர் என்று பொருள்படுவதுடன், அதன் மூலமாக இனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் காரியம் உட்பட சபையின் நிதி நடவடிக்கைகளை முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கும் அதிகாரி குறிக்கப்படுவார்.

3. (i) 'மா.வி.அ' என்ற எழுத்துக்களால் ஊவா மாகாணத்தின் விடயப் பொறுப்பு அமைச்சு கருதப்படும்.
(ii) "மா. உ. நி. "என்ற எழுத்துக்களால் மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனம் என்பது கருதப்படும்.
(iii) "உ. ஆ. "என்ற எழுத்துக்களால் உள்ளூராட்சி ஆணையாளர் என்பது கருதப்படும்.

4. (i) முறையான அறிக்கைகள் அல்லது அவ்வாறான விடயங்களுக்காக உள்ளூராட்சி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட யாதாயினும் ஒரு மாதிரி அல்லது அறிக்கை உட்படுத்தப்படும். யாதாயினும் ஒரு உரிய மாதிரி அல்லது அறிக்கை வெளியிடப்படாத தருணத்தில் அறிக்கை அல்லது பட்டியல் ஒன்று மாநகர சபை ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிக்கமைய தயாரிக்கப்படல் வேண்டும்.

### 2. பொது விதிகள்

(அ) பிரதம நிதி அதிகாரி ஆகிய மாநகர சபை ஆணையாளர் சபையின் நிதி நடவடிக்கைகள் சம்பந்தமாக முழுமையான முகாமைத்துவம் மற்றும் முறையான நிர்வாகம் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியதுடன், சபைக்கும் குறித்த குழுக்களுக்கும் உசிதமான நிதி தொடர்பான ஆலோசனைகள் வழங்குதல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு திணைக்களத்தினதும் பிரதம அதிகாரியானவர் ஆளணியினரின் பொறுப்பையும், நிர்வாகத்தினையும் பற்றியும், கட்டிடங்கள், இயந்திரோபகரங்கள், ஏனைய உபகரணங்கள், பொருட்கள், பணம் மற்றும் களஞ்சியம் உட்பட அவரது, திணைக்களத்துக்கு உரிய ஏனைய சகல வளங்களினதும் பாதுகாப்பு நிர்வாகம் பற்றியும் வகை கூறல் வேண்டும்.

(இ) இந் நிதிக் கட்டளைகள் தமது மேற்பார்வை மற்றும் நடவடிக்கைகள் சம்பந்தமான திணைக்களத்துக்குள் பின்பற்றப்படுவதாக ஒவ்வொரு திணைக்களத்திலும் இருக்கும் பிரதம அதிகாரி பதில் கூறுவதற்குக் கட்டுப்பட்டவராவார்.

5. (1) **வரவு-செலவு நிர்வாகம்** :

(அ) மீள ஈடு செய்யக்கூடிய செலவு மற்றும் வருமானம் (அதாவது மீள ஈடு செய்யும் வரவு செலவுத் திட்டம்)

(ஆ) மூலதன செயற் திட்டங்கள் மற்றும் பிரேரணைகள் (அதாவது மூலதன வரவு-செலவுத் திட்டம்) சம்பந்தமான நகல் வரவு-செலவு திட்டமொன்றினை மாநகர ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் பிரதம கணக்காளரிடம் கேட்டறிந்து ஒவ்வோர் ஆண்டும் தயாரிக்கப்படல் வேண்டும்.

(2) நகல் வரவு -செலவு திட்டத்தைத் தயாரிப்பதற்கு தேவையான அனைத்து நிதி சம்பந்தமான தரவு, தகவல்கல் மற்றும் வேறு உரிய விபரங்களை சபையின் ஏனைய அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள மாநகர ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

(3) நகல் வரவு செலவுத் திட்டம் உரிய நடைமுறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அதில் செலவும் வருமானம் பற்றி வகைப்படுததல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ள மாதிரிகள் பின்பற்றப்படல் வேண்டும்.

(4) நகல் வரவு-செலவுத் திட்டத்தின் பகுதிகள் முதலில் நிலையியற் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் பிறகு மாநகர சபை ஆணையாளரினால் பொதுக் கூட்டத்தில் சமர்பிப்பதற்காக நகல் வரவு-செலவுத் திட்டமானது மீள ஈடு செய்யும் மற்றும் மூலதன வரவு-செலவுத் திட்டத்துடன் ஒன்றிணைக்கப்படல் வேண்டும்.

(5) வருடாந்த மூலதன வரவு-செலவுத் திட்டம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டாலும், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயமான) 215 (அ) பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படும் சந்தர்ப்பத்திலும் பதிய செயற்திட்டம் ஒன்றுக்காக செலவு செய்வதற்கு சரியான நிதி மதிப்பீட்டு அறிக்கை ஒன்று திணைக்களத் தலைவரினால் தயார் செய்யப்பட்டு நிதிக் குழுவிற்கு மற்றும் பொதுச் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

(6) அங்கீகரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டங்களில் விசேடமாக அதிகாரம் வழங்கப்பட்ட காரியங்களுக்காக மாத்திரம் பணம் செலவழிப்பதில் உரிய திணைக்களத் தலைவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

(7) ஏதாவது ஒரு செலவுத் தலைப்பின் கீழான செலவுகள் குறித்த தொகையை மீறும் எனத் தெரிய வரும் வேளையில் மாநகர ஆணையாளரிடம் கேட்டு, திணைக்களத் தலைவரிகளினால் தேவைப்படுகின்ற அங்கீகாரம் கோரி நிதிக் குழுவுடன் இணைந்ததான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(8) எஞ்சியுள்ள் செலவுத் தலைப்புகள் இவ்வாறு செலவு அதிகரிக்கும் செலவுத் தலைப்பிற்கு பணத்தை மாற்றிக் கொடுப்பதனை அங்கீகரிப்பதற்கு அல்லது குறைநிரப்பு வரவு-செலவுத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு மாநகர சபையின் மாநகரபிதா கட்டளை பிறப்பிக்கலாம்.

### 6. கணக்கு வழக்கு

(1) அனைத்து கணக்கு வழக்குகளினதும் அறிக்கைகள் மற்றும் நடவடிக்கைகள் அவற்றுக்கான மாதிரிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும். யாதாயினும் ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை அல்லது மாதிரிகள் நிர்ணயிக்கப்படாதுள்ள வேளையில் வேறொரு திணைக்களம் சம்பந்தப்படுமானால், நிதி அறிக்கை மற்றும் நடைமுறை உரிய பிரதம அதிகாரியிடம் கேட்டறிந்த பின்னர் பிரதம நிதி உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிக்கு அமைவானதாதல் வேண்டும்.
(2) உள்ளூராட்சி ஆணையாளரினால் கேட்கப்படுகின்ற சகல அதிகார பூர்வமான நிதி அறிக்கைகளுடன் வருடாந்த வருமான மற்றும் பரீட்சைபத்திரம் மாநகர சபை ஆணையாளரினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
(3) கணக்கு சம்பந்தமான அலுவல்களை ஒப்படைக்கும் போது கீழக்க காணும் கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு திணைக்களத் தலைவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

### 7. வங்கிக் கணக்குகளும் காசோலைகளும்

(1) சபையினதும் உள்ளூராட்சி அமைச்சினதும் யாதயினும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு மாநகர சபை ஆணையாளர், சபையின் கணக்குகளை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக ஏற்பாடுகளைச் செய்வது பற்றி வகைகூறல் வேண்டும்.
(2) சகல காசோலைகளும் பிரதம நிதி அதிகாரியின் அதிகாரத்தின் மீது மாத்திரம் தேவைக்காக உத்தரவு பிறப்பிக்க இயலும். அவை சரியான பாதுகாப்புடன் வைக்கப்படுவதற்கு அவர் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.
(3) சபையின் வங்கிக் கணக்குகளின் மீது எழுதப்படும் அனைத்து காசோலைகளும் சபையினால் விசேட அதிகாரம் வழங்கப்பட்ட இரு அதிகாரிகளினால் ஒப்பமிடப்படல் வேண்டும்.
(4) சபையின் அங்கீகாரம் இல்லாமல் எந்தவொரு வங்கிக் கணக்கும் மேலதிக பற்று (overtraft) நிலைமைக்கு உட்படுவதற்கு இடமளித்தல் ஆகாது.

### 8. வேலைகளுக்கும், பொருட்களுக்கும், சேவைகளுக்குமான உத்தரவு பிறப்பித்தல்

(1) கீழ்க் காணும் விடயங்களில், அதாவது-
(அ) பொதுமக்களுக்கான நுகர்வுச் சேவைகளை வழங்குதல்
உதா. :- நீர்,மின்சாரம் பெற்றுக்கொள்ளல்.
(ஆ) குத்தகை உடன்படிக்கைகளினால் காப்பு செய்யப்பட்ட தவணைக் கொடுப்பனவுகள்
உதா. : - வாடகை
(இ) சிறு தொழில் மூலமாக செய்யப்படும் சிறு கொள்வனவுகள்.

(ஈ) கட்டிட நிர்மாணங்கள், பொறியியலாளர்கள், வேலைகள், ஒப்பந்த உடன்படிக்கைள் ஆகியவற்றின் கீழ் வழங்கப்படுகின்ற வேறு தொழில்நுட்ப சேவைகள் சம்பந்தமான போது அன்றி அனைத்து வேலைகளையும், பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு முன்பு அது சம்பந்தமாக உரிய மாதிரியை பயன்படுத்துதல் வேண்டும்.

(ii) தேவைகளை எழுதும் புத்தங்களை பாதுகாப்பாக வைத்தல் மற்றும் அவற்றை திணைக்களங்களுக்கு விநியோகதித்தல் தொடர்பாக பிரதம மாநகர சபைக் கணக்காளர் பொறுப்புக் கூறல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு திணைக்களத் தலைவரும் தனது திணைக்களத்தின் தேவைகளை எழுதும் கட்டளைகளில் ஒப்பமிடுவதற்கு அதிகாரம் கொண்ட அதிகாரிகளின் பட்டியல் ஒன்றினை கையளித்தல் வேண்டும்.

### 9. கொடுப்பனவுகள்

1. அனைத்து விலைப்பட்டியல்களுக்கும் தாமதமின்றி பணம் செலுத்துவது பற்றி மாநகர ஆணையாளர் வகை கூறல் வேண்டும்.
2. அதிகாரம் கொண்டதும் திட்டவட்டமானதுமான கொடுப்பனவுகளின் போது (உதா:- ஊழியருக்கான சம்பளம்) காசாளர் பெயரில் விநியோகிக்கப்படும் காசோலைகளின் ஊடாக பணக் கொடுப்பனவு செய்யலாம்.
3. விலைப் பட்டியல் விநியோகிக்கின்ற பிரதம அதிகாரி அதற்கு உரிய விலைப்பட்டியல்களை பரிசீலித்தல், சரிபிழை பார்த்தல் மற்றும் உறுதிப்படுத்தல் தொடர்பிலும் தனது திணைக்களத்தினது நடவடிக்கைகளில் தோன்றக்கூடிய வேறு பிரச்சனைகள் பற்றியும் வகைகூறல் வேண்டும்.
4. கொடுப்பனவுக்காக விலைப் பட்டியல் ஒன்றினை உறுதிப்படுத்துவதற்கு முன்னர், அதிகாரி கீழ்க் காணும் விடயங்கள் பற்றி திருப்திகொள்ளல் வேண்டும்:-
   (அ) வேலைத்தள உபகரணங்கள் அல்லது சேவைகள் உண்மையிலேயே நிறைவேற்றப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு சோதனையிடப்பட்டுள்ளதெனவும் உயரிய தரம் கொண்டிருப்பதாயும்.
   (ஆ) விலைப் பட்டியலிலுள்ள விலைகளை கணக்கீடு செய்தல், கழிவு ஆகியன சரியானதெனவும்.
   (இ) செலவுகள் உரிய முறையிலும் வரவு-செலவுத் திட்டத்துக்குள் நின்றும் செய்யப்பட்டுள்ளன எனவும்.
   (ஈ) பொருத்தமான சந்தர்ப்பங்களில், சொத்துக்கள் பற்றிய பதிவேட்டில் அல்லது களஞ்சியப் பதிவேடுகளில் குறிப்பு வைக்கப்பட்டுள்ளன எனவும்,
   (உ) விலைப்பட்டியலுக்கு ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும்.
5. திணைக்கள தலைவரினால் அந்தந்த திணைக்களத்தில் இருப்பவரும், விலைப் பட்டியல்களை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரம் கொண்டவருமான சிரேஷ்ட அதிகாரிகளின் பட்டியல் ஒன்று அவர்களது மாதிரி கையொப்பங்களுடன் கூடியதாக சபையின் பிரதம கணக்காளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.
6. உறுதிப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல்கள் தாமதமின்றி பிரதம மாநகர சபை கணக்காளருக்கு அனுப்பப்படல் வேண்டுவதுடன், அவர் தேவையெனக் கருதும் விபரங்களைப் பரிசீலனை செய்தல், விபரங்களைக் கோருதல் போன்றவற்றை அவரால் மேற்கொள்ள இயலும்.
7. பொருட்களை ஒப்படைத்தல் அல்லது கடமைகளை நிறைவேற்றல் அல்லது பரிசீலனை அதிகாரிகள், தேவைகளை எழுதக் கட்டளைப் பிறப்பிக்கும் அல்லது விலைகள் மற்றும் நிர்ணயங்கள் பற்றிக் கதைப்பவர்கள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்கின்ற அதிகாரிகளிடமிருந்து சுயாதீனமாக உள்ளனர் என்பது பற்றி திணைக்களத் தலைவர்களினால் உறுதிப்படுத்த இயலும்.
8. சிறு முதலை செலவிடுதலுக்காக சிறிதளவு பணம் பெற்றுக்கொள்ள மாநகர சபை ஆணையாளரினால் ஓர் அதிகாரிக்கு அதிகாரம் வழங்க இயலும். அப் பணத்தை முற்பண அடிப்படையின் கீழ் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அது மாநகர ஆணையாளரினால் வழங்கப்படும் ஆலோசனைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

### 10. நிதிக் கட்டளைகள்

போக்குவரத்து செலவு, சாப்பாட்டுச் செலவு மற்றும் உறுப்பினர்கள், கொடுப்பனவுகள்.

(1) அதிகாரிகளின் அனைத்து கோரிக்கைகளும் உரிய திணைக்களத் தலைவரினால் சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்டு மாநகர சபையின் பிரதம கணக்களரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(2) ஒவ்வொரு திணைக்கள தலைவர்களினால் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறோர் அதிகாரியினால் விண்ணப்பப்படிவங்கள் உறுதிப்படுத்தப்பட்டு, அவை மாநகர சபையின் பிரதம கணக்காளருக்கு அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் மாதிரி படிவங்கள் மாநகர சபையின் பிரதம கணக்காளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) திணைக்களத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறோர் அதிகாரியினால் உறுதிப்படுத்தப்படுவதன் மூலம் போக்குவரத்துச் செலவுகள் அங்கீகரிக்கப்பட்டனவும் அவசியமானவையும் எனவும் சபையினால் சரியான முறையில் கொடுப்பனவுகளை அங்கீகரிக்க இயலுமானவை எனவும் உறுதிப்படுத்தும் அதிகாரி திருப்தி அடைந்துள்ளார் என்று கருதப்படும்.

**11. கடன்களும் முதலீடுகளும்**

(1) மாநகர சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட யாதாயினும் ஒரு கடன் தொகைக்கு சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பது பற்றியும் உரிய பதிவேடுகளில் சரியான முறையில் அறிக்கைப் படுத்தப்படுகின்றது என்பது பற்றியும் பிரதம நிதி அதிகாரி வகை கூறல் வேண்டும்.

(2) கடன்களின் முழுத் தொகையும், வட்டியும் காலத்துக்குக்காலம் வட்டிசெலுத்துவதற்காக மீள ஈடுசெய்யப்படும் வரவு-செலவுத் திட்டத்தில் சட்ட திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதற்கும், கடன்களின் தவணைப் பணம் செலுத்துவதற்காக மூலதன வரவு-செலவுத் திட்டத்தில் சட்ட திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதற்கும், அக் கொடுப்னவுகள் உரிய திகதியில் கடன் வழங்கியவருக்கு செலுத்தப்படுகின்றது என்பதற்கும் பிரதம நிதி அதிகாரி பொறுப்புக் கூறல் வேண்டும்.

(3) சபையின் ஏனைய காரியங்களுக்காக உடனடியாக தேவைப்படாத மேலதிக நிதியினை மாநகர சபையின் பிரதம கணக்காளரினால் பிரதம நிதி அதிகாரியிடம் கேட்டு, நகரபிதாவின் அங்கீகாரத்தின் பேரில் வங்கியில் முதலீடு செய்ய இயலும்.

**12. சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்குதல்.**

(1) ஊழியர்களின் அனைத்து சம்பளங்கள், மூலதனங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குதல் மற்றும் செலுத்துதல் மாநகர சபையின் பிரதம கணக்காளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு செயல் முறைக்கு இணங்க ஆற்றப்படுதல் வேண்டும்.

(2) கீழக்காணும் விடயங்கள் உட்பட கொடுப்பனவுகளுக்கு உரியதான அனைத்து விடயங்கள் தொடர்பாக திணைக்களத் தலைவரினால் மாநகர சபையின் பிரதம கணக்காளரின் ஊடாக பிரதம நிதி அதிகாரிக்கு அறிவிக்கபபடல் வேண்டும்:-

(அ) நியமனம், இராஜினாமா, இடமாற்றம்;

(ஆ) சேவைக்கு வராமை (உ-ம்) சுகவீன அனுமதி பெறாத விடுமுறை;

(இ) சம்பளத் திட்டங்களில் மாற்றம்.

(3) சகல பதிவேடுகளும் மற்றும் அறிக்கைகளும் திணைக்களத் தலைவரினால் அல்லது அக் காரியங்களுக்காக அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் ஒப்பங்கள் மாநகர சபையின் பிரதம கணக்காளருக்கு அனுப்பபப்படல் வேண்டும்.

**13. வருமானங்களை சேகரித்தல்**

(1) சபைக்காக அறவிடப்பட வேண்டிய அனைத்து பணத்தையும் சேகரிக்கும் காரியம் பிரதம கணக்களாளரினால் நிர்வகிக்கப்படுகின்ற அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஒழுங்கு முறையின் கீழ் நடைமுறைப்படுத்த வேண்டும்.

(2) கடன் அறவிடப்பட வேண்டிய கணக்கொன்றினை தாமதியாது சமர்ப்பிப்பதற்காக செய்யப்பட்ட வேலை, விநியோகிக்கப்பட்ட பொருட்களுக்கான குத்தகை உடன்படிக்கை அல்லது வழங்கப்பட்ட சேவைகளுக்காக சபைக்கு வர வேண்டிய யாதாயினும் கடன் தொகை சம்பந்தமாக திணைக்களத் தலைவர்களினால் மாநகர சபையின் பிரதம கணக்காளர் ஊடாக பிரதம நிதி அதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(3) அறவிடப்பட வேண்டிய சரியான பணம் சம்பந்தமாக தான் திருப்திகொள்வதற்காக ஏதாவது அறிக்கைகளை அல்லது ஆவணங்களைப் பரிசீலிக்கும் அதிகாரம் பிரதம நிதி அதிகாரிக்கு இருத்தல் வேண்டும்.

(4) சகல ரசீதுகளின் மாதிரிகள், பிரவேச அட்டைகள், கணக்குப் புத்தகங்கள் என்பன மாநகர சபையின் பிரதம கணககாளர் கட்டளை பிறப்பித்து வியோகித்தல் வேண்டும். ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்படாத பணத்தை அறவிடுவதற்கான ஏதவாது அறிக்கைகயினைப் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில் அது மாநகர சபையின் பிரதம கணக்காளரினால் சிபாரிசு செய்யப்பட்டதன் பின்னர் நிதி அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மாதிரிக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

(5) கிடைக்கப்பெறும் அனைத்து பணமும் தாமதமின்றி பிரதம நிதி அதிகாரியினால் மாநகர சபையின் பிரதம கணக்காளருடன் இணைந்து ஏற்பாடு செய்துகொண்ட செயற்திட்டத்துக்கு அமைவாக அங்கீகாரம் பெற்ற ஒரு வங்கியில் வைப்பில் இடப்படல் வேண்டும்.

(6) பிரதம நிதி அதிகாரியினால் விசேடமாக அதிகாரம் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர கிடைக்கப்பெறும் அனைத்து பணமும் அதில் சிறிதும் கையிருப்பில் வைத்துக்கொள்ளாது அத்தொகை அங்கீகாரம் பெற்ற வங்கியில் வைப்பு செய்யப்படல் வேண்டும்.

(7) சபைக்கென உள்ள பணத்திலிருந்து தனிப்பட்ட ரீதியில் காசோலைகள் மாற்றப்படல் ஆகாது.

(8) ஓர் அதிகாரியிடமிருந்து மற்றோர் அதிகாரிக்கு மாற்றப்பட்ட ஏதாவது பணம் தொடர்பாக அப் பணத்தைப் பெறும் அதிகாரி ஒப்பமிட்டிருத்தல் வேண்டும்.

(9) பணத்தின் பாதுகாப்பு மற்றும் கவனம் தொடர்பாக மாநகர சபையின் பிரதம கணக்காளர் மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகியோர் பொறுப்புக் கூறல் வேண்டும்.

(10) சபையினால் வேறுவிதமான தீர்மானம் மேற்கொள்ளப்படாவிடின் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் காரியம் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.30 மணி வரை இடம் பெறல் வேண்டும். வெளியில் சென்ற பணம் சேகரிப்பதற்கு சபையின் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் பணம் பெறுவதற்காக மாநகர சபையின் பிரதம கணக்காளரினால் அவர்களுக்கு ரசீது புத்தகங்கள் வழங்கப்படல் வேண்டும். அந்த ரசீது புத்தகங்கள் மூலம் பிரதி மற்றும் இணைப் பிரதிகளைக் கொண்டனவாக இருத்தல் வேண்டும்.

(11) வெளியில் சென்று பணம் பெறுவதற்கு அதிகாரம் கிடைக்கப்பெறும் அதிகாரிகள் தங்களினால் சேகரிக்கப்படும் பணத்தை அன்றைய தினத்திலேயே அல்லது அதற்கு அடுத்த தினத்திலேயே சபையில் ஒப்படைத்தல் வேண்டும்.

(12) இந்த அதிகாரிகள் விநியோகிக்கும் ரசீதுகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அப் பட்டியல்கள் ரசீது புத்தகங்களுடன் உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(13) உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் இந்த பட்டியலில் குறிப்பிடப்பட்ட ரசீதுகளின் குறிப்பு, பணம், இலக்கம் ஆகியவற்றை இணைப் பிரதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அந்த ரசீதுகளை சிவப்பு மையினால் ரத்து செய்ததன் பின்னர் இறுதியாக விநியோகிக்கப்பட்ட ரசீதின் பின் புறத்தில் தனது சுருக்கக் கையொப்பமிட்டு திகதியும் குறிப்பிடப்படல் வேண்டும். அதனைத் தொடர்ந்து பொதுவான ரசீது ஒன்றினை எழுதி உரிய அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ் அதிகாரியினால் அப் பற்றுச் சீட்டில் குறிப்பிடப்பட்ட பணம் காசாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

### 14. காசோலைகளைப் பொறுப்பேற்றல்

சபைக்குக் கிடைக்க வேண்டிய பணத்துக்காக காசோலைகளைப் பொறுப்பேற்றல் மிகக் கவனமாக செய்யப்படல் வேண்டும். யாதாயினும் ஒரு காசோலையை மாற்ற முடியாத சந்தர்ப்பத்தில் அந் நபரிடமிருந்து அதன் பின்னர் காசோலைகள் பெறப்படல் ஆகாது என்பதுடன், மாற்ற இயலாத காசோலையின் பெறுமதியை பணமாக பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்:-

(1) யாராயினும் ஒருவர் காசோலை மூலம் பணம் செலுத்துகின்ற போது அக் காசோலைக்காக பற்றுச் சீட்டொன்று விநியோகித்தல் வேண்டும். இப் பற்றுச் சீட்டில் காசோலை செல்லுபடியாகும் என்று முத்திரை குத்தி ஒப்பமிடப்படல் வேண்டும்;

(2) காரியாலயத்திற்குக் கிடைக்கும் சகல பணம் மற்றும் காசோலைகள் அடுத்த நாளில் வங்கியில் இடப்படல் வேண்டும். பணக் காசோலை அல்லது முந்திய திகதியிடப்பட்ட அல்லது பிந்திய திகதியிடப்பட்ட காசோலைகள் பெறப்படல் ஆகாது;

(3) சபைக்குரிய உடைமையொன்றை விற்பனை செய்யும் போது அல்லது விலைமனு பிணை பணம் அல்லது தற்காலிக குத்தகைப் பணம் என்பனவற்றுக்காக காசோலைகள் பெறப்படல் ஆகாது.

### 15. கட்டிட நிர்மாணம் மற்றும் பொறியியல் வேலைகளுக்கான ஒப்பந்தங்கள்

(1) கட்டிட நிர்மாணம் மற்றும் பொறியியல் வேலைகளுக்காக சபையினால் அங்கீகரிக்கப்படுகின்ற மதிப்பீடு ஒன்றினைத் தயாரித்தலும், அவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்ற கொடுப்பனவுகளை பதிவதற்கும் மதிப்பீட்டு பதிவேடு ஒன்று பேணப்படல் வேண்டும். இது சம்பந்தமாக அளவுகளைப் பதிவதற்காக அளவீட்டு பதிவேடு ஒன்றும் பேணப்படல் வேண்டும். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இந் நடவடிக்கைகள் குறித்த திணைக்களத் தலைவரினால் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

(2) ஒப்பந்தம் சம்பந்தமாக ஒப்பந்தக்காரருக்குக் கொடுக்கும் பணம் பிரதம பொறியியலாளரினால் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்படுகின்ற வேறோர் அதிகாரியினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழின் பேரில் மாத்திரமே கொடுக்கப்படல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மேலதிக வேலைக்கு அல்லது மாற்றுதலுக்கு உரியதான செலவுகளுக்கான மதிப்பீடு ஒன்று பிரதம பொறியியலாளரினால் மாநகர சபை கணக்காளரிடம் விசாரித்து பிரதம நிதி அதிகாரியின் ஊடாக, நிதிக் குழுவின் ஊடாக பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
ஒவ்வொரு மேலதிக வேலைக்கு அல்லது மாற்றுதலுக்கும் பிரதம பொறியியலாளரினால் அல்லது அவரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறொரு பொறியியலாரினால் கடித மூலம் அதிகாரம் வழங்கப்படல் வேண்டும்.

(4) ஒவ்வொரு மாற்றுதலுக்குமான பிரதி ஒன்று அதன் பணப் பணப்பெறுபேறு தொடர்பான குறிப்புடன் பிரதம நிதி அதிகாரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(5) ஒப்பந்தக்காரரினால் தயாரிக்கப்படும் இறுதிச் சான்றிதழை விநியோகிப்பதற்கு முன்னர் பிரதம பொறியியலாளரினால் தனிப்பட்ட ரீதியில் அவ்வொப்பந்தம் பரிசீலிக்கப்பட்டதன் பின்பு கொடுப்பனவு சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

(6) பிரதம நிதி அதிகாரியினால் ஒப்பந்தத்துக்கான கணக்குகள் அவரினால் தேவையெனக் கருதப்படும் காலம் வரை பரிசீலனை மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் கணக்குகளின் பிழையற்ற தன்மையைப் பற்றி தான் திருப்திகொள்ளுவதற்கு தேவைப்படும் விதத்திலான சகல பரசீலனைகளையும் மேற்கொள்ளவதற்கும், அத்தகைய விபரங்களையும், விளக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கும் அவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(7) ஓர் ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கு உரிய காலத்தைவிட தாமதமாகும் வேளையில் மதிப்பீடு செய்யப்பட்ட நட்டத்திற்கு உரிமை கோரல் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் தான் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி உரிய செயற்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தல் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கடமையாகும்.

(8) செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஓர் ஒப்பந்தத்தின் நியமங்களுக்கு உட்பட்டதாக தெளிவாகத் தெரியும் விடயங்கள் தொடர்பாக ஒப்பந்தக்காரரினால் முன் வைக்கப்படுகின்ற கோரிக்கைகள், நிறுவனத்தின் சட்டக் கட்டுப்பாடுகளை கருத்திற்கொண்டு, பிரதம நிதி அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டியதுடன், தேவையான போது, ஓர் உடன்பாட்டைச் செய்துகொள்வதற்கு முதலில் நிதி ரீதியில் கவனம் செலுத்துவதற்காக பிரதம நிதி அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

16. ***உள்ளக கணக்காய்வு***: சபையின் கணக்குகள், நிதி மற்றும் வேறு நடவடிக்கைகள் தொடர்பாக பிரதான நிதி அதிகாரியினால் சுயேட்சையாக நிர்வகிக்கப்படுகின்ற தொடர்ச்சியான கணக்காய்வொன்று நடாத்தப்படல் வேண்டும்.

1. பிரதம உள்ளக கணக்காயவாளருக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதி நிதிக்கு கீழ்க் காணும் விடயங்கள் தொடர்பில் அதிகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் :-

(அ) விஷேட காரணங்களின் மீது பிரதம நிதி அலுவலரினால் பணிக்கப்படும் வகையில் எல்லா சந்தர்ப்பத்திலும் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சபையின் ஏதாவது ஓர் இடத்திற்குள் பிரவேசித்தல்;

(ஆ) சபையில் ஏதாவது பணம் அல்லது வேறு கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய சகல அறிக்கைகள், ரசீதுகள், ஆவணங்கள் மற்றும் கோவைகளை பெற்றுக்கொள்ளல்;

(இ) பரிசீலனைக்கு உட்பட்டுள்ள ஏதாவது விடயம் தொடர்பாக தேவைப்படும் விடயங்களை விபரிக்குமாறு எந்தவொரு அதிகாரிக்கும் பணித்தல் மற்றும் அவற்றை பெற்றுக்கொள்ளல்;

(ஈ) சபையில் யாராயினும் ஓர் அலுவலரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள நிதி களஞ்சிய பொருட்கள் அல்லது வேறு உடமைகளை காட்டுமாறு வேறு அலுவலருக்கு பணித்தல்.

2.அனைத்து திணைக்களங்களும் உள்ளடங்கக்கூடிய வகையில் மாதாந்த செயற்பாட்டு திட்டத்தை தயாரித்து, பிரதம நிதி அதிகாரியின் அங்கீகாரம் பெற்று, உரிய திணைக்களங்களில் விசாரித்து கணக்காய்வினை மேற்கொண்டு, உரிய அறிக்கையை ஒரு மாதம் முடிவுற்று அடுத்த மாதம் தொடங்குவதற்கு முன்னர் உரிய திணைக்கள தலைவருக்கு அறிவிக்க வேண்டியது பிரதம உள்ளக கணக்காய்வாளரது பொறுப்பாகும். ஒவ்வொரு திணைக்களங்கள் தொடர்பிலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்று பரீட்சித்து, பிரதம உள்ளக கணக்காய்வாளரினால் பிரதம நிதி அதிகாரிக்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்

**17. ஒழுங்கீனங்கள்:**

1. கீழே குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக, அதாவது -
   (அ) நிதி அல்லது பணம், களஞ்சியப் பொருட்கள், உடைமைகள், செலுத்தல்கள், நட்டஈடு அல்லது கொடுப்பனவுகள் .
   (ஆ) சபையின் ஒழுங்கமைப்பு, செய்முறைகள் மற்றும் ஆலோசனைகள் உரிய வேறு விடயம் தொடர்பாக இடம் பெற்றுள்ளதாக சந்தேகிக்கப்படும் யாதாயினும் ஒழுங்கீனம் சம்பந்தமாக பிரதம உள்ளக கணக்காய்வாளரினால் உடனடியாக பிரதம நிதி அதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.
2. யாதாயினும் ஓர் ஒழுங்கீனம் அல்லது சந்தேகம் தொடர்பில் ஆய்வினை மேற்கொள்வதற்கு தேவையான ஏதாவதொரு நடவடிக்கை உள்ளக கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அது சம்பந்தமாக தேடியறிந்த விடயங்கள் சம்பந்தமான அறிக்கையொன்று அவரினால் தயாரிக்கப்படல் வேண்டும்.
3. பிரதம உள்ளக கணக்காய்வு அதிகாரியினால் பிரதம நிதி அதிகாரிக்கு அறிவிக்கப்படும் அதேவேளை பொதுச்சட்டம் மற்றும் சபையில் கடமை புரியும் அலுவலர்கள், ஊழியர்களுக்கான ஒழுங்காற்று சட்டக் கோவைக்கு அமைவாக, தேவையான சகல நடவடிக்கைகளும் பிரதம நிதி அதிகாரியினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
4. பிரதம உள்ளக கணக்காய்வு அதிகாரியின் அறிக்கையினது பிரதி ஒன்று நிதி அதிகாரியின் ஊடாக கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**18. பௌதீக சொத்துக்களின் பதிவேடுகள்**

(1) சபைக்குரிய கீழ்க்காணப்படுபவை பற்றி முறையான அறிக்கைகள் பேணப்படுவதாக தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் இணைந்து செயற்படுவதற்கு திணைக்களத் தலைவரினால் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
   (அ) காணிகள், கட்டிடங்கள் மற்றும் பொருத்தப்பட்ட இயந்திரங்கள்;
   (ஆ) வேறு நிலையான சொத்துக்கள் (உ-ம்) வீதிகளில் அமைத்த கழிவகற்றும் வடிகாண்களும் ஏனைய வடிகாண்களும், பிரதான நீர்க் குழாய்கள், மின்கம்பிகள்)

(2) ஒவ்வொரு திணைக்களத் தலைவரினாலும் தமது திணைக்களத்தினுள் அல்லது தமது நிர்வாகத்தின் கீழ், கீழ்க்காணப்படும் வகையிலான அனைத்தும் சம்பந்தமாக போதிய விபரங்களைத் தரும் முறையான பொருட் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்:-
   (அ) வாகனங்கள் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும்;
   (ஆ) ஆயுதங்கள்;
   (இ) அலுவலர்கள் மற்றும் கட்டிடங்களினுள் உள்ள பொருத்துகைகள் மரத் தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள்.

(3) ஒவ்வொரு திணைக்களத் தலைவரும் பொருட் பதிவேடுகளில் காணப்படும் சகல பொருட்கள் சம்பந்தாமாயும் வருடாந்த கணக்கெடுப்பு ஒன்று மேற்கொள்வது பற்றியும் யாதாயினும் பொருட்களின் குறைவு அல்லது காணாமற்போதல் பற்றியும் அறிக்கைப்படுத்துதல் மற்றும் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வது பற்றியும் வகை கூறல் வேண்டும்.

(4) உரிய திணைக்களத் தலைவரினால் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் அன்றி எந்தவொரு ஊழியரினாலும் சபையின் வாகனங்கள் இயந்திரோபகரணங்கள் பயன்படுத்தப்படுதல் ஆகாது. வாகனங்களினதும் இயந்திரோபகரணங்களினதும் தேவையான பதிவேடுகளை ஒவ்வொரு திணைக்களத் தலைவரினாலும் பேணப்படுதல் வேண்டும்.

(5) ஒவ்வொரு திணைக்களத் தலைவரும் தனது திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள மொத்தப் பொருட்களினதும் களஞ்சியப் பொருட்களினதும் பாதுகாப்பு மற்றும் பொறுப்பு தொடர்பாக வகைகூற வேண்டியதுடன், களஞ்சியப் பொறுப்பாளர்கள் மற்றும் களஞ்சியங்களின் பொறுப்புக்கும் உத்தியோகத்தர்களை கொண்ட காலத்திற்குக் காலம் கணக்கெடுப்பு நடாத்துவதற்கான செயற்திட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(6) பொறுப்பேற்றல், விநியோகித்தல் மாற்றல் கணக்கெடுப்பு செய்தல் எழுதி அடித்துவிடல் (written off) போன்ற சகல களஞ்சியக் கொடுகல் வாங்கல்களையும் பதிவு செய்தல் தொடர்பில் முறையான பதிவேடுகளை பேணி வருதல் வேண்டும்.

(7) நிதிக் குழுவின் சிபாரிசின் பேரில், பொதுச் சபையினால் வேறு ஏதாயினும் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டால் அன்றி, மேலதிகமான அல்லது பயன்படாத பொருட்களையும், உபகரணங்களையும் அப்புறப்படுத்துவதனை விலை மனு கோரலின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல் ஊடாக நிறைவேற்றுதல் வேண்டும்.

### 19. காப்புறுதி

(1) சபையினதும், பிரதம நிதி அதிகாரியினதும் சட்ட திட்டங்களுக்கு உட்பட அதைனைக் காப்புறுதி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுதல் சம்பந்தமாக மாநகர சபையின் செயலாளர் வகை கூறல் வேண்டும்.

(2) காப்புறுதி உரித்து தேவைப்படும் விபத்துக்கள், பொறுப்புகள் (கடன்கள்) சொத்துக்கள் அல்லது வாகனங்கள் அல்லது இயந்திரங்கள் தொடர்பாகவும் விபத்துக்கள் அல்லது காப்புறுதிகளுக்கு ஏதுவாகும் யாதாயினும் மாற்றங்கள் தொடர்பாகவும், திணைக்களத் தலைவரினால் தாமதமின்றி பிரதம நிதி அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும். தேவைப்படும் பிரதியீட்டுத் தொகை ஒவ்வொரு அறிவித்தலிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(3) யாதாயினும் தீப்பற்றல், பாதிப்பு, விபத்து, நட்டம் அல்லது காப்புறுதி விண்ணப்பம் ஒன்றினை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாகும் யாதாயினும் ஒரு நிகழ்வு இடம்பெற்றால் திணைக்களத் தலைவரினால் அது பற்றி பிரதம நிதி அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(4) ஏனைய திணைக்களத் தலைவர்களிடமும் விசாரித்து குறைந்தபட்சம் ஆண்டுக்கொரு தடவையாயினும் பிரதமநிதி அதிகாரியினால் அனைத்து காப்புறுதிகளையும் ஆய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

(5) சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டுமென கோரிக்கை விடப்பட்ட யாதாயினும் ஒரு நட்ட ஈடு தொடர்பாக திணைக்களத் தலைவரினால் பிரதம நிதி அதிகாரியிடம் விசாரித்தறிதல் வேண்டும்.

(6) தீ விபத்து தொடர்பான அறிக்கையினை கணக்காளர் நாயகம் அவர்களுக்கும் முன் வைத்தல் வேண்டும்.

### 20. வரி சேகரிப்பதற்கான துணை விதி

(1) ஒவ்வோர் ஆண்டிலும் ஓகத்து மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அடுத்து வரும் ஆண்டுக்கான வரி விதிப்புகள் செயற்படுத்தப்படல் வேண்டும்.

(2) இந்த வரிப்பணமானது 4 காலாண்டுகளில் அறிவிடுவதற்கு சபை தீர்மானம் மேற்கொள்ளல் வேண்டும் (அதாவது மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய காலப்பகுதிகளில்)

(3) வரியின் நூற்று வீதத்தினை மாற்றுவதாயின், கௌரவ உள்ளூராட்சி க்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் அனுமதியின் பேரில் செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பதாக அதனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(4) வரி விதிக்கப்பட்டதனை தொடர்ந்து, அவ் வரி விதிப்பு பற்றிய அறிவித்தல் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும் பதுளை மாநகர சபைப் பிரதேசத்தினுள் விநியோகிக்கப்படும் குறைந்த பட்சம் இரண்டு தேசிய செய்தித் தாள்களிலாயினும் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

### வரி விதிப்பு பட்டியல் தயாரித்தல்

(5) ஒவ்வோர் ஆண்டும் செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பு எதிர்வரும் ஆண்டுக்கான வரிவிதிப்புப் பட்டியல் தயாரிக்கப்படல் வேண்டும்.

(6) வரி விதிப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அது பற்றிய அறிவித்தல் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும், பதுளை மாவட்டத்தினுள் விநியோகிக்கப்படும் இரண்டு செய்தித் தாள்களிலாயினும் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதாக ஓர் அறிவித்தல் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

(7) ஒவ்வோர் ஆண்டிலும் ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அடுத்த ஆண்டுக்கான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயமான) 235 (3) இல் குறிப்பிட்ட அறிவித்தல் எழுதி முடிக்கப்படுதல் வேண்டும்.

(8) ஒவ்வோர் ஆண்டிலும் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அடுத்த ஆண்டுக்கான 235 (3) இன் கீழ் குறிப்பிடப்பட்ட அறிவித்தல்கள் ஒவ்வொரு வரி அறவிடும் நிலையத்துக்கும் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(9) வரி செலுத்துகின்ற போது சபையினால் வழங்கப்படும் கழிவுத் தொகைகளை வரி செலுத்துவோருக்குப் பெற்றுத் தருவதற்கும் காலாண்டுப் பகுதி முடிவடைந்த பின்னர் அறவிடப்படும் மேலதிகக் கட்டணத்தை அறிவிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். வழங்கப்பட வேண்டிய கழிவுகள், காலக்கெடு, அறவிடப்பட வேண்டிய மேலதிகப் பணம் போன்றன இடைக்கிடையே உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களினால் சட்டம் பிறப்பிப்பதன் மூலம் தீர்மானிக்கப்படும்.

(10) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 235 (3) க்கு இணங்க கையளிக்கப்பட்ட அறிவித்தல்களின்படி வருடாந்த மதிப்பீடு பற்றி அதிருப்தியுறும் சொத்துரிமையாளருக்கு/குடியிருப்பாளருக்கு அவ் அறிவித்தல் கிடைத்து முப்பது (30) தினங்களுக்குள் எதிர்ப்பு தெரிவிக்க இயலும்.

(11) எதிர்ப்பு கிடைக்கப்பெற்றதன் பின்னர் அந்த எதிர்ப்பானது புத்தகத்தில் குறிப்பிடப்பட்டு அம் எதிர்ப்பு கிடைத்ததாக 14 நாட்களுக்குள் குறித்த நபருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

(12) இம் எதிர்ப்பு கிடைத்து ஐந்து மாதங்களுக்குள் பரிசீலித்து மாநகர சபையின் ஆணையாளரினால் இறுதித் தீர்மானம் உரிய நபருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(13) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 253 (3) ஆம் பந்தியின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற அறிவித்தலுக்கு இணங்க எதிர்ப்பு சமர்பிக்கப்படுமாயின், அவ் வருடத்துக்காக செலுத்த வேண்டிய வரிப் பணத்தை எதிர்ப்பினை பரிசீலனை செய்வதற்கு உட்பட்டு வரி செலுத்துவோரினால் செலுத்தப்படல் வேண்டுமென ஒரு நிபந்தனை அவ்வறிவித்தலில் இடம்பெறுதல் வேண்டும்.

(14) எதிர்ப்பினைப் பரிசீலனை செய்தலானது மாநகர சபையின் ஆணையாளரினால் அல்லது நகரபிதாவினால் நியமிக்கப்படும் வேறோர் அதிகாரியினால் நிறைவேற்றப்படல் வேண்டும்.

(15) எதிர்ப்புகளைப் பரிசீலனை செய்த பின்னர் வருடாந்த மதிப்பீட்டில் யாதாயினும் மாற்றம் செய்வதாயிருந்தால் இயன்றளவு விரைவாக அம் மாற்றம் மதிப்பீட்டு படிவங்களில் குறிக்கப்பட்டு உயர்அதிகாரி ஒருவரினால் அது பற்றி உறுதியளிப்பதாக ஒப்பமிடப்படல் வேண்டும்.

**விறாந்து விநியோகித்தல்**

(16) ஒவ்வொரு காலாண்டும் முடிவுற்றவுடன் 252 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார.அனுமதிப் பத்திரம் இயன்றளவு விரைவில் வரி நிலுவை அறவிடும் உத்தியோகத்தருக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். மாநகர சபை ஆணையாளரினால் அல்லது அதற்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஓர் அதிகாரியினால் அது நிறைவேற்றப்படல் வேண்டும்.

(17) இந்த அதிகார அனுமதிப் பத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு மீண்டும் அதனை ஒப்படைக்க வேண்டிய திகதி அந்த அதிகார அனுமதிப் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அக் காலக்கெடுவானது அறுபது (60) நாட்களாதல் வேண்டியதுடன் அக் கெடு முடிவுற்றதன் பின்னர் வரி நிலுவை அறவிடும் உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறிப்பிடப்பட்ட ஓர் அறிக்கையுடன் அதிகார அனுமதிப் பத்திரம் மாநகர ஆணையாளரிடம் சமர்பிக்கப்படல் வேண்டும்.

(18) வேண்டும் போது உடைமைகளை தடை செய்யும் அதிகாரிகளை நியமித்தலானது நகரபிதாவின் அங்கீகாரத்துடன் மாநகர சபை துணையாளினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(19) உடைமைகளை தடை செய்வது தொடர்பாக மாநகர சபையில் கடமையாற்றும் அலுவல்களை ஈடுபடுத்துவதாயின் அதற்காக சபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படுதல் வேண்டும்.

(20) தேவையான போது வெளிவாரி அதிகாரிகளை ஈடுபடுத்துவதாயின் அவர்களுக்குக் கொடுக்கும் கமிசன் தொகையினை அவ்வப்போது சபையினால் தீர்மானிக்கப்படல் வேண்டும். எனினும் அத் தொகையானது சேகரிக்கும்பணத்தின் 15% க்கு மேற்படுதல் ஆகாது.

(21) வெளிநபர்கள் உடைமைகளை தடை செய்யும் அலுவலர்களாக சபை நியமிக்குமாயின் அவ் அலுவலர்களிடமிருந்து உசிதமெனக் கருதும் பிணைப் பணத்தையும் காப்புறுதி நிறுவனம் ஒன்றின் காப்பீட்டினையுமீ பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(22) வெளிவாரி அலுவலர்கள் தினந்தோறும் சேகரிக்கும் பணத்தை அடுத்துவரும் கடமை நாளில் சபைக்குச் செலுத்துதல் வேண்டும். எனினும் வார இறுதியில் கடமை புரியும் இறுதி நாளில் அப் பணம் வைப்பு செய்யப்படல் வேண்டும்.

(23) வெளிவாரி அலுவலர்களுக்கு இணைப் பிரதியுடன் கூடிய பற்றுச் சீட்டுப் பத்தகங்கள் விநியோகிப்பட்டல் வேண்டும். அவ் அலுவல்கள் 100 ரூபாவுக்கு அதிகமான ஒரு தொகையினை ஒரு பற்றுச் சீட்டின் மூலம் அறவிடுவதாயின் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பெறுமதியினைக் கொண்டதொரு முத்திரை ஒட்டி கையொப்பமிட்டு பணம் செலுத்துபவரிடம் அப் பற்றுச் சீட்டை வழங்குதல் வேண்டும். அத் தொகை மிஞ்சப்படாதவிடத்து பற்றுச் சீட்டு இல்லாது தன்னால் ஒப்பமிட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

(24) தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார அனுமதிப்பத்திரத்தின் மீது நடைமுறையிலுள்ள காலாண்டுக்காக பணம் சேகரிப்பதனை உடைமைகளைத் தடை செய்யும் அலுவலர் மேற்கொள்ளல் ஆகாது.

(25) உடைமைகளைத் தடை செய்யும் அலுவலர்கள் பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே அவர்களினால் விநியோகிக்கப்பட்டுள்ள பற்றுச் சீட்டுக்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு பற்றுச் சீட்டுப் புத்தகங்களுடன் வருமான எழுது வினைஞரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(26) பற்றுச் சீட்டுப் புத்தகங்களும் பட்டியல்களும் கிடைத்ததும் வருமான எழுது வினைஞர் பற்றுச் சீட்டுப் புத்தகத்தில் உரிய இணைப் பிரதியிலும் பட்டியலிலும் காப்பிடும் தொகையினை பரிசீலித்துப் பார்த்து சரியாக குறிக்கப்பட்டிருப்பின் சிவப்பு மையினால் குறித்த இணைப்பிரதியினை அடித்துவிடல் வேண்டும். இறுதியில் கடைசியாக விநியோகிக்கப்பட்டுள்ள பற்றுச் சீட்டின் இணைப்பிரதியின் பின்புறத்தில் தனது சுருக்க ஒப்பமிடப்பட்டு திகதி குறிப்பிடப்படல் வேண்டும். அதனைத் தொடர்ந்து பண ரசீது ஒன்று எழுதி உரிய பணத்தை காசாளரிடம் செலுத்துமாறு ஆலோசனை கூற வேண்டியதுடன், அதன் பிரகாரம் உடைமைகளைத் தடைசெய்யும் அலுவலர் பணத்தை வைப்பு செய்தல் வேணடும்.

(27) விநியோகிக்கப்பட்டுள்ள ரசீதுகளிலும் இணைப்பிரதிகளிலும் குறிப்பிடப்பட்ட தொகைகளில் யாதாயினும் குறைபாடுகள் காணப்படின் உடனடியாக அது வரித்தடை விதிக்கும் அதிகாரிக்கு மற்றும் பகுதித் தலைவருக்கும் விடயப் பொறுப்பான எழுது வினைஞரினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(28) உடைமைகளைத் தடை செய்யும் அதிகாரிகளுக்கு தனியார் நிலையங்களினுள் பிரவேசிப்பதற்கு நகரபிதாவினால் அதிகாரம் வழங்கப்படும் கடிதம் ஒன்று விநியோகிக்கப்படல் வேண்டும். தனியார் நிலையங்களினுள் பிரவேசிப்பதற்கான அதிகாரம் சூரிய ஊதியத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரையன காலப் பகுதிக்கு மாத்திரமே வழங்கப்படலாம்.

(29) உடைமைகளைத் தடைசெய்யும் அதிகாரிகளினால் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் கீழ் விநியோகிக்கப்படும் அதிகார அனுமதிப் பத்திரத்தின் மீது யாதாயினும் அசையும் உடைமைகள் தொடர்பான விபரம் அவ் விடத்தில் குடியிருப்போருக்கு வழங்கப்படல் வேண்டும்.

(30) தடை விதிக்கப்பட்ட பொருட்களின் விபரம் 03 பிரதிகளில் தயார் அதிகாரி அப் பொருட்களின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரைக் கொண்டு ஒப்பமிடுவித்துக் கொண்டு அதன் மூலப் பிரதியை உடைமைகளின் உரிமையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். இரண்டாம் பிரதி வருமானப் பிரிவிற்குப் பொறுப்பான கணக்காளரிடம் அல்லது அதன் பொருட்டு பதில் கடமை பரியும் அதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும். மூன்றாவது பிரதியைத் தன்னிடம் வைத்துக்கொள்ளல் வேண்டும். விபரக் கோவையில் ஒப்பமிடுவதனை உடைமைகளின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் மறுப்பாராயின் அவ்வாறு மறுக்கப்பட்டதற்காக மூன்று பிரதிகளிலும் குறிப்பு வைத்தல் வேண்டும்.

(31) அசையும் தன்மை கொண்ட உடைமைகளின் மீது தடை விதிக்கப்பட்டதன் பின்னர் அவ் உடைமைகள உடனடியாக மாநகர சபையின் களஞ்சியப் பொறுப்பாளரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(32) உடைமைகளின் மீது தடை விதிக்கும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கமிஷன் பணம் அவர்களினால் களத்தில் சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து மற்றும் அவர்களினால் விநியோகிக்கப்பட்ட தடை விதிக்கும் அறிவித்தல்களின் மீது அலுவலகத்துக்குக் கிடைக்கும் பணத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

(33) உடைமைகளின் மீது தடை விதிக்கும் அதிகாரிகளினால் வரி செலுத்துவோரிடமிருந்து அறிவிடப்படுகின்ற பணத்துக்காக ரசீதுகள் விநியோகிக்கப்படுகின்ற போது இரு புறங்களிலும் எழுதப்படும் காபன் தாள்கள் பாவிக்கப்படல் வேண்டியதுடன் அழிபடாத பென்சிலினால் அல்லது பேனையினால் ரசீதுகள் எழுதப்படல் வேண்டும்.

(34) உடைமைகளின் மீது தடை விதிக்கும் அதிகாரி ஒருவர் விடுமுறையில் செல்கின்ற தருணத்தில் அவ் விடுமுறையானது மாநகர சபை ஆணையாளரை அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஓர் அதிகாரியைக் கொண்டு அனுமதி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். விடுமுறையில் செல்லும் சந்தர்ப்பத்தில் மாநகர சபைக்குரிய அனுமதிப்பத்திர ரசீது புத்தகங்களும் மற்றும் சபைக்குரிய அவரது பொறுப்பிலுள்ள சகல உடைமைகளும் விடயத்துக்குப் பொறுப்பான எழுது வினைஞரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டியதுடன், அதுவரையும் சேகரிக்கப்பட்டுள்ள பணம் தொடர்பாக 25 ஆவது துணைச் சட்டம் மற்றும் 26 ஆவது துணைவிதி ஆகியவற்றுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

**வறுமை காரணமாக வரி விதிக்காதுவிடல்**

(35) வறுமை காரணமாக வரி விதிக்காது விடுகின்ற போது அது தொடர்பில் பிரதேசத்தின் கிராம அலுவலர், பிரதேச செயலாளர் மற்றும் வருமானப் பரிசோதகர் ஆகியோரிடம் அறிக்கை ஒன்று பெறப்படல் வேண்டும். அதற்கு மேலதிகமாக பொது மக்கள் நன்கொடை அதிகாரியிடமிருந்தும் வறுமை நிலையினை உறுதிப் படுத்திக்கொள்ளல் வேண்டும்.

(36) வறுமை வரி விதிக்காது விடுகின்ற போது அந் நிலையத்தின் உரிமையாளர் தொடர்பாக ஏதாவது சிக்கலான நிலை தோன்றினால் உரிமையாளர் சம்பந்தமாக கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரின் அறிக்கை ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சபையின் தீர்மானத்தின் பேரில் வரி விதிக்காது விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(37) 10 வருடங்கள் தொடர்ச்சியாக குடியிருக்கும் நபர் ஒருவர் குடியிருக்கும் வீட்டுக்காக அறவிடப்பட வேண்டிய வரியினை வறுமை காரணமாக வெட்டி விடுவதாயின் அவ்வாறு குடியிருக்கும் காலப்பகுதியினை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழின் மீது வரியினை வெட்டி விடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**காலியாக உள்ளதென கோரி வரியினை வெட்டிவிடுதல்**

(38) ஏதாவது ஒரு கட்டிடம் யாரும் குடியிருக்காது வெறுமையாகக் இருக்குமாயின், அது தொடர்பாக வரிச் சலுகை கோரப்படும் போது அக் கடிதத்தை வருமானப் பரிசோதகர்களிடம் சமர்ப்பித்து, அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதன் பிறகு ஒவ்வொரு மாதமும் காலியாக உள்ளதாவென வருமானப் பரிசோதகர்களிடம் சமர்ப்பித்து, அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதன் பிறகு ஒவ்வொரு மாதமும் காலியாக உள்ளதாவென வருமானப் பரிசோதகரினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(39) வருமானப் பரிசோதகரின் அறிக்கை கிடைத்த பின்னர் காலியாக உள்ள காலத்திற்காக வரிவிதிப்பு வெட்டிவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

(40) வர்த்தக நிலையம் ஒன்று தொடர்பில் அவ் வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் அதாவது வர்த்தக நடவடிக்கை இடம்பெறாத சந்தர்ப்பத்தில் அவ்வாறு வர்த்தக நடவடிக்கை நடைபெறாத காலப்பகுதிக்காக வரி செலுத்துவதில் சலுகை வழங்குமாறு கோரப்படுமாயின் அந் நிலையத்தில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு உரிய பொருட்கள் களஞ்சியப்படுத்தப்படாமல் இருந்தால் அல்லது வேறு விதத்தில் பொருளாதார ரீதியில் பாவனைக்கு உட்படுத்துவதாக உறுதிப்படுத்தப்படாது விட்டால் அக் காலப் பகுதிக்கு 38 ஆம் இலக்கம் கொண்ட துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் வரியினை வெட்டி விடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(41) வர்த்தக நிலையம் காலியாக உள்ள காலப்பகுதிக்காக வரி செலுத்துவதினின்றும் விடுவிக்குமாறு கட்டிட உரிமையாளரினாலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

## பாகம் XLII

**பாற்பண்ணைகள் பற்றிய துணை விதிகள்**

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின்படி கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் பிரிவின் 23 ஆம் உப பிரிவின் கீழ் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற பாற்பண்ணைகள் பற்றிய துணை விதிகள்.

1. இப்பகுதியின் துணை விதிகள் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் பாற்பண்ணைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.
2. நகர ஆணையாளரினால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் பதுளை மாநகர சபை பிரதேசத்தினுள் பாற்பண்ணையொன்றைக் கொண்டுநடாத்துதல் ஆகாது.
3. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
4. இத்துணைவிதியில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு பாற்பண்ணைக்கும் மாநகர ஆணையாளரினால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(அ) ஒரு விலங்கினைத் தங்க வைப்பதற்குக் குறைந்த பட்சம் 3 மீற்றர் வீதம் பாற்பண்ணையிலுள்ள விலங்குளைத் தங்க வைப்பதற்குப் போதுமான அளவு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஆ) விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் சுவர்களின் உயரம் 1 மீற்றருக்கு மேல் இருத்தல் ஆகாதென்பதோடு, செங்கற்கள் அல்லது சீமெந்துக் கற்களினால் அல்லது கபூக் கல் அல்லது அலுமினியம் மற்றும் வெட்டுமரத்தினால் நிர்மாணித்து இருபக்கங்களும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்;

(இ) விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடம் சுவரின் மேற்பாக எல்லையிலிருந்து கூரை வரை நிர்மாணிக்கப்படும் தூண்கள் பலம் வாய்ந்த மரத்தினாலோ அல்லது இரும்பினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ கட்டப்படல் வேண்டுமென்பதோடு, அத்தூண்களின் மேல் எல்லை நில மட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.3 மீற்றர் உயரம் இருத்தல் வேண்டுமென்பதுடன், வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஈ) விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் கூரை ஏதேனும் திடமான பொருட்களைக் கொண்டு அமைய வேண்டுமென்பதுடன், கூரையின் ஓரம் நிலமட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது 2.3 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்:

(உ) விலங்குகளைத் தங்க வைத்துள்ள கட்டிடத்தின் தரை சீமெந்தினால் அமைதல் வேண்டும்;

(ஊ) விலங்குகளைத் தங்க வைத்துள்ள கட்டிடங்கள் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும் ;

(எ) பாற்பண்ணையில் விலங்குகளுக்கு குடிப்பதற்கும், மிருகங்களைக் குளிப்பாட்டுவதற்கும், கட்டிடத்தைக் கழுவுவதற்கும் மாசடையாத போதுமான அளவு நீர் வசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஏ) விலங்குகளைக் குளிப்பாட்டிய பின்னர் அகற்றும் நீர், மிருகங்கள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்தைக் கழுவிய நீர், சிறுநீர் மற்றும் சாணம் உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்கிற்கு இலகுவில் பாய்ந்து செல்லக்கூடியவாறு சீமெந்தினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஐ) விலங்குகளின் சாணம், எஞ்சியுள்ள புல் மற்றும் ஏனைய தீன் வகைகளை அகற்றுவதற்கு தனிவேறான இடமொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த இடம் விலங்குகள் தங்கியுள்ள கட்டிடங்கள் மற்றும் பால் அறையிலிருந்து குறைந்தது 10 மீற்றர் தூரத்தில் இருத்தல் வேண்டும். அதே போன்று இவ்வாறான இடம் பொது நீர் வழிகள் அல்லது நீரைப் பாவிக்கும் கிணற்றிலிருந்து குறைந்த பட்சம் 10 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஒ) பால் கறக்கும் இடம் மற்றும் தற்காலிகமாக பாலைக் களஞ்சியப்படுத்தும் இடம் மிருகங்கள் தங்கும் இடத்திலிருந்து குறைந்தது 6 மீற்றருக்குக் குறையாத தூரத்தில் அமைதல் வேண்டும் ;

(ஓ) பால் கறக்கும் கட்டிடம் செங்கற்களால் அல்லது சீமெந்துக் கல்லினால் அல்லது கபுக் கல்லினால் கட்டப்பட்டு இரு பக்கங்களும் சீமெந்தினால் சாந்துப்பூச்சிடப்பட்டிருத்தல் வேண்டும். அச்சுவர்களின் ஆகக் குறைந்தது 1.2 மீற்றர் உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதொடு, சுவரின் மேலோரத்திலிருந்து கூரை வரை கட்டப்படும் தூண்கள் பலம் வாய்ந்த மரத்தினாலோ அல்லது இரும்பினாலோ அல்லது கொங்கிறீற்றினாலோ கட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஔ) பால் கறக்கும் கட்டிடத்தின் தரை சீமெந்தினால் நிர்மாணிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, தரையும் சுவரும் இணையுமிடங்கள் வட்டவளைவாக அமைதல் வேண்டும். அதே போன்று கட்டிடத்தின் கூரை விளிம்பு நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 1.8 மீற்றருக்கு மேலாக இருத்தல் வேண்டும்;

(க) பால் கறக்கும் கட்டிடத்தில் மேசை ஒன்று இருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் மேற்பாகம் மாபிள் ஓடுகளால் அல்லது இடைவெளிகள் அற்ற துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது வேறு ஏதேனும் ஊடுருவமுடியாத பொருளால் விரிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்;

(ங) பால் கறக்கும் இடத்தில் துப்பரவேற்பாட்டு கழிவுப்பொருள் கொள்கலன் ஒன்று வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(ச) பால் கறக்கும் கட்டிடம், ஏதேனும் மலசலகூடம், கழிவுகளை இடும் கிடங்கு, பசளைக் குவியல் அல்லது பசளைக் கிடங்கு, திறந்த கழிவு வடிகாண் போன்றவற்றிலிருந்து குறைந்த பட்சம் 10 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்;

(ஞ) விலங்குகள் தங்க வைத்திருக்கும் கட்டிடத்திலிருந்து குறைந்தது 20 மீற்றருக்குக் குறையாத தூரத்தில் நோய்வாய்ப்பட்ட விலங்குகளை தங்க வைப்பதற்காக தனிவேறான கட்டிடம் ஒன்று இருத்தல் வேண்டுமென்பதுடன், மிருகங்களைத் தங்க வைக்கும் கட்டிடத்திற்கான தேவைப்பாடுகளைக் கொண்டதாகவே இக்கட்டிடமும் இருத்தல் வேண்டும்;

(ட) நோய்வாய்ப்பட்ட விலங்குகள் தங்க வைக்கும் கட்டிடத்திலிருந்து பாய்ந்தோடும் கழிவு நீர் ஏனைய விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்தை நோக்கி பாயாதவாறு வடிகாண் அமைக்கப்படல் வேண்டும்;

(ண) பால் கறத்தலை இயந்திர பாவனை மூலம் மேற்கொள்வதாயின் அந்த இயந்திரங்கள் மற்றும் கறந்த பாலைச் சேகரிக்கும் பாத்திரங்கள் தினந்தோறும் கிருமிநீக்கம் செய்யத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 4 ஆவது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை என்ற வகையில் வர்ணப்பூச்சு பூசப்படுதல் வேண்டும்.

6. நோயற்ற மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்களின் தரை மற்றும் சுவர்கள், குறைந்தது தினந்தோறும் ஒரு தடவையாவது கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7. பாற்பண்ணை மற்றும் அதன் சுற்றாடலில், வடிகான்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் சுத்தமாகவும் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

8. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் எவ்வகையானதுமான கருமங்களில் அல்லது அத்தகைய கருமங்களில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஊழியர்களையும் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் கடமையாகும்.

9. பாற்பண்ணையில் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் பாதுகாப்பான முகக்கவசம், கைக் கவசம் மற்றும் தேவைப்படும் வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்படுதலும், அவ்வூழியர் வெதுப்பகப் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அணிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப் பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

10. விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்கள் மற்றும் கறக்கும் அறையின் தரை மேசை ஆகியவை குறைந்தது தினந்தோறும் ஒரு தடவை வீதம் கழுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

11. பால் கறப்பதற்கு, பாலைச் சேமித்து வைக்கும் மற்றும் பாலை எடுத்துச் செல்வதற்கு உபயோகிக்கப்படும் கொள்கலன்கள் மெருகிடப்பட்ட களிமண், கல்வனைஸ் பண்ணப்பட்ட இரும்பு அல்லது தகரம், எனமல் முலாமிடப்பட்ட இரும்பு, மிருதுவாக்கப்பட்ட அலுமினியம், போத்தல் அல்லது போசிலெயின் போன்ற வகையான கொள்கலன்களை உபயோகிக்க வேண்டுமென்பதோடு, அவற்றை விலங்குகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்தினுள் களஞ்சியப்படுத்தி வைத்தல் ஆகாது.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவிக்கப்படும் எல்லா பாத்திரங்களும் பால் கறத்தல் இயந்திர மூலம் மேற்கொள்ளப்படுவதாயின் அந்த உபகரணங்களும் குறைந்தது நாளொன்றுக்கு ஒரு தடவை வீதம் கிருமி நீக்கம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏனைய வேறு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தினந்தோறும் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரதாரரின் பணியாகும்.

13. விலங்குகள் தங்கவைத்துள்ள இடத்தில் சேரும் சாணம் மற்றும் எஞ்சியுள்ள புல் போன்றவை குறைந்த பட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவையேனும் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அந்த இடங்கள் தினந்தோறும் நீரினால் கழுவிச் சுத்திகரிக்கப்படல் வேண்டும்.

14. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவிக்கப்படும் பாத்திரங்கள், அவற்றுக்குரிய கருமங்களைத் தவிர்ந்த வேறு கருமங்களுக்கு உபயோகித்தல் ஆகாது.

15. பால் கறத்தலை ஆரம்பிப்பதற்கு முன்னர் -

(i) எந்தவொரு கறவைப் பசுவினதும் மடிகளைச் சுத்தமான நீரினால் கழுவியிருந்தல் ;

(ii) பால் கறப்பவர் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவத்தினால் கைகள் இரண்டையும் கழுவியிருந்தல் ;

(iii) இயந்திரங்கள் மூலம் பால் கறப்பதாயின் அந்த உபகரணங்கள் யாவும் கிருமி நீக்கம் செய்யப்பட்டிருந்தால் அன்றி பால் கறப்பதற்கு இடமளித்தல் ஆகாது.

16. பாற்பண்ணையில் வளர்க்கப்படும் எல்லா விலங்குகளும் குறைந்தது வருடத்திற்கு மூன்று தடவைகள் ஒரு மிருக வைத்தியரால் அல்லது அவரால் பெயர் குறிக்கப்பட்ட எவரேனும் பிரதிநிதியின் மேற்பார்வைக்கு உட்படுத்தி அவசியமான வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும் அத்தகைய ஆலோசனைகளுக்கு அமைய செயற்படல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

17. பாற்பண்ணையில் எந்தவொரு விலங்கிற்கும் ஏதேனும் நோய் பீடிக்கப்பட்டுள்ளதென அறிந்த உடனேயே அந்த விலங்கை விலங்குகள் தங்க வைக்கப்பட்டுள்ள கட்டிடத்திலிருந்து அகற்றி நோயுற்ற விலங்குகள் தங்கவைக்கும் கட்டிடத்தில் தங்கவைத்து அது சம்பந்தமாக மிருக வைத்தியருக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு அனுமதிப்பத்திரம் பெறுநரின் கடமையாகும்.

18. பால் மடியில் அல்லது வேறு இடத்தில் உண்டாகும் காச நோய், பால் மடி, குளப்பு மற்றும் வாய் சார்ந்த நோய்கள், அன்திரெக்ஸ் நோய் அல்லது பால் மடியில் அன்ரினொமைகோசிஸ் நோயினால் பிடிக்கப்பட்ட அல்லது புருசெல்லோசிஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதென மிருக வைத்தியரால் தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு மிருகத்தினதும் பாலை விற்பதற்கு அல்லது விற்பதற்கு இடமளித்தல் அல்லது மனித பாவனைக்காக உள்ள வேறு ஏதேனும் விலங்குகளின் பாலில் கலத்தலோ அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தலோ எந்தவோர் ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

19. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பாவனைக்குரிய புல் மற்றும் வைக்கோல் தவிர்ந்த ஏனைய மிருக உணவுகளை எலிகள் புகாதவாறு பொருத்தமான பாத்திரங்களில் வைத்தல் வேண்டும்.

20. பாலைக் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் தயாரித்தல் கருமங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு கருமத்திற்கும் பால் அறையை உபயோகித்தல் அல்லது உபயோகிக்க இடமளித்தல் ஆகாது.

21. எந்தவோர் ஆளினாலும் நீர் அல்லது வேறு புறப்பொருள் அல்லது பொருட்களைக் கலந்து பாலின் தரத்தைக் குறைத்தல் ஆகாது.

22. (அ) அனுமதிப் பத்திரம் பெற்ற இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள்;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள்;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்;

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவரின் பொறுப்பாகும்.

(ஆ) (அ) பிரிவில் கூறியவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், பதுளை மாநகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி நகர ஆணையாளரினால் கட்டளையிடப்பட்டவாறு இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

(இ) (ஆ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் (அ) பந்தியின் (i) உபபிரிவில் கூறப்பட்டுள்ள உயிர்ச் சிதைவு கழிவுப் பொருட்களாகக் கொள்ளப்படுகின்ற விலங்குகளின் சாணம் மற்றும் எஞ்சிய புற்களின் பாகங்கள் பசளையாக உபயோகிப்பதற்கு அத்தகைய பணிப்பு தடையாக அமைதல் ஆகாது. எனினும், அத்தகைய கழிவுப் பொருட்களை பாற்பண்ணையிலிருந்து வெளியே எடுத்துச் செல்வதாயின் மூடிஎடுத்துச் செல்வதாயினன்றி பாற்பண்ணை அமைந்துள்ள வளவுக்கு வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது.

23. கறக்கப்பட்ட பால் சேமித்து வைப்பதற்கு அதற்காகவே ஒதுக்கப்பட்ட வேறான அறையொன்று இருத்தல் வேண்டுமென்பதோடு அந்த அறை காற்றோட்டமுள்ளதும் இலையான்கள் அல்லது பிற பூச்சிகள், வண்டுகள் மற்றும் எலிகள் புகாதவாறு பாதுகாப்புடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.

24. இப்பிரிவின் துணைவிதிக்கமைய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு இடத்திலும், எந்தவோர் ஆளும் நித்திரை செய்தல் ஆகாதென்பதோடு, பாற்பண்ணைச் செயற்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும் உபகரணங்கள் அல்லது பொருட்கள் தவிர்ந்த வேறு எந்தவிதமான பொருட்களையும் வைத்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல் ஆகாது. எனினும் பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறாக ஒதுக்கப்பட்டுள்ள ஓய்வெடுக்கும் அறை அல்லது சாப்பாட்டறை இதில் உள்ளடங்காது.

25. பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பொருட்டு குறைந்தது பத்துப்பேருக்கு ஒன்றென்ற வகையில் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதுடன், பெண்கள் மற்றும் ஆண்களுக்கென வெவ்வேறாக மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும், அத்துடன் மலசலகூடங்கள் பாற்பண்ணையில் விலங்குகள் தங்கவைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்கள், பால்கறக்கும் இடங்கள் மற்றும் பாலைச் சேகரித்து வைக்கும் அறைகளிலிருந்து குறைந்தது 15 மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

26. பாற்பண்ணையின் செயற்பாடுகளுக்காக பாவிக்கப்படும் நீர், நிலத்துக்கடியிலுள்ள நீர்த் தொட்டியில் களஞ்சியப்படுத்துவதாயின் அவ்விடத்திலிலுந்து 18 மீற்றருக்குக் குறைந்த தூரத்தில் குப்பைக் கிடங்கு, பசளைக் கிடங்கு அல்லது சாம்பல் கிடங்கு இருத்தல் ஆகாது.

27. பாற்பண்ணையில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

28. ஏதேனும் பாற்பண்ணையில் பெறப்பட்ட பால், தூசி அல்லது வேறு கழிவுப் பொருட்கள் உட்புகாதவாறு நன்றாக மூடப்பட்ட பாத்திரங்களிலன்றி பாலை, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது.

29. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலிப்பதற்கு நகர ஆணையாளரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, அவ்விடத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

30. மாநகர ஆணையாளரினால் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் பாற்பண்ணையில் பாலை அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனவு செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

31. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பாற்பண்ணை நடாத்தப்படும் இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய நிலவுதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை மாநகர ஆணையாளரினால் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

32. 31 ஆவது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் நகர ஆணையாளரினால் இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதினான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

33. 32 ஆவது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை மாநகர ஆணையாளரினால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

34. இத் துணைவிதியின் கீழ் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இன்றி முதலாம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் ஒன்றில் ஈடுபடுகின்ற எந்தவொரு நபர் அல்லது நபர்கள் தண்டனைக்குரிய தவறொன்றினை மேற்கொள்வதோடு அந் நபருக்கோ அல்லது அந் நபர்களுக்கெதிராக பதுளை மாநகர சபை எல்லைக்குள் நீதிமன்ற அதிகாரம் கொண்ட ஒரு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து குற்றவாளிகாக்கப்படின் கீழ்படுகின்றவாறு.

(i) முதலாம் தடவையாக மேற்கொள்ளப்பட்ட ஒரு தவறெனில் 1,000 ரூபாவிற்கும் மேற்படாத தண்டப்பணத்திற்கும்.

(ii) இரண்டாம் முறையாக மேற்கொள்ளப்பட்ட தவறொன்றிற்காக நாளொன்றிற்கு 2,000 ரூபாவிற்கும் மேற்படாத தண்டப்பணமும்

(iii) தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் தவறொன்று தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னரோ அல்லது அவ் அத்துமீறல் தொடர்பாக கவனம் செலுத்தி கௌரவ நகர பிதாவிடமிருந்து எழுத்துருவிலான அறிவித்தலொன்றை கையளித்ததன் பின்னர் அல்லது தவறினை இடையறாது மேற்கொண்ட ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா இருநூற்று ஐம்பதிற்கு மேற்படாத மேலதிக தண்டப்பணத்திற்கும், உள்ளாகுவர்.

35. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் –

"பாற்பண்ணை" என்பது, பாலைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பாலை விற்பனை செய்தல் போன்ற முக்கிய கருமங்களை மேற்கொள்வதற்காக ஒரே இன விலங்குகள் அல்லது பல்லின விலங்குகளைத் தங்க வைக்கும் கட்டிடங்களும் அதன் சுற்றாடலும் எனக் கருதப்படுவதோடு, அந்த விலங்குளையும் உள்ளடக்கும்

"மிருக வைத்திய உத்தியோகத்தர்" என்பது, பதுளை மாநகர சபையின் மிருக வைத்திய உத்தியோகத்தர் எனக் கருதப்படுவதோடு, பதுளை மாநகர சபையின் மிருக வைத்திய உத்தியோகத்தர் இல்லாத ஏதேனும் சந்தர்ப்பத்தில் அதிகாரப் பிரதேசத்தை உள்ளடக்கிய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்படும் மிருக வைத்திய உத்தியோகத்தர் எனவும்

"விலங்கு" என்பது, மாடு, எருமை மாடு, செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு போன்ற இனங்களைச் சேர்ந்த விலங்குகள் எனவும் கருதப்படும்.

## பாகம் XLIII

### நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த கைத்தொழில் நிலையங்களினதும் நிர்மாணப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் இடங்களினதும் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு பற்றிய துணைவிதிகள்

(252 ஆம் அத்தியாயம்) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின 267 ஆம் பிரிவின்படி கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவின் கீழ் பதுளை மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற கணக்காளர் நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த கைத்தொழில் நிலையங்களினதும் நிர்மாணப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் இடங்களினதும் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு பற்றிய துணைவிதிகள் இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.

1. இப்பகுதியின் துணை விதிகள், பதுளை மாநகர சபை பிரதேசத்தினுள் நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த கைத்தொழில் நிலையங்களினதும் நிர்மாணப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் இடங்களினதும் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. நிர்மாணப் பொருட்களை தயாரிக்கும் கைத்தொழில் நிலையங்களினதும் நிர்மாணப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி செல்லும் போதும் கைத்தொழில் அல்லது வியாபாரம் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 147 வது உப பிரிவின் அருவருக்க தக்க, அபாயகரமான கைத்தொழில் அல்லது வியாபாரமாக இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.

3. (அ) நகர ஆணையாளரால் குறித்த கருமத்திற்காக விநியோகிக்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமின்றி எந்தவோர் ஆளினாலும் பதுளை மாநகர சபை பிரதேசத்தினுள் நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த கைத்தொழில் நிலையமொன்றை அல்லது நிர்மாணப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் நிலையமொன்றை கொண்டுநடாத்துதல் ஆகாது.

(ஆ) 3(அ) வது துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெறுவதற்கு அவசியமான எந்தவோர் ஆளினாலும் இங்கே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரமொன்றைத் நகர ஆணையாளரால் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இப்பிரிவின் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலேயன்றி, 3 வது துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரத்தைக் கோரும் எவரேனும் ஆளுக்கு நகர ஆணையாளரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் ஆகாது.

5. 3 வது துணை விதியின் கீழ் விநியோகிக்கப்படும் எந்தவொரு அனுமதிப் பத்திரமும் 13 வது துணை விதியின் கீழ் முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது வழங்கப்பட்ட வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவுறல் வேண்டும்.

6. இப்பிரிவின் துணைவிதியின் கீழ் கோரப்படும் அனுமதிப்பத்திரம் நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த கைத்தொழில் ஆயின், அத்தகைய கைத்தொழிலைக் கொண்டுநடாத்தும் நிலையத்தில்,-

(i) அருகாமையிலுள்ள ஏதேனும் வதிவிடங்களிலிருந்து குறைந்த பட்சம் 30 மீற்றர் தொலைவில் அமைந்திருத்தல் வேண்டும்;

(ii) வெளியாகும் ஏதேனும் தூசி அல்லது நீராவி, அருகாமையிலுள்ள வதிவிடங்களுக்குப் பரவுதலை தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிக்கப்பட்டவாறு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) ஊழியர்களின் பாவனைக்காகப் போதியளவு மலசலகூடங்கள் மற்றும் அலம்பகங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குளிப்பதற்கான இடங்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(iv) கழிவு நீர் பாய்ந்தோடுவதற்குப் போதியளவு வடிகாண்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(v) மின்சார உபகரணங்களைப் பொருத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சுற்றுக்கள் பாதுகாப்பான நிலையில் உள்ளதை உறுதிசெய்துகொள்ளல் வேண்டும்.

7. இப்பிரிவின் துணைவிதியின் கீழ் கோரப்படும் அனுமதிப்பத்திரம் நிர்மாணப் பொருட்களைச் சார்ந்த உற்பத்திகளை களஞ்சியப்படுத்தும் இடம் ஆயின், அத்தகைய இடம்,-

(i) அருகாமையிலுள்ள ஏதேனும் வதிவிடங்களிலிருந்து குறைந்த பட்சம் 5 மீற்றர் தொலைவில் அமைந்திருத்தல் வேண்டும்;

(ii) வெளியாகும் ஏதேனும் தூசி அல்லது நீராவி, அருகாமையிலுள்ள வதிவிடங்களுக்குப் பரவுதலை தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிக்கப்பட்டவாறு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(iii) ஊழியர்களின் பாவனைக்காகப் போதியளவு மலசலகூடங்கள் மற்றும் அலம்பகங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, குளிப்பதற்கான இடங்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(iv) கழிவு நீர் பாய்ந்தோடுவதற்குப் போதியளவு வடிகாண்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(v) மின்சார உபகரணங்களைப் பொருத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சுற்றுக்கள் பாதுகாப்பான நிலையில் உள்ளதை உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(vi) களஞ்சியப் பொருட்களை எடுத்துச் செல்ல வரும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதியளவு இடவசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்;

8. இப்பிரிவின் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவரால்,-

(i) தமது வளவினுள் பிறப்பிக்கப்படும் கழிவுப் பொருட்கள் அல்லது அசுத்த நீர் அல்லது வேறு ஏதேனும் திரவ வகைகளை பொது நீர் வழிகளுக்கு பாய்ந்து செல்வதற்கோ அல்லது கலப்பதற்கோ அல்லது அவ்வாறு கலக்கச் செய்வதற்கோ இடமளித்தல் ஆகாது.

(ii) தமது வளவில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள்,-

(அ) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்
(ஆ) கண்ணாடிப் பொருட்கள்
(இ) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்
(ஈ) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்
(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்
(ஊ) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் என்றவாறு வகைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) மேலே பிரிவு (ii) இன் ஏற்பாடுகளுக்கமைய வகைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருட்களை சபையின் கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் வாகனத்திற்கு அல்லது சபையின் அனுமதியுடன் கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் கருமத்தில் ஈடுபட்டுள்ள ஆளுக்கு, கழிவுப் பொருட்களை சேகரிக்கும் கால அட்டவணைக்கமைய வேறு வேறாகக் கையளிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

9. இப்பிரிவின் துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள எவரேனும் ஆளினால் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிப்புரைகளுக்கமைய தமது வளவினுள் பிறப்பிக்கப்படுகின்ற,-

(i) அசுத்த நீரைச் சுத்திகரிக்க வேண்டும்;

(ii) அசுத்த நீரல்லாத வேறு ஏதேனும் திரவ வகைகளை அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

10. கைத்தொழிலுக்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களும் முடிவுப் பொருட்களும் சுற்றுச்சூழலுக்கு திறந்த நிலையில் அல்லாமல் எடுத்துச் செல்ல வேண்டுமென்பதோடு, ஏதேனும் பொது இடமொன்றின் நிர்மாணிப்புக்காக பயன்படுத்த அவை வைக்கப்படுமாயின் அன்றி, எந்தவொரு பொது இடத்திலும் களஞ்சியப்படுத்தி வைத்தலோ வைத்திருத்தலோ ஆகாது.

11. இப்பிரிவின் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எல்லா இடங்களும்,-

(i) மாநகர ஆணையாளரால் பணிக்கப்பட்டவாறு போதியளவு தீ பாதுகாப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிக்கப்பட்டவாறு முதலுதவி மற்றும் சிகிச்சை நடைமுறைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தொழிற்சாலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் உணவு உண்பதற்கும் ஆடை அணிகளை மாற்றுவதற்கும் உகந்த இடம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, உற்பத்திச் செயற்பாட்டில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் அணிவதற்காக முகக்கவசம், கைக்கவசம் மற்றும் அவசியமான வேறு பாதுகாப்பு அணிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

12. (1) நகர ஆணையாளரால் அல்லது அக்கருமத்திற்காக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்களால் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தொழிற்பாடுகள் இடம்பெறும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய இடத்தினுள் பிரவேசிப்பதற்கும், இத்துணைவிதியின் பணிப்புரைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என பரிசீலனை செய்தல் சட்டமுறையானதாதல் ஆகும்.

(2) மேலே (1) வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனுமோர் ஆளினால் மேற்கொள்ளப்படும் பரிசீலனைக்கு அவசிய ஒத்தழைப்பை வழங்குதல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பரிசீலனை செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

13. (1) 12 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் ஆளினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் பரிசீலனையின் போது, அத்தகைய அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் இப்பிரிவின் துணைவிதிகளில் பணிப்புரைகளுக்கு முரணானவை என்பது வெளிப்படின் அத்தகைய முரண்பாடு நிலைமையை திருத்திக்கொள்ளுமாறு அத்தகைய பரிசீலனையை மேற்கொள்பவரால் அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

(2) மேலே (1) வது பிரிவின் கீழ் அறிவித்தலைப் பெற்றுக்கொண்ட அனைவராலும், அத்தகைய அறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ள சரிசெய்தல்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(3) மேலே (2) வது பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

14. (1) 13 வது துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்பட்ட பின்னர், அத்தகைய கைத்தொழிலை தொடர்ந்தும் பேணிவருவதற்கு இடத்தைப் பாவிப்பதற்கு மீண்டும் அனுமதிப்பத்திரத்தைக் கோருவதற்கு அத்தகைய இரத்துச்செய்யப்பட்ட அனுமதிப்பபத்திரம் பெறுநருக்கு உரிமை உண்டு.

(2) மேலே (1) வது பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு புதிய அனுமதிப்பத்திரத்தைக் கோரும் சந்தர்ப்பத்தில், 3 வது, 4 வது மற்றும் 5 வது துணைவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

15. இத் துணை விதியின் நிர்ணயங்களை மீறுகின்ற அனுமதிப்பத்திர உடைமையாளர் ஏதோ ஒரு வகையில் குற்றவாளி எனக் கருதப்பட்டால், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின் 3 ஆவது உப பிரிவின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள தண்டனையில்,

(i) முதலாவது தடவை இழைக்கப்படும் குற்றமாயின், 1,000 ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்கு ஆளாவார்.

(ii) இரண்டாவது தடவை அல்லது தொடர்ச்சியான குற்றத்திற்காக நாளொன்றுக்கு 2,000 ரூபாவுக்கு மேற்படாத தண்டத்திற்கு ஆளாவார்.

(iii) தொடர்ச்சியாக இழைக்கப்படும் குற்றத்துக்காக குற்றவாளி எனத் தீர்க்கப்பட்டதன் பின்னரோ அல்லது சட்டமீறல் சம்பந்தமாக எச்சரிக்கை விடுத்து கௌரவ மாநகர பிதாவினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று கையளிக்கப்பட்டதன் பின்னரோ தொடர்ந்து இழைக்கப்படுகின்ற குற்றத்துக்காக நாளொன்றுக்கு (250 ரூபா) இரு நூற்றைம்பது ரூபாவுக்கு மேற்படாத மேலதிக தண்டத்துக்கு ஆளாவார்

16. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

'கட்டிடப்பொருட்கள்' என்பதன் மூலம். கருங்கள், கற்தூள், மணல், சீமெந்து, இரும்பு போன்ற கட்டிடங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களும் கருதப்படும்.

## பாகம் - XLIV

## மாநகர சபை அதிகார எல்லைக்குள் காணப்படுகின்ற தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் தனியார் வகுப்புகள் சார்ந்த பகுதிகளில் மக்கள் நடமாடும் இடங்கள்.

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின்படி கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் பிரிவின் 28 (ஆ) ஆம் உப பிரிவின் கீழ் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற மாநகர சபை அதிகார எல்லைக்குள் காணப்படுகின்ற தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் தனியார் வகுப்புகள் சார்ந்த பகுதிகளில் மக்கள் நடமாடும் இடங்கள் இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.

1. பதுளை மாநகர சபையினது அதிகார எல்லைக்குள் அமைந்து தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள், தனியார் வகுப்புகள் சார்ந்த பகுதிகளில் மக்கள் நடமாடும் இடங்கள் பற்றியதான துணை யாப்பாகும்.
2. மாநகர ஆணையாளரினால் தற்காலிக செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட செல்லுபடியாகின்ற ஒரு அனுமதிப்பத்திரம் இருப்பின் அன்றி எவரேனுமொரு நபர் அல்லது நபர்களினால் பதுளை மாநகர சபை அதிகார எல்லைக்குள் தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள், தனியார் வகுப்புகளுக்கு அண்மையில் பொதுமக்கள் நடமாடுகின்ற இடங்களை கட்டுப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் நடாத்திச் செல்லுதல் சட்டரீதியானது அல்ல.
3. இப் பகுதியில் துணை விதியினால் வழங்கப்பட்ட அனைத்து அனுமதிப்பதிரங்களும் முன்னதாக இரத்து செய்யப்பட்டால் அன்றி அவ் அனுமதிப்பதிரம் எவ் வருடத்திற்காக வழங்கப்பட்டதோ, அவ் வருடத்தின் திசெம்பர் மாதம் முப்பத்தொராம் (31) திகதியுடன் நிறைவடைதல் வேண்டும்.
4. அனுமதிப்பத்திரம் கொண்ட இடமானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் குறித்த கட்டளைகளுக்கு நியமங்களுக்கு ஏற்ப நிர்மாணிக்கப்பட்ட ஒரு கட்டிடமொன்று எனின் அன்றி எந்தவொரு நபரும் தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள், தனியார் வகுப்புக்களை நடாத்துதலை மேற்கொள்ளல் கூடாது.

(அ) குறித்த கட்டிடத்திற்காக அனுமதிக்கப்பட்ட தளத்தின் கட்டிட ஒப்புமைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) குறித்த நிலையம் உறுதியாக நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் சிறந்த புதுப்பிக்கப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும்.

(இ) நிலையத்தின் அனைத்து வகுப்பறைகளிலும் சுவர்கள் 03 மீற்றர்களுக்கு குறையாத உயரத்துடன் காணப்பட வேண்டியதுடன் குறித்த சுவர்கள் செங்கல், சீமெந்து செங்கல், கருங்கல்லினால் நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் இரு பக்க சுவர்களும் பூசப்பட்டு மென்மைப் படுத்தப்பட்டு வர்ணப் பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) அனைத்து வகுப்பறைகளுக்கும் நன்றாக காற்று மற்றும் வெளிச்சம் இருக்க வேண்டியதுடன் திறக்கப்படக் கூடிய யன்னல்கள் மற்றும் துவாரங்களுடன் கூடிய வலையுடன் கூடிய போர்வை சுவர்களில் செய்யப்பட்டிருக்க வேண்டியதோடு குளிரூட்டப்பட்டிருத்தல் சட்டரீதியான தேவையொன்றல்ல.

(உ) கூரை ஏதேனுமொரு நிறந்தர பொருளொன்றினால் மூடப்பட்டிருக்க வேண்டியதுடன் கூரைத் தகடுகளினால் கூரை வேயப்பட்டிருக்குமாயின் சிவிலின் போடப்பட்டிருத்தல் வேண்டும். மற்றும் அஸ்பஸ்டொஸ் மற்றும் சிவிலின் போட்டுக்கொள்வதாயின் தரை மட்டத்திலிருந்து 2.5 மீற்றருக்கு குறையாத உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(ஊ) அனைத்து வகுப்பு அறைகளிலும் தரையானது சீமெந்தினால் பூசப்பட்டு செப்பமிடப்பட்டோ அல்லது பீங்கான் கற்கள் புதைக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(எ) கூரையின் மூலைகள் தரைமட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 2.2 மீற்றருக்கு குறையாத உயரத்தில் அமையப் பெற்றிருக்க வேண்டியதோடு பின் பக்க கூரையானது குறைந்த பட்சம் 1 மீற்றராவது இருத்தல் வேண்டும்.

(ஏ) நிலையத்தில் பல அடுக்கு மாடிகள் காணப்படுமாயின் முதல் மாடியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

5. நிலையத்திற்குள் உற்பத்தியாகின்ற குப்பைகளை சேகரிப்பதற்காக போதியளவு அகலம் கொண்ட ஒதுக்கப்பட்ட குப்பைக் கூடைகள் காணப்பட வேண்டியதோடு அனைத்துப் பாத்திரங்களும் சகல சுகாதார பாதுகாப்புகளையும் பூர்த்தி செய்திருப்பதோடு குப்பை கூடைக்களுக்குள் இளையான்கள் அல்லது பூச்சிகள் இனங்கள் உட்புகுவதற்கு முடியாதளவில் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

6. நிலையத்தினுள் உருவாகின்ற குப்பைகள 7 ஆம் பிரிவின் நியமங்களுக்கேற்ப செயற்படக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7. அனுமதிப்பத்திரம் கொண்ட நிலையத்தில் உருவாகின்ற குப்பைகளின் கழிவுகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்கள் பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

(அ) தமது வளவில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள்,-

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள்

(ii) கண்ணாடிப் பொருட்கள்

(இ) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும்

(ஈ) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள்

(உ) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள்

(i) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் என்றவாறு வகைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மேலே பிரிவு (அ) இன் ஏற்பாடுகளுக்கமைய வகைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருட்களை சபையின் கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் வாகனத்திற்கு அல்லது சபையின் அனுமதியுடன் கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் கருமத்தில் ஈடுபட்டுள்ள ஆளுக்கு, கழிவுப் பொருட்களை சேகரிக்கும் கால அட்டவணைக்கமைய வேறு வேறாகக் கையளிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

8. நிலையத்தில் பொருத்தமான வகையில் நீர்ப்பாசன முறைகள் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள், தனியார் வகுப்புகள், நடாத்தப்படுகின்ற இடங்களில் மலசலகூட குழிகளின் வசதிகளுக்காக கீழ் குறிப்பிடப்படுகின்ற ஒதுக்கீடுகள் பின்பற்றபட்டிருத்தல் வேண்டும்.

(அ) அந் நிலையங்களிலுள்ள சகல மலசல கூடங்கள் மற்றும் .அனைத்து சுவர்களும் செங்கற்களினால் சீமெந்துச் செங்கல்லினால், கபோக் கற்களினால், துருப்பிடிக்காத தகடுகளால் அமைக்கப்பட வேண்டியதோடு இரு பக்க சுவர்களும் பூசப்பட்டு செப்பனிடப்பட்டு நிறப்பூச்சு பூசப்பட்டோ அல்லது பீங்கான் செங்கல் (டைல்ஸ்) புதைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) அனைத்து நிலையங்களிலும் சிறுவர்களினது தேவைகளுக்காக மலசலகூட மற்றும் மலசலகூட வசதிகள் பெண்கள், ஆண்கள் என்றவகையில் தனித்தனியாக காணப்படுதல் வேண்டும். ஒரு பிரிவினருக்கு உரிய மலசலகூடம் மற்றைய பிரிவினரினால் உபயோகிக்கப்படுவதற்கு இடமளித்தல் கூடாது.

(இ) நிலையங்களிலுள்ள சகல மலசல கூடங்களிலும் மற்றும் சலகூடங்களிலும் போதியளவிலான நீர் வசதி இருக்க வேண்டியதுடன் 50 பிள்ளைகளுக்கு ஒரு மலசலகூடம் என்ற விதத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் ஆண் பிள்ளைகள் மற்றும் பெண் பிள்ளைகள் காணப்படுகின்ற இடங்களில் 50 பேருக்கு இரு மலசலகூடங்கள் என்ற வகையில் நிர்மாணித்திருத்தல் வேண்டும்.

10. நிலையத்தில் பலகையினால் அல்லது இரும்பினால் அல்லது வேறு உலோக வகைகளினாலோ நிர்மாணிக்கப்பட்டிருக்கின்ற அனைத்துப் பகுதிகளும் வர்ணம் தீட்டுதல் அல்லது நிறப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

11. நிலையத்திலுள்ள 20×20 அடி பரப்புடைய வகுப்பறை ஒன்றினுள் 40 பிள்ளைகள் இருக்க வேண்டியதுடன் குறைந்த பட்சம் ஒரு பிள்ளைக்காக தரையில் 1.5×1.5 அடி அளவு பரப்புடைய இடம் காணப்படுதல் வேண்டும்.

12. ஒரு பிள்ளைக்காக குறைந்த பட்சம் 1.5×2 அடி மேசை அளவு கொண்ட இடம் காணப்படுதல் வேண்டும்.

13. அனைத்து இடங்களிலும் கீழ் குறிப்பிடப்படுகின்ற தேவைகள் பூர் த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(i) அவசர சந்தர்ப்பமொன்றின் போது சிகிச்சை செய்வதற்காக முதலுதவி வசதிகள் காணப்படல் வேண்டும்.

(ii) பிள்ளைகளுக்கு உணவு உண்பதற்கான இடமொன்று ஒதுக்கப்பட்டிருக்க வேண்டியதோடு உணவக வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) சிறுவர் துஸ்பிரயோகத்திற்கான சந்தர்ப்பங்களை இல்லாது செய்தல் வேண்டும்.

(iv) பிள்ளைகளின் ஒழுக்கப் பாதுகாப்பிற்காகாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) சகல பிள்ளைகளினதும் விபரங்களும் பிரசுரிக்கப்படுகின்ற உப பட்டியலுக்கு ஏற்ப விண்ணப்பப்படிவம் ஒன்றின் ஊடாக விபரங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(vi) மேற்குறிப்பிட்ட 13 (v) ஏற்ப பெற்றுக்கொள்கின்ற விபரங்களை அடிப்படையாகக்கொண்டு இரண்டாம் உபபட்டியலுக்கு ஏற்ப பெயர் இடாப்பு ஒன்றினை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

14. சகல நிலையங்களிலும் பங்குபற்றுகின்ற ஆசிரியருக்கு மற்றும் பிள்ளைக்கு சார்ந்த வாகனங்களை பிரசித்தமான இடத்தினில், பாதையொன்றில், வீதியொன்றில் நிறுத்தி வைப்பதை மேற்கொள்ளக் கூடாததுடன் அதற்குத் தேவையான வசதிகள் அந் நிறுவனங்களினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

15. 40 இற்கும் அதிகமான பிள்ளைகளைக் கொண்டு நடைமுறைப்படுத்திச் செல்லும் வகுப்புகளுக்காக ஒலிபெருக்கி இயந்திரங்களை உபயோகிக்க வேண்டியதோடு உள்ளக ஒலிபெருக்கி பொருத்தும் பொழுது ஒவ்வொரு பிள்ளைக்கும் மிகவும் தெளிவாக கேட்கக் கூடியவாறு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

16. 80 இற்கும் அதிகமான பிள்ளைகளைக் கொண்டு நடாத்திச் செல்லப்படும் வகுப்புகளுக்காக பல உள்ளக ஒலிபெருக்கிகள் அதாவது 20 பிள்ளைகளுக்கு ஒரு உள்ளக ஒலிபெருக்கி ஆகுமாறு பொருத்தப்பட்டிருக்க வேண்டியதோடு அனைத்து பிள்ளைகளுக்கும் மிகவும் தெளிவாகக் கேட்கக் கூடியவாறு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

17. பிள்ளைகளுக்கு மிகவும் தெளிவாக காணக்கூடியதாக கரும்பலகை, வெள்ளைப்பலகை உபயோகத்தில் மற்றும் பல மொழி இயந்திரங்களை உபயோகித்து மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்த்துகை மிகவும் தெளிவாக காணக்கூடியதாக மற்றும் கேட்கக் கூடியவாறு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

18. அனைத்து நிலையத்தினதும் உரிமையாளரினால் பதுளை மாநகர சபையின் பொதுச் சபையினால் இடைக்கிடை திருத்தம் செய்து வருடாந்த அரச வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

(i) தனியார் வகுப்பொன்றில் 40 பிள்ளைகளைக் கொண்டிருக்கின்ற ஒரு வகுப்பிற்காக மாதாந்தம் 100 ரூபா என்ற வகையிலும் அதற்கும் மேற்பட்ட 40 பிள்ளைகளுக்காக மேலதிகமாக 25 ரூபாவாக செலுத்துதல் வேண்டும்.

(ii) சர்வதேசப் பாடசாலையொன்றில் வகுப்பு (தரம்) ஒன்றிற்காக மாதாந்தம் 2,000 ரூபா பணத்தொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) தனியார் பாடசாலை ஒன்றில் வகுப்பு (தரம்) ஒன்றிற்காக மாதாந்தம் 150 ரூபா பணத்தொகை செலுத்துதல் வேண்டும்.

19. மாநகர ஆணையாளரினால் அல்லது குறித்த செயற்பாட்டிற்காக நகர ஆணையாளரினால் பொதுவாகவோ அல்லது விஷேடமாக எழுத்துவடிவிலான கடதாசி ஒன்றினூடாக அதிகாரம் வழங்கப்பட்ட சபையின் அதிகாரம் அளிக்கப்பட்ட சபையின் எவரேனும் ஒரு அதிகாரி ஒருவரினால் சூரிய உதயத்திலும் சூரிய அஸ்தமனத்திற்கும் இடைப்பட்ட எந்தவொரு நியாமான நேரத்திலும் அனுமதிப்பத்திரம் கொண்ட ஒரு இடத்திற்கு உள்நுழைவதும் அவ் இடத்தினை ஆய்வு செய்வதும் சட்டரீதியானதுடன் அதற்காக சகல அனுமதிப்பத்திரம் கொண்டவர்களும் அனுமதி வழங்குதல் வேண்டும்.

20. அனுமதிப்பத்திரம் கொண்ட நிலையம், அனுமதிப்பத்திரத்தில் அல்லது ஏதேனுமொரு துணைவிதியில் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு சாதகமாக இருத்தல் தேவைப்படாவிடில், அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு தாக்கம் செலுத்துகின்ற அறிவித்தலொன்றினூடாக அந் நிலையத்தினை நிபந்தனைகளுக்கு சாதகமான நிலைமைக்கு கொண்டு வருவதற்காக அவ் அறிவித்தலில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடு செய்யுமாறு மாநகர ஆணையாளரினால் அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு விதிக்க முடியும்.

21. ஏதேனுமொரு காரணத்திற்காக 5 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல், குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு தனிப்பட்ட முறையில் ஒப்படைக்கப்பட முடியாவிடில் இவ் அறிவிப்பு/அறிவுறுத்தல் குறித்த நபர் இறுதியாக குடியிருந்த இடத்தில் அறிந்த இடத்தில் வைத்துவிட்டு வருதல் அல்லது அனுமதிப்பத்திரம் கொண்ட இடத்தில் பிரசித்தமாக தெரிகின்ற ஏதேனுமொரு பொருளில் இல்லாவிட்டால் ஏதேனுமொரு பிரசித்த இடத்தில் ஒட்டிவைத்தல் அது உரிய நபருக்கு முறையான கையளிப்பபொன்றாக கருதப்படுதல் வேண்டும்.

22. அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு கையளிக்கப்பட்ட ஏதேனுமொரு அறிவித்தலில் குறிப்பிடப்படக்கூடிய காலத்திற்குள் அல்லது அவ்வாறான காலம் குறிப்பிடப்பட்டிராவிடில், அறிவித்தல் கையளிக்கப்பட்டு (7) நாட்களுக்குள் அவ் அறிவித்தலின் நியமங்களுக்கு ஏற்ப செயற்படுதல் அனுமதிப்பத்திரம் பெற்றவரினால் தவறவிடப்படுமாயின் நகர ஆணையாளரினால் அனுமதிப்பத்திரத்தினை இடைநிறுத்தல் அல்லது ரத்து செய்தல் செய்தல் முடியும்.

23. இத் துணையாப்பின் கீழ் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இன்றி முதலாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் ஒன்றில் ஈடுபடுகின்ற எந்தவொரு நபர் அல்லது நபர்கள் தண்டனைக்குரிய தவறொன்றினை மேற்கொள்வதோடு அந் நபருக்கோ அல்லது அந் நபர்களுக்கெதிராக பதுளை மாநகர சபை எல்லைக்குள் நீதிமன்ற அதிகாரம் கொண்ட ஒரு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து குற்றவாளிகாக்கப்படின் கீழ்படுகின்றவாறு.

(i) முதலாம் தடவையாக மேற்கொள்ளப்பட்ட ஒரு தவறெனில் 1,000 ரூபாவிற்கும் மேற்படாத தண்டப்பணத்திற்கும்.

(ii) இரண்டாம் முறையாக மேற்கொள்ளப்பட்ட தவறொன்றிற்காக நாளொன்றிற்கு 2,000 ரூபாவிற்கும் மேற்படாத தண்டப்பணமும்

(iii) தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் தவறொன்று தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னரோ அல்லது அவ் அத்துமீறல் தொடர்பாக கவனம் செலுத்தி கௌரவ நகர பிதாவிடமிருந்து எழுத்துருவிலான அறிவித்தலொன்றை கையளித்ததன் பின்னர் அல்லது தவறினை இடையறாது மேற்கொண்ட ஒவ்வொரு தினத்திற்கும் இருநூற்று ஐம்பதிற்கு ரூபாவுக்கு மேற்படாத மேலதிக தண்டப்பணத்திற்கும், உள்ளாகுவர்.

24. சொற்பத விளக்கம்.

(i) 'நிலையம்' என கருதப்படுவது பதுளை மாநகர சபை அதிகார பிரதேசத்திற்குள் காணப்படுகின்ற தனியார் பாடசாலைகள் சர்வதேச பாடசாலைகள், தனியார் வகுப்புகள் நடாத்தப்படும் ஒரு இடமாகும்.

பாகம் - XLV

**களஞ்சியம் சம்பந்தமான விதிகள்**

*1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (252 ஆம் அத்தியாயமான) 272 ஆம் பிரிவினூடாக மாநகர சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின்படி பதுளை மாநகர சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற களஞ்சியம் சம்பந்தமான விதிகள்.*

1. பதுளை மாநகர சபைக்குத் தேவையான பொருட்களை விலை கொடுத்துக் கொள்வனவு செய்த பின்னர் அப் பொருட்களை இட்டு வைப்பதற்காக ஒரு களஞ்சியம் அல்லது களஞ்சியங்கள் இருத்தல் வேண்டும்.
2. அக் களஞ்சியம் அல்லது களஞ்சியங்கள் நிலையான பொருட்களைக் கொண்டு ஆக்கப்பட்ட கட்டடம் அல்லது கட்டடங்களில் நிறுவப்படல் வேண்டும். களஞ்சியத் தொகுதியானது மதிற் சுவரினால் அல்லது கம்பி அடிக்கப்பட்ட அனுமதி பெறாத நபர்கள் உட்பிரவேசிக்க இயலாத வகையிலான பாதுகாப்பு முறையொன்று ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
4. களஞ்சியத்திற்கு பிரவேசிப்பதற்காக ஒரு கதவு மாத்திரம் இருக்க வேண்டியதுடன், அளவில் பெரிதான பொருட்களையும் அதனுள் கொண்டு செல்லக்கூடிய விதத்தில் அக் கதவு நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. களஞ்சியத்துக்குப் பொறுப்பாக களஞ்சியப் பொறுப்பாளர் அல்லது பொறுப்பாளர்கள் மற்றும் போதிய எண்ணிக்கையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந் நபர்களைத் தவிர களஞ்சியத்துக்குள் மாநகர சபை ஆணையாளர் அல்லது களஞ்சியத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் கணக்காளரின் அனுமதி இல்லாது எந்தவொரு வெளி நபரையும் உள்ளே விடாது பார்த்துக்கொள்வது களஞ்சியப் பொறுப்பாளரின் வகை கூறல் ஆகும்.
6. களஞ்சியம் இரு பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்க வேண்டியதுடன் பிரதான பகுதியில் சபைக்காக பொறுப்பேற்கப்பட்ட பொருட்கள் இட்டு வைப்பதற்கும் இரண்டாவது பகுதியில் வழங்குநர்களினால் விநியோகிக்கப்படுகின்ற எனினும் பரிசோதித்து தரச் சான்றிதழ் வழங்கப்பட்டிராத பொருட்களை இட்டு வைப்பதற்கும் பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
7. வழங்குநர்களினால் விநியோகிக்கப்படுகின்ற பொருட்களுக்கான தரச் சான்றிதழ் இல்லாத 21 ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு களஞ்சியத்துக்குப் பொருட்கள் கிடைக்கும் பத்திரம் எழுதப்படலாகாது என்பதுடன் பிரதான களஞ்சியதத்தில் இட்டு வைக்கப்படுதலும் ஆகாது.
8. களஞ்சியப் பொறுப்பாளர் களஞ்சியத்தையும் அதன் சுற்றுப் புறத்தையும் துப்புரவாக வைத்துக் கொள்வதில் கவனமாயிருத்தல் வேண்டும்.
9. களஞ்சியத்தில் உள்ள பொருட்களை விரைவில் கண்டுகொள்வதற்கு இயலுமான விதத்தில் முறையாக இட்டு வைப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும்.
10. களஞசியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான ஆலோசனைகளை உரிய அதிகாரிகளிடம் முன்வைப்பது களஞ்சியப் பொறுப்பளரின் கடமையாகும்.
11. களஞ்சியத்தின் கதவினைப் பூட்டுவதற்காக இரு திறப்புகளைக் கொண்ட பூட்டுக்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவற்றில் ஒரு திறப்பு மாநகர ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டியதுடன் ஆணையாளரினால் அந்த திறப்பு ஓர் உறையில் இடப்பட்டு உறை முத்திரை இடப்பட்டு தனது அலுமாரியில் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும். 13 ஆம் இலக்கத்தைக் கொண்ட விதியில் குறிப்பிடப்பட்ட ஏதாவது சந்தர்ப்பத்தில் தவிர இந்த குறிப்பு பாவிக்கப்படல் ஆகாது.
12. (i) களஞ்சியப் பொறுப்பாளர் விடுமுறையில் செல்லும் சந்தர்ப்பத்தில் அவருக்கு நம்பிக்கையான சமமான தரத்தில் சேவையாற்றும் மாநகர சபை அலுவலர் ஒருவரை தனது கடமைகளைச் செய்வதற்காக பெயர் குறிப்பிடப்படலாம். எனினும் உதவியாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பின் அவ்வுதவியாளர்களில் தனக்கு நம்பிக்கையான ஓர் உதவியாளரிடம் திறப்புகளைக் கையளித்து விடுமுறை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
    (ii) எவ்வாறாயினும் விடுமுறையில் செல்லும் தருணத்தில் அவர் சார்பில் கடமைகள் மேற்கொள்வதற்காக அவருக்கு நம்பிக்கையான ஓர் உதவியாளரின் பெயரை ஏற்கனவே எழுத்து மூலம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
13. எக் காரணம் கொண்டும் 12 ஆம் பிரிவுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளாது களஞ்சியப் பொறுப்பாளரினால் அவசர தேவையின் மீது திறப்புகள் ஒப்படைக்கப்படாத சந்தர்ப்பங்களில் அத்தியாவசியமானதும் அவசரமானதுமான தேவைக்காக பொருட்கள் வேண்டுமானால் மாநகர ஆணையாளரினால் களஞ்சிய நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் கணக்காய்வாளர் மற்றும் உயர்தர அதிகாரிகள் இருவரைக் கொண்ட குழுவொன்றினை நியமித்து தன்னிடம் இருக்கும் களஞ்சியத்தின் மற்ற திறப்புகளை அக் குழுவிடம் கொடுத்து களஞ்சியத்தைத் திறந்து தேவையான பொருட்களை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ள இயலும். களஞ்சியப் பொறுப்பாளர் மீண்டும் கடமைக்கு சமுகமளித்ததும் இவ்வாறு விநியோகிக்கப்பட்ட பொருட்கள் சம்பந்தமான உரிய குறிப்புகளை உரிய பதிவேடுகளை குறிப்பு வைத்தல் களஞ்சியப் பொறுப்பாளரின் சபை கூறல் ஆகும்.
14. மாநகர சபையின் சேவைகளை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற பொருட்களில் அண்ணளவான ஒரு தொகையை களஞ்சியத்தில் வைத்திருப்பதற்கான சகல முயற்சிகளும் களஞ்சியப் பொறுப்பாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் "பின்கார்ட்" (Bin card) பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அதி கூடிய கையிருப்பு மிஞ்சாமல் இருப்பதற்கும் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

15. களஞ்சியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தேவைப்படும் சந்தர்ப்பத்தில்–

1. யாதாயினும் ஒரு விசேட செயற்றிட்டத்துக்காயின் அச் செயற்திட்டத்துக்குப் பொறுப்பாக செயற்படும் உயர் அதிகாரியினால் இங்கு காணப்படுகின்ற க.ப.1 என்ற இலக்கம் கொண்ட மாதிரிப் படிவங்களை முறையாகத் தயாரித்து களஞ்சியப் பொறுப்பாளர் ஊடாக விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக உள்ள அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் இச் செயற் திட்டத்துக்காக வரவு-செலவுத் திட்டத்தில் அல்லது குறை நிரப்பு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாயும் மதிப்பீட்டு அதிகாரிகளினால் அங்கீகரிகப்பட்டுள்ளதாயும் செயற்திட்டம் தொடர்பில் கருமமாற்றுகின்ற அதிகாரியினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. அன்றாடப் பாவனைக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக களஞ்சியப் பொறுப்பாளரினால் க.ப.1 படிவம் முறைாக தயாரிக்கப்பட்டு விநியோகம் தொடர்பான பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

16. விநியோகத்துக்குப் பொறுப்பான அதிகாரியினால் க.ப. 1 படிவம் பெறப்பட்ட பின்னர் அங்கீகரிக்கப்பட்ட விலைகள் இருப்பின் இங்கு குறிப்பிடப்படும் க.ப. .2 மாதிரி படிவத்தின் ஊடாக ஏற்புடைய ஒரு வழங்குநருக்கு கோரல் விடுக்கப்படல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட விலைகள் இல்லாதுவிடின் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 229 ஆம் சரத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு ஒரு வழங்குநர் தெரிவு செய்து க.ப. 2 ஆம் படிவத்தின் ஊடாக கோரல் விடுவிக்கப்படல் வேண்டும். என்றாலும், 1,500 ரூபாவுக்கு மேற்படாத பெறுமதியுள்ள பொருளைக் கொள்வனவு செய்யும் போது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 227 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

17. 15,000 ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்கின்ற போது விலை மனு கோரல் செய்முறைகளில் காணப்படுகின்ற விதிகள் அல்லது சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் பின்பற்றப்படல் வேண்டும்

18. க.ப.2 படிவம் நான்கு பிரதிகளில் அமைய வேண்டியதுடன் அதில் ஒரு பிரதி வழங்குநருக்கும், இரண்டாம் பிரதி களஞ்சியப் பொறுப்பாளருக்கும் அனுப்பப்பட வேண்டியதுடன் மூன்றாவது பிரதியானது பணம் செலுத்தும் போது உறுதிச் சீட்டுடன் (voucher) இணைப்பதற்காக வைத்துக்கொள்ளல் வேண்டும். நாலாவது பிரதி நிர்வாகப் பிரதியாக வைத்துக்கொள்ளப்படல் வேண்டும்.

19. வழங்குநரினால் தனக்குக் கிடைக்கப்பெற்ற பிரதிக்கு இணங்க களஞ்சியப் பொறுப்பாளருக்கு விநியோகிக்கப்படல் வேண்டும்.

20. வழங்குநரினால் வழங்கப்படுகின்ற பொருட்கள் களஞ்சியத்தின் முலாவது பகுதியில் வைக்கப்பட்டு பரிசீலனை செய்து தரச் சான்றிதழ் வழங்கிடுமாறு அப் பொருட்களைப் பயன்படுத்துகின்ற அல்லது அதற்காக நியமிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பக் குழுவின் தொழில்நுட்ப அறிவுள்ள ஓர் அதிகாரியிடம் களஞ்சியப் பொறுப்பாளர் கேட்க வேண்டும். அப்போது அவ்வதிகாரி அல்லது குழு அப் பொருட்களைப் பரிசீலனை செய்து முறையான தரச் சான்றிதழ் ஒன்றை களஞ்சியப் பொறுப்பாளருக்கு விநியோகித்தல் வேண்டும். முழு விபரங்களுடன் கூடிய தரச்சான்றிதழ் ஒன்று தேவைப்படும் பொருட்கள் (உ-ம் மின் உற்பத்தி இயந்திரம் (generatore) நீர்ப்பம்பி (water pump) சகல விதத்திலும் தகுதியானதென ஓர் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

21. தரச் சான்றிதழ் கிடைத்ததன் பின்பு திருப்திகரமானவை என சிபாரிசு செய்யப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பில் இந்த விதிமுறைகளுடன் இணைக்கப்பட்டுள்ள க.ப..3 என்ற மாதிரிப் படிவம் நான்கு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு,, அவற்றில் மூலப் பிரதி வழங்கநருக்கும், இரண்டாம் மூன்றாம் பிரதிகள் விநியோகம் சம்பந்தமான விடயப்பொறுப்பு இலிகிதருக்கும் அனுப்பப்பட்டதன் பின்னர் நான்காவது பிரதியினைப் பயன்படுத்தி அப் பொருட் தொகுதி உரிய 'பின் கார்ட்' (Bin card) படிவத்தின் படிவங்களின் கிடைக்கப்பெற்றவை என்ற நிரலில் குறிப்பிடப்படல் வேண்டும். 'பின்கார்ட்' (Bin Card) படிவமானது இங்கே காட்டப்பட்டுள்ள க.ப. 4 என்ற மாதிரிப் படிவத்தினை ஒத்ததாக அமைதல் வேண்டும்.

22. விநியோகத்தலுக்குப் பொறுப்பான இலிகிதரினால் தனக்குக் கிடைத்துள்ள க.ப. 3 இன் இரு பிரதிகளிலும் தன்னிடம் உள்ள உரிய பொருட்களுக்கான விலைகளுக்கு இணங்க அப் பொருட்களின் விலைகளைக் குறித்து கையிருப்புப் புத்தகங்களைக் கையாளுகின்ற இலிகிதருக்கு அனுப்புதல் வேண்டும்.

23. க.ப.3 படிவம் தனக்கு கிடைத்த பின்னர் களஞ்சியத்தின் கையிருப்புப் புத்தகங்களைக் கையாளுகின்ற இலிகிதரினால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் எண்ணிக்கை விலை என்பனவற்றை கையிருப்புப் புத்தகத்தின் அல்லது புத்தகங்களின் உரிய பக்கங்களில் குறிப்பிட்டு க.ப.3 இன் பிரதிகளில் கையிருப்புப் புத்தகத்தின் பக்க இலக்கத்தை களஞ்சியப் பொருட்கள் குறிக்கப்பட்டிருக்கும் குறிப்புகளுக்கு முன்னால் எழுதி ஒரு பிரதியை களஞ்சியப் பொருட்களுக்குப் பொறுப்பாக இருக்கும் இலிகிதருக்கு அனுப்புதல் வேண்டும். கள்ஞ்சியக் கையிருப்புப் புத்தகமானது இங்கு க.ப. 5 என காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு ஒத்ததாக அமைதல் வேண்டும்.

24. க.ப. 3 இன் பிரதி கிடைத்தவுடன் களஞ்சியத்தின் விநியோக இலிகிதரினால் வவுச்சர் ஒன்று தயாரிக்கப்பட்டு தன்னிடம் உள்ள க.ப. 2 ஆம் பிரதியொன்றை வழங்குநரினால் அனுப்பப் பட்ட விலைப்பட்டியல் ஒன்றையும் இணைத்து பணம் செலுத்துவதறகாக கணக்குப் பிரிவுக்கு அனுப்புதல் வேண்டும். களஞ்சியப் பொருட்களுக்காக பணம் செலுத்தும் போது களஞ்சியக் கடன் கணக்கிலிருந்து பணம் செலுத்த வேண்டியதுடன் எக் காரணம் கொண்டும் செலவுத் தலைப்பிலிருந்து பணம் செலுத்துதல் ஆகாது. கணக்கு வைப்பாளரினால் ஒவ்வொரு மாத இறுதியிலும் களஞ்சியக் கடன் கணக்கிலிருந்து செலுத்தப்பட்ட தொகைகள் அனைத்தையும் கூட்டி களஞ்சியக் கணக்கில் செலவுப் பக்கத்தில் பதிந்து களஞ்சியக் கடன் கணக்கில் வரவுப் பக்கத்தில் பதிவதன் மூலம் குறிப்புகளைத் தயாரித்து அவற்றை பிரதான பேரேட்டில் உரிய கணக்குகளில் பதியப்படல் வேண்டும்.

25. வழங்கப்பட்டுள்ள பொருட்களை பரிசீலிக்கும் போது, ஒதுக்கப்படும் பொருட்களை திருப்பிக்கொண்டு போகுமாறு அறிவிப்பதற்காக களஞ்சிய வழங்குதல்களை மேற்பார்வை செய்யும் கணக்காளருக்கு களஞ்சியப் பொறுப்பாளர் அறிவித்தல் வேண்டும்.

26. களஞ்சியத்துக்கு பொருட்களை வழங்குவதற்காக க.ப. 2க்கு இணங்க கோரல் கிடைக்கப்பெறும் வழங்குநருக்கு அல்லது அவரின் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொருட்களை திருப்பிக் கொண்டு செல்வதற்காக வருகின்ற வழங்குநருக்கு அல்லது அவரின் பிரதிநிகளுக்கு ஐந்தாவது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் ஏற்புடையதாதல் ஆகாது.

27. களஞ்சியத்துக்குக் கிடைத்துள்ள பொருட்களை மாநகர சபையின் சேவைகளுக்காக பெற்றுக்கொள்ளும் போது இணைக்கப்பட்டுள்ள க.ப.6 ஆவது மாதிரிப் படிவத்தினை ஒத்ததாக தயாரிக்கப்பட்ட பொருட்களை விநியோகிக்கும் படிவம் ஒன்று நான்கு பிரதிகளுடன் கூடியதாக தயாரிக்கப்பட்டு களஞ்சியப் பொறுப்பாளருக்கு அவற்றில் மூன்றினை ஒப்படைத்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

28. களஞ்சியத்தின் கையிருப்பு புத்தகங்களுக்கான இலிகிதர் இந்த க.ப. 6 இன் மூன்று பிரதிகளுக்கும் இணங்க அதில் குறிப்பிடப்பட்ட பொருட்களை விநியோகித்த பின்னர் பின் கார்ட் (Bin card) படிவங்களின் விநியோகிக்கும் பகுதியில் குறிப்பிட வேண்டியதுடன் அக் குறிப்புகளை உறுதிப்படுத்துவதற்காகா க.ப. 6 இன் ஒரு பிரதியை தன்னிடம் வைத்துக்கொண்டு மிகுதியான இரு பிரதிகளையும் களஞ்சியப் கையிருப்புப் புத்தகங்களுக்குப் பொறுப்பான இலிகிதருக்கு அனுப்புதல் வேண்டும்.

29. களஞ்சியக் கையிருப்புப் புத்தகங்களுக்கான இலிகிதர் இந்த க 6 இன் இரு பிரதிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் வினாக்களைக் குறிப்பிட்டு ஒரு பிரதியை தன்னிடம் வைத்துக்கொண்டு மற்றப் பிரதியை (Job sheet) தயாரிப்பதற்காக உரிய திணைக்களத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு மாத இறுதியிலும் தன்னிடமுள்ள க.ப. 6 படிவத்தின் சகல பிரதிகளையும் செலவுத் தலைப்புகளுக்கு அமைவாக பட்டியல்படுத்தி கணக்கு வைப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும். இப் பட்டியலுக்கு இணங்க கணக்கு வைப்பாளரினால் உரிய செலவுத் தலைப்பின் செலவில் எழுதி, களஞ்சியக் கணக்கில் வரவு வைத்து நாளேட்டுக் குறிப்பு ஒன்றினைத் தயாரித்து அதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொண்டு, செலவுப் பட்டியலில் உரிய தலைப்பின் கீழ் செலவுப் பகுதியிலும் பேரேட்டிலுள்ள களஞ்சியக் கணக்கில் வரவுப் பகுதியிலும் பதியப்பட வேண்டும்.

30. க.ப.6 இன் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களில் யாதேனும் ஒரு பகுதி பாவிக்கப்படாவிட்டால், அப் பொருட்களின் அளவினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள க.ப 7 படிவத்தினைப் பூர்த்திசெய்து அப்பொருட்களுடன் களஞ்சியப் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். க.ப. 7 படிவம் 4 பிரதிகளில் தயாரிக்கப்படல் வேண்டும் அவற்றில் (3) மூன்றினை மிகுதியான பொருட்களுடன் களஞ்சியப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

31. தனக்குக் கிடைக்கப்பெற்ற க.ப.7 இன் பிரதிக்கிணங்க இருந்திருக்கும் பொருட்களை உரிய பின்கார்ட்களில் வரவு நிரலில் பதிவுசெய்துக.ப. 7 இன் இரு பிரதிகள் களஞ்சியகையிருப்புப் புத்தகம் தொடர்பான இலிகிதருக்கு அனுப்பவேண்டும்.

32. களஞ்சியகையிருப்புப் புத்தகம் தொடர்பான இலிகிதர் தனக்குக் கிடைத்துள்ள க.ப.7 இன் இரு பிரதிகளிலும் குறிப்பிட்ட பொருட்களின் விலைகளைக் குறிப்பிட்டு, ஒரு பிரதியைத் தன்னிடம் வைத்துக்கொண்டு மற்றப் பிரதியை உரிய திணைக்களத் தலைவருக்கு அனுப்பவேண்டும். தன்னிடம் வைத்துக்கொண்ட பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் பெறுமதியினை 29 ஆம் விதிக்கமையதயாரிக்கப்படுகின்றபட்டியலில் உரியசெலவுத் தலைப்பிலிருந்து கழித்துவிட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியதுடன், கையிருப்புப் புத்தகத்தில் உரியபொருளைவரவாகப் பதிவுவைத்தல் வேண்டும். அத்துடன், 29 ஆம் விதிக்கமைய தயாரிக்கப்படுகின்ற பட்டியலை இப் பொருட்களின் பெறுமதியினை உரியசெலவுத் தலைப்பிலிருந்து கழித்த பின்னர் சமப்படுத்தியே (Balance) கணக்கு வைப்பாளருக்கு அனுப்பவேண்டும்.

33. கணக்குப் பிரிவிலுள்ள பிரதானபேரேட்டில் களஞ்சியக் கணக்கு, என்றதலைப்பில் ஒரு கணக்கை பேணிச் செல்ல வேண்டியதுடன் இக் கணக்கு 23 ஆம் விதிக்கமைய தயாரிக்கப்படுகின்ற நாளேட்டில் இக் கணக்கினை வரவு வைத்து ஒவ்வொரு மாத இறுதியிலும் இக் கணக்குசமப்படுத்தப்படல் (Balance) வேண்டும்.

34 ஏதாயினும் ஒருபொருள் பாவிக்கப்பட்டுபின்னர் அது அப்புறப்படுத்தப்படுமாயின், அப் பொருள் மீண்டும் பாவிக்கக்கூடிய நிலையில் இருந்தால், அப் பொருட்களின் பெறுமதி திணைக்களத் தலைவரினால் மதிப்பிடப்பட்டு க. ப. 7 படிவமொன்று தயாரிக்கப்பட்டு இல 28 ஐக் கொண்டவிதியின்படி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். எனினும் இப் பொருட்கள் பதிவுசெய்யப்படுவதற்காக தனியான பின்கார்ட் மற்றும் கையிருப்புப் புத்தகங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் இப்பொருட்களின் பெறுமதி களஞ்சியக் கணக்கில் செலவில் குறிப்பிடப்படல் வேண்டும். மீள அப்பொருட்களை விநியோகிக்கும்போது இந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

35. வலயங்களில் நேரடியாக விநியோகிக்கப்படும் அப் பொருட்களுக்காக (உ- ம் :- கல், மணல் போன்றன) இந்தவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் பின்பற்றப்படல் வேண்டும். என்றாலும் இவ்விதிகளில் குறிப்பிடப்படுகின்ற களஞ்சியப் பொறுப்பாளருக்குப் பதிலாக வலயத்திற்குப் பொறுப்பாக இருக்கும் தொழில்நுட்ப அலுவலர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், உரியபொருட்களுக்காகபின்கார்டுக்குப் பதிலாக கையிருப்புப் புத்தகம் பயன்படுத்துவதுபோதுமானதாகும்.

36. ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் களஞ்சியத்தில் மற்றும் வலயங்களில் ஆண்டிறுதியில் உள்ள மிகுதியான பொருட்களை மதிப்பீட்டுக் குழுவொன்றின் மூலமாகமதிப்பீடு செய்யப்படவேண்டும். இக்குழு அல்லது குழுக்கள் மாநகர ஆணையாளரினால் நியமிக்கப்படவேண்டியதுடன் அது மூன்றுஅங்கத்தினர்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும். மதிப்பீட்டின் இறுதியில் இக் குழுவினால் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டியதுடன், அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் கையிருப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளின்படி விலைகுறிக்கப்பட்டு அவ்விலைகளின் மொத்தம் களஞ்சியக் கணக்கின் மிகுதியுடன் ஒப்பிடப்படுதல் வேண்டும். யாதாயினும் வித்தியாசம் இருப்பின்,உடனடியாகஅதுபற்றித் தேடிப் பார்த்து சரிப்படுத்தப்படல் வேண்டும்.

37. 36ஆம் பிரிவின் கீழ் மதிப்பீட்டுக் குழுவினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை நிதிச் செயற்குழுவுக்கும் பொதுக் கூட்டத்திலும் சமர்ப்பிக்கப்படவேண்டியதுடன் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அமைய அவ் அறிக்கையின் சிபாரிசுகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

38. பொருள் கோடல் -

"க.ப.என்பதனால் "களஞ்சியப் படிவம்" என்பதுகுறிப்பிடப்படுகின்றது.

(கொள்வனவாளருக்கு)

**பதுளை மாநகர சபை**

**களஞ்சியத்திற்கு பொருட்கள் பெறல்**

முதலாம் பிரதி

உத்தரவு பத்திர இலக்கம் ...................... பொருட்கள் கோரல்
பத்திர இல. ............
திகதி .............................. மதிப்பீடு/வேலை ....................................................

............................................................ இடமிருந்து கீழ்க் குறிப்பிடப்படும் உபகரணங்கள், விபரிக்கப்பட்டவாறு மற்றும் கீழே காணும் எண்ணிக்கையில், நல்ல தரத்துடன் எனக்குக் கிடைத்ததென உறுதிப்படுத்துகிறேன்.

| பொருள் | எண்ணிக்கை | விபரம் | விலை | | பேரேட்டுப்பக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | சதம் | |
| | | | | | |
| | | | | | |

திகதி .................................. ........................................
களஞ்சியப் பொறுப்பாளர்.

**முக்கியகுறிப்பு**

களஞ்சியத்தில் கொண்டுவந்து ஒப்படைத்தபின் கையிருப்புப் பொருட்களாக கணக்கிடப்பட்ட பொருட்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒரே படிவம் இதுவாகும்.இப் படிவத்தை உமது கொடுப்பனவு கணக்கிற்காக பதுளை மாநகர சபையின் பொருளாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். விலைகள் மற்றும் எண்ணிக்கைகள் சரி பிழை பார்க்கப்பட்டன. கொள்வனவும் பேரேட்டில் பதிவு வைக்கப்பட்டது.

பக்கம் ..............................

.......................................
பரிசீலனை எழுதுவினைஞர்.

........................................
களஞ்சிய எழுதுவினைஞர்.

**களஞ்சியக் கணக்குப் பேரேடு**

பொருள் .................... இடம் .................. இருப்பு ............
அடையாளம் .................... களஞ்சிய இல............ அதிகூடிய ............
எண்ணிக்கை. ...............................
அலகு .................... ராக்கை இல............ அதிகுறைந்த............
எண்ணிக்கை ..................
பின்காட் இல .................. மீள உத்தரவிடும் அளவு ...................

| திகதி | கொள்வனவு | | | | விநியோகம் | | | | இருப்பு | | | பரிசீலனை அலுவலரின் ஒப்பமும் திகதியும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கொள்வனவு பத்திர இல. | அளவு | விலை | பெறுமதி | பொருள் கோரல் பத்திர இல. | அளவு | விலை | பெறுமதி | அளவு | விலை | பெறுமதி | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

(கொள்வனவாளருக்கு )

**பதுளை மாநகர சபை**

**பொருட்கள் விநியோகம்.**

முதலாம் பிரதி

பிரிவு ................... இல .......................

கொள்வனவாளரின் பெயர் ......................... பொருள் விண்ணப்ப இல.....................

திகதி ..................... மதிப்பீட்டு வேலைகள் ........................

........................... .................................. .......................

களஞ்சியப் பொறுப்பாளரிடம் இருந்து கீழ் காணும் பொருட்களின் விபரம் கீழ் குறிப்பிட்ட அளவுகளில் நல்ல நிலையில் எனக்குக் கிடைத்தன என்று உறுதிப்படுத்துகிறேன்.

..........................................
...........................
களஞ்சிய எழுதுவினைஞரின் கையொப்பமும் திகதியும்
கொள்வனவாளரின் கையொப்பமும் திகதியும்

விலைகள் அளவுகள் மொத்த விலை என்பன பரிசீலிக்கப்பட்டன. கணக்குப் பேரேட்டில் பதிவு வைக்கப்பட்டன.

இல...............................
.......................................

பரிசீலனை எழுதுவினைஞர்.

........................................
களஞ்சிய எழுதுவினைஞர்.

**பாடம் - XLVI**

**தனியார் வைத்தியசாலை, தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம், தனியார் மருத்துவ ஆய்வுகூடம் மற்றும் தனியார் மருந்தகம் தொடர்பான துணைச்சட்டம்**

*1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவினூடாக மாநகர சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின்படி பதுளை மாநகர சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற தனியார் வைத்தியசாலை, தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம், தனியார் மருத்துவ ஆய்வுகூடம் மற்றும் தனியார் மருந்தகம் தொடர்பான துணைச்சட்டம்.*

1. இப்பிரிவின் துணைச்சட்டம் பதுளை மா நகர சபை பிரதேசத்தில் தனியார் மருத்துவ மனை, தனியார் சிகிட்சை நிலையம், தனியார் மருத்துவ ஆய்வுகூடம் மற்றும் தனியார் மருந்தக மண்டபங்களை முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான துணைவிதி என அறிமுகப்படுத்தப்படுகின்றது.
2. நகர ஆணையாளர் அவர்களினால் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிபத்திரம் இருந்தால் அன்றி, ஏவரேனுமொரு நபரினால் பதுளை மா நகர சபை பிரதேசத்திற்குள் தனியார் மருத்துவ மனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் நடாத்த கூடாது.
3. இத் துனைச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து அனுமதிபத்திரமும்,முன்னர் இரத்துச் செய்யாவிட்டால் அன்றி அவ் அனுமதிபத்திரம் எந்த வருடத்திற்கு வழங்கப்பட்டதோ, அவ் வருடத்தின் திசெம்பர் மாதம் முப்பத்தியோராம் திகதி முடிவடைய வேண்டும்.
4. இத் துணைவிதியின் நியமங்கள் அம்முறைபடியே பூர்த்தி செய்யாதிருந்தலன்றி, நகர ஆணையாளர் அவர்களினால் ஏதேனுமொரு தனியார் மருத்துவ மனை அல்லது தனியார் மருத்துவ நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் நடாத்திச் செல்லப்படும் நிலையத்திற்கான அனுமதிபத்திரம் வழங்கக் கூடாது.

(1) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் நடாத்திச் செல்லப்படும் நிலையத்தை மிக சிறந்த வகையிலான பழுதுபார்த்தலுடன் நடாத்திச் செல்ல வேண்டும்.

(2) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபமொன்றை நடாத்திச் செல்லப்படும் இடத்தில் இல்லம் மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் விதி முறைகளுக்கு இணங்க ஸ்தாபிக்கப்படும் கட்டிடம் அன்றி எந்தவொரு

சந்தர்ப்பத்திலும் வெளிவாரியாக ஸ்தாபிக்கப்படும் கட்டிடத்தில் நடாத்தக் கூடாது. அனைத்து கட்டிடங்களுக்கும் போதுமான அளவு வெளிச்சம் மற்றும் காற்று கிடைக்கக் கூடிய வகையில் இருத்தல் வேண்டும். அனைத்து அறைகலும் திறக்கக் கூடிய வகையிலான ஜன்னல்கள் பொறுத்தப்பட்டிருக்க வேண்டியதுடன் திறக்கும் போது அவ் ஜன்னல்களின் பரப்பளவு, அவ் அறையில் அல்லது மண்டபத்தின் மேற்பரப்பில் பூமியின் மொத்த பரப்பில் பதினைந்தின் ஒரு பகுதியைவிட குறைந்ததாக இருக்கக் கூடாது. எப்படியானாலும் ஏதேனும் ஒரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் ஏதேனும் ஒரு பணிகளுக்காக மூடப்பட்ட கட்டிடம் அல்லாத கட்டிடமொன்றில் பணிகளை நடாத்திச் செல்ல முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் அல்லது சம்பந்தப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்படும் அறை அல்லது மண்டபம் வாயு சீராக்கல் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கு சம்பந்தப்படாமல் இருத்தல் வேண்டும்.

(3) அனைத்து அறைகளிலும் மண்டபங்களிலும் உள்ள சுவர்கள் குறைந்தது 2.14 மீற்றர் உயரத்திற்கு மேற்படாததுடன், அச் சுவர்கள் செங்கற்கள் அல்லது சீமெந்து கற்கள் அல்லது களிமண் கற்களினால் அமைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவை சீமெந்தினால் செய்யப்பட்ட கலவையை பயன்படுத்தி காரை பூசி உட்புறம் வர்ணம் தீட்டி இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அலுமினியம் அல்லது ஏனைய உலோக பொருட்களுடன் பலகை பொறுத்தி செய்யப்பட்ட சுவராக இருக்கும் சந்தர்ப்பத்தில் பலகையின் வெளிபுறத்தில் வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தில் சமயட் கூடம் நடாத்திச் செல்வதென்றால், அச் சமயட் கூடத்தில் உள்ள சுவர்களானது கழுவி சுத்தம் செய்யக் கூடிய வகையில் தரை மட்டத்தில் இருந்து குறைந்த பட்சம் 06 அடி உயரத்திற்கு குறையாத உயரத்தில் பீங்காண் ஓடுகள் பொறுத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) கூறையானது நிரந்தர பொருட்களை கொண்டு தயாரித்து கூரை வேயப்பட்டிருக்க வேண்டியதுடன், கூரையில் இருக்கும் கீழ் பகுதியானது தரையில் இருந்து குறைந்தது 2 மீற்றர் உயரத்தில் இருக்க வேண்டியதுடன் அன்றி தாழ்வாரமானது குறைந்தது ஒரு மீற்றராக இருத்தல் வேண்டும்.

(5) கூரையானது இரும்பு அல்லது தகரம் அல்லது பலகையை கொண்டு அமைக்கப்படுமாயின் அவற்றின் மேற்புறம் எண்ணெய் வண்ணப்பூச்சு அல்லது மைப்பூச்சு பூசி மிக சிறந்த முறையில் நடாத்திச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் அனைத்து அறைகளும் மண்டபங்களும் நிரந்தர பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட சிவிலிம் இருக்க வேண்டியதுடன், அவ் சிவிலிம் மைப்பூச்சு அல்லது வண்ணப்பூச்சு பூசி மிகவும் சிறந்த முறையில் நடாத்திச் செல்ல வேண்டும்.

(6) வீட்டின் தரையானது சீமெந்து போட்டு அல்லது பீங்கான் ஓடுகளினால் அமைத்திருக்க வேண்டும். அப்படியானல், தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் மண்டபத்தில் இருக்கும் அனைத்து சமய கூடங்களும், தடுப்பூசி போடும் அறைகளும், அறுவை சிகிச்சை,உடை மாற்றும் அறை, ஆய்வுகூடம், அவசர சிகிட்சை பிரிவு போன்றவற்றின் தரை கழுவி சுத்தம் செய்யக்கூடிய வகையில் பீங்கான் ஓடுகளால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ மனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் மண்டபத்தில் சேவையாற்றுபவர்களில் பத்துபேருக்கும், குறைந்த பட்சம் ஒரு மலசலகூடமும் பெண் மற்றும் ஆண் இருபாலருக்கும் வேறு வேறாக மலசல கூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதேபோன்று மேற்படி ஏதேனுமொரு நிலையத்திற்கு தங்குவதற்கு அல்லது வெளிவாரி சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு வருகைதருபவர்களில் குறைந்த பட்சம் ஐம்பது பேருக்கு ஒரு மலசலகூடம் படி ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் வேறு வேறாக மலசலகூடம் அமைத்திருத்தல் வேண்டும்.

(8) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையத்தில் சௌனல் செய்வதென்றால், சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு வருகை தரும் நோயாளர்களில் நூற்றுக்கு 80% மானவர்களை விட அதிகமானவர்கள் அமரக்கூடிய வகையிலான வசதிகளை செய்திருத்தல் வேண்டும்.

(9) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் மண்டபத்தில் சேவையொன்றை பெற்றுக்கொள்வதற்கு வரும் வலது குறைந்தவர்களுக்கான உட்பிரவேசிக்கும் வசதிகளை அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) சுகாதார மருத்துவ உத்தியோகத்தரினால் சிபாரிசு செய்யப்படும் தரத்தின் படி சுத்தம் செய்யப்படுவதென்றால் அன்றி ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் மண்டபத்தில் செய்யப்படும் பணிகளின் பின்னர் அகற்றப்படும் கழிவு நீரைபொது நீர் செல்லும் இடத்திற்கு அல்லது ஓடைகளுக்கு அல்லது ஏதேனும் வாய்க்காலுக்குநீரை திருப்பக் கூடாது.

(11) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் மண்டபத்தில் செய்யப்படும் பணிகளில் பின்னர் அகற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பதற்கு முடியாத சந்தர்ப்பத்தில், அக் கழிவு நீரை, சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அல்லது மத்திய சூழல் அதிகார சபையின் தலைவர் அவர்களினால் சிபாரிசு செய்யப்படும் முறையில் நீர் உறிஞ்செடுக்கம் குழிக்கு வழிந்தோடக் கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வகையில் நீர் உறிஞ்செடுக்கும் குழியானது காற்று செல்லக் கூடிய வகையில் திறந்து வைக்காமல் அதற்கருகில் இருக்கும் பொது நீர் வழிகளில் இருந்து அல்லது அங்கு அமைக்கப்பட்டுள்ள கிணறுகளில் இருந்து ஐம்பது மீற்றருக்கு குறையாத தூரத்தில் அமைக்கப்படுதல் வேண்டும்.

(12) அனைத்து தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் மண்டபகங்களுக்காகவும் பயன்படுத்தப்படும் கட்டிடத்தினுள் மற்றும் வெளி புறத்தில் போதியளவிலான தீயணைப்பு ஒழுங்கு முறைகளை செய்திருத்தல் வேண்டும்.

(13) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் மண்டபத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் அறைகளில், முன்னர் பயன்படுத்தப்பட்ட பொதிகள் அல்லது ஏனைய பொருட்கள் மீண்டும் பாவனைக்கு எடுப்பதற்காக கழுவும் போதும் மற்றும் ஊழியர்களின் குளியலறைகளில் இருந்து அகற்றப்படும் கழிவு நீர் தடையின்றி வழிந்தோடக் கூடிய வகையிலும் உள்ளக நீர்வடிகால் (Drainage) முறையொன்றை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

(14) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தகம் மண்டபத்தில் பயன்படுத்தப்படும் மருந்துகள், இரசாயன பொருட்கள். உபகரணங்கள் மற்றும் பொருட்கள், ஏதேனும் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் போத்தல்கள் அல்லது ஏனைய ஏதேனும் பொதிசெய்யப்பட்ட பொருட்கள் போன்றவற்றை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக குறைந்த பட்சம் ஒரு அறை வேறாக வழங்கப்பட்டிருக்க வேண்டியதுடன். அவ் அறையில் எலிகளினால் மற்றும் ஏனைய பூச்சிகளினால் அவைகள் பாதிக்காத வகையில் பாதுகாப்பு ஒழுங்கு முறைகள் ஏற்படுயிருத்தல் வேண்டும். அதேபோன்று குளிர்சாதன பெட்டி அல்லது அதி குளிர்சாதனபெட்டிகளில் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டிய மருந்துகள் அல்லது இரசாயன பொருட்கள் என்றால் அதற்கான மிக சிறந்த செயல்முறைகளின் படி குளிர்சாதன பெட்டிகளை பயன்படுத்த வேண்டும்.

(15) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தில் பயன்பாட்டிக்காக எடுக்கப்படும் நீரானது மனித பாவனைக்காக பயன்படுத்தப்படுமென்றால் அதற்கு மிக சிறந்த வகையில் தேசிய நீர் வழங்கள் சபை மற்றும் நீர் வடிகால் சபையினால் வழங்கப்படும் தரச்சான்றிதழ் இருக்க வேண்டியதுடன் குறைந்த பட்சம் நான்கு மாதத்திற்கு ஒரு முறை இதற்கான தரச்சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(16) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தில் பாவனைக்கு எடுக்கப்படும் நீர் களஞ்சியப்படுத்தி வைப்பதென்றால் களஞ்சியப்படுத்தப்படும் நீர் அசுத்தமடைவதை மற்றும் நுளம்புகள் மற்றும் ஏனைய பூச்சு புழுக்கள் பரவாமல் தடுப்பதற்கான பாதுகாப்பு ஒழுங்கு முறைகளை ஏற்பாடு செய்ய வேண்டியதுடன் அந்நீரை, நிலத்தின் கீழ் களஞ்சியப்படுத்தி வைப்பதென்றால் அவ் இடத்தில் இருந்து 18 மீற்றருக்கு குறைந்த தூரத்திற்குள் குப்பை குழிகள் அல்லது உரக் குழிகள் அல்லது சாம்பல் குழிகள் இருக்கக் கூடாது.

(17) முன்னர் பயன்படுத்தப்பட்ட பொதிகள் அல்லது துணிகள் கழுவுகதற்காக பயன்படுத்தப்பட்ட இடங்களில்,அப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் அறைகளில் இருந்து வேறான இடங்களில் இருக்க வேண்டியதுடன், மேற்படி (15) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் தரச் சான்றிதழ் வழங்கப்பட்ட நீர் மாத்திரம் அதற்காக பயன்படுத்த வேண்டும்.

(18) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தின் பணிகளின் காரணமாக உருவாகும் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கான துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தின் படி வகைப்படுத்தி அகற்றக் கூடிய வகையில் ஒதுக்கப்பட்ட பாத்திரங்கள் இருத்தல் வேண்டும்.

(19) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையத்தில் செய்யப்படும் அறுவை சிகிச்சை அல்லது ஏனைய பணிகளின் காரணமாக அகற்றப்படும் உடம்பின் பகுதிகள் பதுளை மா நகர சபையின் பொது மயாண பூமியில் மாத்திரம் புதைப்பதற்கு தேவையான விதி முறைகளை ஏற்படுத்த வேண்டும்.

(20) ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்பட்ட தடுப்பு ஊசிகள், சிரின்ஜ், குருதி துடைக்கும் பஞ்சு அல்லது ஏனைய பொருட்கள் சுகாதாரத்திற்கு உகந்த முறையில் அகற்றுவதற்கு சிறந்த ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும். (இன்சினரேட்டர் பயன்படுத்தல்)

5. அனைத்து தனியார் மருத்துவ மனைகளிலும், தனியார் மருத்துவ சிகிச்சை நிலையங்களிலும் தனியார் மருத்துவ ஆய்வுகூடங்களிலும், தனியார் மருந்தக மண்டபங்களிலும் தொழில்புரியும் பெண், ஆண் இருபாலருக்குமாக போதியளவான வெவ்வேறு வசதிகளை கொண்ட ஊழியர் ஓய்வு அறைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபம் நடாத்தி செல்லப்படும் நிலையங்களின் அனைத்து பகுதிகளிலும் முற்புதர்கள் அல்லது புற்புதர்கள் இல்லாத வகையில் நடாத்திச் செல்லுதலும் நுளம்புகள் அல்லது ஏனைய பூச்சு புழுக்கள் பரவும் விதத்தில் நீர் தேங்கி இருப்பதை தவிர்க்க வேண்டியதுஅனுமதிபத்திரம் பெறுநர்களின் கடமையாகும்.

7. துர்நாற்றம் அல்லது விசத்துடன் ஏதேனும் காற்று வெளியில் வீசுதலை தவிர்ப்பதற்கான தேவையான முன்னெச்சரிக்கையை ஏற்படுத்தியிருந்தால் அன்றி ஏந்தவொரு நச்சுதன்மையுடன் அல்லது தொல்லைகொடுக்கும் துர்நாற்றத்தை ஏற்படுத்தும் ஏதேனும் பொருள் ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையத்தில் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டப சூழலில் களஞ்சியப்படுத்தல் அல்லது பாவனைக்கு எடுத்தல் அல்லது அப்படி செய்வதற்கு திட்டமில் எவரேனுமொரு நபரினால் செய்யக்கூடாது.

8. 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சூழல் விடயபொறுப்பான அமைச்சர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட மற்றும் அந் நிபந்தனைகளுக்குபடி காலத்திற்கு காலம் செய்யப்படும் திருத்தங்களின் படி ஒலி மாசடைவதன் வரையரை குறைத்து ஒலியை நிர்வகித்து நடாத்துவதன்றி எதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார்

மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தில் ஒலி உருவாகக்கூடிய ஏதேனும் இயந்திரங்கள் அல்லது ஆவியாகும் கொதிகலம் மூலம் அல்லது செயற்படுத்தும் போது ஒலி உண்டாகும் ஏனைய விதத்திலான இயந்திரங்கள் பயன்படுத்தக் கூடாது.

9. ஏதேனும் அடுப்புகளில் இருந்து உருவாகும் புகை வெளியேறுவதற்காக 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் விடய பொறுப்பான அமைச்சர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட மற்றும் அக் கட்டளைகளுக்கு காலத்திற்கு காலம் செய்யப்படும் திருத்தங்களின் படி, புகைகூடு அமைக்கப்பட்டிருந்தால் அன்றி ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தில் புகை உருவாகும் ஏதேனும் அடுப்புகளை பாவனைக்கு எடுக்க கூடாது.

10. இத் துணைவிதியில் காட்டப்பட்டுள்ள விதத்தில் மைப்பூச்சு பூசுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள பகுதியானது குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்கு ஒரு முறையாவது மைப்பூச்சு பூசுதல் வேண்டும்.

11. ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தில் உள்ள அனைத்து அறைகளும் அதன் சுற்றுப்புறங்களும், வாய்க்கால்களும், மரப்பலகையினாலான உபகரணங்கள் போன்றவற்றை சுத்தமாகவும் சிறந்த பழுதுபார்த்தலுடன் நடாத்திச் செல்ல வேண்டும்.

12. பயன்படுத்தப்பட்ட துணிகள், கட்டில் விரிப்புகள், கைதுடைப்புகள் மற்றும் ஏனைய அனைத்து உபகரணங்களும் சுத்தம் செய்து மீண்டும் அதனை பாவனைக்கு எடுப்பதென்றால் பயன்படுத்திய துணிகள், கட்டில் விரிப்புகள், கைதுடைப்புகள் மற்றும் ஏனைய அனைத்து உபகரணங்களும் சுத்தம் செய்யும் போது-

(அ) பயன்படுத்தப்பட்ட துணிகள்,கட்டில் விரிப்புகள், கைதுடைப்புகள் மற்றும் ஏனைய அனைத்து உபகரணங்களும் ஆரம்ப சுற்றில் சுத்தம் செய்வதற்காக ஒரு தாங்கியும், மற்றும்

(ஆ) அதில் பயன்படுத்தப்பட்ட துணிகள் கட்டில் விரிப்புகள், கைதுடைப்புகள் மற்றும் ஏனைய அனைத்து உபகரணங்களும் இறுதி சுற்றில் சுத்தம் செய்வதற்காக இன்னுமொரு தாங்கியும்,

என குறைந்த பட்சம் இரண்டு தாங்கிகள் பயன்படுத்த வேண்டியதுடன் இறுதியாக சுத்தம் செய்வதலானது நீர்வழிந்தோடக் கூடிய வகையிலான நீரில் சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

13. (அ) ஏதேனுமொரு தொற்றுநோய் அல்லது பரவும் நோயினால் பீடிக்கப்பட்டிருந்து அல்லது சமீபத்தில் அப்படியான நோய்களினால் பீடிக்கபட்டிருந்த எவரேனுமொரு நபர் அல்லது அப்படியான நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் எவரேனுமொருவருக்கு சமீபத்தில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனுமொரு நபர் அந் நோய் காவிகளுக்கான காலம் கடந்திருந்தாலே தவிர ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தின் பணிகளுக்காக ஈடுபடுத்தக் கூடாது.

(ஆ) ஏதேனும் தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தின் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறை மருத்துவ பரிசோதனைக்கு ஈடுபடுத்த வேண்டியது அனுமதிபத்திரம் பெறுநரின் கடமையாகும்.

14. ஏதேனும் தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தில் தொழில்புரியும் அனைத்து ஊழியர்களிடமும் அவரிகளின் பணிகளின் முக்கியத்துவங்களுக்கேற்ப பாதுகாப்பானவாயுரை பாதுகாப்பான கையுரை மற்றும் தேவைகேற்ற ஏனைய பாதுகாப்பு அணிகள் வழங்கப்பட்டிருத்தல், அப் பணிகளில் ஈடுபடும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர்கள் அப் பாதுகாப்பு அணிகளை அணிந்துள்ளார்களா என்பதை உறுதிபடுத்தல் அனுமதிபத்திரம் பெறுநர்களின் கடமையாகும்.

15. (அ) அனுமதிபத்திரம் பெறப்பட்ட நிலையத்திற்குள் உருவாகும் அனைத்து கழிவுகளும் மீண்டும் பாவனைக்கு எடுப்பதென்றால் அன்றி அக் கழிவு பொருட்களை-

(i) உயிரினக் கழிவுப்பொருட்கள் ;

(ii) கண்ணாடிகள்;

(iii) கடதாசிகள் அல்லது கடதாசிகளை சார்ந்த பொருட்கள்;

(iv) பொலித்தின் அல்லது பிலாஸ்டிக் அல்லது பொலித்தின் மற்றும் பிலாஸ்டடிக்கை சார்ந்த பொருட்கள் மற்றும் ரிஜிபோம் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோக பொருட்களினால் ஆன அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோக கலப்பினால் ஆன பகுதிகள்;

(vi) ஆபத்தான கழிவுப்பொருட்கள், போன்றவைகளை வகைபடுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுடன், அந்த ஒவ்வொரு வகையான கழிவுபொருட்களை போடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெவ்வேறு வகையான பாத்திரங்களில் போடுவதற்கு ஏற்பாடு செய்தல் அனுமதிபத்திரம் பெறுநர்களின் கடமையாகும்.

(ஆ) மேற்படி (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி வகைப்படுத்தி பாத்திரங்களில் போடப்பட்டுள்ள கழிவு பொருட்களை பதுளை மா நகர சபையின் கழிவு பொருட்கள் முகாமைத்துவத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள ஒழுங்கு முறையின் கீழ் அகற்றப்படுதல் அன்றி நகர ஆணையாளரினால் கட்டளையிடப்படும் விதத்தில் இறுதி கழிவு பொருட்களை அகற்றல் வேண்டும்.

16. இப்பிரிவின் துணைவிதியின் நியமங்களை பரிசோதனை செய்வதற்கு மாநகர ஆணையாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு அதிகாரம் கிடைக்கும் காலத்தில் அந்நிலையத்திற்கு சம்பந்தப்பட்ட பணிகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செய்யப்படும் என கருதப்படும்.

17. இப் பிரிவின் துணைவிதியின் கீழ் அனுமதிபத்திரம் கிடைக்கப்பெற்ற ஏதேனுமொரு தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபமொன்றை நடாத்தி செல்லப்படும் இடமொன்றில் மாநகர ஆணையாளரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் பரிசோதனை செய்த பின் இப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு துணைவிதியின் நியமங்களுக்கு முரனாக செயற்படும் சந்தர்ப்பத்தில், உத்தேசிக்கப்பட்ட தினத்திற்கு முன் அந்நிலையத்தின் அக்கட்டளைகளுக்கு அமைவாக கொண்டுவருவதற்கு தேவையான அனைத்தையும் செய்யுமாறு அனுமதிபத்திரம் பெறுநருக்கு கட்டளை விதிக்கப்படும் அறிவித்தல் ஒன்றை மாநகர ஆணையாளர் அவர்களினால் அவ் அனுமதிபத்திரம் பெறுநருக்கு ஒப்படைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

18. 16 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற அல்லது அனுமதிபத்திரம் பெறுநரினால் அவ் அறிவித்தலில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன் அவ் அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விதத்தில் செயல்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் எழுத்துமூலமான காரணங்களை முன்வைத்துள்ள சந்தர்ப்பத்தில் அவ் அறிவித்தலில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடிப்பதற்கு நகர ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அப்படி நீடிக்கப்படும் காலமானது பதின்நான்கு தினங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

19. 16ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற ஏதேனுமொரு அனுமதிபத்திரம் பெறுநரினால் அவ் அறிவித்தலில் உறுதிசெய்யப்பட்ட தினத்திற்கு அல்லது நீடிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அவ் அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விதத்தில் செயற்படாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில், அந் நிலையத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிபத்திரத்தை நகர ஆணையாளரினால் சட்ட ரீதியாக இரத்துச் செய்தல் வேண்டும்.

20. இத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தை மீறும் அனுமதிபத்திரம் பெறுநர் ஏதாவது காரணத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டால், மா நகர சபை கட்டளைச் சட்டத்தில் 267 ஆம் சரத்தின் 03 உப சரத்தின் மூலம் விதிக்கப்படும் தண்டனைகளில்,-

(i) முதலாவதாக செய்யப்படும் தவறு என்றால், 1000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(ii) இரண்டாம் முறை அல்லது அதன் பின்பு செய்யப்படும் தவறுக்கு ஒரு தினத்திற்கு 2000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(iii) அதற்கு பிறகும் செய்யப்படும் தவறு தொடர்பாக, குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அதை மீறும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு கௌரவ நகரபிதா அவர்களிடம் எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் அல்லது தொடர்ந்து தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத மேலதிக அபராதத்தின் கீழாகும்.

21 சொற்கள் சம்பந்தமாக வேறு அர்த்தங்கள் தேவைபடுமென்றால் தவிர, இப் பகுதியின்-

- "உத்தியோகத்தர்" எனப்படுவது நகரஆணையாளரினால் அதிகாரம் கிடைக்கப்பெற்ற சபையின் உத்தியோகத்தர்களாகும்.
- "அனுமதிபத்திம் பெறுநர்" எனப்படுவது ஏதேனும் தனியார் மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது தனியார் மருத்துவ ஆய்வுகூடம் அல்லது தனியார் மருந்தக மண்டபத்தின் உரிமையாளர் அல்லது முகாமைத்துவ பணிப்பாளர் அல்லது முகாமையாளராகும்.
- "அதன் பின்பு" எனப்படுவது மீண்டும் மீண்டும் இல்லாவிட்டால் தொடர்ச்சியாக என்பதாகும்.

## பாடம் XLVII

### கட்டிடங்கள் மற்றும் வடிகால்கள் நிர்மாணித்தல் தொடர்பான துணைவிதி

1. (அ) 1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவினூடாக மாநகர சபைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின்படி, ஏதேனுமொரு வீதியை ஒட்டி யாதாயினும் ஒரு வடிகால் அமைக்கப்பட்டிருந்தால் அல்லது தோண்டப்பட்டிருந்தால் அவ் வீதியை அடுத்துள்ள ஒரு வீட்டின் காணி ஒன்றிலோ அல்லது பிரதேசத்தின் உரிமையாளரோ அல்லது வதிவாளரால் நகர ஆணையாளரின் அனுமதியுடன் மற்றும் விதிக்கப்படுதல் வேண்டுமென மாநகர ஆணையாளர் கருதுகின்ற நிபந்தனைகளுக்கு அவரால் கட்டளையிடும் வகையில் ஏதேனுமொரு வடிகாலின் மீது ஏதேனுமொரு பாலமொன்று மேடையொன்று கட்டிடமொன்று அல்லது ஏதேனுமொரு வகையிலான வடிகாலைத் தோண்டுதல் அல்லது அமைத்தல் கூடாது.

(ஆ) மேலும், அவ் உரிமையாளரோ அல்லது வதிவாளரினால் அப் பாலம், மேடை கட்டிடம் அல்லது ஏதேனுமொரு விதத்திலான ஆக்கம் மாநகர ஆணையாளர் திருப்திப்படும் வகையில் சிறந்த முறையில் பராமரித்தல் வேண்டும்.

(இ) எவரேனுமொரு பிரிவினருக்கு அவ்வாறு அமைந்துள்ள ஒரு வீட்டிற்கு காணிக்கு அல்லது பாலம் நடைபாதை, அல்லது மேற்கூறியது போன்ற ஆக்கம் அன்றி பிரதேசம் இடம்பெறுகின்ற அல்லது மேற்கூறியவாறு செய்யப்பட்ட ஒன்று அல்லது வைக்கப்பட்ட ஒன்று அல்லாத வேறு பாலமொன்று மேடையொன்று கட்டிடமொன்று அல்லது ஆக்கமொன்றின் ஊடாக உட்புகுதல் நடைபெறுவதாக மாநகர ஆணையாளருக்கு அல்லது வதிவாளருக்கு அதனை காலம் தாழ்த்தாது நிர்மாணிக்குமாறு, அல்லது மாற்றுமாறு அல்லது அப் பாலத்தினை மேடையை கட்டிடம் அல்லது ஆக்கம் அல்லாவிட்டால் அதற்கு அடியில் உள்ள கால்வாயினை சிறந்த முறையில் அமைத்துக்கொள்ளுமாறு அதன் உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு அறிவித்த லொன்றினூடாக அறியத்தருதல் சட்டரீதியானதாகும்.

(ஈ) அவ் அறிவித்தல் கையளிக்கப்பட்டு முப்பது நாட்களுக்குள் அல்லது அவ் அறிவித்தலில் அச் செயற்பாடானது மிகவும் அவசர காரியமொன்றாக நகர ஆணையாளரினால் குறிப்பிடப்பட்டிருக்குமாயின் அவ்வாறு அறிவித்தல் கையளிக்கப்பட்டு பதினான்கு நாட்களுக்குள்ளோ அவ்வாறு வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் நியமங்களை பூர்த்தி செய்வதனை தவறவிடில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அவ் உரிமையாளரோ அல்லது வதிவாளரோ தவறை செய்கின்றனர். மற்றும் நகர ஆணையாளரினால் அவ் வேலைகளை மேற்கொள்வதற்கு தயார்படுத்த இயலுமானதுடன், அதற்கான மற்றும் செலவுகளை குறித்த உரிமையாளரோ உரிமையாளர்களோ செலுத்துதல் வேண்டும். உரிமையாளர் அல்லது வதிவாளர் பணம் செலுத்துவதினை தவறவிடுவாராயின் அப் பணத்தினை வரிப்பணமாக, குத்தகையாக அறிவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. (அ) தேவையானது என மாநகர ஆணையாளர் கருதுவாராயின் கட்டிடமொன்றினை சார்ந்து இருக்கும் பட்டியொன்றில் அல்லது காணியொன்றில் அல்லாவிட்டால் கட்டிடங்களுக்கு இடையில் அல்லது கட்டிட வரிசையொன்றுக்கிடையிலோ காணப்படுகின்ற ஏதேனுமொரு குறுக்குப் பாதையில், அல்லது அடிப்பாதையொன்றின் உரிமையாளருக்கு அல்லது உரிமையாளர்களுக்கு நகர ஆணையாளரினால் நியமிக்கப்படக்கூடிய குறிப்பிட்ட சாதாரணமான காலத்திற்குள் அந்த பட்டி காணி, குறுக்குப் பாதை, பாதை அல்லது சந்தர்ப்பத்துக்கேற்றவாறு அவ்வாறான ஒரு கட்டிடமொன்றில் அல்லது கட்டிடங்களில் அல்லது கட்டிடத் தொடரொன்றிலிருந்து 45 மீற்றருக்கு மேற்படாத தூரத்திற்கு கற்களை தூவி மாநகர ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற ஏதேனுமொரு விதத்தில் மேற்கொள்ளுமாறும் அந்த பட்டியில் குறுக்குப் பாதையில் அல்லது ஒற்றையடிப் பாதையில் நீர்கால்வாய் வழிந்தோடும் செயற்பாட்டிற்காக அருகிலுள்ள மாநகர சபைவடிகாலமைப்பு அல்லது வடிகால் வரை போதியளவு வடிகால்கள் அல்லது குழாய்கள் வழங்குமாறும் நகர ஆணையாளரினால் எழுத்துறுவிலான கடதாசியினூடாக நியமித்தல் சட்டரீதியானதாகும்.

(ஆ) அந்த வடிகால் அல்லது குழாய்கள் மாநகர ஆணையாளர் நிர்ணயிக்கின்ற பொருட்களினாலும், விசாலமுடையதாயும், தரமுடையதாயும், சரிவடையவதாயும் அமைக்கப்பட வேண்டியதுடன், குறித்த மாநகர சபை வடிகால் தொகுதி அல்லது வடிகாலுடன் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற இடத்தில் இணையக்கூடியதாயும் அமைதல் வேண்டும்.

(இ) அவ்வாறான ஒரு அறிவித்தலில் நியமிக் கப்பட்ட காலத்திற்குள் அதிலுள்ள நியமங்களை மேற்கொள்வதை அதன் உரிமையாளரோ அல்லது உரிமையாளர்களினால் தவறவிடுவார்களாயின் அவர் அல்லது அவர்கள் ஒரு தவறினை செய்கின்றார்கள். மேலும் நகர ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்கள் அவ் இடத்தில் அந் நியமித்த வேலைகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய இயலுவதோடு, அதன் செலவுகள் உரிமையாளரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) அவ்வாறாயினும் அருகிலுள்ள மாநகர சபை வடிகால் தொகுதிக்கு அல்லது கால்வாய்க்கு உள்ள தூரம் அந்த பட்டியிலிருந்து நிலத்தின் குறுக்குப் பாதை, பாதையில் அல்லது அடி பாதையிலிருந்து முப்பது மீற்றருக்கு அதிகரிக்குமாயின் மாநகர சபையின் விருப்பினை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளாது அவ்வாறான அறிவித்தலொன்றினை வெளியிடல் கூடாது.

(உ) அப்படியெனினும் உரிமையாளரினால் வழங்கப்பட வேண்டிய கட்டிட நிர்மாணப் பொருட்கள் நகர ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட கட்டிட நிர்மாணப் பொருட்களாதல் வேண்டும்.

(ஊ) 2 ஆம் துணைவிதியின்படி செயற்படுவதற்கு உரிமையாளரினால் மாநகர ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டால் மாநகர ஆணையாளர் அக் கைத்தொழிலை செயற்படுத்தி அதற்காக திருப்தி கொள்வாராயின் அதற்காக செலவாகும் என மதிப்பிடப்படுகின்ற அனைத்து பணத்தொகையினையும் முன் கூட்டியே விண்ணப்பதாரியிடம் அறவிட்டுக்கொண்டு அந் நடடிவடிக்கைகளை செயற்படுத்துதல் வேண்டும்.

3. (அ) ஏதேனுமொரு தனிப்பட்டவடிகால் தொகுதியொன்று அல்லது வடிகால் ஒன்று அதன் உரிமையாளரது கட்டிடமொன்றின் கீழ் காணப்படினும் குறித்த வடிகால் தொகுதிக்கு அல்லது கால்வாய்க்கு முறையான காற்றோட்டம் கிடைப்பதன் பொருட்டு நகர ஆணையாளர் நியமிக்கின்ற நியாயமான காலப் பகுதிக்குள் அவசியமானதென நகர ஆணையாளர் கருதுகின்ற ஏதேனும் குழாய்களை பொருத்துமாறு குறித்த வடிகால் தொகுதி அல்லது கால்வாயின் உரிமையாளருக்கு நகர ஆணையாளரினால் எழுத்து வடிவிலான அறிவித்தல் ஒன்றினூடாக நியமிப்பது சட்டரீதியானதாகும்.

(ஆ) காற்றோட்டம் ஏற்படுத்தப்பட்ட மாநகர ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற பருமனுடன் மற்றும் பொருளினால் காணப்பட வேண்டியதுடன், அவ்வாறு விதிக்கப்படுகின்ற உயரம் வரை கொண்டு செல்ல வேண்டும். நியமிக்கப்பட்ட காலத்திற்குள் அவ் அறிவித்தலிலுள்ள நியமங்களுக்கு ஏற்ப செயற்படுவதை அவ் உரிமையாளர் தவறவிட்டால் அவர் தவறொன்றினை செய்கின்றார். மேலும் மாநகர ஆணையாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பபெற்ற ஒரு அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்கள் அவ் இடத்திற்குள் நுழைந்து நியமிக்கப்பட்ட வேலையினை நிறைவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய இயலுமானதோடு அதற்கான செலவுகள் அதன் உரிமையாளரினால் செலுத்துதல் வேண்டும். உரிமையாளர் அல்லது வதிவாளர் பணம் செலுத்துவதினை தவறவிடில், அப் பணத்தினை வரிப்பணமாககுத்தகையாக அறிவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. (அ) ஏதாயினுமொரு அல்லது கால்வாயுடன் தொடர்புபடுகின்ற மேற்புரம் மூடப்பட்ட ஒரு கால்வாய் அல்லது குழாயை எடுத்தல் அல்லது இடுதல் (252 ஆம் அத்தியாயமான, மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் கீழ் தேவை என தெரியவருகின்ற சந்தர்ப்பத்தில் அக் கால்வாயினை அமைத்தல் அல்லது குழாயை இடுவதற்காக நீரைக்கொண்டு செல்ல வேண்டிய கட்டிடம் அல்லது இடம் அல்லது பொது வடிகால் அல்லது வடிகால் தொகுதிக்கு இடையில் உள்ள ஒரு காணி அல்லது காணிகளினூடாக கொண்டு செல்வது தேவையாக இருக்கும் பொழுது நகர ஆணையாளர் அல்லது குறித்த செயற்பாட்டுக்காக அவரது எழுத்து மூல அதிகாரத்தின் கீழ் செயற்படுகின்ற மாநகர சபையின் ஒரு அதிகாரி ஒருவரினால் அவ் வடிகாலினை அமைத்தல் அல்லது குழாய்களை இடுதல் செய்து பூர்த்தி செய்வதற்கு நகர ஆணையாளர் கருதுகின்றார் என அதற்கு இடைநடுவிலுள்ள காணியில் அல்லது காணிகளில் உரிமையாளருக்கோ அல்லது வதிவாளருக்கோ ஒரு வார கால அவகாசம் வழங்கியதன் பின்னர் அக்காணிக்குள் அல்லது காணிகளுக்குள் நுழைந்து அக் கால்வாயினை அமைத்தல் அல்லது குழாயிடுதல் முன்னெடுத்துச்

சென்று பூர்த்தி செய்தல் சட்டரீதியனதாகும். அக் காணயின் உரிமையாளர் குத்தகையாளர் அல்லது வதிவாளர் நகர ஆணையாளரின் எழுத்து வடிவில் விருப்பினைப் பெற்றுக்கொள்ளாது அக் கால்வாய் அல்லது குழாயினை மாற்றம் செய்வதோ அல்லது நீக்குதல் அல்லது புணர் நிர்மாணம் செய்வதோ மேற்கொள்ளல் கூடாது.

கால்வாய்கள் வடிகால் தொகுதி முறையினை காணிகளின் நடுவில் நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்தினில் அக் காணியில் அல்லது காணிகளில் உரிமையாளருக்கு அல்லது ஏதேனுமொரு நஷ்டம் ஏற்படுமாயின் அந் நஷ்டத்தினை வடிகால் தொகுதியமைப்பை அல்லது குழாயினை பொருத்துகின்ற நபரினால் செலுத்தப்பட்டதன் பின்னர் அவ் வேலையினை நடைமுறைப்படுத்துதல் இயலும்.

5. (அ) ஏதாவது வடிகால் தொகுதியொன்று அல்லது கால்வாயொன்றுடன் இணைக்கின்ற மேற்புரம் மூடப்பட்ட கால்வாயொன்று அல்லது குழாய் ஒன்றினை அமைக்குமாறு அல்லதுகுழாயிடுமாறு (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 110 ஆம் சரத்தின் கீழ் தேவை என தெரியவரும் பொழுது அக் கால்வாயினை அமைத்தல் அல்லது குழாய்யிடுவதற்காகா நீரை வழியச் செய்ய தேவையான கட்டிடம் மற்றும் பொது வடிகால் தொகுதியின் வடிகாலொன்றின் இடை நடுவிலுள்ள ஒரு காணி அல்லது காணிகளினூடாக அதனை எடுத்துச் செல்வது அவசியமானதென சான்றிதழ் ஒன்றினை வழங்குவது பொருத்தமானதென நகர ஆணையாளருக்கு தெளிவாகுமேயானால் அவரால் அவ்வாறான எழுத்துவடிவிலான சான்றிடலொன்றினை அந் நபருக்கு வழங்குதல் முடியும்.

(ஆ) அச் சான்றிதழ் வழங்கப்பட்டதன் பின்னர் மற்றும் இடைநடுவிலுள்ள காணியின் அல்லது காணிகளின் உரிமையாளருக்கு அல்லது உரிமையாளர்களுக்கு நியாயமான நஷ்டஈடு செலுத்துதல் அல்லது முன் வைத்ததன் பின்னர் எந்த ஒரு நேரத்திலும், அந் இடை நடுவிலுள்ள காணியில் அல்லது காணிகளில் உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு தான் அக் கால்வாயினை நிர்மாணித்தல் அல்லது குழாய்களை இடுவதைப் பூர்த்தி செய்வதற்கு எண்ணுவதாக ஒரு வார கால அவகாசம் வழங்கியதன் பின்னர் அந் நபரினால் தேவையான குறிப்பிட்ட உதவியாளர்கள், தொழிலாளர்கள், வாகனங்கள் மற்றும் மிருகங்கள் மற்றும் ஏனைய உபயோகப்படுகின்ற பொருட்களையும் எடுத்துக்கொண்டு அந்த இடை நடுவிலுள்ள காணிக்குள் அல்லது காணிகளுக்குள் நுழைந்து அக்கால்வாயினை அமைத்தல் அல்லதுகுழாய்யிடுவதை .முன்னெடுத்துச்சென்று பூர்த்தி செய்வது சட்டரீதியிலானாதாகும். குறிப்பிட்ட நியாயமான நட்ட ஈட்டுத்தொகை மற்றும் தேவைப்படின் அதனை பிரித்து பகுதியாக செலுத்துவது பற்றி கருத்து முரண்பாடு ஏற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் தீர்ப்பாளர்கள் இருவரினால் தீர்வு செய்வதற்காக முன் வைத்தல் வேண்டும்.

(இ) இந்த தீர்ப்பாளர்களில் ஒருவர் மேற்குறிப்பிட்ட நபரினாலும் மற்றைய தீர்ப்பாளர் குறித்த காணியின் அல்லது காணிகளது உரிமையாளர் அல்லது உரிமையாளர்களினாலும் பெயர் குறிப்பிடல் வேண்டும். நியாயமான நட்டஈட்டு பணத்தொகை அல்லது அதனைபங்கு பிரிக்க வேண்டிய விதம் தொடர்பான இணக்கப்பாடொன்றிற்கு வருவதற்கு தீர்ப்பாளர்களினால் இயலாதவிடத்து தாம் உடன்படாத கருத்து அல்லது கருத்துக்களை அவர்களால் குறித்த நடுநிலையாளருக்கு முன்வைக்க வேண்டும். அவரது தீர்மானம் இறுதி தீர்மானமாக அமையும் தீர்ப்பாளர் ஒருவரைப் பெயர் குறிப்பிடுமாறு அறிவித்தலொன்று உரிமையாளருக்கு அல்லது உரிமையாளர்கள் அனைவருக்கும் கிடைத்த பத்து நாட்களுக்குள் அவ்வாறு தீர்ப்பாளர்களை நியமிப்பது குறித்த உரிமையாளர் அல்லது உரிமையாளரிகளினால் நியமிக்கப்பட்ட தீர்ப்பாளர்கள் குறித்த நட்ட ஈட்டுத் தொகையை அவ் வந்திப் பணத்தின் தொகை மற்றும் அதனை பங்கு போடும் விதம் பற்றி தீர்மானித்தல் வேண்டும்.

6. அனுமதிக்கப்பட்ட கட்டிடமொன்றை நிர்மாணிக்கின்ற அல்லது பருமனை அதிகரித்தல் அல்லது தரமுயர்த்துகின்ற அல்லது கட்டிடமொன்றின் முற்பகுதியை புதுப்பிக்கின்ற அல்லது மாற்றியமைக்கின்ற அனைத்து நபரும் அல்லது நபர்களும் ஏதேனுமொரு தூண் ஒன்றினை நிர்மானித்தல் இல்லாவிட்டால் வடிகாலொன்றின் மேலாக பாலமொன்றுமேடையொன்று அல்லது ஆக்மொன்று நிர்மாணிக்கின்ற அல்லது ஏதேனுமொரு மலசலகூடம் அல்லதுஅசுத்த நீர்க்கழி நிர்மாணிக்கின்ற அனைத்து நபரும் அல்லது நபர்களும் தனக்கு சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி நகர ஆணையாளரினால் ஏதேனுமொரு கட்டிடமொன்று கால்வாயொன்று மலசலகூடமொன்று அல்லதுஅசுத்த நீர்க்குழி நிர்மாணிக்குமாறு, மாற்றியமைக்குமாறு அல்லது புணர்நிர்மாணம் செய்யுமாறு விதித்தன் பின்னர் பதினான்கு நாட்களுக்குள் அது தொடர்பாக மாநகர ஆணையாளருக்கு எழுத்து வடிவில் அறியத்தருதல் வேண்டும்.

7. எவரேனுமொரு நபரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் கட்டிடங்கள் பற்றிய கட்டளைகளில் குறிப்பிடப்பட்டவாறு அதற்கு பொருத்தவது எதுவோ அதன் அடிப்படையில் தவிர வாசஸ்தலமொன்றாக அவ்வாறான ஒன்றில் குடியமர்வதற்கு இடமளித்தல் சட்டரீதியினதாகாது.

(அ) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுவர்கள் தென்னோலையினால் அமைக்கப்பட்டிருக்ககூடாததோடு உரிய முறையில் சுவர்கள் சாந்து பூசப்பட்டு சுண்ணாம்பு பூசுவதற்கு இயலுமானவகையில் தட்டிகள், செங்கள், கருங்கல் அலலது வேறு ஏதேனுமொரு உகந்த ஒரு பொருளினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் தட்டிகளினால் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ள கட்டிடமொன்று தொடர்பில் 2 வருட காலப்பகுதிக்குள் நிரந்தர பொருட்களினால் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) மனிதர் வாசம் செய்வதற்காக உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளும் அனைத்து அறைக்காகாவும் குறைந்தபட்சம் .2 மீற்றர் உயரம் மற்றும் 9 மீற்றர் அகலம் கொண்ட கதவொன்று மற்றும் அறையின் தரை 1/7 சதுர அளவிற்கு சமமான அளவுடன் கூடிய யன்னலொன்று காணப்படுதல் வேண்டும்.

(இ) சுவர்கள் எப்போதும் தரை மட்டத்திலிருந்து 3 மீற்றர் உயரத்துக்குக் குறையாததாக இருக்க வேண்டும். எனினும் அமைவிற்கேற்ப அதைவிட கூடுதலான உயரத்தை நிர்ணயிப்பதற்கு சபை சுதந்திரம் உடையதாகும். குடிசைகளின் வரிசை அல்லது இரு துண்டுகளுக்கு இடையில் குறைந்த பட்சம் 4.5 மீற்றர் அளவிலான திறந்தவெளி இருத்தல் வேண்டும்.

(ஈ) இத் துணை விதியின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக அமைக்கப்பட்ட ஏதேனுமொரு வீடு அல்லது குடிலொன்றினை மாற்றியமைக்குமாறு அல்லது உடைத்துவிடுமாறு அதன் உரிமையாளருக்கு கடிதமொன்றினூடாக அறிவித்தலொன்றினை செய்து ஒரு மாதத்திற்குள் அவ்வாறு செய்வதை அந் நபர் தவறவிடில் அல்லது அலட்சியப்படுத்தினால் உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் வழங்கப்படுகின்ற கட்டளையின் படி சபையினால் உடைத்துவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் சட்டரீதியிலானதாகும்.

(உ) மாநகர ஆணையாளரினது அனுமதியின்றி ஏதேனுமொரு கட்டிடமொன்று அல்லது கட்டிடமொன்றின் பகுதியொன்று தென்னோலை, இலைகள், வைக்கோல், புல் அல்லது மரப்பட்டிகள் அல்லது வேறு ஏதெனுமொரு இயற்கையான பொருட்களினால் நிர்ணமாணிக்கின்ற புதுப்பிக்கிற அல்லது நிர்மாணிப்பதற்கு அல்லாவிடில் புதுப்பிப்பதற்கு எத்தனிக்கின்ற ஒருநபர் பிழையொன்றினை செய்கின்றார்.

8. (i) வாசஸ்தலமொன்றாக உபயோகத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு திட்டமிட்டிருக்கின்ற அல்லது உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளும் ஒரு கட்டிடம் ஏதேனுமொரு காரணத்தினால் மனித குடியிருப்பிற்கு உகந்ததல்ல என நகர ஆணையாளருக்கு தெரியவருமாயின் அக் கட்டிடத்தினை அச் செயற்பாட்டிற்காக தொடர்ந்தும் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்வதை தடை செய்யுமாறு நகர நீதிபதி அவர்களுக்கு சபையின் அதிகாரி ஒருவரினூடாக வேண்டுகோளினை செய்வதற்கு மாநகர ஆணையாளர் ஆவண செய்தல் வேண்டும். ஆய்வொன்றின் பின்னர் உகந்தது என அந்நீதிபதி அவர்கள் கருதுகின்ற ஆய்வொன்றின் பின்னர், அவரால் மேற்கூறியவாறு தடை செய்வதற்கான எழுத்து மூல கட்டளையொன்றினை விடுக்க முடியும். இல்லாவிடில் நீதியானதும் மற்றும் யோக்கியமானதும் என அவரால் கருதுகின்ற வேறு ஏதேனுமொரு கட்டளையினை விடுக்க முடியும்.

(ii) அவ்வாறான ஒரு தடைசெய்யும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கும் பொழுது அதனை மனித குடியிருப்பிற்காக உகந்ததல்ல என கருதுவதற்கு ஏதுவான காரணிகளில் தான் திருப்தியடையுமாறு தடையினை நீதிபதியினால் எழுத்து வடிவிலான கட்டளையினூடாக நீக்கிகொள்ளும் வரையில் அல்லது அவ்வாறான கட்டிடமொன்றினை உரிமையாளர் அல்லது வதிவாளர் அதனை மனித குடியிருப்பதற்காக உபயோகிப்பது அல்லது உபயோகிப்பதற்கு இடமளிப்பது மேற்கொள்ளக் கூடாது.

9. வாசஸ்தலமொன்று அல்லது பட்டியொன்று வேறு ஏதேனுமொரு செயற்பாட்டிற்காக அல்லது உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளும் கட்டிடமொன்று அல்லது கட்டிட தொடர் ஒன்று போதியளவு உயரமின்றி அல்லது உரிய நீர் வழங்கல் முறையொன்று இன்றி அமைக்கப்பட்டதன் காரணத்தினால் அல்லது குப்பைகளை அப்புறப்படுத்தலானது பிரயோக ரீதியாக மேற்கொள்ள முடியாமையின் காரணமாக அக் கட்டிடம் அல்லது கட்டிடத் தொகுதி வேறு குடில்கள் அல்லதுகூடாரங்கள் நெருக்கமாக அமைந்திருப்பதனால் அல்லது அதன் குடியிருப்பாளர்களுக்கு இல்லாவிடில் அதன் சுற்றியுள்ள குடியிருப்பாளர்களுக்கு நோய் தொற்றும் ஆபத்து ஏற்படும் சந்தர்ப்பமிருப்பதாக மாநகர ஆணையாளரினது எண்ணம் இருப்பின், அவரால் அக் குடிலில் அல்லது மடுவத்தில் அல்லது பிரசித்தமாக தெரிகின்ற ஒரு இடத்தில் காட்சிப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்கின்ற எழுத்துருவிலான அறிவித்தலொன்றினூடாக அவ் உரிமையாளருக்கு இல்லாவிடில் அக் குடிலின் அல்லது அம் மடு அமைந்திருக்கின்ற காணியின் உரிமையாளருக்கு அக் குடில் அல்லது மடுவினை நீக்கிவிடுமாறு அல்லது மாற்றியமைக்குமாறு இல்லாவிடின் தேவையான நகர ஆணையாளர் கருதுகின்றவற்றினை தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நியமிக்க முடியும்.

10. துணை விதியின் 1, 2, 3 பிரிவின்கீழ் குறிப்பிடப்படுகின்ற பணம் செலுத்துதல் உரிமையாளர் அல்லது வதிவாளரினால் தவரவிடப்படுமாயின் அப் பணத்தினை சொத்து வாரியாக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப் பத்திரத்தின் கீழ் அறவிட்டுக்கொள்ள முடியும்.

11. தற்போதுள்ள கட்டிடங்களில் அசுத்த நீர் பொது வடிகால் ஒன்றில் உரிய முறையில் வழிந்தோடுதல் நடைபெறாவிடில் அந் நீரை வடிகால்களுக்குள் செலுத்த இயலுமானதோடு, வடிகால்கள் தேவைப்படாவிடில், அந் நீரை உறிஞ்சிகொள்கின்ற குழியொன்றிற்குள் செலுத்துதல் வேண்டும்.

12. எந்தவொரு நபரும் அப்புறப்படுத்துகின்ற மண் அல்லது கழிவு வாய்க்கால், கால்வாயொன்றுக்கு, பாதையொன்றுக்கு பொது வெட்ட வெளியான பிரதேசத்திற்குள் போடுதல் சட்டரீதியானதல்ல. 13 இலக்கமுடைய துணை யாப்பின் ஏற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு, அத்தகைய மண் அல்லது கழிவுகளை நீக்குவதற்கு முடியாமல் போகுமாயின் நகர ஆணையாளரினால் எழுத்து மூலமா அதிகாரம் வழங்கப்படும் அதிகாரி ஒருவரினால் அம் மண் அல்லது கழிவுகளை நீக்கிவிட்டு அதற்காக செலவாகும் பணத்தினை உரிய நபரினது வரிப்பணம் அறிவிட்டுக்கொள்ள முடியும்.

13. இத் துணை விதிகளில் ஏதேனுமொரு துணை விதியினை மீறுதல் தண்டனைக்குரிய தவறாக அமைவதுடன், பதுளை மாநகர சபை எல்லைக்குள் நீதிமன்ற அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்து எவரேனுமொரு நபர் குற்றவாளியாக்கப்படின், கீழ் குறிப்பிடப்படுகின்ற தண்டனைகளுக்கும்.

(அ) முதலாவது தண்டனை தொடர்பில் ஆயிரதம் மேற்படாத (1,000 ரூபா) தண்டப் பணத்திற்கு

(அ) இரண்டாவது அல்லது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற தவறொன்று தொடர்பில் ரூபா இரண்டாயிரத்திற்கு மேற்படாத தண்டப்பணத்திற்கும் (ரூபா 2,000)

(இ) இடையறாது மேற்கொள்ளப்படுகின்ற தவறொன்று தொடர்பிலாகும் பொழுது குற்ற வாளியாக்கப்பட்டதன் பின்னர் அல்லது அதனை மீறியது தொடர்பில் கவனம் செலுத்தி மாநகர ஆணையாளரிடம் எழுத்து மூல தவறால் தவறிழைத்த அனைத்து நாட்களுக்கும் ரூபா இருநூற்று ஐம்பது (250 ரூபா) இற்கும் மேற்படாத மேலதிக தண்டப் பணத்திற்கும் உள்ளாக்கப்படுவார்.

14. சொற்பத விளக்கம். இத்துணை யாப்புக்களில்.

(i) 'நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டளைகள்' என்பதில் தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் யாப்பின் இலக்கம் 8 உடைய சரத்துடன் வாசிக்கப்பட்ட வேண்டிய அச் சட்டத்தின் 21 ஆம் சரத்தின் கீழ் மாகாண நிர்வாக அத்தியாயத்திற்கு பொறுப்பான கௌரவ அமைச்சரினால் உருவாக்கப்பட்ட கட்டளைகள் உள்ளடங்குகின்றன.

(ii) 'அசுத்த நீர்' மலசல கூடங்களிலிருந்து வெளியாகின்ற நீர் தவிர உடைமைகளிலிருந்து வெளியாக்கப்படுகின்ற நீர் கருதப்படுகின்றது.

## பாடம் - XLVIII

### பதுளை மா நகர சபை "தீயணைப்பு சேவை"

1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (252 ஆம் அத்தியாயமான) மா நகர சபை கட்டளைச்சட்டத்தின் 267 , 272 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 26 ஆம் உப பிரிவின் படி மா நகர சபைகளுக்கு கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம், பதுளை மா நகர சபையினால் நடாத்திச் செல்லப்படும் தீயணைப்பு படையினரின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும் ஏதேனும் தீர்மானங்களின் மற்றும் நிபந்தனைகளின் படி ஒழுங்குபடுத்தல், அதற்கான கட்டணங்களை உறுதிசெய்வதற்கு மற்றும் அறவிடுவதற்கு, நிர்வாகம் செய்தல் மற்றும் மேற்பார்வை தொடர்பான துணைச்சட்டம் பதுளை மாநகர சபையினால் விதிக்கப்படும்.

1. பதுளை மாநகர சபையின் தீயணைப்பு சேவை தொடர்பான துணைவிதியாகும்.

2. காலத்திற்கு காலம் சபையினால் உத்தியோகத்தர்கள் தேவை என கருதப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கான தீயணைப்பு படையினை நியமிக்க இயலும் என்பதுடன், தேவையான சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சி சேவைக்குரிய விதிகளை விசாரித்து பார்த்து அவ் உத்தியோகத்தர்களின் நடத்தைகள், ஒழுக்காற்று, பதவி உயர்வுகளுக்கான சேவை நிபந்தனைகளின் ஒழுங்குகளை உருவாக்க முடியும்.

3. தீயணைப்பு படையினரினால் தீ தொடர்பாக விதிக்கப்படும் சேவைகளை செய்ய வேண்டியதுடன், சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் கட்டணங்களுக்கு இங்கு V உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களின் கீழ் என்றாலும் இக் கட்டணம் வருடாந்தம் மா நகர சபையினால் திருத்தம் செய்யப்பட்டு அரச வர்த்தமாணி பத்திரிகையில் வெளியிடப்படும்.

4. (i) பிரதான உத்தியோகத்தரினால் உகந்த முறையில் அதிகாரம் வழங்கப்படும் தீயணைப்பு படை உத்தியோகத்தருக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் இருக்கின்றது:-

(அ) தீயணைப்பதற்கு செயற்படுமாறு, தீயிலிருந்த ஒருவரை மீற்குமாறு, அல்லது தீ மேலும் பரவாமல் தடுக்குமாறு மற்றும் அப்படியான செயல் சம்பந்தமாக தேவையென பிரதான உத்தியோகத்தர் கருதும்ஏனைய நடவடிக்கைகளை எடுக்குமாறு பகல் நேரத்தில் அல்லது இரவில் எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு சுழலுக்கும் இடத்திற்கும் உட்பிரவேசிப்பதற்கு மற்றும்

(ஆ) தீயினை தடுப்பதற்கான முழுபாதுகாப்பு நடவடிக்கைகளையும் பரிசோதித்து பார்ப்பதற்காக அந்த சுற்றாடலில் அல்லது அந் நிலையத்தின் உரிமையாளர், வாடகையாளர் அல்லது வசிப்பவர்களுக்கு பிரதான உத்தியோகத்தரினால் ஒப்படைக்கப்படும் கடிதத்தில் உறுதியாக குறிப்பிடப்படும் காலத்திற்குள் தீயினை தடுப்பதற்கான முழு பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்வதாக அவ் உரிமையாளருக்கு, வாடகையாளருக்கு அல்லது வதிவாளருக்கு நிபந்தனை விதிக்குமாறு அனைத்து நேரங்களிலும் ஏதேனும் ஒரு சூழலுக்கு அல்லது நிலையத்திற்கு உட்பிரவேசித்தல்.

(ii) பிரதான உத்தியோகத்தரினால் சிறந்த முறையில் அதிகாரம் வழங்கப்படும் தீயணைப்பு படையினரின் எவரேனும் ஒரு உத்தியோகத்தருக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் உண்டு:-

(அ) ஏதேனும் வீதியின் வாகன போக்குவரத்திற்காக மூடிவைத்தல் மற்றும் தீயணைக்கும், குழாய்,றப்பர் குழாய் இழுக்கும் பணிகளுக்காக அல்லது தீயணைப்பு உபகரணங்களை நிறுத்தி வைப்பதற்கு அவர்களுக்கு தேவையான பிரதேசங்களில் வாகன போக்குவரத்தை வேறு ஒரு இடத்திற்கு ஈடுபடுத்தல்.

(ஆ) ஏதேனும் சுற்றாடலில் அல்லது நிலையத்தில் தீயணைக்கும் பணிகளுக்காக அல்லது அங்கு தீ பரவிச் செல்வதை தடுக்கும் பணிகளுக்காக ஏதேனும் கிணறுகள் அல்லது தடாகங்களில் இருந்து நீரை இழுத்தல்.

(இ) தீயணைப்பு உபகரணங்கள் இழுக்கப்பட்டுள்ள அல்லது இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வாகனத்தின் சாரதியினால் தேவைபடும் என கருதும் வேகத்தில் வாகனத்தை ஓட்டுவதற்கும் அவ் வாகனம் செல்வதற்கான வீதிவசதிகளை ஏற்பாடு செய்யுமாறு வாகன ஒலி எழுப்பு கருவியை ஒலிக்கச் செய்தல். ஒரு பக்கத்திற்கு மாத்திரம் வாகனம் செல்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வீதியில் எதிர்பக்கம் தேவையென்றால் அப்பக்கத்திலும் தீயணைப்பு வாகனத்தை ஓட்டிச் செல்ல முடியும். (தேவையேட்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம்)

(iii) தீயணைப்பு படையினரால் தீயணைப்பு செயல்களுக்காக போதுமான அளவு நீர் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்யும் முகமாக சபையினால் ஏதேனுமொரு சட்டப்பூர்வமான நீர் வழங்கீட்டு திட்டமொன்றுடனான ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

(ii) சட்டப்பூர்வமான நீர் வழங்கீட்டு திட்டமொன்றினால், அப்படியான வழங்கீட்டு திட்டமொன்றின் பிரதேசத்திற்குள் பற்றியுள்ள தீயை அணைப்பதற்கு நீர் வழங்கக் கூடிய வகையில், மிகவும் இலகுவில் நீர் வழங்கக் கூடிய இடங்களில் பிரதான நீர் குழாயான தீயணைப்பு நீர் குழாய் உருவாக்குவதற்கான கடமைகளை மேற்கொள்ள வேண்டும். விளக்கமாக தெரியக்கூடிய வகையில் அறிவித்தல் அல்லது அடையாளமொன்றை காட்சிப்படுத்தி அப்படியான தீயணைப்பு நீர்குழாய் அமைப்பதை சட்டப்பூர்வமான நீர் வழங்கீட்டு பொறுப்பாளர்களிடம் காட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுடன் ஒவ்வொரு இடங்களிலும் அதன் சாவியை வைத்தல் வேண்டும்.

5. (i) எந்தவொரு நிலையத்திலும் அவ்விடத்திற்கான பிரதான உத்தியோகத்தரினால் வெளியிடப்படும் தீயணைப்பு சான்றிதழ் இருந்தால் அன்றி, செல்லுபடி காலம் இருக்குமென்றால் அன்றி தொழிற்சாலை, கடை, அலுவலகம் அல்லது மருத்துவமனை, வியாபார நிலையமாக மாடி கட்டிடமொன்றினை பயன்படுத்தக் கூடாது.

(ii) அவ்விடத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவையென்றால்–

(அ) பாதுகாப்புடன் செல்லக்கூடிய தூரம் உட்பட போதுமான அளவு தீயினால் தப்பிக்கக் கூடிய வகையிலான இடம் மற்றும் வெளியேறுவதற்கான இடம் இருக்கின்றது என,

(ஆ) மிகச் சிறந்த செயன்முறையுடன் மற்றும் போதுமானஅளவு தீயணைப்பு சேவைக்கான உபகரணங்கள் இருத்தல் மற்றும் அதன் மூலமே தீயணைப்பு செயல்களில் ஈடுபடும் ஒழுங்குமுறையொன்றை உபயோகித்துள்ளதாக

(இ) வசிக்கின்றவர்களுக்கு ஆபத்தை தெரிவிக்க கூடிய வகையில் சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய ஒழுங்கு முறையொன்றை உபயோகிக்கப்பட்டுள்ளது என்பது,

(ஈ) கட்டிடமானது தீயினால் எதிர்த்து நிற்கக் கூடிய சக்தி இருக்கும் என்பது, மற்றும்

(உ) பொதுவானதீயணைப்பு பாதுகாப்பு உள்ளது என்பது, பிரதான உத்தியோகத்தர் திருப்பதியடைவார் என்றால் அன்றி. தீயணைப்பு சான்றிதழ் கிடைப்பதற்கு எந்தவொரு நபருக்கும் உரிமை இருத்தல் ஆகாது.

(iii) இத் துணைச்சட்டத்தில்குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு இடத்தின் உரிமையாளருக்கு, வாடகையாளருக்கு அல்லது வசிப்பவர்களுக்கு. அவ்விடத்தினுள்ஏற்படுத்த வேண்டும் என பிரதான உத்தியோகத்தரினால் கருதும் பட்சத்தில் பொருத்தமானவொன்றை அங்கு ஏற்படுத்துமாறு எழுத்துமூலமான அறிவித்தலொன்றை பிரதான உத்தியோகத்தரினால் விதிக்கப்படுதல் சட்டப்பூர்வமானதாகும்.

6. திரைப்பட மண்டம் ஒன்றிற்காக பயன்படுத்தும் சினிமாகொட்டகை, மற்றும் ஏனைய நிலையங்களுக்காக துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தீயணைப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் இப் பிரிவிற்கு உட்பட வேண்டும்.

**கட்டிடத்திற்கான தீயணைப்பு பாதுகாப்பு நிபந்தனைகள்**

7. சபையினால் விதிக்கப்படும் அல்லது ஏனைய எழுத்துமூலமான சட்டத்தில் உறுதியாக குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, தங்குமிட பணிகளுக்காக பயன்படுத்தும் கட்டிடத்தை தவிர, ஏனைய கட்டிடம்மொன்று கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கான போதுமானளவு ஏற்பாடுகளை தயாரிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட வேண்டும்.

1 (அ) மாடி வீடுகளுக்கு, அலுவலகங்களுக்கு, மருத்துவமனைகளுக்கு, வெதுப்பகங்களுக்கு, பாடசாலைகளுக்கு மற்றும் விடுதிகளுக்கு ஒரு மணித்தியாலத்திற்குதாக்குப்பிடிக்கக் கூடிய வகையிலான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

(ஆ) சில்லரை கடை,தொழிற்சாலைகளுக்கு மற்றும் அதற்கு சமமான கட்டிடங்களுக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு தாக்குப்பிடிக்ககூடிய வகையில் ஏற்படுத்தல் வேண்டும்.

(இ) பொருட் களஞ்சியம் மற்றும் களஞ்சியங்களுக்கு நான்கு மணித்தியாலங்களுக்கு தாக்குப்பிடிக்க கூடிய வகையில் ஏற்படுத்தல் வேண்டும்.

2 (அ) 2833 கன மீற்றருக்கு அதிகமான கனவளவுடைய ஏதேனுமொரு கட்டிடத்தில் இருந்து ஏனைய கட்டிடங்களுக்கு 03 மீற்றருக்கு குறையாத இடைத்தூரத்திற்காக, தூரத்திற்காக,இடவசதிகளை ஏற்படுத்த வேண்டும். ஏனைய கட்டிடத்திலிருந்து இத்தூரத்தின் அளவை குறைப்பதென்றால், வெளிச் சுவர்களில் தீயிலிருந்து தாக்குப்பிடிக்க கூடிய அனைத்து 61 சென்றிமீற்றர் மற்றும் அதன் பகுதிக்காக 1/2 மணித்தியாலத்திற்கு அதிகரிக்க வேண்டும். எந்தவொரு இடத்தின் தூரத்தின் அளவையும் 91 மீற்றலிருந்து குறைக்க கூடாது.

(ஆ) 2833 கன மீற்றருக்கு அதிகமான கனவளவு உடைய ஏதேனுமொரு கட்டிடத்தின் வெளிச்சுவர்களுக்கு ஒன்றிலிருந்து ஒன்றிற்கு இடையில் 4.5 மீற்றருக்கு குறைந்த தூரத்தினை ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்றால் தவிர, இடைவெளிக்கான இடவசதிகள் ஏற்படுத்த கூடாது.

3 (அ) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளதன் படி ஒரு கதவிற்காக அனுமதி வழங்கப்படும் அதிகபட்ச ஆட்கள் நடமாடும் அளவிற்கு மேல் மொத்த நிறையையுடைய அறையொன்றின் அறையொன்றின் அல்லது மூடப்பட்ட இடத்தில் வெளியேறும் இடத்தில் விரிவடையும் ஒன்றிலிருந்து ஒன்று வேறாக அமைக்கப்பட்ட இருவர் செல்லக் கூடியவகையிலான இடைவெளிகளை கொண்ட கதவுகளாக இருத்தல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | அதிக ஆட்கள் நடமாட்டமுள்ள இடங்கள் | ஒரு கதவுடன் அதிக ஆட்கள் நடமாடக்கூடிய நிறையின் அளவு |
|---|---|---|
| 1 | அதிகமான மூலபொருட்கள் | 10 |
| 2 | பீப்பாய்,கலஞ்சியப்படுத்தும் கட்டிடம் | 50 |
| 3 | கடை, பிரிவுகளுக்கு பிரிக்கப்படும் கலஞ்சியம் மற்றும் வியாபார நிலையம் | 75 |
| 4 | அதிகமான மூலப்பொருட்களுடான தொழில்சாலை கட்டிடம் | 50 |
| 5 | கல்விக்கான கட்டிடம் | 75 |
| 6 | மருத்துவமனை | 25 |
| 7 | ஹோட்டல், சாப்பாடு கொடுக்கும் இடம்,மருத்துவமனை போன்றவை | 20 |

(i) மருத்துவமனை தவிர்ந்த மேற் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளுக்கு உரிய எந்தவொரு நபரினாலும் கட்டிடத்தில் எந்தவொரு இடத்திலிருந்தும் வெளியேறும் இடம் வரை 30 மீற்றருக்கு அதிகமான தூரத்தில் செல்லக் கூடாது.

(ii) மருத்துவமனை தொடர்பாக எந்தவொரு நபரினாலும் கட்டிடத்தில் எந்தவொரு பகுதியிலிருந்தும் வெளியே செல்லும் இடத்திலிருந்து 15 மீற்றருக்கு அதிகமான அளவில் நடக்க கூடாது.

(iii) மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் ‘‘கல்வி கட்டிடம்‘‘ தவிர பாடசாலை வகுப்பறைகளுக்கு சேர்ந்தவர்கள் வெளியேறுவதற்கான 02 வெளியேறும் இடங்கள் இருக்க வேண்டும்.

(அ) 12 மீற்றரை விட உயரத்தில் அதிகமான அனைத்து கட்டிடங்களிலும். அனைத்து மாடிகளிலும் உள்ளவர்கள் வெளியேறுவதற்கு இரண்டுவழிகளாவது இருத்தல் வேண்டும். மேலும், மக்கள் சேவையில் ஈடுபடுபவர்கள் அல்லது வசிக்கின்றவர்கள் முதலாம் மாடிக்கு மேல் ஒரு மாடியில் தப்பித்து செல்லகூடிய வகையிலான வழிமுறையொன்று ஏற்படுத்தியிருத்தல் வேண்டும். றப்பர், கொப்பரா, பஞ்சு, தும்பு, பலகை, பெட்டிகள், மரப்பலகை, பூச்சு வகைகள்,கல்சியம் காபைட்,கனிம எண்ணெய் உற்பத்திகள் வைக்கப்பட்டுள்ள கட்டிடங்களில் ஏதேனுமொரு பகுதிக்கு மேல் உள்ள ஏதேனுமொருவேலைத்தளம் ஒன்றில் தங்குமிட பணிகளுக்காக உபயோகிப்பதற்கு அனுமதியை கொடுக்கக் கூடாது.

(ஆ) அனைத்து வெளியேறும் இடங்களில் மற்றும் உட்பிரவேசிக்கும் இடங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளை கொண்ட இடங்கள் வைக்க வேண்டும்.

(i) அவைகள் விளங்கக் கூடிய வகையில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், அவ்விடங்களில் வைப்பதை தெரியக் கூடிய வகையில் வைக்க வேண்டியதுடன்,அனைத்து சந்தர்ப்பங்களிலும் கவனமாக இருப்பதற்கு தயார்படுத்தி தடைகளை இல்லாமல் இருத்தல் வேண்டும்.

(ii) கட்டிடமொன்றின்மாடியொன்றில் வெளியேறும் வழிகள் 01ற்கு மேற்பட்ட அளவு தேவைப்படும் போது, இயன்றளவு தூரத்திற்கு நடைமுறையிலுள்ள, ஒவ்வொரு வெளியேறும் வழிகளும் ஒன்றிலிருந்து ஒன்று தூரமாக அமைக்கப்பட வேண்டும். மாடிப்படிகளுக்கு உள்ள கதவுகள் தள்ளி திறக்கக் கூடிய வகையில் தள்ளும் கதவுகளாக இருத்தல் வேண்டும்.

4. (அ) தீயணைப்பதற்காக உட்பிரவேசித்தல் -

12 மீற்றருக்கு மேற்பட்டஉயரத்தில் உள்ள மாடிக்கட்டிட மட்டத்துடனான கட்டிடங்களில் தரை மட்டத்திற்கு மேல் 12 மீற்றருக்கு மேற்படாத உயரத்தில் அல்லது 2833 கன மீற்றர் கனவளவை விட அதிகரிக்காத கூரைகளுக்கு சென்று தீயணைப்பதற்கும் மற்றும் உயிர்களை மீட்பதற்கும் உபகரணங்களை உள்ளே செலுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துமாறு, 3.65 மீற்றர் கீழும், 4.6 மீற்றர் உயரத்திலும், முன்னே தடையின்றி செல்லக்கூடிய வகையிலான வழிகளுடன் மொத்த ஊழியர்களுடன், தீயணைப்பு மற்றும் உயிர்களை மீட்கப்படும் உபகரணங்களின் பாரத்தை தாங்கக்கூடிய அளவில் சக்தியுள்ளதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஆரம்ப நீரேற்ற குழாய்

(i) தடைமட்டத்திற்கு மேல் 13 மீற்றருக்கு மேற்படாத உயரமுடைய ஏதேனும் மாடியின் தரைமட்டத்துடன் கட்டிடத்திற்கு உலர்ந்த ஆரம்ப நீரேற்ற குழாய் பொறுத்த வேண்டியதுடன் 13 மீற்றருக்கு மேற்பட்ட உயரமுடைய கட்டிடத்திற்கு ஈரமான ஆரம்ப நீரேற்ற குழாயிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) தீயணைப்பு சேவைவாகனங்களில் நீர் இறைப்பதற்காக ஆரம்ப நீரேற்ற குழாய் (உலர்ந்த மற்றும் ஈரமான) இரண்டிற்கும், ஒன்றிற்கு இரண்டு விதம் உள்நுழைப்பதற்கு தயார்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அப்படியான உள்நுழைப்பதற்கு தயார்படுத்தப்பட்டவை மீண்டும் வரமுடியாத அடைபிதழ்களினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டியதுடன்,விட்டமானது 1.2 சென்றி மீற்றர் அளவில் உடனே செயற்படக்கூடிய வகையில் அவ் உபகரணம் அதில் பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். (04 . அ- பந்திக்கு சம்பந்தப்படும் வகையில் தீயணைப்பு இயந்திரத்திற்கான உட்பிரவேசிக்கும் வழி இவ் உள்நுழைப்புகளுக்காக வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) பிரதான உத்தியோகத்தரினால் அனுமதிக்கப்படும் இடங்களில் மாத்திரம் ஆரம்ப நீரேற்ற குழாய்கள் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

(iv) 6 சென்றி மீற்றர் அளவிலான தீயணைக்கும் குழாயானது உடனே செயற்படகூடிய வகையில் அவ் உபகரணம் பொறுத்த வேண்டிய கட்டுப்படுத்தக் கூடிய இறங்கு அடைப்பிதல்களில் (வேல்வ்) ஒவ்வொரு ஆரம்ப நீரேற்று குழாய்களுக்கும் பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். 1858 சதுர மீற்றர்களுக்கு மேற்பட்ட தடைமட்டத்திற்கு ஒரு இறங்கு அடைப்பிதழ்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு 1858 சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதியின் அளவிற்காக ஒவ்வொரு பிரதான குழாயிற்கும் மேலதிக அடைப்பிதழ்களின் படி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். தரை மாடியின் மேல் உள்ள ஒவ்வொரு மாடிகளுக்கும் நீரேற்று ஆரம்ப குழாய் ஒன்றினால், தரை மட்டத்தில் 91 மீற்றர் உயரத்தில் அப்படியான கசிவு வாயில் உருவாக்க வேண்டும்.

(v) 36..5 மீற்றருக்கு மேற்பட்ட உயரமுடைய கட்டிடங்களுக்கு 15 சென்றி மீற்றர் விட்டமுடைய குழாய் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) ஈரமான ஆரம்ப நீரேற்ற குழாய் 11 ஆம் உப அட்டவணையில் இ அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் படி நீர் வழங்குவதற்கு இணைக்கப்படுவதோடு, 125 சென்றி மீற்றர் விட்டம் உடையநிழக்கூம்பு 06 சென்றி மீற்றர் உடைய குழாய் பொறுத்தி அந்நேரத்தில் உயரமான மாடியின் 645 சதுர மில்லிமீற்றர்க்கு 13..5 கிலோ கிறாம் அழுத்தத்தை உருவாக்கக் கூடிய வகையில் விசையியக்கம் செய்யும் பிரிவிற்கு வடிவமைக்க வேண்டும்.

(vii) பொறுத்துதலானது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகளின் அல்லது ஒழுங்குமுறையாக இருத்தல் வேண்டும்.

(அ) ஹய்டிரோலிக் றப்பர் குழாய் பிரதான குழாய்

(i) 30 மீற்றருக்கு மேற்பட்ட உயரத்தையுடைய கட்டிடங்களில் உள்ள அனைத்து கூறைகளுக்கும்

(ii) தொழிற்சாலை மண்டபம்

(iii) 371..5 சதுரமீற்றருக்கு மேற்பட்ட களஞ்சியங்கள் வீடுகளில் இருக்கும்போது ஹய்டிரோலிக் றப்பர் குழாயிற்கான இடவசதிகளை உருவாக்கியிருத்தல் வேண்டும். குழாயானது 30 மீற்றருக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். 18 மீற்றர், 2.5 சென்றி மீற்றர் விட்டமுடைய வளைவுகள் மடியாமல் பொறுத்தப்பட்ட றப்பர்களினால் இருக்க வேண்டியதுடன், 4.8 மில்லிமீற்றர் அல்லது 6..3 விட்டமுடைய நிலக்கூம்பு (நெசினோ) உள்ளடக்கிய மூடப்படும் மண்டபங்களில் முடிவடைய வேண்டும். நிலக்கூம்பு முடிவின் அழுத்தமானது நிமிடத்திற்கு 2279 லீற்றர் வரையிலான அளவில் 06 மீற்றருக்கு குறையாத வகையில் இயக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். காற்று குழாய் அலட்சி பிரதான உத்தியோகத்தரினால் அனுமதிக்கப்படும் நிலையத்திற்கு நிரந்தரமாக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) தீயணைப்பு

தன்னிச்சையாக அல்லது கையால் செயற்படுத்தப்படும் வகையிலான தீயணைப்பு ஒலிக்கருவி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களில் பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(i) 3716 சதுர மீற்றருக்கு மேற்பட்ட தரையின் அளவை கொண்ட கட்டிடமொன்று

(ii) ஏதேனும் உயரமான கட்டிடம் :

கையால் செயற்படுத்தப்படும் தீயணைப்பு ஒலியின் மூலம் தொடர்புறும் போது, கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் வழங்க வேண்டும்.

(i) அழைப்பு மையம் சிகப்பு நிறத்தில் நிறந்தீட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) கண்ணாடி மூடியை உடைக்கும் வரை, அழைப்பு மையம் பொதுவாக செயற்படுத்துவதற்கு முடியாத வகையில் கண்ணாடி மூடியொன்று வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) செயற்படுத்தும் முறையை விளக்கமாக குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

(iv) மணியை ஒலிக்கச் செய்யும் நபரினால்தட்டி தடவுவதற்கு முடியுமான வகையிலான மின் சக்தியுடனான புள்ளியை வெளிப்படுத்தாமல் இருத்தல் வேண்டும்.

(v) கட்டிடத்தில் மனிதர்கள் இருக்கக் கூடிய அனைத்து பகுதிகளிலும் அழைப்பு புள்ளியை உருவாக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், மணியை ஒலிக்கச் செய்யுமாறு அவ்விடத்தில் எவரேனுமொரு நிலையத்திலிருந்து எவரேனுமொரு நபருக்கு 30 மீற்றருக்கு மேற்பட்ட தூரத்திற்கு நடப்பதற்கு தேவை ஏற்படாத வகையில் அவற்றை வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) அழைப்பு புள்ளியானது வெளியே செல்லும் வழிகளில் வைக்க வேண்டியதுடன், விசேடமாக மாடிகளில் அல்லது மாடிப் படிகளில் மாடிகளுக்கு இறங்கும் நிலையங்களாக இருத்தல் வேண்டும். அவை மாடியின் தரைமட்டத்தில் இருந்து 1.4 மீற்றர் உயரத்திற்கு இலகுவாக செல்லக் கூடிய வகையில் நன்றாக வெளிச்சம் உள்ள இடத்தில் பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) அழைப்பு புள்ளியை செயற்படுத்திய போது,அழைப்பு ஆரம்பிக்கப்பட்ட பிரதேசத்தில் உடனே காட்டக்கூடிய வகையில் தரை மாடியில் மத்திய புள்ளியின் தொகுதியொன்றை பொறுத்த வேண்டும்.

(இ) ஸ்பிரின்க்லர் முறை : 1350 சதுர மீற்றருக்கு மேற்பட்ட அளவை கொண்ட தரையில் உள்ள வீடுகளுக்கு ஸ்பிரின்க்லர் பொறுத்துவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

(i) அப்படியான முறையை ஆரம்பிக்க பிரதான உத்தியோகத்தருக்கு முன்வைக்கப்பட்டிருந்தால் அன்றி, அவ் அனுமதியின் படி பெற்றுக்கொண்டிருந்தால் அன்றி, எந்தவொரு நபரினாலும் பொறுத்துவதை ஆரம்பிக்கக் கூடாது.

(ii) ஸ்பிரின்க்லர் முறையை பொறுத்துவதற்காக அல்லது விரிவுபடுத்துவதற்கான திட்டம், பிரதான உத்தியோத்தரினால் அனுமதிக்கப்பட்ட தகைமைகளை பெற்ற தொழில் பொறியியலாளரினால் முன்வைக்க வேண்டியதுடன், இரண்டுபக்கத்துடான, பொறுத்துவதற்கான கடமைகளை பொறுப்பேற்பதற்கு பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனத்தினால் கையொப்பமிட்டு முன்வைக்க வேண்டும்

(ஈ) கையில் எடுத்துச்செல்லக் கூடிய தீயணைப்பு கருவிகள் ; கையில் எடுத்துச் செல்லக் கூடிய தீயணைப்பு கருவிகள் தேவையென பிரதான உத்தியோகத்தரினால் அனுமதிக்கும்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்களை பொறுத்துதல் வேண்டும்.

(i) தரையின் சதுர அடிக்கு ஏற்ப ஒவ்வொரு 209 சதுர மீற்றருக்கு அல்லது அதன் பகுதிக்கு 9.09 லீற்றர் கொள்ளளவை ஒவ்வொரு மாடிகளுக்கும் போதுமான வகையில் கையில் எடுத்துச் செல்ல கூடிய அனுமதிக்கப்பட்ட நீர்வகையிலான தீயணைப்பு கருவி, என்றாலும், ஒவ்வொரு மாடிகளுக்கும் 18.18 லீற்றர் கொள்ளவிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

(ii) அனைத்து சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கப்பட்ட நீரினால் நிரப்பப்பட்ட வாளியொன்று பொறுத்தப்பட்டு. கையினால் எடுத்துச் செல்லக்கூடிய,கையினால் செயற்படுத்தக் கூடிய தீயணைப்பு பம்ப் ஒவ்வொரு 209 சதுர மீற்றருக்கு அல்லது அதன் பகுதிக்கு 9.09 லீற்றர் கொள்ளவினை ஒவ்வொரு மாடிக்கும் இருக்க வேண்டியதுடன், ஒவ்வொரு மாடிக்கும் அது 18.18 லீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) பிரிவிற்கான கொள்ளவு 9.09லீற்றருக்கு குறையாத (சிகப்பு வண்ணப்பூச்சு பூசி) வாளி,அவ் வாளியானது எந்த நேரத்திலும் நீர் நிரப்பப்பட்டிருக்க வேண்டியதுடன், அனைத்து மாடிகளிலும் 06 வாளிகளுக்கு (ஆறு) குறையாமல் வைக்கும் நிபந்தனைக்கு கீழ் அனைத்து 209 வர்க்க மீற்றருக்கும் அதன் பகுதிக்கும் மூன்று வாளிகள் படி (03) வைக்க வேண்டும்.

(உ) மேற்படி (ஈ) பிரிவின் பிரகாரம் உபகரணங்கள் வழங்கும்போது, பிரதான உத்தியோகத்தரினால் தனது எண்ணத்தின்படி, III ஆம் அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள சம்மதத்திற்கு உரியவாறு கட்டளையிட முடியும்.

8. (1) உள்ளகமாடிபடிகள், கட்டிடத்தின் ஏதேனுமொரு மாடிக்குஉட்பிரவேசிக்க கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். மாடியில் இருந்து இறங்கும் இடத்தில், மாடிப்படிகள் சமமான அகலத்தில் இருக்க வேண்டியதுடன் ஒவ்வொரு படிகளின் உச்சியிலும் மற்றும் அடியிலும் அவ்வாறே அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏறும் படிகளானது 16 படிகளுக்கு மேற்படாமல் சமமாக இருக்க வேண்டியதுடன், அவை வட்டமாக அன்றி நேராக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு படிகளும் 25 சென்றி மீற்றருக்கு குறையாத அகலமும் 19 சென்றி மீற்றருக்கு குறையாத உயரமும் இருத்தல் வேண்டும். அனைத்து படிகளின் இரு மருங்கிலும், 01 மீற்றர் உயரத்திற்கு குறையாத பாதுகாப்பு கைபிடிப்புகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், மாடிகளிலிருந்து இறங்கும் இடங்களுக்கு சமமாகவும் நேராகவும் இருப்பதற்கு கணக்கிடப்பட்டிருத்தல் வேண்டும். படிகளானது ஏனைய கட்டிடங்களின் பகுதிகளுக்கு அமைக்கப்பட்டிருக்கும்,தீயினால் தாக்குப்பிடிக்கக் கூடிய உபகரணங்களுக்கு சமமான உபகரணங்களில் முழுமையாக மூடப்பட்டிருத்தல் வேண்டும். உட்பிரவேசிக்கும் இடம் மற்றும் வெளியேறும் இடம் தவிர்ந்த படிகளில் நேராக உள்ள இடைவெளிகளுக்காக இடம் வழங்கக் கூடாது. உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் இடங்களில்திரும்புவதற்கான படிகளின் நேராக உள்ள இடைவெளிகளுக்காக இடம் வழங்கக் கூடாது. உட்பிரவேசிக்கும் இடங்கள் மற்றும் வெளியேறும் இடங்களின் இடைவெளிகளில் தீயினால் தாக்குப்பிடிக்கக் கூடிய, புகையினை நிறுத்துவதற்கு, வெளியில் திறப்பதற்கான மற்றும் பூட்டினால் மூடப்படக்கூடிய கதவுகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) (அ) மூன்று மாடிகளைவிட (3) மேற்பட்ட கட்டிடங்களுக்கு மற்றும் மாடிகளில் தரை மட்டத்தின் உயரமானது 12 மீற்றருக்கு மேற்படும் சந்தர்ப்பத்தில். தீ பற்றாத சிறு பொருட்களினால் அமைப்பட்ட படிகள் (தீயிலிருந்து தப்பித்துச் செல்ல கூடிய படிகள்) அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், அவை அமைக்க வேண்டியதுஅக் கட்டிடத்தில்இருப்பவர்களுக்கு எவரேனுமொருவருக்கு, அக்கட்டிடத்தில் இருந்துதொலைவில் உள்ள இடத்தில் இருந்து தீயினால் தப்பிக்கக் கூடிய வகையிலான படிகளுக்கு செல்வதற்கான தூரமானது 30 மீற்றருக்கு மேற்படாத வகையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) வெளியில் உள்ள தீயினால் தப்பிக்கக் கூடிய படியில் இருந்து சுவர்கள் வரை 1..5 மீற்றர் தூரத்திற்கு உட்பட்ட திறப்புகள் அமைக்கப்பட்டிருக்க கூடாது. ஒவ்வொரு மாடி மட்டத்திலிருந்து இத் தீயினால் தப்பித்துக் கொள்ளும் படிகளுக்கு வருவதற்கு அமைக்கப்பட்டுள்ள இடைவெளி. மேலே (அ) சரத்தின் உள்ளக படிகளுக்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கஅமைக்கப்பட்டிருத்தல் இருத்தல் வேண்டும்.

(3) மோட்டார் செம்பர் முழுமையாக தீ பற்றாத பொருளினால் மூடப்பட்டு, கம்பி மற்றும் கேபல் இலுப்பதற்காக உள்ள இடைவெளிகளே தவிர,மின் ஏணி படிகள் யன்னல்களினால் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். 929 சதுர சென்றி மீற்றருக்கு குறையாத அளவில் வெளியில் திறக்கப்பட்ட புகையானது வெளியில் செல்லக்கூடிய வகையில் வழிப்படலை அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) (அ) கட்டிடத்தின் மேல் மாடியில் கூரை அமைக்கப்படாத சந்தர்ப்பத்தில் அதை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களுக்காக பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் மற்றும் அதில் உறங்குவதற்காக இரவு நேரத்தில் அங்கு வசிக்காத சந்தர்ப்பத்தில், அப்படியான ஒருபகுதியை கட்டிடத்தின் மாடியாக கருதப்பட வேண்டும்.

(i) மாடியின் மீது அமைக்கப்பட்டுள்ள பூங்கா

(ii) சூரிய ஒளி சேகரிக்கப்படும் இல்லமொன்று

(iii) சிறிய அறையொன்று

(iv) மோட்டர் அறையொன்று

(ஆ) காப்பாற்றப்படும் உபகரணங்கள் செயற்படுத்த கூடிய வகையில் மேல் மாடிக்கு உட்பிரவேசிப்பதற்கு தடையேற்படாத வகையில் முன்பக்கம் ஒன்று இருக்க வேண்டும் மற்றும் வேறு ஏதேனும் பக்கத்தில் இடம் இருத்தல் வேண்டியதுடன் காப்பாற்றப்படும் உபகரணங்களை தூக்குவதற்காக இரண்டு பக்கத்திலும் இடம் இருக்க வேண்டிய தேவையை விளங்கிக் கொண்டு இடம் வைக்க வேண்டும்.

9. (IV) ஆம் உப அட்டவணையில் நிரந்தரமாக குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் வியாபாரம் மற்றும் வியாபாரத்திற்காக வைத்திருத்தல் மற்றும் ஏனைய காரணங்களுக்காக வைத்திருத்தல் மற்றும் அவ் உப அட்டவணையில் நிரந்தரமாக குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரத்திற்காக மற்றும் வியாபாரத்தின் தீ ஆபத்தினை பற்றி கருதும் போது ஆபத்தானது என பிரகடனப்படுத்தப்படும். (111ஆம் உப அட்டவணை) இவ்இடத்தில் பிரதான உத்தியோகத்தரினால் வருடாந்தம் பரிசோதனை செய்வதற்கு கீழாகும். அப்படியான இடங்களின் உரிமையாளர் களினால் பிரதான உத்தியோகத்தர் திருப்தியடையும் வகையில் போதுமான அளவு தீயினை தடுப்பதற்குரிய முறையொன்றை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. இத் துணைவிதியின் எந்தவொரு துணைவிதியையும் மீறும் எவரேனுமொரு நபர் அல்லது நபருக்கு தண்டனை கிடைக்கக் கூடிய தவறுரொன்றை செய்வதோடு அந் நபர் அல்லது நபர்களுக்கு எதிராக பதுளை மா நகர சபை எல்லைக்குள் நீதிமன்ற அதிகாரம் உள்ள உகந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் வழக்கு தொடுத்து குற்றவாளியாக்கப்பட்டால்

(i) முதலாவதாக செய்யப்படும் பிழை என்றால், 1,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(ii) இரண்டாம் முறை செய்யப்படும் தவறுக்காக 2,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(iii) அதற்கு பின்பும் செய்யப்படும் தவறு தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் அல்லது அதை மீறும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு கௌரவ மாநகர பிதா அவர்களுக்கு எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் அல்லது தொடர்ந்து தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது (250)ரூபாவிற்கு மேற்படாத மேலதிக அபராதத்தின் கீழ்படிய வேண்டும்.

11. பொருள் சம்பந்தமாக வேறு அர்த்தங்கள் தேவைபடுமென்றால் தவிர, இத்துணைச்சட்டத்தின் :-

(i) ''பிரதான உத்தியோகத்தர்'' எனப்படுவது சபையின் தீயணைப்பு சேவை திணைக்களத்தின் பிரதான உத்தியோகத்தர் என கருதப்படும்.

(ii) ''தீயணைப்பு படையினர்'', எனப்படுவது மா நகர சபையின் பொறியியல் திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் தீயணைப்பு படையினர் என கருதப்படும்.

## I ஆம் அட்டவணை

### 8 ஆம் அட்டவணை

| தொடர் இலக்கம் | தீ தாக்குப்பிடிக்கத் தேவைகள் | 1/2 மணித்தியாலம் | 1 மணித்தியாலம் | 2 மணித்தியாலம் | 4 மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|
| 1 | சுவர்களும் ஒதுக்குதல்களும் | | | | |
| | (அ) செங்கற்கள், களிமண், கொங்கிரிட் போன்றவற்றின் தடிப்பு சென்றி மீற்றர்களில் | 11 1/2 | 11 1/2 | 21 1/2 | 21 1/2 |
| | (ஆ) சக்தி வளர்ச்சி, கொங்கிரிட் போன்றவற்றின் தடிப்பு சென்றி மீற்றர்களில் | 7 1/2 | 7 1/2 | 10 | 15 |
| | (இ) இடையில் துவாரமுடைய கொங்கிரிட் சதுரங்களின் சென்றி மீற்றர்கள் | 6 1/2 | 7 1/2 | 11 | 21 1/2 |
| 2 | மாடிகள் மற்றும் கூரைகள்தடிப்பு சக்தி வளர்ச்சி - தடிப்பு மீற்றர்களில் | 9 | 10 | 13 | 15 |
| 3 | ஆர்.எஸ்.எஸ்.கொங்கிரிட் தடிப்பு சென்றி மீற்றர்களில் | 2 1/2 | 2 1/2 | 05 | 06 |
| 4 | கதவுகள் மற்றும் யன்னல்களின் தடிப்பு சென்றி மீற்றர்களில் | | | | |
| | (அ) பலகையின் தடிப்பு | 1 1/4 | 2 1/2 | 05 | 05 |
| | (ஆ) ப்லய்வுட் | 4 1/2 | 05 | - | - |

## II ஆம் அட்டவணை

### உயரமான மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கான நீர் தாங்கிகளின் கொள்ளவிற்குஉரிய அட்டவணை

| தொடர் இலக்கம் | விடயம் | 465 சதுர மீற்றர் வரையிலான தரையின் அளவிற்கு | 465 சதுர மீற்றர் தொடக்கம் 929 வரையிலான தரையின் அளவிற்கு | 299 சதுர மீற்றருக்கு மீற்றருக்கு மேற்பட்ட தரையின் அளவிற்கு |
|---|---|---|---|---|
| 1 | தனி மாடி | 22.750 லீற்றர் | 34.125 லீற்றர் | அனைத்து மேலதிக 465 சதுர மீற்றர் வரையிலான தரையின் அளவிற்காக 9.100 லீற்றர் படியிலான அளவில் 45.500 லீற்றர் |
| 2 | 01 முதல் 10 மாடிகளுக்கு | 13.650 லீற்றர் | மாடிக்கு 15.925 லீற்றர் | மாடிக்கு 18.200 லீற்றர் |
| 3 | 10 மாடிகளுக்கு மேற்பட்ட கட்டிடம் | மேற்படி (ஆ) இற்கு மேலதிகமாக ஒரு மாடிக்கு 11.375 லீற்றர் | மேற்படி (ஆ) இற்கு மேலதிகமாக ஒரு மாடிக்கு 09.100 லீற்றர் | மேற்படி (ஆ) இற்கு மேலதிக மாடிக்கு 9.100 லீற்றர் |

III ஆம் அட்டவணை

**குறிப்பு** (1) மின்சார உபகரணங்களினாலான அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 03 இல் உள்ளவாறு பொருட்களை களஞ்சியப்படுத்தல் அல்லது அவற்றை பயன்படுத்தும் இடங்களின் பகுதிகளுக்கு, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் முதலாம் பகுதியில் உறுதியாக காட்டப்பட்டுள்ள வகைகளில் சிறந்த விகிதாசாரமுடைய பொருட்களை தெரிவு செய்தல் உகந்தது.

(2) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பொருட்களில் ஏதேனும் திருத்தம் செய்ய முடியும்.

(3) "அ" பந்தியின் துன்டிப்பான் :- விறகு, கடதாசி, துணிகள்,பெரப்பின் மற்றும் ஏனைய வாயு பொருட்கள்,

"ஆ" பந்தியின் துன்டிப்பான் :- பெற்றோலியம், எண்ணெய் வகைகள், பெரப்பின் வர்ணப்பூச்சு,வெள்ளை திரவங்கள்,லெக்கர், வார்ணிஸ், எனமல், கிறீஸ், தார் மற்றும் மதுசாரம் போன்ற தீ பற்றக்கூடிய சிறு பொருட்கள்.

"இ" பந்தியின் துன்டிப்பான் :- மோட்டார் வாகனம், கார், லொறி, பஸ், டிரெக்டர், சிறு மின்சாரம் மற்றும் சிறிய பெற்றோலிய துன்டிப்பான்

| நீர் வாளி | தீயணைப்பு நீர் வகை |
|---|---|
| (1) (இ) தலைப்பு<br>கையினால் செயற்படுத்தக்கூடிய தீயணைப்பு கருவி | (1)(அ) தலைப்பு மற்றும் கையில் எடுத்துச்செல்லக் கூடிய தீயணைப்பு பம்பி<br>(1)(ஆ) தலைப்பு |
| ஏற்றுக்கொள்ளக்கூடிய மீண்டும் வழங்கக்கூடிய துன்டிப்பான் பந்தியின் ஒவ்வொரு 9 லீற்றர் (3ஆம் குறிப்பு) தீயணைப்புகருவி அல்லது கையினால் கொண்டுசெல்லக்கூடிய தீயணைப்பு பம்ப் | மூன்று வாளிகளுக்காக வாளி ஒன்று ஒன்றிற்காக |
| (i) "அ"பந்தியின் தீ 3×9.9 லீற்றர் வாளி | 1×9.9 லீற்றர் நீர் வகையான தீயணைப்பு |
| (ii) "ஆ" பந்தியின் தீ 1×9.9 தூளுடனான லீற்றர் நுறையையுடைய தீயணைப்பு கருவி | (i) 2.27 கிலோகிராம் உலர்ந்த இரசாயன தீயணைப்பு கருவி<br>(ii) 2.27 காபநீர்ஒட்சைட் தீயணைப்பு கருவியொன்று<br>(iii) 4.5 லீற்றர் சிட்சி. தீயணைப்பு கருவியொன்று<br>(iv) 4.5 லீற்றர் ஆவியாக்க கூடிய தீயணைப்பு கருவியொன்று |
| (iii) இ வகுப்பு 1×1.25 கி.கி காபனீர்ரொட்சைட் தீயணைப்பு கருவி | (i) 1.25 லீற்றர் சிட்சி தீயணைப்பு கருவியொன்று<br>(ii) 1.125 லீற்றர் இரசாயன தீயணைப்பு கருவி<br>(iii)1.25 லீற்றர் ஆவியாக்குதலின் மூலமான தீயணைப்பு கருவி |

**குறிப்பு**:- (அ) மின் உபகரணங்கள் மாத்திரம் உள்ள சந்தர்ப்பங்களில், 1..36 கிலோகிறாம் அல்லது 1.137லீற்றர் தீயணைப்பு பொருட்களை கொண்ட 1.137 லீற்றர் காபன் டெட்டிரக்லோரய்ட் அல்லது மிகொலொபுரோமோமேக் தீயணைப்பு கருவி ஒரு வாளிக்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய மீண்டும் உள்ளீடாக கருதப்படும்.

(ஆ) தீயொன்று ஏற்பட்டபோது இலகுவாக அதனருகில் செல்லகூடிய வகையில் மற்றும் உடனே பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அவ்விடத்தில் தீயணைப்பு கருவி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவை பொதுவாக பயன்படுத்தக் கூடிய வகையில் வீதியிலே பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். தீயணைப்பு கருவியின் பக்க நோக்கி எவரேனுமொருவருக்கு 15 மீற்றருக்கு மேற்பட்ட தூரத்திற்கு செல்வதற்கு தேவையேற்படாமல் இருத்தல் வேண்டும்.

(இ) தீயணைப்பு கருவியொன்று மாடி மட்டத்திலிருந்து 91 சென்றிமீற்றருக்கு உயரத்தில் தொங்கவிடக்கூடிய வகையில் நிறுத்தி வைக்கக் கூடிய வகையில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். தீயணைப்பு கருவி செயற்படுத்தும் வெளியில் பார்க்க கூடிய வகையில் வைக்க வேண்டும்.

## 1V ஆம் அட்டவணை

### முதலாம் பட்டியல்

**வெறுப்பூட்டும் மற்றும் அபாயகரமான வர்த்தகம் அல்லது தொழில்கள்**

1. பசளை அல்லது இராசயனப் பசளை தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.
2. தோல் பதனிடல்
3. தோல் விற்பனை செய்தல்.
4. கால்நடை வளர்ப்பு (இறைச்சி, பால், முட்டை)
5. புகைப்படச் சாலை நடாத்துதல்.
6. மிருக வைத்திய சிகிச்சை நிலையம் நடாத்துதல்.
7. விற்பனைக்காக பழுதடையக் கூடிய உணவு வகைகள் அல்லது ஆகார வகைகளைக் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.
8. கருவாடு, உப்பு, மீன் அல்லது செமன் 150 கிலோ கிராமை விட அதிகமாக வைத்திருத்தல்.
9. சிரட்டைக் கரி அல்லது மரக்கரி தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.
10. புகையிலை தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்திச் செல்லல்.
11. கால்நடை தீவனங்களைக் களஞ்சியப்படுத்துதல் அல்லது களஞ்சியத்தை நடாத்திச் செல்லல்.
12. புண்ணாக்கு தயாரித்தல் அல்லது 200 கிலோ கிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்துதல்.
13. சவர்க்காரம் தயாரித்தல்.
14. கால்நடைகளின் எலும்புகளை அரைத்தல் அல்லது வைத்திருத்தல்.
15. புதிய அல்லது பழைய உலோகங்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.
16. உலோகத்தினாலான பழம்பொருட்களின் களஞ்சியம் ஒன்றினை நடாத்திச் செல்லல்.
17. வீட்டுத் தளபாடங்கள் அல்லது மரத் தளபாடங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.
18. பிரம்புச் சாமான்கள் உற்பத்தி செய்தல்.
19. தச்சுத் தொழிற்சாலை ஒன்று நடாத்துதல்.
20. குளிர்பானம் அல்லது பழச்சாறு வகைகளை உற்பத்தி செய்தல்.
21. இனிப்புப் பண்டங்கள் தயாரித்தல்.
22. தேங்காய் தும்பு ஊறவிடல் அல்லது பதப்படுத்துதல்.
23. பத்தூரிகை வகைகள் உற்பத்தி செய்தல்.
24. பனிக்கட்டி தொழிற்சாலை நடாத்துதல்.
25. கள்ளு சேகரித்தல்.
26. காடி தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தல்.
27. இயந்திர மூலமாக அல்லது கைகளால் மரம் அரியும் நிலையம் நடாத்துதல்.
28. நிறப்பூச்சுகள், வார்னிஷ் அல்லது டிஸ்டெம்பர் பூச்சு தயாரித்தல் அல்லது அவற்றை (100 லீற்றருக்கு அதிகமாக) களஞ்சியப்படுத்தி வைத்தல்.
29. சோடாத் தூள் தயாரித்தல்

30. தோற்பொருள் உற்பத்தி செய்தல்

31. பழங்கள், மீன் அல்லது வேறு உணவுப் பொருட்களை தகர டப்பாக்களில் அடைத்தல்.

32. மிளகாய், கோப்பி, தானிய வகைகள், இறைச்சிவகைகள், சில்லறைச் சாமான்கள் போன்றன அரைப்பதற்கான ஆலை நடாத்துதல்.

33. மெழுகுதிரி உற்பத்தி செய்தல்.

34. கற்பூரம் தயாரித்தல்.

35. எழுதும் மை, அச்சிடும் மை அல்லது ஸ்டென்சில் மை தயாரித்தல்

36. ஆடை கழுவும் நீலம் உற்பத்தி செய்தல்.

37. முத்திரை அரக்கு உற்பத்தி செய்தல்.

38. வாசனைத் திரவங்கள் தயாரித்தல் அல்லது களஞ்சியம் நடாத்துதல்.

39. பாடசாலை வெண்கட்டி தயாரித்தல்.

40. 50க்கு மேற்பட்ட டயர் அல்லது டியூப் களஞ்சியப்படுத்தி வைத்தல்

41. டயர்களை மீள் நிரப்புதல்.

42. டயர், டியூப் வோல்கனைஸ் பண்ணும் நிலையம் நடாத்துதல்.

43. 1000 கிலோ கிராமுக்கு அதிகமான சீமெந்து களஞ்சியப்படுத்தி வைத்தல்.

44. சீமெந்துப் பொருட்கள் அல்லது அஸ்பஸ்டோஸ் சீமெந்து தயாரித்தல்.

45. பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்தல்.

46. இயந்திரங்களின் மூலம் ஆடை நெய்தல்.

47. உரம், நீர்ச் சுண்ணம் இட்டு வைத்த உறைகளைக் கழுவிவிற்றல்.

48. இயந்திரங்கள் மூலம் சீமெந்து ப்ளொக் கற்கள் உற்பத்தி செய்தல்.

49. தானியங்கள் அல்லது மாமிச வகைகள் 250 கிலோ கிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தி வைத்தல்.

50. மொத்தமாக விற்பனை செய்வதற்காக மா, உப்பு 750 கிலோ கிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்

51. தைத்த ஆடை உற்பத்தி செய்தல்.

52. அச்சகம் ஒன்றினை நடாத்திச் செல்லல்.

53. 100க்கு அதிகமான எண்ணிக்கை கொண்ட கோழிப்பண்ணை நடாத்துதல்.

54. ஆடு,மாடு, பன்றி செம்மறி என்பவற்றுக்கான தொழுவம் நடாத்துதல்.

55. செங்கல் அல்லது ஓடு களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.

56. விறகுக் களஞ்சியம் நடாத்திச் செல்லல்.

57. இயந்திர மூலமாக அல்லது கைகளால் கருங்கள் தோண்டல் அல்லது உடைத்தல்

58. குளிர்பானம் தயாரித்தல் அல்லது 100க்கு மேற்பட்ட குளிர்பானப் புட்டிகளைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.

59. ஐஸ்கிறீம் தயாரித்தல்.

60. தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல் அல்லது 300 கிலோகிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தி வைத்தல்.

61. தீப்பெட்டி உற்பத்தி அல்லது 100 டசின்களுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தி வைத்தல்.

62. தும்பு அல்லது வேறு நார் வகைகளினால் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்.

63. பாவித்த ஆடைகளைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.

64. நகை உற்பத்தி செய்தல் அல்லது பழுதுபார்த்தல்.

65. இயந்திரங்கள் மூலம் மரம் அரிதல்.

66. இறப்பர் பதனிடுதல்.

68. உரம், சுண்ணம் அல்லது காக்கைப் பொன் இட்டுவைத்த சாக்குகளை களஞ்சியப்படுத்துதல், தூல் துடைத்தல், துப்பரவு செய்தல் அல்லது திருத்த வேலைகள் செய்தல்.

69. அபரசம் (மைகா) பதனிடுதல்.

70. சுண்ணாம்பு களஞ்சியப்படுத்தி வைத்தல்.

71. 50 கிலோ கிராமுக்கு அதிகமாக சிரட்டைக்கரி களஞ்சியப்படுத்தி வைத்தல்.

72. கெந்தகப் புகையிட்டு கறுவா, ஏலம் அல்லது நார்கள் பதப்படுத்துதல்.

73. ஒட்டுப்பால் அரைத்தல் அல்லது காயவைத்தல்.

74. பற்றரி மீள உயிரூட்டல் செய்கின்ற அல்லது களஞ்சியப்படுத்துகின்ற இயந்திர சக்தியைப் பயன்படுத்தும் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றினைத் தவிர வேறு நிறுவனம் ஒன்றினை நடாத்திச் செல்லல்.

76. 50 கிலோ கிராமுக்கு அதிகமான கறுவா களஞ்சியப்படுத்தி வைத்தல்.

77. கொக்கோ 500 கிலோ கிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்துதல்

78. சவப்பெட்டி உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்துதல் அல்லாவிடின் உற்பத்தியும் களஞ்சியப்படுத்துதலும்.

79. மரத் தளபாடங்கள் தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல் அல்லாவிடின் அவற்றை தயாரித்தலும் களஞ்சியப்படுத்தலும்.

80. அனுமதிப் பத்திரம் பெற்ற வியாபாரிகளினால் இறப்பர் களஞ்சியப்படுத்துதல்.

81. பிரம்புச் சாமான்கள் உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்துதல் அல்லாவிட்டால் அவைகளின் உற்பத்தியும் களஞ்சியப்படுத்துதலும்.

82. இயந்திர சக்தியைப் பயன்படுத்தி புடவை நெய்யும் ஆலை நடாத்துதல்.

83. மா அல்லது சில்லறைச் சாமான்கள் அரைத்தல்.

84. இறப்பர் பொருட்கள் உற்பத்தி செய்தல்.

85. புகை, நீர் அல்லது வேறு இயந்திர சக்தியைப் பயன்படுத்தி மரம் அரிதல்.

86. கொப்பறா களஞ்சியம் ஒன்று நடாத்திச் செல்லல்

87. இயந்திர பாவனையுடன் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல்.

88. இயந்திர பாவனையுடன் நல்லெண்ணெய் உற்பத்தி செய்தல்.

89. எண்ணெய் வடிவதற்காக செக்கு அல்லது கைகளால் இயக்கும் ஆலை நடாத்திச் செல்லல்.

90. தும்பு உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்துதல் அல்லாதுவிடின் தும்பு உற்பத்தியும் களஞ்சியப்படுத்தலும்.

91. தீப்பெட்டி உற்பத்தி செய்தல்.

92. பஞ்சு களஞ்சியப்படுத்தல்.

93. 2271/2 லீற்றருக்கு அதிகமாக தேங்காய் எண்ணெய் களஞ்சியப்படுத்தல்

94. மெத்திலேட் ஸ்பிரிற் களஞ்சியப்படுத்தல்.

95. அசிட்லீன் உற்பத்தி

96. சிகரட் உற்பத்தி

97. பீடி உற்பத்தி.

98. 250 கிலோ கிராமுக்கு அதிகமான பூச்சுக்கள் அல்லது வார்னிஸ் களஞ்சியப்படுத்தல்.

99. 250 கிலோ கிராமுக்கு அதிகமான மரப் பெட்டிகளைக் களஞ்சியப்படுத்தல்.

100. தும்புத்தடி உற்பத்தி

101. தின்பண்டங்கள் உற்பத்தி.

102. உரம் ,சுண்ணாம்பு அல்லது காக்கைப் பொன்னை இட்டு வைத்திருந்த சாக்குகள், உறைகள் தவிர 100 கிராமுக்கு அதிகமான சாக்குகளை களஞ்சியப்படுத்தல்.

103. பாவித்த டயர் அல்லது டியூப்புகள் 150 க்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.

104 சிரட்டைக் கரி தவிர்ந்த வேறு கரி வகைகள் 50 கிலோ கிராமுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.

105. மரப் பெட்டிகள் உற்பத்தி செய்தல்.

106. இயந்திர சக்தி பயன்படுத்தப்படுகின்ற ஒட்சிசன் மற்றும் வேல்டின் வேலைகள் செய்யும் பழுதுபார்க்கும் இடம் (Garage) தவிர்ந்த வேறு ஒரு நிறுவனம் நடாத்திச் செல்லல்.

107. இயந்திர சக்தியைப் பயன்படுத்தி இரும்பு அல்லது உலோக வேலைகள் தவிர்ந்த வேறு வேலைகள் செய்யும் நிலையமொன்றை நடாத்திச செல்லுதல்.

108. இயந்திர சக்தி பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கப்படும் அல்லது சீரமமைப்பு (service) செய்யப்படும் அல்லாவிடின் மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கப்படும் மற்றும் சீரமைப்புச் செய்யப்படும் வேறு ஒரு நிறுவனத்தை நடாத்திச் செல்லுதல்.

109. இயந்திர சக்தியை பயன்படுத்தி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் மோட்டார் வாகனங்கள் சீரமைக்கும் வேலைகள் தவிர்ந்த வேறு ஒரு நிறுவனத்தை நடாத்திச் செல்லல்.

110 இயந்திர சக்தியைப் பயன்படுத்தி அச்சகம் ஒன்றை நடாத்திச் செல்லல்.

111. கைகளினால் அல்லது கால்களினால் இயக்கப்படும் இயந்திரத்தைப் பாவித்து அச்சகம் ஒன்றை நடாத்திச் செல்லல்.

112. பழைய உடைகளைக் களஞ்சியப்படுத்துதல்.

113. 54 லீற்றருக்கு அதிகமான தேங்காய் எண்ணெய் தவிர்ந்த வேறு எந்தவகை எண்ணெய்களையும் களஞ்சியப்படுத்துகின்ற நிலையமொன்றை நடாத்திச் செல்லல்.

114. உடைகளை ட்ரைகிளீன் (Dryclean) பண்ணுகின்ற நிலையமொன்றை நடாத்திச் செல்லல்.

115. இயந்திர சக்தியின் பாவனையின்றி இலக் ரோனிக் முலாம் பூசுதல் க்றோமியம் மூலாம் பூசுதல், தங்க முலாம் பூசுதல், வெள்ளி முலாம் பூசுதல் அல்லது பித்தளை முலாம் பூசுதல் போன்ற வேலைத் திட்டமொன்றை நடாத்திச் செல்லுதல்.

116. இயந்திர சக்தியைப பயன்படுத்தி இலக்ட்ரோனிக் உலோக முலாம் பூசும் நிலையம் தவிர்ந்த வேறு வகையான நிறுவனத்தை நடாத்திச் செல்லல்.

117. மோட்டார் வாகன பழுதுபார்த்தல் மற்றும் பாரிய வேல்டின் (Ark) வேலைகள் செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லல்.

118. எந்த வகையான உபகரணங்களையும் இயக்குவதற்காக மின்சக்தியை அல்லது இயந்திர சக்தியைப் பயன்படுத்தும் நிலையமொன்றினை நடாத்திச் செல்லல்.

119. 50 கிலோ கிராமுக்கு அதிகமாக யாதொரு வகை பிளாஸ்டிக் பொருளையும் வைத்திருத்தல்.

120. சகல விதமான பிளாஸ்டிக் பொருட்களையும் உற்பத்தி செய்தல்.

121. 50 கிலோகிராமுக்கு அதிகமாக எவ்வகையான பொலிதீன் பொருட்கள் வைத்திருத்தல்.

122. சகல விதமான பொலிதீன் பொருட்களையும் உற்பத்தி செய்தல்.

123. தும்பு உற்பத்திகளும் தம்மிடம் வைத்திருத்தலும்.

124. 1000 கிலோ கிராமுக்கு அதிகமான தேயிலைத் தூள் வைத்திருத்தல்.

125. 250 கிலோ கிராமுக்கு அதிகமான கடதாசி அல்லது கடதாசிப் பொருட்களை வைத்திருத்தல்.

126. ஆடை உற்பத்தி செய்தல்.

127. சாப்பாட்டுக் கடை நடாத்துதல்

128. இராசயனப் பொருட்களை வைத்திருத்தல்.

129. 50 கிலோ கிராமுக்கு அதிகமான சகல விதமான வாண வேடிக்கைப் (fire dosplay) பொருட்களை வைத்திருத்தல்.

130. 150 கிலோ கிராமுக்கு அதிகமான (எல்சீஜீ) வாயு கொள்கலன்களை களஞ்சியப்படுத்தி வைத்தல்.

131. தலைப்பாகை அல்லது தொப்பிகள் உற்பத்தி செய்தல்.

132. 100 கிலோ கிராமுக்கு அதிகமான சகல வித இறப்பர் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல்.

133. 250 கிலோ கிராமுக்கு அதிகமான வெட்டப்பட்ட தேங்காய் களஞ்சியப்படுத்தி வைத்தல்.

134. 250 கிலோ கிராமுக்கு அதிகாமான இறப்பர் விதைகளை களஞ்சியப்படுத்திவைத்தல்.

135. 91 லீற்றருக்கு அதிகமான அமில வகைகளை (acid) களஞ்சியப்படுத்தி வைத்தல்

136. 25 பேருக்கு அதிகமாக வேலைக்கு அமர்த்துகின்ற யாதாயினும் ஒரு தொழிற்சாலை நடாத்திச் செல்லல்.

137. திரவம், மசகு எண்ணெய், வாயுக்கள் உட்பட மசகு எண்ணெய் வகை உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.

138. துப்பாக்கி குண்டுகள் (Certrich) மற்றும் வெடி மருந்துகள் வைத்திருத்தல்.

### V ஆம் அட்டவணை

சபை சம்மதத்துடன் காலத்திற்கு காலம் திருத்தம் செய்து அரச வர்த்தமானி பத்திரிகையில் வெளியிட்ட பின்னர், தீயணைப்பு சேவைக்கான பணிகள் சம்பந்தப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் அறவிடப்படும்.

1. நகர எல்லைக்குள் அனைத்து வியாபார நிலையங்களிலும் மாதாந்தம் 100 ரூபாவிற்கு நிதி அறவிடப்படுவதோடு அதை வருடாந்த செலுத்துதலாக 1,000 ரூபாவை ஒரே முறையில் செலுத்த முடியும்.

   பதுளை மா நகர சபையிற்கு வெளியில் எங்களது சேவையை நீங்கள் பெற்றுக் கொள்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் உரியதாகும்.

பதுளை மா நகர சபையின் எல்லைக்கு வெளியில் ஒரு தீயணைப்பிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி அறவிடுதல்

- வியாபாரம்/பொதுவான (ஹோட்டல் மற்றும் சிறிய கடை) வருகைக்கு 7000 ரூபா மற்றும் சேர்க்கப்பட்ட பெறுமதிற்கான வரி
- பாரியளவிலான கைத்தொழில், சிறிய வியாபார நிலையம் மற்றும் ஹோட்டலில் தீயணைப்பு அலுவல்களுக்கு 15,000 ரூபா மற்றும் பெறுமதியின் வரி.
- முதலாவது மணித்தியாலத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு அறவிடப்படும் கட்டணம் 1,000 ரூபா
- இரண்டாவது மணித்தியாலத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு அறவிடப்படும் கட்டணம் 750 ரூபா

- நீர் பவுசருக்கு அறவிடப்படும் கட்டணம் 4,000 ரூபா (8,000 லீற்றர்)
- மேலதிக பம்ப்ஒன்றினை பயன்படுத்தும் போது அறவிடப்படும் கட்டணம் 2,000 ரூபா
- ஏனைய எந்தவொரு வாகனம் அனுப்புவதற்காகவும் அறவிடப்படும் கட்டணம் 3,000 ரூபா
- ஒரு லீற்றர் நுரைக்காக 800 ரூபா
- $CO_2$ 1 k.g. 600 ரூபா
- இரசாயன தூளிற்காக 750 ரூபா
- செயற்கை சுவாசமளிக்கும் உபகரணம் ஒன்றுக்காக 750 ரூபா
- சுற்றுப்புறத்திலுள்ள பிரதேச சபையுடன் தீயணைப்பு பாதுகாப்பொன்றினை பெற்றுக்கொடுக்கும் ஒப்பந்தத்திற்கு வருவதற்காக ஒரு வருடத்திற்கு 50,000 ரூபா நிதி பெற்றுக் கொள்ளுதல்.
- பாரியளவிலான தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்களுக்காக தீயணைப்பு பாதுகாப்பொன்றினை பெற்றுக்கொடுக்கும் ஒப்பந்தத்திற்கு வருவதற்கான ஒருவருடத்திற்காக 25,000 ரூபா நிதியை அறவிடுதல்.

ஒப்பந்தத்திற்கு

2. அவசர அபாயத்திற்குள்ளாகும் நபரொருவருக்கு சரியான முறையில் பாதுகாப்பாக (பதுளை பொது மருத்துவமனைக்கு) கொண்டு செல்வதினால் பின்னர் ஏற்படக்கூடிய சுகப்படுத்த முடியாத அல்லது நிரந்தரமாக ஊனமுற்ற தன்மையில் இருந்து குறைப்பதற்கு நோயாளர் ஊர்தி சேவையை இலவசமாக பதுளை நகர எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படுவதோடு அதற்கான சிறந்த பயிற்சியினை பெற்ற உபசார குழுவொன்றை எப்போதும் தயார்படுத்தி இருத்தல்.

அவசர அபாயத்திற்கு உள்ளான ஒருவரை தவிர்ந்த எங்களது நோயாளர் சேவை தாங்களுக்கு தேவையென்றால் 1km ற்கு 35 ரூபா அறவிடப்படும்.

விளையாட்டு போட்டி, விளையாட்டு வைபவத்திற்காக ஒரு தினத்திற்கு நோயாளர் ஊர்தியுடன் உத்தியோகத்தர் இருவருடனும் காத்திருக்கும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக ஒரு தினத்திற்கு 3000 ரூபாவிற்கு மற்றும் அதற்கு சம்பந்தப்பட்ட வரி நிதி மற்றும் குறைந்தபட்சம் 2 மணித்தியாலங்களுக்கு குறையாத போட்டிக்காக 1000 ரூபா மற்றும் அதற்கு சம்பந்தப்பட்ட வரி நிதி அறவிடுதல்.

**நிவாரண பிரிவு உங்களுக்கு தேவைப்படுவது**

1. அனைத்து கட்டிடங்களிலும் (மாடிகளில் களஞ்சியப்படுத்தல் விற்பனை செய்தல் பாடசாலை கட்டிட தொகுதி) தீயினால் மற்றும் உயிர் பாதுகாப்பு தொடர்பாக திட்டமிடுதல்.
2. புதிய கட்டிட திட்டங்களில் தீ மற்றும் உயிர் பாதுகாப்பு தொடர்பான அறிவுறைகளை வழங்கள் மற்றும் அதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தேவையான சிபாரிசுகளை வழங்கள்.
3. உத்தேசிக்கப்பட்ட தீயணைப்பு பாதுகாப்பு இல்லாத வியாபாரங்கள் தொடர்பாக விசாரணை பணிகளை மேற்கொள்ளல் மற்றும் சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுத்தல்.
4. நிவாரண பிரிவுகளின் மூலம் உங்களுக்கு சேவையை வழங்குவதற்காக
   - 300 சதுர மீற்றர் வரை - 2000 ரூபா
   - 301 தொடக்கம் 500 வரை - 4000 ரூபா
   - 501 தொடக்கம் 700 வரை - 6000 ரூபா
   - 701 தொடக்கம் 1000 வரை - 8000 ரூபா
   - 1000 மேல் - 10000 ரூபா

**பயிற்றுவிப்பு பிரிவு**

1. தீயணைப்பு பிரிவிற்குள் பயிற்சி பணிகளை நடைமுறைபடுத்தல்.
2. தீயொன்றை அனைக்கும் முறை, தீ ஏற்படும் போது தீயணைப்பு படையினர் செயற்படும் விதம் மற்றும் தீயினால் சுடப்பட்ட ஒருவருக்கு வழங்கக் கூடிய முதலுதவி தொடர்பாக பாடசாலை பிள்ளைகளுக்கு மற்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் போன்ற சமூக உபசார நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.
3. தொழிற்சாலைகளிலும் மாடி கட்டிடங்களிலும் தீ ஏற்படும் முறை மற்றும் அவசர சந்தர்ப்பத்தில் அதற்கு செயற்படும் முறை மற்றும் தீ பாதுகாப்பு ஒழுங்குமுறைகளை அறிவுறுத்தல்.
4. தீயணைப்பு பிரிவில் பெற்றுக்கொள்ள கூடிய பாடநெறி.

- தீயணைப்பு பிரிவிற்கு வருகை தரும் ஒரு நாள் ஆரம்ப தீயணைப்பு பாடநெறியினை கற்பதற்காக நீங்கள் விருப்பமென்றால்.

| | | | |
|---|---|---|---|
| (i) | விரிவுரை கட்டணம் | | |
| | (ஒரு மணித்தியாலத்திற்கு 200 ரூபா படி 03 மணித்தியாலங்களுக்காக ) | - | ரூ.600 |
| (ii) | பயிற்சி கட்டணம் (ஒரு முறைக்கு பயிற்சியாளர்கள் இரண்டு பேர் படி) | - | ரூ.1600 |
| (iii) | உபசரிப்பு கட்டணம் | - | ரூ.800 |
| (iv) | கடிதபொருட்கள் கட்டணம் | - | ரூ.500 |
| (v) | சபைக்கு அறவிடவேண்டிய நிதி | - | ரூ.2500 |
| | மொத்தம் | - | ரூ.6000 |

- நிறுவனத்திற்கு வருகை தரும் 3 தினங்களுக்கான தீயணைப்பு பாடநெறிக்கு

| | | | |
|---|---|---|---|
| (i) | விரிவுரை கட்டணம் | | |
| | (ஒரு மணித்தியாலத்திற்கு 200 ரூபா படி 09 மணித்தியாலங்களுக்காக ) | - | ரூ.1800 |
| (ii) | பயிற்சி கட்டணம் (ஒரு முறைக்கு இரண்டு பயிற்சியாளர்கள்படி) | - | ரூ.4800 |
| (iii) | உபசரிப்பு கட்டணம் | - | ரூ.2800 |
| (iv) | கடிதபொருட்கள் கட்டணம் | - | ரூ.800 |
| (v) | சபைக்கு அறவிடவேண்டிய நிதி | - | ரூ.6800 |
| | மொத்தம் | - | ரூ.17000 |

- 05 நாட்களுக்கான தீயணைப்பு பாடநெறி

| | | | |
|---|---|---|---|
| (i) | விரிவுரை கட்டணம் | | |
| | (ஒரு மணித்தியாலத்திற்கு 200 ரூபா படி 15 மணித்தியாலங்களுக்காக ) | - | ரூ.3000 |
| (ii) | பயிற்சி கட்டணம் (ஒரு முறைக்கு பயிற்சியாளர்கள் இரண்டு பேர்படி) | - | ரூ.8000 |
| (iii) | உபசரிப்பு கட்டணம் | - | ரூ.4000 |
| (iv) | கடிதபொருட்கள் கட்டணம் | - | ரூ.1000 |
| (v) | சபைக்கு அறவிடவேண்டிய நிதி | - | ரூ.10000 |
| | மொத்தம் | - | ரூ.26000 |

- நிறுவனத்திற்கு வெளியில் ஒருநாள் அடிப்படை தீயணைப்பு பயிற்சியை வழங்குவதற்காக

| | | | |
|---|---|---|---|
| (i) | விரிவுரை கட்டணம் | - | ரூ.2000 |
| (ii) | பயிற்சி கட்டணம் | - | ரூ.2000 |
| (iii) | சபைக்கு அறவிடவேண்டிய நிதி | - | ரூ.3000 |
| | மொத்தம் | - | ரூ.7000 |

## பாகம் XLIX

### வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தலை தடுத்தல் பற்றிய துணை விதிகள்

1979 ஆம் அண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் சரத்துக்கு இணங்க வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் பிரிவின் 06 ஆவது துணை விதியின் (ஆ) பந்தியின் கீழ் மாநகர சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின்படி பதுளை மாநகர சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தலை தடுத்தல் பற்றிய துணை விதிகள் தொடர்பான துணைச் சட்டம் இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.

1. இப்பகுதியின் துணை விதிகள் பதுளை மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தலை தடுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. எவரேனும் ஆளொருவரால் பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதிக்கு சேதம் விளைவித்தல் ஆகாதென்பதோடு, வீதியில் பயணம் செய்யும் வாகனங்களுக்கோ அல்லது பாதசாரிகளுக்கோ தடையேற்படுத்தும் வகையில் வீதியில்,-

    (அ) வியாபாரம் செய்தல்

    (ஆ) அகற்றிச்செல்வதற்காக இயங்க செய்விக்க அல்லது வேறு அனர்த்தம் காரணமாக டிப்பால் ஓட்டிச் செல்லமுடியாத ஏதேனும் காரணம் இருந்தாலேயன்றி, பாகம் XXVI வது துணைவிதிகளின் கீழ பதுளை மாநகர சபையினால் வாகனத்தை நிறுத்துவதற்கு இடமளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பகுதி அல்லாத இடத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்தல்

(இ) வாகனங்களைப் பழுதுபார்த்தல் அல்லது வாகனங்களைக் கழுவுதல்

(ஈ) ஏதேனும் வீதியில் இடம்பெறும் பழுதுபார்த்தலுக்காக பதுளை மாநகர சபையின் அல்லது நகர ஆணையாளரால் தீர்மானத்தின் மீது இடம்பெறும் கருமம் தவிர, கல், மணல், கூழாங்கல், மண், செங்கல் அல்லது மரக்குற்றி போன்றவற்றை இறக்குதல் அல்லது சேர்த்து வைத்தல்

(உ) ஒதுக்கப்பட்ட வாகனங்களின் உதிரிப்பாகங்களைச் குவித்து வைத்தல் ஆகாது.

(ஊ) வீதிகளை பழுதுபடுத்துதல் ஆகாது

3. (அ) (i) நகரஅபிவிருத்திகட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளை மீறுகின்றவகையில் பதுளை மாநகர சபையினால், சபைக்குரிய வீதிகள் தொடர்பாக நிர்ணயிக்கப்படுகின்ற வீதிரேகை எல்லைக்குள் எவ்வகையான ஒரு நிர்மாணவேலையும் யாரொருவராலும் செய்யக்கூடாது என்பதுடன், வேறொரு நிர்மாணப்பணிக்காக கொண்டுவரப்பட்ட எந்தவொருபொருளும் எந்தவீதியிலோ அல்லதுஅதன் ஒருபகுதியிலோபோட்டுவைத்தலாகாது.

(ii) புதிதாகஅமைக்கப்பட்ட அல்லது வீதிரேகைஎல்லைகள் நிர்ணயிக்கப்படாதவீதிகள் தொடர்பிலாயின் மாநகரசபையின் பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய நிர்ணயிக்கப்படும் எல்லைக்குள் அவ்வகையான ஒரு நிர்மாண வேலையும் யாரொருவராலும் செய்யக்கூடாது என்பதுடன், வேறொருநிர்மாணப் பணிக்காக கொண்டுவரப்பட்ட எந்தவொருபொருளும் எந்த வீதியிலோ அல்லது அதன் ஒரு பகுதியிலோ போட்டு வைத்தலாகாது.

(ஆ) 1. யாரொருவராலும் பதுளை மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள வீதியிலோ அல்லது தெருவிலோ பதுளை மாநகர சபையின் முறையான அனுமதியின்றி

(i) வீதியின் மேற்பரப்பை பழுதுபடுத்தல்.

(ii) குழாய்கள் இடுவதற்காக வீதியின் மேற்பரப்பை அல்லது அதன் அடிப்பகுதியை பழுதுபடுத்தல்.

(iii) தொலைபேசி கம்பி மற்றும் மின்சார கம்பி போன்றவற்றை இடுவதற்காக வீதியின் மேற்பரப்பில் அல்லது அதன் அடியில் துளையிடுவது ஆகாது.

2. மேற்படி 3 (ஆ) 1 இற்காக அனுமதிவழங்கும் போது பதுளை மாநகர சபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற கட்டணங்களை செலுத்திய பின்னர் மாத்திரமே அவ்வனுமதி வழங்குவது பற்றி கவனம் செலுத்தப்படும்.

4. 3 வது துணைவிதியில் குறிப்பிட்ட பணிகளை மீறியதாக எந்தவோர் ஆளினாலும் பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி அல்லது அதன் ஏதேனும் பகுதியில் ஏதேனும் நிர்மாணப் பொருளொன்றை வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மாநகர ஆணையாளரால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தகை நிர்மாணப் பொருட்களை அத்தகைய இடத்திலிருந்து அகற்றுவதற்கோ அல்லது பதுளை மாநகர சபைக்கு உரித்தாக்குவதற்கோ நடவடிக்கை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும். மாநகர ஆணையாளரால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் மேலே குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுப்பதன் மூலம் அத்தகைய நிர்மாணப் பொருட்கள் வீதியில் வைக்கப்பட்ட அல்லது வைப்பதற்கு ஏற்பாடு செய்த ஆளுக்கு ஏற்படும் ஏதேனும் இழப்பு, நட்டம் அல்லது சேதம் சம்பந்தமாக அத்தகைய பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட ஆள் அல்லது பதுளை மாநகர சபை வகைப்பொறுப்பு கூறக் கட்டுப்படல் ஆகாது. அவ்வாறே தொடர்ந்தும் அப்படியாக அகற்றப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு அளவிலான நட்டஈடு செலுத்துவதற்கு பதுளை மாநகர சபை அல்லது நகர ஆணையாளரால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் கடப்பாடு உடையவர்களாதல் ஆகாது.

5. பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதியை பராமரித்தல் அல்லது பழுதுபார்ப்பதற்கு அவசியமாகின்ற கருமத்திற்காக,-

(அ) அத்தகைய வீதியை முற்றாக அல்லது வீதியின் ஒரு பகுதியை அல்லது வீதியின் ஏதேனும் திசையை நோக்கிச் செல்லும் ஏதேனும் ஓட்டப்பாதை நிரலை ஏதேனும் காலத்திற்கு வாகனப் போக்குவரத்திற்கு மூடி வைப்பதற்கும்;

(ஆ) ஏதேனுமொரு நிர்மாணப் பொருளை அல்லது நிர்மாணப் பொருட்களை அத்தகைய வீதியின் பாகத்தில் குவித்து வைப்பதற்கும்;

(இ) அத்தகைய வீதியின் அருகாமையிலுள்ள காணிக்குள் உட்பிரவேசிப்பதற்கும் நிர்மாணப் பொருட்கள் எதையும் அத்தகைய காணியில் வைத்திருக்கவும்;

(ஈ) அத்தகைய வீதியின் அருகாமையிலுள்ள காணியின் ஏதேனும் ஆதனத்திற்கு சேதம் விளைவிக்காத விதத்தில் அத்தகைய காணியில் வாகனங்கள் ஓட்ட இடமளிப்பதற்கும் கட்டளையிடுவதற்கும் மாநகர ஆணையாளரால் அதிகாரமிருத்தல் வேண்டும்.

6. 5 வது துணைவிதியின் கீழ் நகர ஆணையாளரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கட்டளைக்கு முரணாக செயற்படுதல் அல்லது அத்தகைய ஏதேனும் கட்டளைக்கமைய செயற்படும் எவரேனும் ஆளுக்கு தடை ஏற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்ய இடமளித்தல் எந்தவோர் ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

7. மாநகர ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட எழுத்திலான அனுமதி இருந்தாலன்றி எவரேனும் ஆளினால் நகரசபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதியில் வைக்கப்பட்டுள்ள கல், கூழாங்கல், மணல், மண் அல்லது வேறு ஏதேனும் பொருளை சேகரித்தல் அல்லது குவித்து வைத்தல் அல்லது அகற்றுதல் போன்றவற்றைப் புரியலாகாது.

8. ஏதேனும் காணிக்கு அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்தின் கூரையில் விழும் மழை நீர் தவிர்ந்த வேறு ஏதேனும் விதத்தில் அத்தகைய இடத்தில் அல்லது இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்திலுள்ள நீரை அல்லது பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் போன்றவற்றை, உறிஞ்சியிழுக்கும் கிடங்கிற்கு பாய்ந்து செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான வீதிக்கு அல்லது வீதியிலுள்ள வடிகானுக்கு அப்புறப்படுத்தல் ஆகாது.

9. போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொருட்கள் அல்லது தூசி அல்லது மணல் அல்லது சிறிய தூண்களாக பரவிச் செல்வதைத் தடுக்கின்ற மூடியொன்றினால் மூடப்பட்டிருந்தாலேயொழிய, எவரேனும் ஆளினால் அவ்வாறான ஏதேனும் பொருட்களை பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான வீதியில் ஏதேனும் வாகனத்தில் போக்குவரத்துக்காக எடுத்துச் செல்லல் ஆகாது.

10. ஏதேனும் வீதியின் மீதுள்ள வடிகானை நிரப்புதலோ சேதப்படுத்துதலோ அல்லது அத்தகைய வடிகானூடாகப் பாய்ந்து செல்லும் நீர் இலகுவாகப் பாய்வதைத் தடைசெய்தலோ எந்தவோர் ஆளினாலும் மேற்கொள்ளலாகாதென்பதுடன், அத்தகைய வடிகானுக்குக் குறுக்காக ஏதேனும் காணிக்குள் பிரவேசிப்பதற்கு அவசியமாயின் 3 அடி நீளத்திற்குக் குறையாத பாலம் அல்லது மேடை அல்லது வில்வளைவு அமைப்பொன்றினை அமைத்தல் அத்தகைய இடத்தின் உரிமையாளர் அல்லது வதிபவரின் பணியாதல் வேண்டும்.

11.

12 இத் துணைவிதியின் நிர்ணயங்களை மீறும் அனுமதிப்பத்திர உடைமையாளர் ஏதோ ஒரு வகையில் குற்றவாளி எனக் கருதப்பட்டால், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின் 03 ஆவது துணைபிரிவின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள தண்டனையில்,

(i) முதலாவது தடவை இழைக்கப்படும் குற்றமாயின், 1,000 ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்கு ஆளாவார்.

(ii) இரண்டாவது தடவை அல்லது தொடர்ச்சியான குற்றத்திற்காக நாளொன்றுக்கு 2,000 ரூபாவுக்கு மேற்படாத தண்டத்திற்கு ஆளாவார்.

(iii) தொடர்ச்சியாக இழைக்கப்படும் குற்றத்துக்காக குற்றவாளி எனத் தீர்க்கப்பட்டதன் பின்னரோ அல்லது சட்டமீறல் சம்பந்தமாக எச்சரிக்கை விடுத்து கௌரவ நகர பிதாவினால் எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று கையளிக்கப்பட்டதன் பின்னரோ தொடர்ந்து இழைக்கப்படுகின்ற குற்றத்துக்காக நாளொன்றுக்கு (250 ரூபா) இரு நூற்றைம்பது ரூபாவுக்கு மேற்படாத மேலதிக தண்டத்துக்கு ஆளாவார்.

13. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,-

"வீதி" என்பது, பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந் தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை அல்லது பயணிகள் பாலம் எனக் கருதப்படுவதோடு, பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந் தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை, அல்லது பயணிகள் பாலத்திற்கு இணைத்துப் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஏதேனும் தூரத்தைக் காட்டும் குறியீடு, எல்லைக் கல், எல்லைத் தூண், மின்சாரக் கம்பம், பாலம், ஏதேனும் வகையிலான மதகு, நீர்க்கடவை, மதில், வில்வளைவமைப்பு, அணைக்கட்டு, வடிகான், சுளுசு, துணைமதில், கைப்பிடி, சங்கிலி, வேலி, சமிக்ஞைப் பலகை, வீதிப் பெயர்ப் பலகை அல்லது வீதி அருகிலுள்ள நடைபாதை மேடை என்பன அதனை உள்ளடக்க வேண்டும்.

"வாகனம்" என்பது, மோட்டர் வாகனங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் வாகனத்திற்காக வழங்கப்பட்ட பொருள்கோடல் கருதப்படல் வேண்டுமென்பதொடு வண்டி, துவிச்சக்கர வண்டி, அல்லது சில்லுகள் பொருத்தப்பட்டு இயந்திர மூலமாகவோ வேறு வகையிலோ இயக்கப்படுகின்ற உபகரணமும் கருதப்படும்.

"சேதம் ஏற்படுத்தல்" என்பது, அழிவு ஏற்படுத்தல், கழற்றுதல், உருக்குலைத்தல், புரட்டிப்போடுதல், அப்புறப்படுத்தல், வேறு ஏதேனும் விதத்தில் சேதமேற்படுத்தல், ஏதேனும் பாகத்தின் மீது சுவரொட்டி அல்லது துண்டுப் பிரசுரம் ஒட்டுதல் அல்லது வர்ணப்பூச்சு அல்லது வேறு ஏதேனும் பிசின் வகை அல்லது தார் பூசுதல் என்பன கருதப்படுவதோடு, ஏதேனும் பெயர்ப் பலகையில் எழுத்துகளை மாற்றுதல், அழித்தல், சுரண்டுதல் அல்லது கழற்றுதல் உள்ளடக்க வேண்டுமென்பதோடு, பதுளை மாநகர சபையால் அல்லது நகர ஆணையாளரால் அல்லது நகர ஆணையாளரால் அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தரால் ஏதேனும் வீதியைத் திருத்துவதற்காக செய்விக்கப்படும் ஏதேனும் கருமம் இதில் உள்ளடக்கப்படல் ஆகாது.

## L ஆம் பகுதி

### கிணறு அமைத்தல் தொடர்பான துணைவிதி

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் பிரிவின் (28) ஆம் உப பிரிவின் (உ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பதுளை மாநகர சபையின் கிணறு அமைத்தல் தொடர்பான துணைச் சட்டம் இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.

1. மாநகர ஆணையாளரின் குறிப்பிட்ட பணிகளுக்காக எழுத்து மூலமான அனுமதியொன்றினை பெற்றிருந்தால் அன்றி எந்தவொரு நபரினாலும் சபையின் நிர்வாக எல்லைக்குள் கிணறு ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடக் கூடாது

2. (i) ஏதேனுமொரு கிணறு ஒன்றின் நிலத்தள மாதிரி படம் மற்றும் விவரக் குறிப்பு மாநகர ஆணையாளரினால் அனுமதிக்கப் பட்டிருந்தால் அன்றி, அவ்வாறு அனுமதிக்கப்படும் நிலத்தள மாதிரிப் படம் மற்றும் விவரக் குறிப்புகளுக்கு அமைவாக அதன் பகுதிகள் வேறு விதத்தில், எவரேனுமொரு நபரினால் குடிப்பதற்கு அல்லது ஏனைய ஏதேனும் வீட்டு பணிகளுக்காக நீர் வழங்குவதற்கு அல்லது பொது மக்களுக்கு நீரினை விற்பனை செயவதற்கு அல்லது வழங்குவதற்கு அல்லது ஏதேனுமொரு கிணறை அமைப்பதற்கு திட்டமிடக்கூடாது.

(ii) ஏதேனுமொரு மலசலகூட குழியில், குப்பை நீர் குழியில், நீர் இறங்கும் குழியில், பன்றி கூட்டில், தொழுவத்தில், கொட்டிலில், குழி மலசலகூடம் அல்லது பாழடைந்த இல்லாவிட்டால் மதில் அமைக்கப்படாத கால்வாயில் அல்லது பயிர்செய்கை பணிகளுக்காக அனைத்து வருடங்களிலும் தவறாது உரம் போடப்படும் இடமொன்றில் அல்லது வெளியிலிருந்து

குறைந்தபட்சம் 16 மீற்றர் தூரத்திற்குள் எந்தவொரு கிணறையும் நிர்மாணிப்பதற்கு ஏதேனுமொரு நிலத்தள மாதிரி படம் ஒன்றை நகர ஆணையாளரினால் அனுமதித்தல் அல்லது அமைப்பதற்கான அனுமதியை வழங்கக்கூடாது.

3. குடிப்பதற்காக அல்லது ஏனைய ஏதேனுமொரு வீட்டு பணிக்காக அல்லது நீர் வழங்குவதன் உள்ள ஏதேனுமொரு கிணறில் இருந்து 30 மீற்றர் தூரத்திலான அளவிற்குள் ஏதேனுமொரு இடத்தில் எந்தவொரு நபரினாலும்-

(அ) ஏதேனுமொரு மலசலகூட குழி,வெந்நீர் குழி, நீர் இறங்கும்குழி, குழி மலசலகூடம், தொழுவம், கொட்டில் போன்றவற்றில் மதில் அமைக்கப்படாத வாய்க்கால் அமைத்தல் இல்லாவிட்டால் அமைப்பதற்கு திட்டமிடுவதற்கான அனுமதியை வழங்கல் அல்லது,

(ஆ) ஏதேனும் உரங்கள் அல்லது உக்கிப் போகக் கூடிய மிருகங்கள் அல்லது ஏதேனும் தாவரங்களின் பகுதிகளை வைப்பதற்கு இல்லாவிட்டால் வைப்பதற்கு திட்டமிடல் அல்லது அனுமதியளித்தல் அல்லது

(இ) குறைந்த பட்சம் ஒரு கிழமைக்கு ஒரு முறையாவது குப்பைகள் அகற்றாமல் இருக்கும் எந்த குப்பைகளையும் சேகரிப்பதற்கு திட்டமிடல் அல்லது சேகரிப்பதற்கு இடமளித்தல் அல்லது

(ஈ) எந்தவொரு வாய்காலையும் பழுதடையும் நிலைக்கு உள்ளாவதற்கு இடமளிக்க கூடாது.

4. குடிப்பதற்காக அல்லது ஏனைய ஏதேனுமொரு வீட்டு பணிகளுக்காக நீர் வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் கிணறு அமைந்துள்ள இடத்தில் உரிமையாளர் வாடகையாளர் அல்லது வசிப்பவர்களினால் அனைத்து சந்தர்ப்பத்திலும்

(அ) ஏதேனுமொரு தூரத்தில் இருந்து கிணற்றின் மேற்புறத்திற்கு ஒரே முறையில் நீர் வழிந்தோடுதல்

(ஆ) கிணற்றடியில் இருந்து 05 மீற்றருக்கு குறைந்த தூரத்தில் இருந்து மேற்புறத்தில் உள்ள நீரானது கிணறிற்கு கசிதல்.

(இ) கிணற்றுடன் இணைந்து அமைந்துள்ள பூமியில், தரை மட்டத்தில் இருந்து 3 மீற்றரை விட குறைந்த ஆழத்தின் அடித்தரையில் உள்ள நீரானது கிணற்றிற்கு கசிவதை தவிர்ப்பதற்கு தேவையாக உள்ள நிலையுடனும் புதுப்பித்தல்களுடனும் அக்கிணற்றை வைத்துக் கொள்ள வேண்டும்.

5. குடிப்பதற்காக அல்லது ஏனைய ஏதேனுமொரு இல்ல பணிகளுக்காக நீர் வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் கிணற்றில் அசுத்தமான பாத்திரத்தை பயன்படுத்தி நீர் எடுப்பதை எந்தவொரு நபரும் செய்யக் கூடாது.

6. பொதுமக்களுக்கு நீர் வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் கிணற்றில் இருந்து 5 மீற்றர் தூரத்திற்குள் எந்தவொரு நபரினாலும் ஆடைகள் கழுவ கூடாது.

7. குடிப்பதற்கு அல்லது இல்ல பணிகளுக்காக பயன்படுத்தப்படும் கிணற்றை சுத்தம் செய்தற்கு,பழுதுபார்ப்பதற்கு தேவையென மாநகர ஆணையாளர் கருதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அப்படியான கிணறு அமைக்கப்பட்டிருக்கும் ஏதேனுமொரு இடத்தின் உரிமையாளருக்கு,வாடகையாளருக்கு அல்லது வசிப்பவருக்கு எழுத்து மூலமான அறிவித்தலின் மூலம் அவ் அறிவித்தலில் தீர்மானிக்கப்பட்டுள்ள கால வரையறைக்குள் அந்த கிணற்றை சுத்தம் செய்தல் மற்றும் அதை சுத்தம் செய்து திருத்துமாறும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் உபதேசத்திற்கு இணங்க நகர ஆணையாளர் அதனை கவனத்திற் கொண்டு வேறொரு பழுதுபார்த்தலை செய்யுமாறு அறிவிக்க திட்டமிட வேண்டியதுடன், அவ் அறிவித்தலில் தீர்மானிக்கப்பட்டுள்ள கால வரையறைக்குள், அந்த உரிமையாளர், வாடகையாளர் அல்லது வசிப்பவர்களினால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி செயற்பட வேண்டும்.

8. பொதுவாக பயன்படுத்தப்படும் கிணறு அல்லது பீலி ஒன்றினை நகர ஆணையாளரின் அனுமதியின்றி எந்தவொரு நபரினாலும் மூடக் கூடாது. நகர பிரதேசத்திற்குள் உள்ள அனைத்து கிணறுகளும் (தனியார் அல்லது பொது) நகர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் கிணறு அமைந்துள்ள இடத்தில் அல்லது அவ்விடத்தில் வசிப்பவர்கள் அல்லது வாடகையாளர் அந்த கிணறை நகர அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

9. இத் துணைச் சட்டத்தின் ஏதேனுமொரு துணைச் சட்டத்தை மீறுதலானது தண்டனை பெறக் கூடிய ஒன்றாவதோடு, பதுளை மா நகர சபை எல்லைக்குள் நீதிமன்ற அதிகாரம் உடைய சட்டத்தரணி ஒருவரின் முன்னால் வழக்கு தொடரப்பட்டு குற்றவாளியாக்கப்பட்டால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளுக்கு சம்பந்தப்பட்ட நபர் கீழ்படிய வேண்டும்.

(i) முதலாவதாக செய்யப்படும் பிழை என்றால், 1,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(ii) இரண்டாம் முறை செய்யப்படும் தவறுக்காக 2,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்

(iii) தொடர்ச்சியாக செய்யப்படும் தவறு தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் அல்லது அதை மீறும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு கௌரவ ஆணையாளரினால் அவர்களுக்கு எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் அல்லது தொடர்ந்து தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது (250) ரூபாவிற்கு மேற்படாத மேலதிக அபராதத்துக்கு கீழ்ப்படிய வேண்டும்.

LI

**தொல்லைகளை தவிர்த்தல் தொடர்பான துணைச்சட்டம்**

*252 ஆம் அதிகாரமான மா நகர சபையின் கட்டளைச் சட்டத்தில் 267 ஆம் சரத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 272 ஆம் சரத்தின் (05)ஆம் உப சரத்தின் (அ) பந்தியில் சரத்தின் படி பதுளை மா நகர சபையினால் தொல்லைகளை தவிர்த்தல் தொடர்பான கட்டளைகளை நிபந்தனைகள் இங்கு விதிக்கப்படும்.*

1. இப்பகுதியின் துணைச்சட்டத்தின் பதுளை மா நகர சபையினால் தொல்லைகளை தவிர்த்தல் தொடர்பான கட்டளைகள் தொடர்பான துணைச்சட்டம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

2. ஏதேனுமொரு நேரத்தில் மற்றும் தேவையென தமக்கு தெரியும் சந்தர்ப்பத்தில் மாநகர ஆணையாளர் அல்லது அவர்களினால் கடிதமூலம் ஒப்படைக்கப்படும் ஏனைய உத்தியோகத்தரினால் கடிதமூலமான அறிவித்தல் மூலம் மாநகர எல்லைக்குள் யாதாயினுமொரு இல்லத்திற்கு வெளியில் இல்லத்தில் கட்டிடத்தில் மூடப்பட்ட இடத்தில் அல்லது வளாகத்தின் உரிமையாளர்களுக்கு அல்லது வதிவிடத்தாருக்கு அவ் இல்லத்தில் இருந்து வெளியிலுள்ள இல்லத்திற்கு கட்டிடத்திற்கு மூடப்பட்ட இடத்தில் அல்லது சூழலுக்கு உரிய இடங்களில் ஏதேனுமொரு மலசலகூடத்தில் அல்லது சிறுநீர் மலசலகூடம் போன்றவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அவ்விதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அல்லது இடங்களில் இருந்து செல்லுமாறு அல்லது அகற்றுமாறு அல்லது அகற்றிக் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு விதிக்கப்படுதல் சட்டரீதியானதாகும்.

3. எந்தவொரு நபரினாலும் குப்பை குழிகளில்அல்லது சிறுநீர் மலசலகூடங்களுக்கு உள்ளடங்கும் பொருட்களை ஏதேனுமொரு வீட்டின்பின்னால் கட்டிடமொன்றில் அல்லது சூழலில் ஏதேனுமொரு தங்குமிடத்தில் இல்லமொன்றின் குப்பை குழிகளில், குளங்களில், ஓடையில், வாய்க்காலில், வீதியில் அல்லது நீர் வழிகளில் இருந்து 50 அடிக்கு உட்பட்ட ஏதேனுமொரு இடத்தில் அல்லது நிலையத்திற்குள் அல்லது அதன்மீது போடுவதற்கு ஏற்பாடு செய்தல் அல்லது வைப்புச்செய்தல் அல்லது வைப்பதற்கு ஏற்பாடு செய்யக் கூடாது என அறிவித்தலொன்று கிடைத்த பின்னர் அவர்களினால் உடனே மாநகர ஆணையாளரினால் அல்லது அப்பணிகளுக்காக அதிகாரம் வழங்கப்படும் ஏனைய உத்தியோகத்தருக்கு கட்டளையிடும் வகையில் மற்றும் அந்நிலையத்திற்கு கட்டளையிடப்படும் காலத்திற்குள் அப் பொருட்களை அகற்ற வேண்டும்.

4. ஏதேனுமொரு தொழிற்சாலை நடாத்தும் அல்லது ஏதேனுமொரு சூழலின் அமைப்பை மாற்றுதல் அல்லது மலசலகூட குழி அல்லது மலசலகூடம் மேலும் பயன்படுத்துவது அவசியமற்றது என எவரேனுமொரு நபரினால் மற்றும் பயன்படுத்தாத மலசலகூட குழி அல்லது மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் இல்லாவிட்டால் அவசியமற்றதாக இருக்கும் மலசலகூட குழி அல்லது மலசலகூடம் உரிமையாளர்களினால் அம் மலசலகூட குழியில் அல்லது மலசலகூடத்தில் உள்ள அனைத்து மனத்திற்கு பிடிக்காத பொருட்களையும் முழுமையாக மலசலகூடங்களில் இருந்து வெற்றிடமாகும் வரை அகற்ற வேண்டும். மேலும் பாதுகாப்புடன் அகற்ற முடிந்தளவு அம் மலசலகூட குழிகள் அல்லது மலசலகூட சுவர்களில் மற்றும் கூரைகளில் அதற்கு விரிவடையும் மற்றும் அதற்கு தொடர்புறும் குழாய் மற்றும் வாய்க்கால் போன்றவற்றில் உள்ள அசுத்தங்களையும் சுத்தம் செய்து அல்லது ஏனைய பொருட்களை முழுதாக அகற்ற வேண்டும். அவரினால் தொல்லை ஏற்படாத வகையில் மலசலகூட குழிகளை உகந்த பொருட்களை கொண்டு நிரப்ப வேண்டும்.

5. யாதாயினுமொரு மலசலகூட குழி அல்லது மலசலகூடம் மூடுவதற்கு அல்லது நிரப்புவதற்கு கருதும் அனைவரும் அப் பணிகளுக்காக ஒரு வேலையொன்றை ஆரம்பிக்கும்போது தான் அம் மலசலகுழி அல்லது மலசலகூடத்தினை மூடுவதற்கு அல்லது நிரப்புவதற்கு ஆரம்பிக்கப்படும் நேரத்தை உறுதியாக குறிப்பிட்டு விடுமுறை தினத்தை தவிர ஏழு தினங்களுக்கு குறையாத தினங்களில் அறிவித்தலை நகர ஆணையாளர் அவர்கள் அல்லது அவரினால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்படும் ஏனைய உத்தியோகத்தருக்கு எழுத்துமூலமாக தெரிவிக்க வேண்டியதுடன், வேலைகள் செய்துக் கொண்டு செல்லும் போது மா நகர சபையின் எவரேனுமொருவர் அதனை பரிசோதனை செய்து பார்க்கும் கடமைகளுக்காக அவ்விடத்திற்கு சுதந்திரமாக உட்பிரவேசிக்கும் வழியொன்றை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. ஒரு இல்லத்தில் அல்லது நிலையத்திலுள்ள ஏதேனுமொரு மலசலகூட குழி அல்லது நீர், சிறுநீர் போன்றவற்றை அகற்றுவதற்கு விரும்புபவர்கள் இலக்கம் 1 உடைய துணைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அகற்றுவதற்கு விதிக்கப்பட்டுள்ள அல்லது நகர எல்லைக்குள் உள்ள ஏதேனுமொரு இல்லத்தில் அல்லது காணியின் உரிமையாளரினால் அல்லது வசிப்பவர்களினால்தான் வேலை செய்வதற்கு கருதும் தினம் மற்றும் இல்லம் தொடர்பாக நகர ஆணையாளருக்கு அறிவித்தலொன்றை தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு நகர ஆணையாளர் அவர்களினால் அவ் உரிமையாளருக்கோ அல்லது வதிவிடத்தாருக்கோ நகர உத்தியோகத்தரினால் மேற்பார்வை செய்தல் மற்றும் நகர ஆணையாளரினால் உகந்த முறையில் அதிகாரம் வழங்கப்பட்ட நபரினால் அனுமதிபத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தீர்மானங்களின் படி வேலை செய்வதற்கு அனுமதிபத்திரம் ஒன்று வழங்க வேண்டும்.

7. நகர எல்லைக்குள் ஏதேனுமொரு இல்லமொன்றின் அல்லது நிலையமொன்றின் பணிகளுக்காக உகந்த அதிகாரம் வழங்கப்பட்ட சபையின் ஊழியர் ஒருவர் அன்றி ஏனைய எந்தவொரு நபரினாலும் மலங்களை அகற்ற கூடாது.

8. மலம் அகற்றும் வாளியானது மலசல முறைமையை பயன்படுத்தும் வாடகை இல்லத்தார் தொடர்பாக வேறு வேறான ஒப்பந்தங்களின் கீழ் அவ் தங்குமிட நிலையத்திற்கு மேற்பட்ட தங்குமிடங்களின் எண்ணிக்கையில் அல்லது ஒரு இல்லத்தார் பலரை கொண்ட இல்லமொன்றில் அமைக்கப்பட்ட ஏதேனுமொரு இல்லம் கட்டிடம் காணியொன்று அல்லது வாடகை வீடுகள் தொடர்பான காரணங்களின்போது இல்லத்தின் கட்டிட இடமொன்று அல்லது வாடகை இல்லத்தின் உரிமையாளர் அல்லது வாடகையாளரினால் அக்கட்டிடத்தின் காணி அல்லது வாடகை இல்லம் தொடர்பான முறையாக மலங்களை போடுவதற்கு மற்றும் அகற்றுவதற்கு தேவையென நகர ஆணையாளர் கருதும்போது அதில் வசிப்பவர்களின் ஆயிரம் பேருக்கு ஒரு சம்மதிக்கப்பட்ட வாளிக்கு மேற்படாத மலசல வசதிகளை ஏற்படுத்திகொடுக்க வேண்டும்.

9. ஒவ்வொரு சம்மதிக்கப்பட்ட வாளியும் முழாம் பூசப்பட்ட தகடுகளினால் அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் அதன் நிறையானது 4"54 கிலோ கிராமிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். மேலும் அது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளகஅளவுகளையுடையதாக இருக்க வேண்டும். உயரம் 28 சென்றி மீற்றர், விட்டம் 31 சென்றிமீற்றர், அடிப்பாகம் 23 சென்றி மீற்றர்.

10. ஏதேனுமொரு சூழலில் உள்ள மலங்களை சேகரிக்கும் பணிகள் தொடர்பாக சபையினால் ஏற்படுத்தும் சேவைக்காக சபை உகந்தது என கருதும் கட்டணத்தை அவ் இடத்தின் உரிமையாளருக்கு அல்லது வாடகையாளருக்கு விதிக்கப்பட்டு அதனை அவர்களிடம் அறவிட்டுக்கொள்ள வேண்டும்.

11. மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதியின் கீழ் சபைக்கு அறவிட வேண்டிய ஏதேனுமொரு கட்டணத்தை உகந்த முறையில் செலுத்தாதிருந்தால் நகர எல்லைக்குள் அதிகாரம் உள்ள சட்டத்தரணியிடம் அறிவிக்க முடியும் என்பதுடன் சிறு வழக்கு விசாரணையின் பின்னர் அந்நிதி கிடைக்க வேண்டும் என காட்டப்படும் சந்தர்ப்பத்தில் அதைசெலுத்துமாறு சட்டத்தரணியினால் கட்டளையிடவேண்டும். மேலும் அது அச் சட்டத்தரணியால் விதிக்கப்படும் தண்டப்பணம் என்ற ரீதியில் அறவிட வேண்டும். அதை செலுத்தாவிட்டால் மாநகர ஆணையாளரினால் வரிபணமாக அறவிட வேண்டும்.

12. மாநகர ஆணையாளரினால் நிர்ணயிக்கப்படும் நேரத்தில் மலங்களை அகற்றுவதற்கு,மா நகர சபையின் ஊழியர்கள் மலசலகூடங்களுக்கு சுதந்திரமாக உட்பிரவேசிக்க கூடிய வசதிகளை, இல்லமொன்றில், நிலையமொன்றில் வசிக்கும் அனைவரினாலும் வழங்க வேண்டும்.

13. (i) மாநகர ஆணையாளரினால் அனுமதிக்கப்படும் நிலையத்திற்கு மற்றும் திட்டங்களுக்கு அமைவாக அன்றி, ஏனைய எந்தவொரு மலசலகூடமும் நிர்மாணிக்கக் கூடாது.

(ii) அனைத்து மலசலகூடங்களும், அம் மலசலகூடங்களுக்கு உட்பிரவேசிக்கும் உட்புறத்தில் உள்ள அனைத்து பகுதிகளும் ஏதேனுமொரு பாதைக்கு, புகையிரத வீதிக்கு, பொதுவான பூங்காவிற்கான மலசலகூடங்களுக்கு சம்பந்தப்படும் தங்குமிட கட்டிடங்களை தவிர ஏனைய ஏதேனுமொரு தங்குமிட கட்டிடத்திற்கு தெரியாத வகையில் மூடப்பட வேண்டும்.

14 மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அத்தியாயம்) 131 ஆம் பிரிவின் கீழ் இடம் ஏற்பாடு செய்துள்ள நிலையங்களை தவிர ஏனைய எந்தவொரு இடங்களிலும் எவரேனுமொருவரினால் மலம், சாணம் அல்லது ஏனைய அழகற்ற பொருட்கள், தூசிகள், குப்பைகள், சாம்பல், குப்பை கூழங்கள் அல்லது மரக்கிளைகள் வைக்க கூடாது.

15. மாநகர ஆணையாளரினால் எழுத்துமூலமாக பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதியின்றி, எந்தவொரு நபரினாலும்,அதன்பிறகு விற்பனைக்காக அல்லது அங்கு அழகற்ற பொருட்களை அல்லது குப்பை கூழங்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக அல்லது ஏதேனுமொரு அழுக்கான குழியினை, குளமொன்றினை, கிணறு ஏதேனுமொரு விலைக்கு வாங்குவதற்காக வைத்தல் கூடாது.

16. ஏதேனுமொரு இடத்தின் உரிமையாளர், வாடகையாளர் அல்லது வசிப்பவரினால் அவ் இடத்தின் ஏதேனுமொரு வீதிக்கு அல்லது திறந்த பொது வாய்க்காலிற்கு அழகற்ற துர்நாற்றம் உடைய பொருட்களை எவரேனுமொருவர் அகற்றுவதற்கு இடமளிக்கக் கூடாது.

17.(அ) ஏதேனுமொரு சூழலில் வசிக்கும் எவரொருவரினாலும்,

(i) ஏதேனும் குப்பை கூழங்களை,ஒழுங்கான பாத்திரமொன்றில் அல்லது இருக்கமாக கட்டப்பட்ட பொலிதீன் பையை பாத்திரமொன்றிற்கு போடுவதை தவிர, ஏனைய எந்தவொரு இடத்திலும் வைப்பதற்கு திட்டமிடக் கூடாது.

(ii) மாநகர ஆணையாளரினால் காலத்திற்கு காலம் வழங்கப்படும் அறிவித்தல்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரங்களில் தினமும் தமது சூழலுக்கு வெளியில், வீதியொன்றின் ஓரத்தில் தவிர ஏனைய இடங்களில் ஏதேனுமொரு பாத்திரத்தை வைத்தல் அல்லது வைப்பதற்கு இடமளிக்கக் கூடாது.

(ஆ) ஏதேனுமொரு சூழலில் வசிப்பவர்களினால் வீதியில் ஏதேனும் குப்பை கூழங்களை வைப்பதற்கு அல்லது தடுத்து வைப்பதற்கு இடமளிக்க கூடாததுடன், நடைபாதை உட்பட அவ் வீதியில் மற்றும் தனது சூழலுக்கு முன்னால் இருக்க கூடிய தொடர்புறும் அல்லது இணைக்கப்பட்டிருக்கும் அனைத்து வாய்க்கால்களையும் சுத்தம் செய்தல் மற்றும் குப்பை கூழங்கள் இல்லாமல் சுத்தமாக வைத்தல் அங்கு வசிப்பவர்களின் கடமையாகும்.

18. மாநகர ஆணையாளரினால் எழுத்துமூலமாக அதிகாரம் வழங்கப்பட்டால் அன்றி, எந்தவொரு நபரினாலும் நகர எல்லைக்குள் ஏதேனுமொரு வீதிக்கு அல்லது பொது இடத்திற்கு குப்பை கூழங்களை சேகரித்தல் அல்லது அகற்றுதல் கூடாது.

19. சபையினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் அளவிற்கு ஏற்ப, ஏதேனுமொரு சூழலில் உள்ள குப்பை கூழங்களை சேகரித்தல் அல்லது அகற்றுவதற்கு பதிலாக சபையினால் ஏதேனுமொரு பாத்திரம் வழங்குவதற்காக அவ் இடத்திற்கு உரிமையாளரிடம் அல்லது வசிப்பவர்களிடம் சபையினால் ஏதேனுமொரு கட்டணத்தை அறவிட முடியும்.

20. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக்காக சபையினால் சபையின் சம்மதத்துடன் நிர்ணயிக்கப்படும் கட்டணங்களை காலத்திற்கு காலம் அறவிட வேண்டும்.

(அ) வர்த்தக மற்றும் வியாபார சூழலில் உள்ள குப்பைகூழங்களை அகற்றுதல்.

(1) முழுமையான குப்பை தொட்டிக்கு

(2) அரைபகுதியானகுப்பை தொட்டிக்கு

இவ் துணைச்சட்டத்தின், முழுமையான குப்பைத்தொட்டி என்பது உயரத்தில் 61 சென்றிமீற்றர் மற்றும் 76 சென்றிமீற்றருக்கிடையிலாகும். விட்டமானது 38 சென்றிமீற்றர் மற்றும் 61 சென்றிமீற்றருக்கு இடையிலானது குப்பை தொட்டியென கருதப்படும். அரைபகுதியான குப்பை தொட்டி என்பது உயரத்தில் 30.5 சென்றிமீற்றர் மற்றும் 38 சென்றிமீற்றருக்கு இடையிலான 19 சென்றிமீற்றர் விட்டத்தையும் மற்றும் 135 சென்றிமீற்றருக்கும் இடையிலான குப்பை தொட்டி என கருதப்படும்.

(அ) ஏதேனுமொரு சூழலில் வெட்டப்பட்ட மரத்தின் கிளைகள் மற்றும் இடிபாடு

(1) நிரப்பப்பட்ட டிராக்டரிற்காக

(2) அரைபகுதி நிரப்பப்பட்ட டிராக்டரிற்காக

(3) நிரப்பப்பட்ட வண்டிக்காக

(ஆ) வாய்க்காலிற்கு தடையேற்படுதல், சுத்தம் செய்தல்

(1) தனியார்(இல்லங்கள்) சூழலில் உள்ள வாய்காலிற்காக

(2) வர்த்தக அல்லது வியாபார நிறுவனங்களுக்கான வாய்க்காலிற்காக சபையினால் அனுமதிக்கப்படும் கட்டணம் நகர அலுவலகங்களுக்கு முன்னதாகவே செலுத்த வேண்டும்.

21. எந்தவொரு நபரினாலும், ஏதேனும் குப்பைகூழங்களை அல்லது ஏனைய ஏதேனும் கழிவுகளை அவ் அலுவல்களுக்காக விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள குப்பை தொட்டிக்கு அல்லது ஏனைய பாத்திரத்திற்கு தவிர வீதிக்கு, நடைபாதைக்கு, வாய்காலிற்கு, பூங்காவிற்கு அல்லது பொது இடங்களில் வைத்தல் மற்றும் வீசுதல் கூடாது.

22.(i) இச் சூழலில் எந்தவொரு உரிமையாளருக்கு, வாடகையாளருக்கு அல்லது வசிப்பவர்களுக்கு அச் சூழலில் ஏதேனும் குப்பை கூழங்கள் அழகற்ற பொருட்களை அல்லது அப்படியான பொருட்களை போடப்பட்ட பாத்திரம், தனது சுற்றத்தார்களுக்கு தொல்லை ஏற்படும் வகையில் அழகற்ற வகையில் வைத்துக்கொள்ளுவதற்கும் போடுவதற்கும் இடமளிக்கக் கூடாது.

(ii) இங்கு (1) உப அட்டவணை தொடர்பாக மீறப்படுவது தெரியவரும் சந்தர்ப்பத்தில், அச் சுற்றாடலில் வசிப்பவர்களுக்கு பொதுவான அறிவுறுத்தல் ஒன்றை செய்த பின்னர் மாநகர ஆணையாளரினால் அல்லது அவரினால் எழுத்தமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஏதேனுமொரு நபரினால் சூழலுக்கு உட்பிரவேசித்து அத்தொல்லையை உண்டாக்கிய காரணத்தை அகற்றுதல் சட்டரீதியிலான தாகும். அதற்காக செலவிடப்படும் செலவை, அச் சூழலில் வசிப்பவர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்ள முடியும்.

23. ஏதேனும் கட்டிடமொன்றிற்கு உரிமையானவரினால் அக்கட்டிடத்தின் பகுதியொன்றை பயன்படுத்தி அங்கு உபயோகிக்கப்படும் குப்பைகூழங்களை சிறந்த முறையில் கீழே இறக்கும் குழாய் அல்லது குழாயை பழுதுபார்த்தல் ,இடவசதியளித்தல் மற்றும் முறையான பராமரிப்புகளுக்காக பொறுப்பு கூற வேண்டும். நகர ஆணையாளரினால் கடிதமூலமான அறிவித்தல் மூலம் அவ் உரிமையாளரிடம் அப்படியான வேலை செய்யுமாறு கட்டளையிட முடியும் என்பதுடன், அவ் அறிவித்தலில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் உரிமையாளரினால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செய்ய வேண்டும்.

24. எந்தவொரு நபரினாலும், பொதுமக்களுக்காக உள்ள திறந்த கட்டிடமொன்றில் அல்லது வாடகைக்கு ஓடும் வாகனங்கள் உட்பட பொது வாகனங்களில் அல்லது பொது நடைபாதைகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒற்றையடிப்பாதையில் எச்சில் துப்புதல் கூடாது.

25. (1) எந்தவொரு நபரினாலும், எந்தவொரு நேரத்திலும் சாம்பல், மணல், கற்கள், நிலக்கரி, முடி, சிறகுகள் போன்ற ஏனையவற்றை ஏதேனும் சூழலில் அல்லது பொது இடங்களில் காற்றினால் அடித்துச் செல்லக் கூடிய வகையில் வைத்தல், கொட்டுதல், வீசுதல், அடித்தல், கிளறாமல் இருத்தல் வேண்டும்.

(2) ஓடிக்கொண்டிருக்கும் அல்லது நிறுத்தப்பட்டிருக்கும் வாகனமொன்று மேலே (1 ஆம் உப அட்டவணையில் உள்ளவற்றில் ஏதேனும் மீறப்பட்டால், அந்நேரத்தில் வாகனத்தின் சாரதி அல்லது அங்கு நிர்வகிப்பதற்கு பொறுப்பாக இருக்கும் நபர் அல்லது அவ்வாறு மீறப்படுதல் என அடையாளமிடப்படுவதோடு, அந்நபரினால் அவ்வாறு இல்லை என ஒப்புவித்தால் அன்றி, குற்றவாளியாக்குவதற்கு கீழ்பட வேண்டும்.

(3) அமங்கள ஊர்வலத்தில் செல்லும் போது மணல், மணல்கற்கள், கருங்கற்கள் போன்ற எதையும் வீதிகளுக்கு பரவும் வகையில் கொட்டுதல் கூடாது.

26. எந்தவொரு நபரினாலும், நகர ஆணையாளரினால் எழுத்துமூலமான அனுமதியொன்று இல்லாமல், நகர எல்லைக்குள் ஏதேமொரு பொதுவான மைதானத்தில் அல்லது மா நகர சபைக்கு உரிய அல்லது அதற்கு பொறுப்பாக நடாத்தப்படும் ஏதேனுமொரு மைதானத்தில் அல்லது ஒரு இடத்தில் மிருகங்களை அவிழ்த்து விடல் அல்லது வண்டிகளை சேகரித்தல் அல்லது கூடாரங்கள் அமைக்கக் கூடாது.

27. எந்தவொரு நகர எல்லைக்குள் ஏதேனுமொரு பொதுவான மைதானத்தில்அல்லது இடத்தில் மாநகர சபைக்கு உரிமையான அல்லது அதன் பொறுப்பில் நடாத்தப்படும் மைதானத்தில் அல்லது இடத்தில், மாநகர ஆணையாளரினால் பகிரங்க அறிவித்தலொன்றின் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளபோது நகர ஆணையாளரின் எழுத்துமூலமான அனுமதியொன்றில்லாமல் ஏதேனும் பணிகளுக்காக பயன்படுத்தக் கூடாது.

28. மாநகர சபைக்கு உரிய அல்லது அதன் பொறுப்பில் நடாத்தப்படும் விளையாட்டு மைதானம் அல்லது வினோத பூங்காவொன்றினை பயன்படுத்தும் நபரினால் அதனை சீர்குலைத்தல் அல்லது அவ் மைதானத்தை சட்டரீதியில் பயன்படுத்துகின்ற ஒருவருக்கு கோபத்தை உண்டாக்கும் வகையில் தொல்லை ஏற்படுத்தும் வகையில் நடந்துக்கொள்ளக் கூடாது. அந்த மைதானத்தின் நலன் கருதி சிறந்த முறையில் நடந்துகொள்ளும் நிபந்தனைகளுக்கு மற்றும் மா நகர சபையினால் விதிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு இணங்க இரவில் அவ் வாயிற் கதவு மூடும் வரை பொதுவாக பகல்வெளிச்சம் இருக்கும் வரை பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்படும்.

29. மாநகர சபைக்கு உரித்தான அல்லது அதன் பொறுப்பில் நடாத்தப்படும் விளையாட்டு மைதானம் அல்லது வினோத பூங்காவொன்றினை பயன்படுத்தும் நபரினால், அங்குள்ள குளத்திற்கு அல்லது தடாகத்தில் குளிப்பதற்கு அல்லது அதிலுள்ள நீரினை அசுத்தம் செய்வதற்கு காரணமான ஏதேனுமொரு செயல்களை செய்தல் அல்லது அதற்குள் ஏதேனுமொரு தொல்லையை கொடுக்கும் வகையில் நடந்துகொள்ளல் அல்லது நகர ஆணையாளரின் அனுமதியின்றி, பூச்செடிகளை அல்லது மரங்களை கொய்தல் அல்லது மைதானத்திலுள்ள மரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தல் போன்றவற்றை செய்யக் கூடாது.

30. எந்தவொரு நபரினாலும், ஏதேனுமொரு பொது இடத்தில் வினோத பூங்காவில் மாநகர சபையினால் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு ஆசனத்தில் உறங்குதல் அல்லது தனது அடிபாதங்கள் இரண்டையும் அதன்மீது வைத்தல் கூடாது.

31. ஏதேனுமொரு வெறுப்பை உள்ளிட்ட தொற்றக்கூடிய அல்லது தொடுதலினால் பரவக்கூடிய நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எவரினாலும் பொது இடத்தில் அல்லது வினோத பூங்காவில் நகர சபையினால் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு ஆசனத்தில் அமருதல் அல்லது அதனை பயன்படுத்தல் கூடாது.

32. ஏதேனும் ஒரு பொது இடத்தில், அல்லது வினோத பூங்காவிலுள்ள மகளிர்களுக்காக மற்றும் பிள்ளைகளுக்காக என்று குறிப்பிடப்பட்டுள்ள ஆசனமொன்றில், பன்னிரெண்டு வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு ஆண்களும் அதில் அமருதல் அல்லது அதனை பயன்படுத்தக் கூடாது. 12 வயதிற்கு குறைவு என ஒப்புவிக்கும் பொறுப்பும் இத் துணைவிதியின் கீழ் குற்றம்செய்யப்பட்ட எவரேனுவொருவர் பொறுப்பு கூற வேண்டும்.

33. எந்தவொரு நபரினாலும், ஏதேனுமொரு வசிப்பிடத்தின் விராந்தையில் அல்லது ஏதேனுமொரு வசிப்பிடத்தின் அலுவல்களுக்காக உகந்தமுறையில் ஒழுங்படுத்தப்பட்ட மற்றும் மாநகர ஆணையாளரினால் ஏற்கனவே அனுமதிபெறாத ஏதோனுமொரு பகுதி அல்லது ஏதேனுமொரு வீதியின் நடைபாதையின் பகுதியில் அல்லது ஏனைய மாநகர சபை சொத்துக்களை அல்லது மிருகங்களை வைத்துக்கொள்ளுதல் கழுவுதல் தயார்படுத்தல் போன்றவற்றை செய்யக்கூடாது.

34. எந்தவொரு நபரினாலும் நடைபாதையில் வீதியில் அல்லது வாகனம் நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அல்லது ஏதேனும் பொது இடத்தில் அல்லது பூங்காவின் மீது வாகனமொன்றை அல்லது மிருகமொன்றை கழுவுவதற்கு ஏற்பாடு செய்தல் அல்லது கழுவுவதற்கு அல்லது ஏற்பாடு செய்வதற்கு அனுமதியொன்றை அல்லது திட்டமிடுவதை செய்யக் கூடாது.

35. ஏதேனுமொரு மாட்டின்,குதிரையின், செம்மறியாட்டின், ஆட்டின் அல்லது பன்றியொன்று இறப்பு சம்பந்தமாக அவ் இல்லத்தில் அல்லது அவ் இடத்தில் வசிப்பவர்களினால், அம் மிருகத்தின் மரணம் தொடர்பாக நான்கு மணித்தியாலங்களுக்குள் அல்லது அம் மரணம் நிகழ்ந்தது இரவில் என்றால் சூரிய உதயத்தின் பின்னர் நான்கு மணித்தியாலங்களுக்குள், அம் மரணம் தொடர்பாக சுகாதார மருத்துவ உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டியதுடன், இச் சடலத்தை அனுமதிபத்திரம் வழங்கிய உத்தியோகத்தரினால் பரிசோதனை செய்த பின்னர் வசிப்பிடத்தாருக்கு மாநகர ஆணையாளரினால் விதிக்கப்படும் வகையில் அப் பணிகளுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள இடத்தில் வசிப்பிடத்தாரின் செலவில் அகற்றுதல் அல்லது நகர ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் அளவிற்கிணங்க அச் சடலத்தை அகற்றுவதற்கு ஏற்படும் செலவினை செலவு அனுமதிக்கு உத்தியோகத்தருக்கு செலுத்த வேண்டும்.

36. எல்லை மதில் அல்லது ஒழுங்கான வேலிகள் இல்லாத இடமொன்றிற்கு அல்லது இடத்தை சுற்றியுள்ள மதில் அல்லது வேலிகள் நிர்மாணிக்குமாறு மாநகர ஆணையாளரினால் அப்படியான இடமொன்றிற்கு அவ்இடத்தின் உரிமையாளருக்கு கட்டளையிடுவதோடு அப்படியான மதில் அல்லது வேலிகள் இருக்கும் சந்தர்ப்பத்தில், அதனை சிறந்த பழுதுபார்த்தல் செய்யுமாறு அல்லது நகர ஆணையாளரினால் அடுத்துள்ள வீதியின் அத்திவாரத்திலிருந்து காலத்திற்கு காலம் நிர்ணயிக்கப்படும் உயரத்தைவிட மேற்படும் போது அவ் வேலிகளை வெட்டி அழகுபடுத்துமாறு அல்லது மதிலை குறைக்குமாறு மாநகர ஆணையாளரினால் அவ்விடத்திற்கு அல்லது அந்நிலையத்திற்கு சொந்தமான, குத்தகைக்காரர்களுக்கு அல்லது வசிப்பவர்களுக்கு கட்டளையிடல் அல்லது நகர ஆணையாளரின் எண்ணத்தின்படி ஏதேனுமொரு வீதிக்கு தடையேற்படாத அல்லது பாதிப்பு ஏற்படாத வகையில் வீதிக்கு தாழ்த்தப்பட்டுள்ள அனைத்து மரங்களையும் வெற்றி அகற்றுதல் அல்லது கிளைகளை வெட்டுமாறு கட்டளையிடுதல் நகர ஆணையாளரினால் செய்ய முடியும்.

இத் துணைச்சட்டத்தின் கீழ் உள்ள நிபந்தனைகள் தொடர்பாக எழுத்துமூலமான அறிவித்தலொன்று காலத்திற்கு உகந்த வகையில் உரிமையாளருக்கு, குத்தகைக்காரருக்கு அல்லது வசிப்பவர்களுக்கு ஒப்படைத்தல் அல்லது அவரின் முகவரிக்கு கடிதம் அனுப்ப வேண்டியதுடன், அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையரைக்குள் அல்லது மாநகர ஆணையாளரினால் நீடிக்கக் கூடிய காலவரையரைக்குள் உரிமையாளர், குத்தகைக்காரர் அல்லது வசிப்பவர்களினால் அவ் அறிவித்தலில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏதேனுமொரு இடத்தில் அல்லது இடத்திற்கு உரிமையான அல்லது குத்தகைக்காரர் அல்லது வசிப்பவர்களினால் அவ்விடத்தை அல்லது அந்நிலையத்தை சுத்தம் செய்தல், புற்கள், மூங்கில் புற்செடிகள் இல்லாமல் நடாத்திச் செல்ல வேண்டும்.

37. மா நகர சபையின் வரையரைக்குள் உள்ள ஏதேனும் ஒரு பிரதேசத்திலுள்ள ஏதேனும் மரத்திலுள்ள கிளைகள் அல்லது காய்களானது ஏதேனுமொரு வீட்டின் கட்டிடத்தின் மீது விழுந்து அதனால் அங்கு வசிப்பவர்களுக்கு காயம் ஏற்படும் என மாநகர ஆணையாளர் கோரும் போது அல்லது அச்சந்தர்ப்பத்தில் அம் மரம் அல்லது கிளைகளை அல்லது காய்களை வெட்டுவதற்கு அல்லது அவற்றை அகற்றுவதற்கு கடிதமூலமான அறிவித்தலொன்றை அம் மரம் இருக்கும் காணியின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பவர்களுக்கு கொடுப்பதற்கு மாநகர ஆணையாளரினால் நடவடிக்கை மேற்கொள்வது சட்டரீதியானதாகும். மேலும், அப்படியான அறிவித்தலொன்று கிடைத்த போது அதனை மூன்றுதினங்களுக்குள் அவ் உரிமையாளர் அல்லது அங்கு வசிப்பவர்களினால்

அதை வெட்டவிட்டால் அல்லது அகற்றாவிட்டால் நகர ஆணையாளர் அவர்கள் அல்லது அவர்களினால் அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் ஒரு சிற்றூழியரினால் அத் தரைக்கு உட்பிரவேசித்து அப் பணிகளை செய்ய முடியும். அதற்காக ஈடுசெய்யப்படும் செலவினை அவ் உரிமையாளர் அல்லது அங்கு வசிப்பவர்களினால் செலுத்த வேண்டியதுடன், அச் செலவை (252 ஆம் அதிகாரமான) மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் மூலம் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட செலவினை முன்னதாகவே அவ் கட்டளைச் சட்டத்தின் 294 மற்றும் 295 ஆம் சரத்தின் ஏற்பாடுகளில் உள்ளதன் படி நிர்ணயித்து அறவிட வேண்டும்.

38. எவரேனுமொரு நபரினால் செய்யப்படும், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களில் எந்தவொரு செயல்களும் சட்டரீதியானதல்ல.

(1) 600 மீற்றர் நீளத்தை விட மேற்பட்ட மரம் அல்லது ஏனைய பொருட்களின் முடிவில் ஒன்றிற்கு ஒன்று அல்லது வண்டிக்கு கட்டாமல் கொண்டு செல்லல்.

(2) 600 மீற்றர் நீளத்தை விட மேற்பட்ட மரம் அல்லது ஏனைய பொருட்களை ஏனைய ஒருவரால் அதை தூக்க முடியாத வகையில் கொண்டு செல்லல்.

(3) ஏதேனுமொரு வண்டியில் இரும்பு கம்பிகள் கொண்டு செல்லும்போது அவைகளில் முடிவில் ஒன்றில் ஒன்று இணையும் போது அதில் ஏற்படும் சத்தத்தை தவிர்ப்பதற்காக அவற்றின் முடிவில் ஒவ்வொன்றையும் ஒன்றுசேர்த்து கட்டாமல் கொண்டு செல்லல்.

(4) வண்டியின் தட்டிலிருந்து இரண்டு மீற்றருக்கு மேற்பட்ட உயரத்திலான விறகு, பீப்பாய்கள் அல்லது ஏனைய பொருட்களை அவ் வண்டிக்கு ஏற்றுதல்.

(5) மரம், விறகு, பீப்பாய், வைக்கோல் அல்லது ஏனைய எந்தவகையிலான பொருட்களையும் வாகனத்திற்கு குறுக்கு பக்கத்தில் சில்லின் வெளியில் விரிவடையும் வகையில் வண்டிக்கு அல்லது வாகனத்திற்கு ஏற்றுதல்.

39. இதற்கு முன்னதான துணைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு எதிராக ஏதேனுமொரு மரம் அல்லது மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை ஏற்றப்பட்டுள்ள அல்லது கொண்டு செல்லும் ஏதேனுமொரு வண்டியில் மரம் அல்லது ஏனைய பொருட்கள் அவ் துணைச் சட்டத்தில் தடைசெய்யாத வகையில் ஏற்றப்படும் வரை அல்லது அவ்வாறு தடைசெய்யாத வகையில் கொண்டு செல்லக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யும் வரையில் அதிகாரம் பெற்ற ஏதேனுமொரு மா நகர சபை உத்தியோகத்தரினால் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரினால் தடுத்து வைத்தல் சட்டரீதியானதாகும் என்பதுடன், அதனை தடுத்து வைப்பதற்கான அதிகாரம் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும்.

40 ஏதேனுமொரு கழிவுகள், குப்பைகூழங்கள், செங்கற்கள், களிமண்கற்கள், கருங்கற்கள், சுண்ணாம்பு அல்லது ஏனைய பொருட்கள் வண்டிகளில் அல்லது ஏனைய வாகனங்களில் கொண்டு செல்வதானது மா நகர சபை பிரதேசத்திற்கு ஏதேனுமொரு தொல்லையை ஏற்படுத்தும் வகையில் ஏதேனும் ஒரு வீதிக்கு அல்லது நெடுஞ்சாலைக்கு தடையேற்படும் வகையில் அல்லது தொல்லையை உருவாக்கக்கூடிய வகையில் கவனமின்றி அல்லது பாதுகாப்பற்ற வகையில் கொண்டு செல்லல் அல்லது அவற்றில் ஏதேனுமொரு பகுதி வீதியில் விழுவதை தவிர்ப்பதற்கான உகந்த பாதுகாப்புகளை ஏற்பாடு செய்யாமல் கொண்டு செல்லுதல் எந்தவொரு நபரினாலும் செய்யக்கூடாது.

41. பொருட்கள் அல்லது நிறைகூடிய பொருட்களை கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள வண்டிகள் அல்லது வாகனங்கள் அல்லது அதிகளவான பழுவைகொண்ட வாகனங்களை கொண்டு செல்வதை தடுக்கப்பட்டுள்ள வீதிஅல்லது வீதியென நகர ஆணையாளரினால் வர்த்தமாணி பத்திரிகையில் விளம்பரம்படுத்தப்பட்டுள்ள வீதியொன்றில் வாகனம் ஓட்டுவதற்கு நகர ஆணையாளரினால் கடிதமூலமான அனுமதியொன்று இன்றி எந்தவொரு நபரினாலும் செய்யக் கூடாது.

42. (1) நிறுத்தாமல் செல்லவேண்டும் என பொலிஸ் உத்தியோகத்தரினால் கட்டளையிட்ட பின்னர் ஏதேனுமொரு வீதியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அல்லது அங்குமிங்கு செல்லும் நபர்கள் தண்டனை பெறக்கூடிய பிழையை செய்ததாக கருதுவதோடு, அவருக்கு எதிராக 56 ஆம் துணைவிதிக்கு இணங்க செயற்பட வேண்டும்.

(2) அனுமதிபத்திரம் பெறப்பட்ட வாகனமொன்று மெதுவாக செல்லும் சந்தர்ப்பத்தில் அல்லது இழுத்துக்கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் வாகனம் வீதியின் இடது பக்க முடிவில் தொடர்ச்சியாக மெதுவாக பயணிக்க வேண்டியதுடன், பின்பக்கம் செல்லும் வாகனங்களுக்கு வேகமாக செல்லகூடிய வகையில் இடமளிக்க வேண்டும்.

(3) எந்தவொரு நபரினாலும் மிதிவண்டிஅல்லது இயந்திரம் மூலம் செயற்படுத்தக் கூடிய வாகனங்கள் உட்பட ஏனைய அனைத்து வாகனங்கள் அல்லது மிருகங்கள்,பாதசாரிகளுக்காக மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ள நடை பாதையில் நடப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மேடையில் நடக்கச் செய்தல், ஓட்டவைத்தல், இழுத்துச் செல்லல், தள்ளிக்கொண்டு செல்லல் அல்லது அதன்மீது பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றக் கூடாது. இச் சட்டத்தில் தடைசெய்யப்பட்டுள்ளவற்றில் சிறுவர் வண்டிகள் சம்பந்தப்படமாட்டாது.

(4) இயந்திரத்தின் மூலம் செயற்படுத்தப்படும் வாகனத்தின் புகை அல்லது வெளிப்படையாக ஆவியாவதன் காரணமாக ஏற்படும் தொல்லையினால் அல்லது பொதுமக்களுக்கு தொந்தரவான அல்லது ஆபத்தினை உருவாக்கக் கூடிய வகையிலான அளவில் வெளியேற்றுவதற்கு திட்டமிடல் அல்லது வெளியேற்றுவதற்கு இடமளித்தல் எந்தவொரு நபரினாலும் செய்யக் கூடாது.

(5) ஏதேனுமொரு பொது வாகனம் நிறுத்துமிடத்தில் நிறுத்துவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கையை விட மேற்படும் சந்தர்ப்பத்தில் அப் பொது வாகனம் நிறுத்துமிடத்தில் மேலதிகமான ஒரு வாகனத்தை நிறுத்திவைத்திருக்கும் சந்தர்ப்பத்தில், அதை அகற்றுமாறு மாநகர ஆணையாளரினால் அதிகாரம் கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரினால் கட்டளையிடும் போது அதை அகற்றுவதற்கு மறுக்கும் நபருக்கு தண்டனை பெறகூடிய வகையிலான தவறொன்றை செய்ததாக கருத வேண்டும்.

43. கட்டிடங்களின் வெளிப்பக்க சுவர்ஏதேனும் பகிரங்கமான வீதிக்கிடையில் உள்ள ஏதேனும் ஒரு சுவரொன்றின் உரிமையாளரினால், குத்தகைக்காரினால் அல்லது வசிப்பவர்களினால் சுத்தம் செய்து பூச்சு பூசப்பட்டு அல்லது சுண்ணாம்பு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

44. (1) சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள ஏதேனுமொரு நீறூற்றிற்கு அல்லது அதன் கிளைகளில் ஏதேனும் பகுதிக்கு எந்தவகையிலான மீன்களை பிடிப்பதற்கும் நகர ஆணையாளரின் எழுத்துமூலமானவொரு அனுமதியின்றி மீன்களை பிடிப்பதனையும் முயற்சி செய்வதனையும் எந்தவொரு நபரினாலும் செய்யக்கூடாது.

(2) சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள ஏதேனுமொரு நீர் பிரதேசத்தில், கழிவுகள் அல்லது மலம் சிறுநீர் காரணமாக மாசடைந்துள்ளது என ஏதேனுமொரு உறுதியான கால வரையரைக்காக கவனத்தில் கொள்ள வேண்டும் என வர்த்தமாணி பத்திரிகையில் விளப்பரப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் மற்றும் அவ்விடத்தில் காட்சிப்படுத்தப்படும். அறிவித்தல் மூலம் மாநகர ஆணையாளரினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அக் கால வரையரைக்குள் அந் நீர் பிரதேசத்தில் ஏதேனுமொரு வகையில் மீன்கள் பிடித்தல் அல்லது பிடிப்பதற்கு முயற்சி செய்தல் எந்தவொரு நபரினாலும் செய்யக் கூடாது

45. ஏதேனுமொரு நீர்தேக்கத்தில் அல்லது அதன் கிளைகளில் அல்லது ஆற்றங்கரைகளில் அல்லது அதன்மீது எந்தவொரு நபரினாலும் மீன்கள் பிடிப்பதற்காக ஏதேனுமொரு வலையொன்றினை அல்லது ஏனைய வழிமுறையொன்றை தம்வசம் வைத்துக் கொள்ளக்கூடாது.

46. எந்தவொரு நபரினாலும் ஏதேனுமொரு நீர் தேக்கத்தில் அல்லது அதன் கிளைகளில் அல்லது அதன்மீது அல்லது அதற்கு மேல் இருக்கும் போது தன்னுடைய சொந்த சொத்துகளல்லாத ஏதேனுமொரு மிருகத்தை ஏதேனுமொரு வகையில் கொல்லுதல், பிடித்தல் அல்லது கொல்லுவதற்கும் பிடிப்பதற்கும் முயற்சி செய்யக் கூடாது.

47. (1) எந்தவொரு நபரினாலும் ஏதேனுமொரு கழிவுகளை, குப்பைகூழங்களை, அழகற்ற முறையில் குப்பைகளை அல்லது ஏனைய துர்நாற்றம் ஏற்படக்கூடிய தொல்லை ஏற்படுத்தக் கூடிய பொருட்கள் அல்லது அப்படியானவற்றை ஏதேனுமொரு நீர்தேக்கத்திற்கு அல்லது நீர்தேக்கத்திற்கு விழும் ஏதேனும் நீருக்கு அல்லது நீர்வழிகளுக்கு போடுவவதற்கு இடமளிக்கவும் கூடாது.

48. மாநகர நபையினால் ஏதேனுமொரு நீர்தேக்கத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில், வனாந்தர பறவைகளுக்காக ஒதுக்கிவைக்க முடியும். நகர ஆணையாளரினால் சிறந்த முறையில் அதிகாரம் வழங்கப்பட்டால் அன்றி எந்தவொரு நபரினாலும் எந்தவகையான பணிகளுக்காகவும் நிர்ணயிக்கப்பட்ட பிரதேசத்திற்கு உட்பிரவேசிக்க கூடாது.

49. எந்தவொரு நபரினாலும் பாய்கள். துணிகள் அல்லது ஏனையவைகள் அல்லது பொது வீதிக்கோ வீதியின் பிரதேசத்திற்கோ தொங்கவிடுதல் அல்லது ஏனைய வகையில் காட்சிபடுத்தி வைத்தல் கூடாது. அமங்களம், அரசியல் வைபவங்களுக்காக நிர்மாணிக்கப்படும் அழங்காரங்கள் நகர ஆணையாளரின் அனுமதியொன்றினை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், அவ் வைபவத்தின் இறுதியில் சம்பந்தப்பட்ட நபரினால் அவ் அழங்காரங்களை அகற்றிக் கொள்ள வேண்டியதுடன், அப்படி அகற்றாத சந்தர்ப்பத்தில் வைபவம் முடிவுற்ற இரண்டு தினங்களுக்குள் நகர ஆணையாளரினால் அவ் அழங்காரங்களை அகற்றுவதற்கான செலவினை சம்பந்தப்பட்ட நபரிடம் அறவிட்டுக்கொள்ள வேண்டும்.

50. மாநகர ஆணையாளரினால் கட்டளையிட கூடிய இடங்கள் தவிர, ஏதேனுமொரு நபரினால் சுவரொட்டிகள் (poster), துண்டுபிரசுரம், கையேடு அல்லது ஏனைய அறிவித்தலொன்றை ஏதேனுமொரு சுவரில், கட்டிடமொன்றி, இல்லமொன்றில், நிலையமொன்றி, மரத்தில் அல்லது ஏனைய இடமொன்றில் ஒட்டுதல் அல்லது ஒட்டுவதற்கான உதவிகளை செய்தல், அதிகாரம் கொடுத்தல் சட்டத்திற்கு புறம்பானதாகும்.

51. (1) ஏதேனுமொரு நபரினால் பொருட்களை ஏற்றும் போது அல்லது பொருட்களை இறக்கும் போது அவ் வண்டியில் ஏதேனுமொரு பகுதி உடைந்து அல்லது கட்டப்பட்டுள்ள அவ் வண்டிக்கு உரிய மிருகத்தை தவிர, ஏதேனுமொரு நகர அல்லது அரச இடமொன்றில் அல்லது மா நகர சபை பிரதேசத்திற்குள் ஏதேனும் நெடுஞ்சாலைகளில் கட்டப்பட்டிருக்கும் போது அதனை அவிழ்த்துக் கொண்டு வழி தவறிச் சென்று அல்லது பராமரிக்கும் ஏதேனுமொரு நபரை சந்திக்கும் ஏதேனுமொரு மாடு, குதிரை, செம்மறியாடு,ஆடு அல்லது ஏனைய மிருகம் அந் நபரினால் பிடிக்கப்படுதல் அல்லது நகர ஆணையாளரினால் அதற்கான அதிகாரம் வழங்கப்படும் நபரினைகொண்டு பிடித்து கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் சட்டரீதியிலானதாகும்.

(2) அப்படியென்றால் மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் பிடிக்கப்படும் அனைத்து மிருகங்களும், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக இருக்கும் பொலிஸ் உத்தியோகத்தரின் பொறுப்பிற்கு தவறாது நியமிக்க வேண்டியதுடன், மேலே

கூறப்பட்டுள்ளதன்படி அப்படியான ஒரு மிருகத்தை பிடித்துக்கொள்ளும் அல்லது பொறுப்பேற்கும் அனைத்து உத்தியோகத்தர்களும் அவ்வாறு பிடித்தல் தொடர்பாக தவறாது மாநகர ஆணையாளரிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ் அறிக்கையிடும் நேரத்தில் அம் மிருகத்திற்காக எந்தவொரு உரிமையாளரும் முன்வரவில்லையென்றால், அம் மிருகத்தின் பாதுகாப்பிற்காக மற்றும் பராமரித்தலுக்காக தேவையான படிமுறைகளை எடுக்குமாறு பிடிக்கப்பட்டது தொடர்பான அறிவித்தலொன்றை வெளியிடுமாறு நகர ஆணையாளரினால் தனது உத்தியோகத்தருக்கு கட்டளையிட வேண்டும்.

(3) அப்படியான மிருகத்தை பிடித்த நபரின் பயன்பாட்டிற்காக சபையினால் பிரேரணையொன்றை சம்மதித்தல் மூலம் நிர்ணயிக்கப்படும் ஒரு நிதியை மற்றும் அம் மிருகத்தை அவ் உத்தியோகத்தரின் பொறுப்பில் வைத்துக்கொள்ளும் ஒவ்வொரு தினத்திற்குமாக நிர்ணயிக்கப்படும் மேலதிக நிதியினை அவ் உத்தியோகத்தரின் பயன்பாட்டிற்காக மாநகர ஆணையாளருக்கு செலுத்தப்பட்டால் அன்றி, அம் மிருகத்தை உரிமையாளருக்கு ஒப்படைக்க கூடாது.

(4) அம் மிருகத்தை பிடிக்கப்பட்டு பின்னர் பத்து தினத்திற்குள் எந்தவொரு நபரினாலும் மிருகத்திற்கான உரிமையை கூறி முன்வரவில்லையென்றால் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் படி அறவிடவேண்டிய நிதியை செலுத்தாவிட்டால் அந்நபரினால் அம் மிருகத்தை பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்வதற்கு அம் மிருகத்தை பிடித்த நபருக்கு அனுமதிக்கப்பட்ட நிதியை செலுத்தப்பட்ட பின்னர் அம் மிருகத்தின் பொறுப்பாக மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக தனக்கு அறவிட வேண்டிய பணத்தை பெற்றுக்கொண்ட பின்னர் மிகுதியான பணத்தை மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கு செலுத்துதல் சட்டரீதியானதாவதோடு, அப் பணியை அவ்வாறு செய்யுமாறு அத் உத்தியோகத்தருக்கு இங்கு நிர்ணயிக்கப்படும்.

52. அப்படியான மிருகமொன்றை பிடித்து அடைத்து வைக்கும் இடத்திற்கு கொண்டுவருவதற்கு இடையில் அம் மிருகங்களை பிடிப்பதற்கு எவரேனுமொரு நபரினால் எதிர்ப்பு தெரிவிக்கும் போது அல்லது அப்படியான மிருகத்தை பிடிக்கும் சந்தர்ப்பத்தில் அம் மிருகத்தை பிடிப்பவருக்கு ஏதேனுமொரு நபரினால் தடைசெய்யப்படுதல் சட்டரீதியற்றதாகும்.

53. மாநகர சபையின் எல்லைக்குள் ஏதேனுமொரு வீதியில் உள்ள ஏதேனும் ஒரு மின்விளக்கை ஏற்றுதல் அல்லது ஏற்றுவதற்கும் அனைப்பதற்கு முயற்சி செய்தல் தவறானதாகும் இப்படியான ஏதேனுமொரு விளக்கை பழுதுபார்ப்பதற்கு முயற்சித்தல் அல்லது ஏணிபடியின் உதவியுடன் அல்லது விளக்கு பொறுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு தூணிற்கு ஏறுதல், இலங்கை மின்சார சபையில் அல்லது சபையின் பணிகளுக்கான கடிதங்களில் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் அன்றி. எந்தவொருவரினாலும் செய்யக்கூடாது.

54. ஏதேனுமொரு பொது வாய்க்காலிற்கு அல்லது ஏனைய நீர் வழிகளில் அல்லது வீணாக செல்லும் நீர் அல்லது மழைநீர் அகற்றுவதற்காக இரண்டு இடத்திற்கு குறையாத எண்ணிக்கையில் சேவைகளை வழங்க கூடிய ஏனைய வாய்க்கால் ஏதேனுமொரு நபரினால் மூடுவதற்கு, நிரப்புவதற்கு அல்லது அந்நீர் சுதந்திரமாக வழிந்தோடுவதற்கு தடை ஏற்படுத்தல் சட்டரீதியற்றதாகும்.

55. தேவையென நகர ஆணையாளரினால் கவனத்தில் கொள்ளும் ஏதேனும் வாய்க்கால் அறிவித்தல் செய்யப்படும் கால வரையரைக்குள் அவ் அறிவித்தல் செய்யப்பட்டுள்ள வகையில் அமைக்குமாறும் அவ் வாய்க்காலை உகந்த முறையில் பராமரிக்குமாறும் மாநகர ஆணையாளரினால் கடிதமூலமான அறிவித்தலொன்றின் மூலம் ஏதேனுமொரு இடத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுதல் தேவையென மாநகர ஆணையாளர் கருதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நகர ஆணையாளரினால் அவ்வாறு கட்டளையிடுதல் சட்டரீதியானதாகும்.

56. அசுத்தமான நீர் வழிந்தோடும் ஏதேனுமொரு இடத்தில், எந்தவொரு நபரினாலும் விற்பனைசெய்தல் அல்லது பயன்பாட்டிற்காக அல்லது மரக்கறி வளர்ப்பிற்கு அல்லது ஏதேனுமொரு மரக்கறிகளை வளர்ப்பதற்கு இந்நீரினை பயன்படுத்தல் எந்தவொரு நபரினாலும் செய்யக் கூடாது.

57. ஏதேனுமொரு நபரினால் இத் துணைவிதியின் ஏதேனுமொரு அல்லது துணைச்சட்டத்திலுள்ளவற்றை மீறுதலானது தண்டனைபெறக்கூடிய தவறாவதோடு, பதுளை மா நகர சபையின் எல்லைக்குள் நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றத்தின் அதிகாரம் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த பின்னர் தவறுசெய்தவராகும் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளுக்கு சம்பந்தப்பட்ட நபர்கள் கீழ்படிய வேண்டும்.

(i) முதலாவதாக செய்யப்படும் பிழை என்றால், 1,000 ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்
(ii) இரண்டாம் முறை அல்லது அதன் பிறகும் செய்யப்படும் தவறுக்கு இரண்டாயிரம் (2,000) ரூபாவிற்கு மேற்படாத அபராதமும்
(iii) தொடர்ச்சியாக செய்யப்படும் தவறு தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் அதை மறுக்கும் சந்தர்ப்பத்தில் அதை கவனத்திற்கு கொண்டு நகர ஆணையாளரினால் எழுத்து மூலமான அறிவித்தலொன்றை ஒப்படைத்த பின்னர் தொடர்ச்சியாக தவறிழைக்கும் தினத்திற்காக இருநூற்றி ஐம்பது(250)ரூபாவிற்கு மேற்படாத மேலதிக அபராதத்தின் கீழாகும்.

LII

**பதுளை விளையாட்டுத் தொகுதி நீச்சல் தடாகத்தை நடாத்திச் செல்வதற்கான பிரேரணைகள்.**

*252 ஆம் அதிகார சபையின் மா நகர சபை கட்டளைச்சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் உடைய திருத்தத்தில் 267, 272 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய 28 (ஆ) ஆம் உப பிரிவின் படி மாநகர சபைகளுக்கு கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம், பதுளை மாநகர சபையினால் மாநகர வேலைத்தளத்தின் அருகில், கிறீன்லேன் ட்ரைவ் வீதியில் நடாத்திச் செல்லப்படும் நீச்சல் தடாகம் சம்பந்தமான தீர்மானங்களின் மற்றும் நிபந்தனைகளின் படி ஒழுங்குபடுத்தல், அதற்கான கட்டணங்களை உறுதிசெய்வதற்கு மற்றும் அறவிடுவதற்கு, நிர்வாகம் செய்தல் மற்றும் மேற்பார்வை தொடர்பான துணைச்சட்டம் பதுளை மாநகர சபையினால் விதிக்கப்படும்.*

*நீச்சல் தடாகத்தினை நடாத்திச் செல்லல்*

*மாநகர சபையினால் நடாத்திச் செல்லப்படுமாயின் தகுதியுடைய ஆளணியினரை ஆட்சேர்க்க வேண்டியுள்ளது. அதற்கமைய*

- *02 கடமை நேரங்களுக்குரிய காலப் பகுதி*
  *முற்பகல் 7.00 - பிற்பகல் 3.00*
  *பிற்பகல் 3.00 - இரவு 10.00*
- *பொது மக்களுக்காக திறந்து விடப்படும் நேரம் - மு.ப.11.00 - இரவு 9.00*
- *நாளாந்த பராமரிப்பு நேரம் - மு.ப.7.00 - மு.ப.11.00*
  *இரவு 9.00 - இரவு 10.00*

*ஒரு கடமை நேரத்தில் ஈடுபடுத்தப்படும் ஊழியர் எண்ணிக்கை-*

| | | |
|---|---|---|
| *நிலையப் பொறுப்பு அதிகாரி* | - | *01* |
| *உயிர் காப்பாளர்* | - | *02* |
| *தடாக உதவியாளர்* | - | *03* |
| *பாதுகாப்பு அதிகாரி* | - | *01* |

*06. தேவையான உதவி ஆளணியினர் -*

| | | |
|---|---|---|
| *அலகு/தொகுதிப் பொறுப்பு அதிகாரி* | - | *01* |
| *உயிர் காப்பாளர்* | - | *04* |
| *தடாக உதவியாளர்* | - | *01* |
| *பாதுகாப்பு அதிகாரி* | - | *02* |
| | | *13* |

*தடாகத்தின் இரு கடமை நேரங்களையும் நடாத்திச் செல்வதற்கு மேற்கூறிய 13 ஊழியர்கள் கட்டாயத் தேவையாகும். இதற்கு மேலதிகமாக கொடுப்பனவு அடிப்படையில் அல்லது நீச்சல் பயிற்றுவிப்பாளர் ஒருவரின் சேவை குறித்த காலப்பகுதிக்கு பெறப்பட வேண்டியுள்ளது. அதற்கிணங்க நீச்சல் பயிற்றுவிப்பாளர் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு 04 மணி நேரமாயினும் சேவையாற்ற வேண்டுமெனப் பிரேரிக்கப்படுகின்றது.*

*07. பாவனை-*

*இத் தடாகம் வார நாட்களில் காலைப் பொழுதில் அதாவது முற்பகல் 11.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிவரை பாடசாலைகளுக்காகவும் பிற்பகல் பொதுமக்களுக்காகவும் பாவனைக்கு விடப்படுவது பொருத்தமாகும்.*

*இதில்*

1. *நாளாந்தம் நீச்சல் தடாகத்தைப் பாவிப்பவர்களுக்காக மணித்தியால அடிப்படையில் கட்டணம் தீர்மானிக்கப்பட்டு பாவனைக்கு வழங்குதல்.*
2. *மாதாந்த கட்டணம் மற்றும் நுழைவுக் கட்டணம் ஒன்றை அறிவிட்டு அங்கத்துவப் பத்திர முறையொன்றை அறிமுகப்படுத்தி பாவனைக்கு அனுமதி வழங்குதல்.*
3. *பாடசாலை மாணவர்களுக்காக வார நாட்களில் காலை வேளையில் நீச்சல் தடாகத்தை பாவிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் மற்றும் அதற்காக சலுகைக் கட்டணமொன்றினை அறவிடுதல்.*
4. *பாடசாலை மாணவர்களின் பாவனையின் போது நீச்சல் பயிற்றுவிப்பாளர் ஒருவரது மேற்பார்வையின் கீழ் பாவனைக்கு அனுமதி வழங்குதல் பொருந்துமென சிபாரிசு செய்யப்படுகின்றது.*

*1. கட்டணம் அறவிடல் -*
*கீழ்கண்டவாறு பிரேரிக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| *2. பாடசாலை மாணவர்களுக்கு ஆரம்ப நுழைவுக் கட்டணம்* | - | *1000.00* |
| *3. மாதாந்த கட்டணம்* | - | *275.00* |
| *4. 12% வெட்* | - | *153.00* |
| *5. நுழைவுக் கட்டணம்* | | *1428.00* |

வாரத்தில் 7 1/2 மணித்தியாலம்
ஒருநாளில் 2 1/2 மணித்தியாலம்
(பயிற்றுவிப்பாளருடன் வருதல் வேண்டும்)
(08 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்காக

| | | |
|---|---|---|
| மாதாந்த கட்டணம் | - | 275.00 |
| 12% வெட் | | 33.00 |
| | | 308.00 |
| வளர்ந்தோருக்கான நுழைவுக் கட்டணம் | | 2500.00 |
| மாதாந்த கட்டணம் | | 1475.00 |
| 12% வெட் | | 477.00 |
| | | 4452.00 |
| மாதாந்த கட்டணம் | | 1475.00 |
| 12% வெட் | | 177.00 |
| | | 1652.00 |
| வளர்ந்தோருக்காக ஒரு மணித்தியாலத்துக்கு- | | 220.00 |
| 12% வெட் | | 26.40 |
| | | 246.40 |
| பிள்ளைகளுக்காக ஒரு மணித்தியாலத்துக்கு | | 120.00 |
| 12% வெட் | | 14.40 |
| | | 134.40 |
| வெளிநாட்டவருக்கு (சகல கட்டணங்களும் உட்பட) | | 1000.00 |

. பராமரிப்பு
கோவையில் ஈடுபடுத்தப்படும் ஆளணியினர் நாளாந்தம் கட்டாயமாக நீச்சல் தடாகத்தில் செய்ய வேண்டிய பராமரிப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக வகை கூறல் வேண்டும் இது நிலையப் பொறுப்பு அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் நடைபெறல் வேண்டும்.
பராமரிப்புச் செலவு (அண்ணளவாக)

**நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக**

(இரண்டு கடமை நேரங்களுக்காகவும்) பாதுகாப்பு அதிகாரி 02

~~13~~

| | |
|---|---|
| நிலையப் பொறுப்பு அதிகாரி | - 01 |
| உயிர் காப்பாளர் | - 04 |
| உதவித் தொழிலாளர் | - 06 |

முற்பகல் 07.00 - பிற்பகல் 03.00 வரை
பிற்பகல் 03.00 - இரவு 10.00 வரை

| | |
|---|---|
| நிலையப் பொறுப்பு அதிகாரி | 1200.00 |
| பயிற்றுவிப்பாளர்/ஆலோசகர் (1/2 நாள்) | 1500.00 |
| குளோரின் 5 kg × 750 | 3750.00 |
| உயிர் காப்பாளர்கள் 4 × 1500 | 6000.00 |
| உதவியாளர்கள் 6 × 900 | 5400.00 |
| பாதுகாவலர்/காவலாளி 2 ×1200 | 2400.00 |
| | 20250.00 |
| தேய்மானம் | 1012.50 |
| 25% Add நீர், மின்சாரம் | 5062.50 |
| மொத்தம் | 26325.00 |
| ஒரு நாளுக்கு தற்போதைய செலவு | 26325.00 |
| ஒரு மாதத்திற்கான செலவு | 789750.00 |

இந் நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ் மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்பட்டால் சிங்கள மொழி மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1-177

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.